உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவ-எல்லப்ப நாவலரவர்கள்

இயற்றிய

# திரிசிராமலைப் புராணமாகிய

# செவ்வந்திப் புராணம்

---

திரிசிரபுரம் மகாவித்வான்

சோமசுந்தர முதலியாரவர்கள்

இயற்றிய

## உரையுடன்

ம. இராஜா ஹரிஹரபுத்திர பிள்ளை—பதிப்பு.

Compiled by : M. B. RAJAH, D.A.


திரிசிரபுரம்

ஜனானுகூல அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

1927



க்கப்பெற்றுள்ளது]


[விலை : ரூபாய் ஒன்று

# அட்டவணை.

---


பாயிரம்

க. திருமலைச் சருக்கம்

உ. பிரமதேவன் அசத்தியம் தீர்ந்த சருக்கம்

௩. அகத்தியச சருக்கம்

௪. இந்திரச சருக்கம்

௫. தீர்த்தச சருக்கம்

௬. திருநகரச சருக்கம்

௭. நினைத்தது கொடுத்த சருக்கம்

௮. சாரமாமுனிச சருக்கம்

௯. சூரவாதித்தச் சருக்கம்


௰. உறையூரழித்த சருக்கம்

௰க. தாயான சருக்கம்



This book belongs to

புள்



திரிசிராமலை.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நன்றிகூறல்.

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங்கழீஇ யன்பரொடு மரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானு மரனெனத் தொழுமே."

—சிவஞானபோதப் பத்திய சூத்திரம்.

பரமசிவனது அநுக்கிரகத்தால் ஞானம்பெற்று இவ்வுலகிலே சீவன்முத்தராய் வாழ்வோர் மலவாசனை தம்மைவந்து தாக்காமைப் பொருட்டுக் குருலிங்கசங்கம வழிபாடு செய்துகொண்டு ஆனந்தமாய் ஆடிப்பாடித் திரிவர். இலிங்க வழிபாடாவது தலங்கடோறும் சென்று அங்கு ஆலயங்களில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வழிபடுதலாம். சிவபெருமான் சகளீகரித்துத் திருக்கோயில் கொண்டுள்ள க்ஷேத்திரங்கள் பல. அவைகளுட் சிறந்தவை, சிவானந்தத்தை அநுபவித்து அந்த ஆனந்தமிகுதியினாலே, பரமசிவன் தமக்கு அநுக்கிரகித்த முறையினையும் அதனால் அப்பரமசிவனது திருவருள் தம்மோடுகூட நின்று தமக்குச் செய்யும் உபகாரங்களையும், அவ்வருளுபகாரத்தால், வெளிப்பட்டுத் தரிசனமான சிவத்தினது விசேடத்தையும், அச்சிவத்தோடு தாம் பொருந்தி அநுபவிக்கும் ஆனந்தத்தையும் பாடல்களாகப் பாடிய பாடல்களைப் பெற்றவை சிறந்தவை. அவைகளுள் மேம்பட்டது

'பகுதி தகுதி விகுதி யெனும் பாட்டில்
இகலி லிடையை யிரட்டித்—தகவின்
அருச்சித்தால் முன்னுமது கடையாங் கண்டீர்'*
திருச்சிராக் குன்றினைத் தேர்ந்து.

என்னும் வாக்கமைந்த திரிச் சிராப் பள்ளியாகும்.

---

* பகுதி தகுதி விகுதி—இம்மூன்று மொழிகளின் இடையெழுத்தாகிய, கு, இரட்டித்தால் குகு, குகு, குகு அறுகு (அறுகம்புல்), முதலெழுத்துக்களைக் கூட்டில் ப, த, வி—பதவி (பதமுத்தி) கடையெழுத்துக்களைக் கூட்டின், தி-தி-தி—முத்தி. அருகம்புல்லால் அருச்சித்தால் பதமுத்தியும் உண்மைமுத்தியும் சித்திக்கும்.

இத்தலத்துப் பெருமையை விளக்குவன சைவ - எல்லப்ப நாவலர் பாடிய செவ்வந்திப்புராணமும் மகா வித்வான் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய உறையூர்ப்புராணமுமாம். தமிழிலக் கண இலக்கியப் புலமையையும், சைவசித்தாந்த ஆராய்ச்சி நுட்பத் தையும், சிவோத்கர்ஷ நீர்மையினையும் விளக்க சொற்சுவை பொ ருட்சுவை தேங்கப்பாச் செய்யுளாக அருளிச் செய்யப்பெற்றுள்ள திரிசிராமலைப்புராணம் என்னும் செவ்வந்திப்புராணம், மூலமாத் திரம் அசசிட்டுபகரிப்பதினும் உரையோடு வெளியிடுவது கற்ற வர்க்கும் மற்றவர்க்கும் பயன்படுமெனக் கருதி, திரிசிராமலை மான் மிய சங்கிரகம் வசனரூபமாய் இயற்றிய, ஸ்ரீ மலைக்கோவில் தேவஸ்தானம் ஆனரெரி பேஷ்கார் தி. வீ. ஷண்முகம்பிள்ளையவர் கள் உதவிய, திரிசிரபுரம் மகா வித்வான் சோமசுந்தர முதலியா ரவர்கள் இயற்றிய பொழிப்புரையை, செவந்தாம் பட்டி வீர சைவம் குமரசாமி அய்யரென்கிற அப்பாவு அய்யர் 3-12-1881-ல் எழுதிமுடித்த பொழிப்புரையையும், மகா வித்வான் மீனுக்ஷிசுந் தரம்பிள்ளையவர்கள் மாணுக்கர் தி. கநதசாமிபிள்ளையவர்கள் எழுதி வைத்திருந்த பொழிப்புரையையும் ஒத்திட்டு இப்பதிப்பில் மகா வித்வான் முதலியாரவர்கள் பொழிப்புரையுடன் திரிசிரபுரம் தேவாரம், பிறதோத்திரஙகள் முதலியவைகள் சேர்க்கப்பெற் றுள்ளன.

பௌராணிகாதத்தைச சேர்ந்தவர்கள் புராணக் கட்டுக்கதை என்று சொல்லக்கூடாமல், இத்தலத்து மான்மிய சரித்திரங்கள் உண்மை என்று விளஙக, உத்தமிசேரி, திருத்தாந்தோணி என்னும் கிராமங்களும் சாரமாமுனிவர் நந்தனவனம், நாகநாதசுவாமி கோ வில், உறையூரில் புதிதாய் வீடுகட்டும்பொழுதுஅகப்படும் கட்டடங் கள் உபகரிக்கின்றன. ஆகையால் இது சிறந்த சரித்திர ஆராய்சசி நூலும், உறையூரழித்த சருக்கம்—

ஏற்றவிவை யானருளின் றிருவிளையாட்டாக வியம்புவார்க ளுணுக்களிடாக் கடனின்றுமெடுத்தே, யூற்றமிக வருள் புரித லேதுவாக வுரைசெய்வ ரொடுக்க மிளைப் பொடித்தன் மற்றைத், தோற்றமல பாகம் வரக்காத்தல் போகந் துய்ப்பித்த றிரோதாயி நிறுத்தலாகும், போற்றலருமருளருளே யன்றி மற்றுப் புகன்ற வையு மருளொழியப் புகலொணுதே”

என்னும் சித்தாந்த சுருதிக்கு இலக்கிய நூலும், சிவபெருமானுக்கே உரித்தான பஞ்சகிருத்தியத் தொழில்களை விளக்கவந்த நூலுமாகின்றது.

நகரத்தார்களும், திருச்சினாப்பள்ளி டவுன் ஆனரரி மாஜிஸ்டிரேட்டும், ஸ்ரீ மலைக்கோவில் பரிபாலகருமாகிய நாட்டரசன்கோட்டை அரு. சு. வே. காசிவிஸ்வநாத செட்டியாரும், திரிசிரபுரம் மௌனமடம் கட்டளை விசாரணை மௌன சோமசுந்தரத்தம்பிரான் அவர்களும், தேப்பெருமாநல்லூர் சிவன்ஸ்வாமிகளும் பிரபவ௵ சித்திரைமீ 19உ-யில் வெளியிட்ட கும்பாபிஷேக பத்திரிகையைக் கண்ணுற்று, எவ்வுயிர்க்குந் தந்தையாகும் சிவபரஞ்சுடர் தாமே தாயுமாயிருந்தலை விளக்கியருளுகின்ற ஸ்ரீமாத்ருபூதேஸ்வரஸ்வாமிக்கு 13-6-27-ல் நடைபெறுகிற கும்பாபிஷேக தினத்திற்குள் இதனை வெளியிடுவதற்குக்காரணபூதரும், அச்சுயந்திரத் தலைவரும், தயவு தாட்சண்யம் அன்பு இரக்கம் முதலிய புண்ணிய குணங்கள் அமைந்த ஸ்ரீமான T. K. ராஜகோபால் நாயுடுகாருக்கும், புரூப்பார்த்ததில் உதவிசெய்த பால்யநண்பர் T.S. துரைசாமிபிள்ளையவர்களுக்கும் மனப்பூர்வமாய் வந்தனம் செலுத்துகின்றேன்.

என்று மின்பம் பெருகு மியல்பினா
லொன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.

திரிசிரபுரம்,

ஸ்ரீ தாயுமனசுவாமிகள்
திருமடாலயம்,
பிரபவ-வைகாசி

இங்ஙனம்,

தாயான செல்வத்துக்குத்
தொண்டுபூண்டொழுகும்
மு. பி. இராஜா ஹரிஹரபுத்திரபிள்ளை.

உ

நூலாசிரியராகிய

# சைவ-எல்லப்ப நாவலர்

## சரித்திரக் குறிப்பு.

இனிய சொற்சுவை, பொருட்சுவை கூடிய தமிழ்ச் செய்யுள் வடிவமாய் இந்நூலை இயற்றியவர் சைவ-எல்லப்ப நாவலரென்னும் பெரியோராவர். இவர் சோழவள நாட்டில் திருவெண்காடு என்னுங் கிராமத்திலே, கார்காத்த வேளாளர் குலத்திலே காளிங்கராய கோத்திரத்தில் பிறந்தவர். சிறு வயதிலே தாய் தந்தையரால் எல்லப்பன் எனப் பெயரிடப்பெற்று நல்லாசிரியர் பால் வரன் முறையாகச் சிறு நூல் பயின்று, பின்னர்த் தருமபுர ஆதீனத்தை யடைந்து பண்டைத்தமிழ் இலக்கண விலக்கியங்களையும், சைவசித்தாந்த நூல்களையும் கற்றுப் பெரும்புலவராய் விளங்கியிருந்தனர். பின்னர் அருந்ததியொத்த கற்பும், ஔவையை ஒத்த கல்வியும், இலக்குமியை யொத்த அழகும் வாய்ந்த ஓர் பெண்ணை மணந்து. ஒரு சிறிதுந் தவறாது இல்லறம் நடத்திவந்தனர். அதன்பின், அக்காலத்திலே அவ்வாதீனத்தி லெழுந்தருளியிருந்த பண்டாரச் சந்நிதிகள்பால், சமய விசேட நிர்வாண தீட்சையும், திவ்யகவி சைவ எல்லப்ப நாவலர் என்னும் பட்டமும் பெற்று விளங்கியிருந்தனர் இந்நாவலர் இயற்றிய நூல்கள்:— அருணாசலப் புராணம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், திரு விரிஞ்சைப் புராணம். தீர்த்தகிரிப் புராணம் திருச்செங்காட்டங்குடிப் புராணம், திருவாரூர்க்கோவை, திருவருணை அந்தாதி, சௌந்தரிய லகரி உரை இவர் மேற்சொல்லிய ஆதீனத்து மடாலயத்தில் பல புலவர்களோடு சம்பாஷித்துக் கொண்டிருக்கையில், அங்கு வந்திருந்த ஓர் வைணவப்புலவர் திருவரங்கக் கலம்பகத்திலுள்ள சில செய்யுட்களைச் சொல்லிப் பொருள் விரித்து இத்தகைய செய்யுட்களைச் செய்வார், இக்காலத்திலொருவருமிலர் என்று கூறினர். அதனைக்கேட்ட இந் நாவலர் அன்றிரவே

“ சைவத்தின் மேற்சம யம்வே றிலையதிற் சார்சிவமாந்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்லெனு நான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவாரமுந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர்பொற் றாளெம் முயிர்த்துணையே ”

என்னும் கட்டளைக் கலித்துறையையுடைய திருவருணைக் கலம்பகத்தைப் பாடிமுடித்து மறுநாள் காலையில் பலருக்கும்படித்துக்காட்டிப் பொருள் கூறினர். அதனைக் கேட்ட எல்லோரும் ஆச்சரியமுற்று நாவலரது கல்வித் திறத்தை மெய்ச்சிப்புகழ்ந்தனர்.

# திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள்

## அருளிச்செய்த

## திருச்சிராப்பள்ளி—பண்—குறிஞ்சி.

---

திருச்சிற்றம்பலம்.

நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை யுமையொருபாக முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே. ௧

கைம்மகவேந்திக் கடுவனோடிக் கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல் பழியன்றே. ௨

மந்தம்முழவம் மழலைததும்ப வரைநீழற்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம்மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிக ளடியார்க்கல்ல லில்லையே. ௩

துறைமல்குசாரற் சுனைமல்குநீலத் திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ் சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள் பெருமானே. ௪

கொலைவரையாத கொள்கையர்தங்கண் மதின்மூன்றுஞ்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரைநாளுந் தலைவரல்லாமை யுரைப்பீர்காள்
நிலைவரைநீல முண்டதும்வெள்ளை நிறமாமே. ௫

வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத் தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேவிய செல்வனார்
தையலோர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை யறிவாரே. ௬

வேயுயர்சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேவிய செல்வனார்
பேயுயர்கொள்ளி கைவிளக்காகப் பெருமானார்
தீயுகந்தாட றிருக்குறிப்பாயிற் றாகாதே. எ

மலைமல்குதோளான் வலிகெடவூன்றி மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ் சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர் செய்கையே. அ

அரப்பள்ளியானு மலருறைவானு மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டா லிகழாரே. கூ

நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்களு முரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம் பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று சேர்மினே. ய

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி வாழ்வாரே. யக

திருச்சிற்றம்பலம்.

---

உ

## திருநாவுக்கரசு சுவாமிகள்
அருளிச்செய்த
## திருச்சிராப்பள்ளி—திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

மட்டுவார்குழ லாளொடுமால்விடை
இட்டமாவுகந் தேறுமிறைவனார்
கட்டுநீத்தவர்க் கின்னருளேசெயும்
சிட்டர்போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே. க

அரியயன்றலை வெட்டிவட்டாடினார்
அரியயன்றொழு தேத்துமரும்பொருள்
பெரியவன் சிராப்பள்ளியைப் பேணுவார்
அரியயன்றொழ வங்கிருப்பார்களே. உ

அரிச்சிராப்பக லைவராலாட்டுண்டு
சுரிச்சிராது நெஞ்சேயொன்று சொல்லக்கேள்
திருச்சிராப்பள்ளி யென்றலுந்தீவினை
நரிச்சிராது நடக்கு நடக்குமே. ௩

தாயுமாயெனக் கேதலைகண்ணுமாய்ப்
பேயனேனையு மாண்ட பெருந்தகை
தேயநாதன் சிராப்பள்ளிமேவிய
நாயனாரென நம்வினை நாசமே. ௪

திருச்சிற்றம்பலம்.

---

## க்ஷேத்ரத் திரு வெண்பா

கழிந்தது நன்னெற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்தது டலிரா வண்ணம்—அழிந்தது
இராமலையா கொண்டுபோ என்னுமுன் னெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்.

—ஐயடிகள் காடவர்கோன் நாயனார்.

---

## ஸ்ரீ தாயுமான சுவாமிகள் பாடல்.

### எடுத்த தேகம்.

எடுத்த தேகம் பொருளாவி மூன்று நீ
யெனக்கொன் றில்லையென மோனநன்னெறி
கொடுத்தபோது கொடுத்தன்றோ பினும்
குளறிநானென்று கூத்தாட மாயையை
விடுத்தவாறுங்கண் ணீரொடு கம்பலை
விலகுமாறுமென் வேட்கை ப்ரவாகத்தைத்
தடுத்தவாறும் புகலாய் சிரகிரித்
தாயுமான. தயாபர மூர்த்தியே.

நோயும் வெங்கலிப் பேயுந் தொடரநின்
　　நூலிற்சொன்ன முறையிய மாதிநான்
தோயும் வண்ண மெனைக்காக்குங் காவலும்
　　தொழும்புகொள்ளுஞ் சுவாமியு நீ கண்டாய்
ஓயுஞ்சன்ம மினியஞ்ச லஞ்சலென்று
　　உலகங்கண்டு தொழவோ ருருவிலே
தாயுந்தந்தையு மானாய் சிரகிரித்
　　தாயுமான தயாபர மூர்த்தியே.

## ஆசையெனும்.

தந்தை தாயுநீ யென்னுயிர்த் துணையுநீ
　　சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலால்
　　மற்றொரு துணைகாணேன்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே
　　ஆதியே யடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவனெனும்
　　சிரகிரிப் பெருமானே.

## மூவரம்மானை.

திரிசிரபுரமாவீசன் செட்டிமகட்கா வேடம்
தரித்து மருத்துவஞ்செய் தாயானா ரம்மானை
தரித்து மருத்துவஞ்செய் தாயானா ராமாயின்
மருத்தெண்ணெய்ச் சிக்கன்றி மணமிவர்க்கே தம்மானை
மட்டுவார் குழலிருக்க மணமரிதோ வம்மானை.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இந்நூல் உரையாசிரியர் இயற்றிய

# சிராமலைநாதர்
# அடைக்கலப் பதிகம்.

---

## விநாயகர் முதலிய கடவுள் வணக்கமுஞ்
### சமயக்குரவர், சந்தானக்குரவர் வணக்கமுங்கூறுதல்

விருத்தம்.

கரிமுகனைக் கைதொழுது செவ்வந்தி நாயகனைக்
கருத்தில் வைத்தே
அரியமட்டு வார்குழனல் லம்பாளை யுன்னியறு
முகவற் போற்றித்
தெரிவரிய குருவாவோ ரெண்மர்களைச் சிந்தையினில்
வைத்துத் தேர்ந்து
பெரியசிரா மலையினடைக் கலப்பதிகந் தனையன்பாற்
பேசு வாமால்.

## பதார்த்தத்திரயம்.

விருத்தம்

சத்துமசத்துஞ் சதசத்து மெனவே சாற்று முப்பொருளிற்
சத்தே சித்தா மசத்துமே சடமாஞ் சதசத்தா வதுதான்
சித்தாலுணர்த்தும் பொருளாகு மெனவே யென்னைத் தெளிவித்த
அத்தா திரிசிரா மலைவா ழமலாவுன்ற னடைக்கலமே. (1)

அவஸ்தாத்திரயம்—வேறு.

கருவிக ளெல்லா முடுக்களே யாகக் கங்குலின் மதியதாஞ் சகலம்
மருவியவதனை யிருளதாய் நின்று மறைத்தலே கேவலமாகுந்
திருவருளான விரவியாலவைக டிருக்கற நீங்கலே சுத்தம்
பெருமையா மதுவென் றருள்சிரா மலைவாழ் பிஞ்ஞகா வுனதடைக்கலமே (2)

கேவல மென்பதாணவ மறைப்பாங் கிளர்தரு சகல மாயையுமாம்
மேவுமவ்விரண்டு மறைப்பொடு நினைப்பாய் மேவிடும் வினைகளைப்புரி
ஆவலா லந்தம லங்களை யகற்றி யருணெறி நிற்றலேசுத்தங் [யும்
காவல்சேர் நிலையென் றருள்சிரா மலைவாழ் கடவுளே யுனதடைக்கலமே (3)

அருணெறி யதற்குச் சாதன மாவ தற்பமாம் போதனீக் குதலொன்
றிருணெறி யான தற்செய லகற்ற லென்னுமிவ் விரண்டினை நீக்கிக்
குருவினா லருளு ஞானமு முடன்சேர் கோதிலாப் பத்தியுங் கொள்ள
விருமையா மவையென் றருள்சிரா மலைவா ழிறைவனே யுனதடைக்கலமே(4)

அச்சிவ ஞான பத்தி வந்தடைய வமலமாம் பூதி கண் டிகையை
இச்சையாலணித லைந்தெழுத் தோத லென்னுமிம் மூன்றையும்பற்றிச்
சச்சிதானந்த வுருகுரு வாதி மூன்றையுந் தாழ்ந்துமே யிறைஞ்சல்
நிச்சய மென்ற சிராமலை யரேச நிமலனே யுனதடைக் கலமே (5)

குருவுரு வாவோரெண்மரேயாகுங் கோதிலா வவர்கள்பாவனையான்
மருவிய விலிங்கந் திருத்தலமாகு மன்னுமவ் வெண்மர் நூல் வழியே
பெருமையாய் நிற்போர் சங்கமமாகப் பிறங்கியசைவரென்றுரைத்த
அருளுருவான திரிசிராமலைவா ழண்ணலே யுனதடைக் கலமே. (6)

வேறு.

சைவர்க் குரிய செந்தமிழ்வே தத்தை யென்றுஞ் சாற்றியே
மெய்வைத் தருளு மம்மறையை விதித்த கருமங் களிலோதுந்
தெய்வத் திருமந் திரமாகத் தெளிந்தே கருமங் களைமுடித்தல்
உய்யத் தக்கதென்ற சிராமலையா யுன்றனடைக் கலமே. (7)

தந்தந்திரம்—வேறு

சுத்தமு மசுத்த முடனுப யமுமாய்த் தோன்று பாதானங்கண் மூன்றிற்
றத்துவ முப்பத்தா றுமே யுதிக்குஞ் சார்ந்திடுஞ்சுத்தமோரைந்தாஞ்
சுத்தமி லசுத்த மிருபத்து நான்காஞ் சொல்லிய உபயமோ ரேழாம்
இத்திற முரைத்த சிராமலைநாதா விறைவனேயுனதடைக்கலமே.(8)

தற்பரிசனம்.

பூதமும் புலனும் பொறியொடுமந்தக் கரணமாம்புணர்ப்புமற்றுள்ள
பேதமுமான தத்துவமெல்லாம் பிழையறத் தேடியுமென்னைத்
தீதறக்காணேன் சிராமலையிறையேதிகழ்தரவென்னையெற்கருள்வாய்
மாதவர்வணங்கும் மாமலைக்கொழுந்தே வரதனே யுனதடைக்கலமே

சமயநிலை.

முத்தியும் பெரிய பந்தமு மாக மொழியுநல் லிலக்கணங் களையே
வைத்திடுஞ் சமயகோடிகண் முன்பின்மலைவுற மொழியுமஃ தின்றிச்
சுத்தமாநிலையைத்தோன்றவே விளக்கல்சோதிசேர்சைவமேயென்ற
சத்தியப்பொருளே சிரகிரி வாழ்வே தனியனே னுனதடைக் கலமே

முத்திநிலை—வேறு

பந்தமதனி லிரண்டடங்கிப் பாசமொன்றே தோன்றியிடும்
அந்தமுள்ள முத்தியினி லந்தவிரண்டும் பதிதனிலே
சந்தமுடனே யடங்குநிலை சாற்றற்கரிய விறற்குறியாம்
இந்தமுத்தி யென்றசிரா மலைவாழிறையே யடைக்கலமே. [11]

சிராமலைநாதர் அடைக்கலப்பதிகம்
முற்றிற்று.

---

உ

# ஸ்ரீமட்டுவார் குழலம்பாள் சிந்தனைப்பதிகம்.

## விநாயகர் முதலிய கடவுள் வணக்கம்.

---

கொச்சகக்கலிப்பா.

செவ்வந்தி விநாயகரைச் சிந்தைதனி லேவைத்துச்
செவ்வந்தி நாயகர்தந் திருவடியைத் தொழுதேத்திக்
குவ்வநதி மட்டுவார் குழலம்பாள் திருவடியை
யெவ்வமறச் சிந்தனைசெய் திருப்பதிக மெடுத்துரைப்பாம். (1)

விருத்தம்.

மட்டு லாமலர் வாவியு மாமலர்த் திருவும்
மட்டி லாதுறை வளங்களும் மன்னிய மனத்தின்
மட்டு லாவிய குணத்தரும் வாழ்சிரா மலையின்
மட்டு வார்குழல் வல்லியைச் சிந்தையுள் வைப்பாம். (2)

திருவ ருட்பரா சத்திக ளாமெனத் திகழ்ந்து
மருவு மைந்தொழில் வித்துமாய் மன்னுபூ ரணமாய்க்
கருவு மாகிய மட்டுவார் குழலம்பாள் கமலத்
திருவு லாவிய மலர்ப்பதங் களைச் சிந்தை செய்வாம். (3)

வேறு

உருவா யுருவ மொருநான்கா யுருவங் கடந்தே யெங் குநிறை
யருவா யருவ மொருநான்கா யந்த விரண்டு வடிவமுமாய்க்
கருவாய் முளைத்த காரணமாய்க் காணுந்திரிசி ராமலைவாழ்
தெருள்சேர் மட்டுவார்குழலம் பாளைத்தினமுஞ் சிந்தைசெய்வாம்()

மண்ணீர் கனல்கால் வானமுடன் மருவுஞ் சுடர்க ளிரண்டாகித்
திண்ணு ருயிரோ டெண்வகையாய்த் திகழு மிறைவன் றனையாட்டுந்
தண்ணு ரருள்சேர் மட்டுவார் குழலம் பாளின் றுண்மலரை
யெண்ணு நீசர் களைப்போல விராமலென்றுஞ் சிந்திப்பாம் (5)

வேறு.

மண்ணினி லைந்தாய்ப் புனலினி னன்காய் மருவிய கனலினின் மூன்றாய்த்
திண்ணிய காலி னிரண்டதாய் வானி லொன்றதாய்த் திகழ்தரநின்று
நண்ணுமோர் மட்டுவார் குழலம்பா ளாகிய நாயகி யுனது
புண்ணிய வடிவை யிடைவிடா தென்றும் போற்றியே சிந்தனை செய்வாம். (6)
சகலமே லைமா மவத்தைக ளுடனே சார்ந்தமுக் குற்றமு மருவி
இகலுறுங் காம மாதியாலியற்றி யிருள்புரி சமயநூற் கெட்டா
தகலுமோர் மட்டு வார்குழ லம்பா ளாகிய வன்னையே யனமே
திகழ்சிரா மலைவாழ்தேவியே யுன்னை யென்றுமே சிந்தனைசெய்வாம்

வேறு

ஒன்றாய்ப் பலவா யொளியுருவா யுயிரா யுயிர்க்கோ ருணர்வுமாய்
நன்றாய்த் தீதா யாண்பெண்ணாய் நானு விதமாம் பொருளாகி
யன்றாய் நிற்கு மட்டுவார் குழலா மனையே யுனக்கன்பு
வொன்றுதறிவா ருண்டுகொலோ வுனதின்னருளாற்சிந்திப்பாம் (8)

வேறு.

அழியா ப்பொருளு மழிபொருளு மான விரண்டு நன்குணர்ந்து
வொழியாப் பற்றுக்களையொழித்து வுழலும் வினைக டமை நீத்தோ
விழியாற் காணு மட்டுவார் குழனல் லம்பாள் விரிமலர்த்தாள்
கழியா வன்பு மிகவளரக் கனிந்தெந் நாளுஞ் சிந்திப்பாம். (9)

மனமேயுனையான் வேண்டுகின்றேன் மன்னுப்புலன்க ணெறிசெல்ல
தினமா மன்பர் பாலினிற்சென் றினிதா யிறைவி பணியியற்றிக்
கனமார்திரிசி ராமலையிற் கருணைக் கடலாய் வீற்றிருக்குந்
தனமார் மட்டு வார்குழனற் றாயின் மலர்த்தாட் சிந்திப்பாம். (10)

ஸ்ரீ மட்டுவார் குழலம்பாள் சிந்தனைப்பதிகம்

முற்றிற்று.

உ

அருணகிரிநாதர் அருளிச்செய்த

# திருப்புகழ்.

---

தறையின் மானுட ராசையி னால்மட
லெழுது மாலருள் மாதர்கள் தோதக
சரசர் மாமல ரோதிபி னாலிரு கொங்கையாலுந்-
தளர்மி னேரிடை யாலுடை யால்நடை
யழகி னால்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ;
பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிக
ளணுகொ ணாவகை நீடு†மி ராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்-
பகரொ ணாதது சேரவொ ணாதது
நினையொ ணாதது வானத யாபர
பதிய தானச மாதிம னோலயம் வந்துதாராய்;
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி னோத‡ச மோளத யாபர அம்புராசித்-
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்;
மறவர் நாயக ஆதிவி நாயக
ரிளைய நாயக காவிரி நாயக
வடிவி னாயக ஆனைத னாயக எங்கள்மானின்-
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னார்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே

---

† இராசியம்=இரகசியம ‡ சமோளம=சமோளனம்: கலப்பு

* அருணகிரிநாதர் அருளிச்செய்த இது முதல்வரும் குன்றுதோருடல் [திரிசிராப்பள்ளி] திருப்புகழ்கள் அச்சிடும் செலவை திரிசிராபுரம் செங்குந்தர் மரபு கு. சுப்பிரமணிய முதலியார் அன்புடன் ஒப்புக்கொண்டார்.

அங்கை நீட்டிய ழைத்துப் பாரிய
கொங்கை காட்டிம றைத்துச் சீரிய
அன்பு போறபொய்ந டித்துக் கா்சள வுறவாடி-
அம்பு தோற்றக ணிட்டுத் தோதக
இன்ப சாஸ்த்ரமு ரைத்துக் கோகிலம்
அன்றில் போற்குர லிட்டுக் கூரிய நகரேகை;
பங்க மாக்கிய லைத்துத் தாடனை
கொண்டு வேட்கையெ ழுப்பிக் காமுகர்
பண்பில் வாய்க்கம யக்கிக் கூடுத லியல்பாகப்
பண்டி ராப்பகல் சுற்றுச் சூளைகள்
தங்கள் மேற்பரமை விட்டுப் பார்வதி
பங்கர் போற்றிய பத்மத் தாள்தொழ அருள்வாயே;
எங்கு மாப்க்குறை வற்றுச் சேதன
அங்க மாய்ப்பரி சுத்தத் தோர்பெறும்
இன்ப மாய்ப்புகழ் முப்பத் தாறினின் முடிவேறும்·
இந்த்ர கோட்டிம யக்கத் தான்மிக
மந்த்ர மூர்த்தமெ டுத்துத் தாமத
மின்றி வாழ்த்திய சொர்க்கக் காவல வயலூரா
செங்கை வேற்கொடு துட்டச சூரனை
வென்று தோற்பறை கொட்டக் கூளிகள்
தின்று கூத்துந டிக்கத் தோகையில் வரும்வீரா
செம்பொ னாற்றிகழ் சித்ரக் கோபுர
மஞ்சி ராப்பகல் மெத்தச சூழ்தரு
தென்சி ராப்பளி வெற்பிற் றேவர்கள் பெருமாளே

அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெயி தாகிய சூத்திர
மம்போருக னுடிய பூட்டிது இனிமேல்நாம்
அஞ்சா தமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னார்க்கிய
லங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல்
வந்தோமிது வேகதி யாட்சியு
மிந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறுட

வந்தேவெகு வாநமை யாட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய மற்வாதே;
நிந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னுதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச்-
செங்காடென வேவரு மூர்க்கரை
சங்காரசி காமணி வேற்கொடு
திண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே;
இந்தோடிதழ் நாக*ம கக்கடல்
கங்காளமி னார்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திர னருள்பாலா-
என்கூடரு ளால்நௌவி நோககிமை
நன்பூமண மேவிசீ ராப்பளி
யென்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே.
அரிவையர் நெஞ்சுரு காப்புணர்
தருவிர கங்களி னூற்பெரி
தவசம்வி ளைந்துவி டாய்த்தடர் முலைமேல்வீழ்ந்-
தகிலொடு சந்தன சேற்றினில்
முழுகியெ முந்தெதிர் கூப்புகை
யடியின கமபிறை போற்பட விளையாடிப்;
பரிமளம விஞ்சிய பூக்குழல்
சரிபம ருங்குடை போய்ச்சில
பமவைக ளின்குர லாய்க்கயல் விழிசோரப்-
பனிமுக முங்குறு வேர்பபெழ
இதழமுமு துண்டிர வாய்ப்பகல்
பகடியி டும்படி தூர்த்தனை விடலாமோ;
சரியையு டன்க்ரியை போற்றிய
பரமப தம்பெறு வாாக்கருள்
தருகணன் ரங்கபு ரோச்சிதன் மருகோனே-
சயிலவம றிந்தகை வேற்கொடு
மயிலினில் வந்தெனை யாட்கொளல்
சம்மறி யும்படி காட்டிய குருநாதா;

*மகாக் கடல்=பெருங் கடல்போலப் பெருகிவந்த கங்கை.

திரிபுவனந்தொழு மார்த்திபன்
மருவிய மண்டல கோட்டிகள்
தெருவில்வி ளங்குசி ராப்பள்ளி மலைமீதே-
திரியஇ ருந்தப ராக்ரம
உருவளர் குன்றுடை யார்க்கொரு
திலதமெ னும்படி தோற்றிய பெருமாளே.

அழுதழு தாசார நேசமு
முடையவர் போலேபொய் சூழ்வுறும்
அசடிகள் மாலான தூர்முகர் பொன்கொடாநாள்-
அவருடன் வாய்பேசி டாமையு
முனிதலு மாறுத தோஷிகள்
அழுதியில் காசாசை வேசைகள் நஞ்சுதோயும்;
விழிகளி னால்மாட வீதியில்
முலைகளை யோராம லாரோடும்
விலையிடு மாமாய ரூபிகள் பண்பிலாத-
விரகிகள் வேதாள மோவென
முறையிடு கோமாள மூளிகள்
வினைசெய லாலேயெ னுவியு யங்கலாமோ;
வழியினில் வாழ்ஞான போதக
பரமசு வாமீவ ரோதய
வயலியில் வேலாயு தாவரை யெங்குமானாய்-
மதுரையின் மீதால வாயினில்
எதிரம ணாரோரே ணாயிரா
மறிகழு மீதேற நீறுப ரந்துலரவச்;
செழியனு மாளாக வாதுசெய்
கவிமத சீகாழு மா*முனி
சிவசிவ மாதேவ காவென வந்துபாடும்-
திருவுடை யாய்தீதி லாதவர்
உமையொரு பாலான மேனியர்
சிரகிரி வாள்வான தேவர்கள் தம்பிரானே.

இளையவர் நெஞ்சத் †தளைய மெனுஞ்சிற்
றிடைகொடு வஞ்சிக் கொடிபோல்வார்-

* முனி=யானைக்கன்று. † தளையம்=விலங்கு.

இணையடி கும்பிட் டணிபல்குல் பம்பித்
திதழமு துந்துய்த் தனியராக்;
களபசு கந்தப் புளகித இன்பக்
கனதன கும்பத் திடைமூழ்குங்-
கலவியை நிந்தித் திலகிய நின்பொற்
கழல்தொழு மன்பைத் தருவாயே;
தளர்வரு மன்பர்க் குளமெனு மன்றிற்
சதுமறை சந்தத் தொடுபாடத்-
தரிகிட தந்தத் திரிகிட திந்தித்
தகுர்திமெ னுங்கொட் டுடனடித்;
தெளிவுற வந்துற் றொளிசிவ னன்பிற்
சிறுவஅ லங்கற் றிருமார்பா-
செழுமறை யஞ்சொற் பரிபுர சண்டத்
திரிசிர குன்றப் பெருமாளே;

பகலவ னொக்குங் கனவிய ரத்நம்
பவளவெண் முத்தந் திரமாகப்-
பயிலமு லைக்குன் றுடைவர் சுற்றம்
பரிவென வைக்கும் பணவாசை;
அகமகிழ் துட்டன் பகிடிம ருட்கொண்
டழியும வத்தன் குணவீனன்-
அறிவிலி சற்றும் பொறையிலி பெற்றுண்
டலைதலொ ழித்தென் றருள்வாயே;
சகலரு மெச்சும் பரிமள பத்மந்
தருணப தத்திண் சுரலோகத்.
தலைவர்ம கட்குங் குறவர்ம கட்குந்
தழுவஅ ணைக்குந் திருமார்பா;
செகதல மெச்சும் புகழ்வய லிக்குந்
திகுதிகெ னப்பொங் கியவோசை-
திமிலைத விற்றுந் துமிகள்மு ழக்குஞ்
சிரகிரி யிற்கும் பெருமாளே.

ஒருவரொடு கண்கள் ஒருவரொடு கொங்கை
ஒருவரொடு செங்கை யுறவாடி

ஒருவரொடு சிந்தை ஒருவரொடு நிந்தை
ஒருவரொடி ரண்டு முறையாரை;
மருவமிக அன்பு பெருகவுள தென்று
மனநினையு மிந்த மருள்தீர-
வனசமென வண்டு தனதனன வென்று
மருவுசர ணங்க ளருளாயோ;
அரவமெதிர் கண்டு நடுநடுந டுங்க
அடவிடுப்ர சண்ட மயில்வீரா-
அமரர்முத லன்பர் முனிவர்கள்வ ணங்கி
அடிதொழவி ளங்கு வயலூரா;
திருவையொரு பங்கர் கமலமலர் வந்த
திசைமுகன்ம கிழ்ந்த பெருமானார்-
திகுதகுதி யென்று நடமிட முழங்கு
த்ரிசிரகிரி வந்த பெருமாளே.

குமுத வாய்க்கனி யமுத வாக்கினர்
கோலே வேலே சேலே போலே அழகான-
குழைகள் தாக்கிய விழிக ளாற்களி
கூரா வீறு தீரா மாலா யவரோடே;
உமது தோட ᐧᐧ ரி லெமது வேட்கையை
ஓரீர் பாரீர் வாரீர் சேரீர் எனவேநின்-
றுடைதொ டாப்பண மிடைபொ ருத்தன
மூடே வீழ்வே னீடே றுதே யுழல்வேனோ;
தமர வாக்கிய அமரர் வாழ்த்திய
தாதா வேமா ஞாதா வேதோ கையிலேறீ-
சயில நாட்டிறை வயலி நாட்டிறை
சாவா மூவா மேவா நீவா இளையோனே;
திமிர ராக்கதர் சமர வேற்கர
தீரா வீரா நேரா தோரா உமைபாலா-
திரிசி ராப்பளி மலையின் மேற்றிகழ்
தேவே கோவே வேளே வானோர் பெருமாளே.

குவளை பூசல்வி ளைத்திடு மங்கயல்
கடுவ தாமெனு மைக்கண் மடந்தையர்
குமுத வாயமு தத்தை நுகர்ந்திசை பொருகாடை-

குயில்பு ருமயில் *குக்கில் சுரும்பினம்
வன†ப தாயுத மொக்கு மெனும்படி
குரல்வி டாஇரு பொற்குட மும்புள கிதமாகப்;
பவள ரேகைப டைத்தத ரங்குறி
யுறவி யாளப டத்தை யணிந்துகை
பரிச தாடன மெய்க்கர ணங்களின் மதநூலின்-
படியி லேசெய்து ருக்கிமு யங்கியெ
அவச மாய்வட பத்ர நெடுஞ்சுழி
படியு மோகச முத்ர மழுந்துத லொழிவேனோ;
தவள ரூப*ச ரச்சுதி யிந்திரை
ரதிபு லோமசை க்ருத்திகை ரம்பையர்
சமுக சேவித துர்க்கை பயங்கரி புவனைசை-
சகல காரணி சத்தி பரம்பரி
யிமய பார்வதி ருத்ரி நிரஞ்சனி
சமய நாயகி நிஷ்களி குண்டலி யெமதாயி;
சிவைம நோமணி சிற்சுக சுந்தரி
கௌரி வேதவி தக்ஷணி யம்பிகை
திரிபுரை யாமளை யற்பொடு தந்தருள் முருகோனே-
சிகர கோபுர சித்திர மண்டப
மகர தோரண ரத்ந அலங்க்ருத
திரிசி ராமலை அப்பர் வணங்கிய பெருமாளே.

சத்தி பாணீ நமோநம முத்தி ஞானீ நமோநம
தத்வ வாதீ நமோநம விந்துநாத-
சத்து ரூபா நமோநம ரத்ந தீபா நமோநம
தற்ப்ர தாபா நமோநம என்றுபாடும்;
பத்தி பூணு மலேயுல கத்தின் மானுர் சவாதகில்
பச்சை பாடீர பூஷித கொங்கைமேல்வீழ்-
பட்டி மாடான நாணுமை விட்டிராமே†யுலோகித
பத்ம சீர்பாத நீயினி வந்துதாராய்;
அத்ர தேவா யுதாசுர ருக்ர சேனு பதீசுசி
யர்க்ய ‡சோமாசி யாகுரு சம்ப்ரதாயா-

* குக்கில்=செம்போத்து. † பதாயுதம்=கோழி. * சரச்சுதி=சரஸ்வதி.
† உலோகிதம்=செம்மைநிறம். ‡ சோமாசி=யாக கர்த்தா.

அர்ச்சனாவாக னாவயலிக்குள் வாழ்நாயகா புய
§அக்ஷ மாலா தாராகுற மங்கைகோவே;
சித்ர கோலா கலாவிச லக்ஷ்மி சாதார தாயல
திக்கு பாலா சிவாகம தந்த்ரபோதா-
சிட்ட நாதா சிராமலை யப்பர் ஸ்வாமீ மகாவ்ருத
தெர்ப்பை யாசார வேதியர் தம்பிரானே

பகலிரவினிற் றடுமாறு- பதிகுருவெனத் தெளிபோத;
ரகசியமுரைத் தநுபூதி- ரதநிலைதனைத் தருவாயே;
இகபரமதற் கிறையோனே- இயலிசையின்முத் தமிழோனே;
சகசிரகிரிப் பதிவேளே- சரவணபவப் பெருமாளே.

பொருளின் மேற்ப்ரிய காமா காரிகள்
பரிவு போற்புணர் க்ரீடா பீடிகள்
புருஷர் கோட்டியில் நாணா மோடிகள் கொங்கைமேலே-
புடைவை போட்டிடு மாயா ரூபிகள்
மிடிய ராக்குபொ லாமூ தேவிகள்
புலையர் மாட்டும ரூதே கூடிகள் நெஞ்சமாயம்;
கருதொ ணாப்பல கோடா கோடிகள்
விரகி னாற்பலர் மேல்வீழ் வீணிகள்
கலவி சாத்திர நூலே யோதிகள் தங்களாசைக்-
கவிகள் கூப்பிடு மோயா மாரிகள்
அவச மாக்கிடு பேய்நீ ரூணிகள்
கருணை நோக்கமி லாமா பாவிக ளின்பமாமே;
குருக டாக்ஷக லாவே தாகம
பரம வாக்கிய ஞானா சாரிய
குறைவு தீர்த்தருள் ஸ்வாமீ கார்முக வன்பரான-
கொடிய வேட்டுவர் கோகோ கோவென
மடிய நீட்டிய கூர்வே லாயுத
குருகு க்ஷேத்ரபு ரேசா வாசுகி அஞ்சமாறும்;
செருப ராக்ரம *கேகே வாகன
சரவ ணோற்பவ மாலா லாளித
திரள்பு யாத்திரி யீரா றாகிய கந்தவேளே-

---

§ அக்ஷ மாலா = ருத்திராக்ஷ மாலை. *கேகயம் = மயில்.


சிகர தீர்க்கம காசி கோபுர
முகச டாக்கர சேணு டாக்ருத
திரிசி ராப்பளி வாழ்வே தேவர்கள் தம்பிரானே

பொருள்கவர் சிந்தை அறிவையர் தங்கள்
புழுககில் சந்து பனிநீர்தோய்-
புளகித கொங்கை யிளகவ டங்கள்
புரள மருங்கி லுடைசோர;
இருவளர் கொண்டை சரியஇ சைந்து
இணைதரு பங்க அநுராகத்-
திரிதலொ ழிந்து மனதுக சிந்து
னிணையடி யென்று புகழ்வேனோ;
மருள்கொடு சென்று பரிவுட னன்று
மலையில்வி ளைந்த தினைகாவல்-
மயிலை மணந்த அயிலவ எங்கள்
வயலியில் வந்த முருகோனே;
தெருளுறு மன்பர் பரவ விளங்கு
திரிசிர குன்றில் முதனாளில்-
தெரிய இருந்த பெரியவர் தந்த
சிறியவ அண்டர் பெருமாளே.

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே-
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத;
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்-
யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ;
ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்தவேளே-

*ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ாரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா;
நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா-
நர்கத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்சீ ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே.
வெருட்டி யாட்கொளும் விடமிகள் புடைவையை
நெகிழ்த்த ணைப்பிகள் படிறிகள் சடுதியில்
விருப்ப மாக்கிகள் விரவிய திரவிய மிலரானல்-
வெறுத்து நோக்கிகள் கபடிகள் நடமிடு
பதத்தர் தூர்த்திகள் ம்ருகமத பரிமள
விசித்ர மேற்படு முலையினு நிலையினு மெவரோடும்;
மருட்டி வேட்கைசொல் மொழியினும் விழியினு
மகிழ்த்த பூக்கமழ் குழலினு நிழலினு
மதிக்கொ ணாத்தள ரிடையினு நடையினு மவமேயான்-
மயக்க மாய்ப்பொருள் வரும்வகை க்ருஷிபணு
தடத்து மோக்ஷம தருளிய பலமலர்
மணத்த வார்க்கழல் கனவிலு நனவிலு மறவேனே;
இருட்டி லாச்சுர ருலகினி லிலகிய
சகஸ்த்ர நேத்திர முடையவன் மிடியற
இரக்ஷை வாய்த்தருள் முருகப னிருகர முகவீரா
இலக்ஷ்மீச்சுர பசுபதி குருபர
சமஸ்த ராச்சிய ந்ருபபுகழ் வயமியல்
இலக்க ரேய்ப்படை முகடெழு ககபதி களிகூரத்;
திருட்டு ராக்ஷதர் பொடிபட வெடிபட
எடுத்த வேற்கொடு கடுகிய முடுகிய
செருக்கு வேட்டுவர் திறையிட முறையிட மயிலேறும்
செருப்ப ராக்ரம நிதிசர வணபவ
சிவத்த பாற்கர னிமகரன் வலம்வரு
திரிச்சி ராப்பளி மலைமிசை நிலைபெறு பெருமாளே

*ஆலித்து = களித்து.



திரிசிராமலையும், ஸ்தல தீர்த்தங்களும், (காவிரி, சிவகங்கை, நன்றுடையான்,

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திரிசிராமலைப் புராணமாகிய

# செவ்வந்திப் புராணம்.

### பாயிரம்.

கலிவிருத்தம்.

அருளெ னுங் கடன்முகந் தடியர் சிந்தையாம்
பொருள்பெறு நிலஞ்சிவ போக முற்றிட
வரமழை யுதவுசெவ் வந்தி யானையின்
றிருவடி யிணைமலர் சென்னி சேர்த்துவாம்.

(இதன் பொருள்.) திருவருளென்னுஞ் சமுத்திர ஜலத்தை முகந்துகொண்டுவந்து அடியவருடைய சிந்தையாகிய ஞானப்பொருளைப்பெற்ற நிலத்தில் சிவபோகமானது முதிர்ந்து விளைந்தனுபவிக்கும்படியாக அனுக்கிரகமென்னும் மழையை வருஷிக்கின்ற செவ்வந்தி விநாயகக்கடவுளின் திருவடியாகிய இரண்டு தாமரை மலர்களையுஞ் சிரசின்மேலணிந்து கொள்ளுவாம் இந்நூல் நிறைவேறற் பொருட்டு (என்றவாறு) யாம் - தோன்றா எழுவாய் சேர்த்துவாம் - பயனிலை, திருவடி - செயப்படுபொருள்.

### செவ்வந்தீஸ்வரர்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சொற்கொண்ட கிளியனையா ரனங்க னுக்குத் துணையாகத் துணைப்புருவ
விற்கொண்டு விளையாடுந் திரிசிரா மலையிலுறை விமலன் றன்னைப்
பொற்கொண்ட நிறத்தானுங் கரியமுகி னிகர்வானும் புலரா வண்ண
மற்கொண்ட மிடற்றானைச் செவ்வந்திப் பெருமானை யகத்திற் சேர்ப்பாம்.

(இ-ள்) கிளியின் மொழியைப்போலச் சொல்லினைக் கொண்டிராநின்ற மாதர்கள் மன்மதனுக்குச் சகாயமாக அவனது கருப்புவில்லை யொத்த தமது இரண்டு புருவங்களாகிய வில்லை வளைததுக்கொண்டு அவனது அம்புக

ளில் தாமரைப்பூவாகிய அம்பையொத்த கண்களைத் தத்தம் நாயகர்கள்பேரில் பிரயோகித்து ஐம்புலநுகர்ச்சியென்னும் இன்ப முண்டாகும்படி விளையாடா நின்ற திரிசிராமலையில் வீற்றிருக்கும் விமலனாகிய சிவபெருமானைப் பொன்போலு நிறமுள்ள பிரமனும் கரிய மேகம்போலு நிறமுடைய நாரணனும் உயிர்வாடாதபடி அநுக்கிரகஞ்செய்த (கருநிறம்பெற்ற கண்டத்தையுடையவருமாகிய) செவ்வந்திப்பெருமானை மனத்தில் வைப்பாம். (எ-று) யாம் தோன்றா எழுவாய், வைப்பாம் பயனிலை, பெருமானை செயப்படுபொருள் இச் செய்யுளில் வேண்டிய சொற்கள் வருவிக்கப்பட்டன. [க]

கலிநிலைத்துறை.

துரிசி ராமலை யடைந்திட வேண்டியே துதிக்கும்
பரிசி ராமலை வயற்கணே கயற்கணம் பாய
மரிசி ராமலை மதனிரு கணைகளால் வயங்குந்
திரிசி ராமலை யிறையவர் மலர்ப்பதஞ் சேர்மின்.

(இ-ள்) பாசமாகிய மும்மலங்களால் வருகின்ற துன்பங்களிராமல் பதிப்பொருளை யடைந்திட வேண்டியே துதிக்கின்ற அன்பென்னுங் குணத்தையுடைய பசுவாகிய நீங்கள் அலைகள் பொருந்திய நீரையுடைய வயலினிடத்தே மீன்களின் கூட்டங்கள் பாயும்படியான நீர் நிலவளங்களும் மலையில் மினுக்கொடிகள் படர்கின்ற வரைவளமும் இராவினிடத்தே மாதரும் ஆடவரும் புணரும்படி போர்செய்கின்ற மன்மதனுடைய பெரிய மலர்களின் அம்புகளாகிய பூஞ்சோலைகளும் புஷ்பத் தடாகங்களும் விளங்காநின்ற வளங்களுமுடைய திரிசிராமலையி லெழுந்தருளி யிருக்கின்ற செவ்வந்தீச்சுரருடைய தாமரைமலர்போன்ற திருவடிகளைச் சேர்மின்கள் (எ-று.) நீங்கள் தோன்றா எழுவாய், சேர்மின் பயனிலை, திருவடி செயப்படுபொருள், இச் செய்யுளில் வேண்டிய சொற்கள் வருவிக்கப்பட்டன. [உ

## மட்டுவார் குழலம்மை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பனிகொள் வரையிற் பிறந்தபிடி பரனா ரிடத்திற் படர்ந்தகொடி
முனிவ ரிமையோர் மகிழ்வுற முப்பத் திரண்டும் வளர்த்தருளும்
வனிதை வடிவே லனைப்பயந்த மடந்தை மட்டு வார்குழலா
ளினிய பதமா மிருபோதுந் தலைமேற் றரிப்பா மிருபோதும்.

(இ-ள்.) பனிகள் பொருந்திய இமயமலையிற் பிறந்த பெண் யானைபோலவும் பரமசிவனாரிடத்திற படர்ந்த கொடிபோலவும் முனிவர்களுந் தேவர்களும் மகிழும்படியாக முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தருளுகின்

வனிதையாகவும் கூர்மைபொருந்திய வேலாயுதத்தையுடைய சுப்பிரமணியக் கடவுளைப்பெற்ற மடந்தையாகியு மிராநின்ற மட்டுவார் குழலம்மையினுடைய இனிமையான இரண்டு திருவடித்தாமரை மலர்களையும் காலை மாலைகளாகிய இரண்டு பொழுதினும் எமது தலையின்மேலே தரித்துக்கொள்ளுவாம் (எ-று)

## தல விநாயகர்.

கலிநிலைத்துறை.

மருப்ப தாமெழுத் தாணியா லாயிர மாற்றுப்
பொருப்ப தாந்தனி யேட்டிலே பாரதப் பொருளை
விருப்ப தாம்படி யெழுதிய கரிமுக விமலன்
றிருப்ப தாம்புய மலரினை யிறைஞ்சுவாஞ் சிரத்தால்.

(இ. ள்.) தமது கொம்பாகிய எழுத்தாணியால் ஆயிரமாற்று பொன் மலையாகிய மகாமேரு வென்னும் ஒப்பற்ற வேட்டிலே பாரதப்பொருள்களை விருப்பமுண்டாகும்படி யெழுதி யருளிய விமலனான யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளின் அழகிய பாதாரவிந்தமலரைச் சிரசினாலே வணங்குவாம் (எ-று) [௬]

## முருகக்கடவுள்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஓகையாற் றிரைமுன் னொளி னுழக்குமா வினையும் வாட்டு
மேகவெவ் வரையி னெல்லை யிடித்திடு மிமையோர் போற்றத்
தோகைமே லுலவுங் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை.

(இ. ள்.) அலைகளையுடைய கடலிலே முன்னாளில் ஒளித்து உழக்கும்படியான சூரபத்மாவென்னும் மாமரத்தையும் பிளந்து உவகையினாலே அச்சூரன் உயிரை வாட்டும்படியாகவும், அகத்தியமுனிவர் பொதியமலைக்குப் போகும்பொழுது மயக்கத்தைச் செய்த வெவ்விதான கிரவுஞ்சகிரியினது நான்கெல்லையையும் இடித்திடும்படியாகவும் தேவர்கள் வணங்கும்படி மயில் வாகனத்தின்மேல் உலாவுகின்ற சுப்பிரமணியக் கடவுளின் திருக்கரத்தில் விளங்கி இருக்கும்படியாகவும் வெற்றி மாலையையே தாங்கும்படியாகவும் இரா நின்ற வேலாயுதத்தை வணங்குவதே யெமக்குத் தொழிலாகும் (எ-று) [௫]

## ஆளுடைய பிள்ளையார்.

கலிநிலைத்துறை.

வண்டகத்தே குடைந்தூத முறுக்கதுடைந்து வாய் திறந்து
தண்டகத்தே மதுவொழுகி வழியுங்கமலத்தார்ப் புயத்தான்
கண்டகர்க்கே விடமாகி யடியார்க் கமுதாங் கவுணியன்றன்
முண்டகத்தாண் மலர்தலைமேன் முடித்தே னிந்நூன் முடித்தேனே

(இ-ள்) வண்டுகளானவை தேனையுண்ண விரும்பி யரும்பினுள்ளே மூக்கினாலே குடைந்தூத அப்போது அவ்வரும்பின் கட்டுடைந்து மலர்ந்து தண்டுகளினிடமாகத் தேனானது பெருக்கெடுத்தொழுகி வழியும்படியான தாமரை மாலை யணிந்த புயத்தை யுடையவராகவும், அன்னிய மதவாதிகளாகிய கீழ்மக்கட்கு விடமாகின்றவராகியும் அடியார்களுக்கு அமுதாகின்றவராகியும் இராநின்ற சம்பந்தமூர்த்தி சுவாமிகளுடைய பாதாரவிந்த மலர்களைத் தலையின் மேலே முடித்து இந்நூலை முடித்தேன் (எ-று) முடித்தேன் என்பது தெளிவுபற்றி வந்த காலவழுவமைதி. [சு]

## ஆளுடைய வரசு.

அறுசீர்க்கழிநெடிலடிலாசிரிய விருத்தம்.

புத்தியற் றிருக்கும் பொய்யர் புறச்சமயத்தை நீங்கிச்
சத்தியப் பொருளை யோர்ந்து தலைவனை யறிந்து சைவ
பத்தியிற் கனிந்த ஞானப் பழத்தினை யொருகற்றூணா
லத்தியைக் கடந்த நாவுக் கரசினை வணங்கு வோமே.

(இ.ள்) அறிவில்லாமலிருக்கின்ற பொய்யர்களாகிய புன்மையான சமணர் சமயத்தைவிட்டு நீங்கி உண்மையாகிய பொருளையுணர்ந்து அவ்வுண்மையில் விளங்காநின்ற சகல தேவர்களுக்குந் தலைவனான சிவபெருமானை யறிந்து அச்சிவபெருமானோடு சம்பந்தப்படுகின்ற சைவபத்தியிலே முதிர்ந்த சிவஞானப் பழத்தை அந்தச்சமணர்களாலே கட்டிவிடப்பட்ட ஒரு கல்லின் தூணினால் சமுத்திரத்தைக் கடந்த அப்பர்சுவாமிகளை வணங்குவாம் என்றவாறு. [எ]

## ஆளுடைய நம்பி.

ஷை வேறு.

தீங்கும் பெருமா நிலத்திடருந் தீரத் தீரத் திரைக்கடலிற்
றூங்கும் பெருமா ளுடன்வேதன் றுதிக்கும் படிக்குச் சுடர்க்கிரியா
யோங்கும் பெருமாள் புகழ்பரவி யோரா யிரம்பொ னொருமொழிக்கு
வாங்கும் பெருமாள் சவுந்தரியப் பெருமாள் பதத்தை வணங்கிடுவாம்

(இ-ள்.) தீங்கு முதலிய பாவங்கள் பெருகும்படியான பெரிய பூமியி லுள்ளோருடைய துன்பங்களும் நீங்கும்படியாகவும், கரையில் மோதா நின்ற அலைகளையுடைய பாற்கடலில் நித்திரை செய்கின்ற நாரணனும். பிரமனும் துதி செய்யும்படிக்கு அக்கினி மலையாக உயர்ந்தோங்கிய சிவபெருமானுடைய புகழைப்பரவுதல் செய்து ஒரு சொல்லுக் கோராயிரம் பொன் வாங்குகின்ற பெருமானாகிய சுந்திரமூர்த்தி சுவாமிகளின்றிருவடியை வணங்குவாம் (எ-று)

## ஆளுடைய வடிகள்.

### கொச்சகக்கலிப்பா

தேனூறும் வாசகங்க ளறுநூறுந் திருக்கோவை
நானூறு மமுதூற மொழிந்தருளு நாயகனை
வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை யிருபோது மிறைஞ்சிடுவேன்.

(இ-ள்) சிவஞானத் தேனூறுகின்ற திருவாசகங்கள் அறுநூறு செய்யுள் களும் திருக்கோவையார் நானூறு செய்யுள்களும் சிவானந்தமாகிய அமு தானது பெருக் கெடுத்தூற மொழிந்தருளுகின்ற நாயகனுனவரை ஆகாய கங்கையைப் போலுமிருந்த பரிசுத்தமுள்ள மாணிக்கவாசகரையானிடையூறு படாதவகை இராப்பகலென்னும் இருபொழுதும் வணங்குவேன் (எ-று) [௯]

## சேய்ஞலூர்ப் பிள்ளையார்.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மணத்தாது செறிமலருஞ் செழுங்கனியுங் கொணர்ந்துசிறு மணலைவாரி
யணைத்தாதி சிவன்வடிவா யமைத்தருளி யவற்கினிதா வாட்ட வேண்டிக்
கணத்தாவின் பால்கறந்து நிறைத்துவைத்த கலசமெலாங் கவிழ்த்ததாதை
யிணைத்தாளைத் தடிந்திறைவா துணைத்தாளை யடைந்தவர்தாளிறைஞ்சுவோமே

(இ-ள்) வாசனைபொருந்திய பூந்தாதுக்கள் நிறைந்த மலர்களையும் செழுமையான கனிகளையும்கொண்டுவந்து சிறிய மணலை வாரிச்சேர்த்து எப் பொருட்குமாதியாயுள்ள சிவபெருமானுடைய வடிவமாகிய லிங்காகாரமாய் அமைத்தருளி அந்தச் சிவலிங்கப் பெருமானுக்கு இனிதாக அபிஷேகஞ் செய்யவிரும்பிக் கூட்டங்களாயுள்ள பசுக்களின் பாலைக்கறந்து நிறைத்து வைத்த கலசங்களையெல்லாம் காலினாலே பூமியிற் கவிழ்த்த பிதாவினுடைய இரண்டு கால்களையும் வெட்டிச் சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளை யுமடைந்த சண்டேச்சுருடைய பாதங்களை வணங்குவாம் (எ-று) [illegible]

## அவையடக்கம்.

வேறு

நாவலந் தீவிற் கிட்டா நவமணி பொதிந்து வைத்த
மேவருங் கிழியு மந்த மணியுடன் விரும்பு மாபோற்
பாவருங் குற்ற மாமென் கவிதையின் பழுதும் பாரா
தியாவருங் கொள்வ ரீசன் பெயரதி லிருக்கை யாலே.

(இ-ள்) அழகிய ஜம்புத்தீவிலே அகப்படாத நவரத்தினங்களை முடிந்துவைத்த துணியையும் பொருந்துதற்கரிய அந்த இரத்தினங்களுடனே விரும்புகின்ற விதத்தைப்போல் பாடல்களில் வருகின்றகுற்றங்களாமென்று எனது கவிதையினுள்ள பழுதையும் பாராமல் யாவரும் அங்கீகாரஞ் செய்து கொள்வார்கள் சிவபெருமானுடைய திருப்பெயரானது அக்கவிதையிலிருக் கின்ற பெருமையினாலே (எ-று) கிழிக்கப்படுந் துணியிலடங்கிய நவமணி களைப்போலச் சிவபெருமானுடைய திருநாமம். அத்துணியைப்போல கவி தையென்பதாம் கிழிக்கப்படுதலால் கிழியென்று துணிக்குப் பெயராயிற்று முடிந்து வைக்கப்படும் அரிய பொருளைக் கிழியென்றுங் கூறுவர் [யக]

இச்செய்யுள் உபமாலங்காரம்.

பாயிரம் முற்றிற்று. ஆக திருவிருத்தம் கக

---

உ

முதலாவது

# திருமலைச் சருக்கம்.

---

## நைமிசாரணியச் சிறப்பு.

கலிநிலைத்துறை.

எலிக் காவெயிற் கவிதையாப் படத்தினை யெடுக்கும்
புலிக்க ராகமா யருளினாற் பசுவினம் பொருந்தும்
வலிக்க ராசல மடங்கலுக் குணர்வினை வழங்கும்
கலிக்க ராமுது கேறிமான் புனலினைக் கடக்கும்.

(இ-ள்.) மகாத்மாக்களாகிய பெரிய இருடிகள் வாசம் பண்ணுகின்ற நைமிசாரண்யத்திலே ஒன்றுக்கொன்று பகையின்றிப் பாம்பானது எலிக்கு வெயிலுக்குக் குடையாகத் தனது படத்தை விரித்து பொடுக்கும் அடங்காத அருளினாலே பசுக்கூட்டங்கள் புலியினிடத்தே பொருந்தும். வலிமையுள்ள

யானையானது சிங்கத்துக்குச் சொல்லாமை யென்னும் அறிவைப் போதிக்கும் பலம் பொருந்திய முதலையின் முதுகின்மேலேறி மானானது நீரினைக்கடக்கும் (எ-று.) [௧]

வன்ப தாகமுட் பிடித்திடுங் கவரியின் மயிரை
யன்ப தாகவே விடுக்குமை வாய்விலங் கனைத்து
மின்ப தாகவே புலிமுலைப் பாலுணு மிரலை
புன்பு லாலுணு நகமுடை விலங்குடன் புட்கள்.

(இ-ள்.) வலிமையாக முள்ளுகள் பிடித்திடும்படியான கவரிமான் மயிரை யன்பாகச்சிஙகமுதலிய விலங்குகளனைத்தும் அம்மயிர்ச்சிக்கலை விடுவித்துறவுபாராட்டும். இன்பமாகப் புலியின் முலைப்பாலை மானானது உண்ணும். நகங்களையுடைய விலங்குகளும் பறவைகளும் புல்லிய புலாலை யுண்ணமலிருக்கும் (எ-று) [௨]

சலம ருந்தியும் வாயுவை யருந்தியுஞ் சருகிற்
சிலவ ருந்தியும் பச்சிலை யருந்தியுந திங்க
ணிலவ ருந்தியு மைங்கன லிடையிலே நின்றும்
பலவ ருந்தியுந் தவம்புரிந் திடுமவர் பலரால்.

(இ-ள்) அந்த நைமிசாரணியத்திலே தவஞ் செய்கின்ற இருடிகளெல்லாம் தண்ணீரைத்தானே ஆகாரமாகப் புசித்தும் வாயுவை ஆகாரமாகவுண்டும் உலர்ந்த சருகுகளிலே சிலவற்றை யருந்தியும் பச்சிலைகளைச் சாப்பிட்டும் சந்திரகிரகணங்களைப் புசித்தும் பஞ்சாக்கினி மத்தியிலே நின்றும் பலவாறாக கனி முதலியவற்றைப் புசித்தும (சரீரததை வருத்தியும்) தவஞ்செய்கின்றவர்கள் பலபேர்கள் (எ-று.) [௩]

காலெ லாமரா வடுத்தவன் மீகமேற் கமழு
மாலை மார்பெலாங் குடலைபோல் வல்லரி மறைக்க
வேல மார்தரு குஞ்சிமேற் குருவிகூ டெடுக்க
பால லோசன னருள்பெறத் தவஞ்செய்வார் பலரால்.

(இ-ள்) நின்றுகொண்டே தவஞ்செய்கின்ற முனிவர்களுடைய கால்களிலெல்லாம் பாம்புகள் பொருந்தப்பட்ட புற்றுகள் மேலாய் வளர்ந்திருக்கும்படியாகவும் ஒழுங்காயுள்ள மார்புகளிலெல்லாங் குடலையைப்போல் கொடிகள் மறைக்கும்படியாகவும் வாசனைபொருந்திய மயிர்களின்மேல் குருவிகள் கூடுகள்கட்டி வாழும்படியாகவும் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது திருவருளைப் பெறத் தவஞ்செய்கின்றவர்கள் பலபேர்கள் (எ-று.). [௪]

மேதை மேலருக் கீசன்மேல் விடகலை விந்து
நீதியாகிய வருத்தசந் திரிகைமே னிரோதி
நாத நாதமேல் சத்திக ளுன்கின்மே லுல்வர்
பாத மேற்பரங் கண்டுவாழ்ந் திருப்பவர் பலரால்.

(இ-ள்) பிரகாசமாயிராநின்ற மேதையாகிய அறிவினிடத்தும், சூரிய னிடத்திருந்து விளங்கிய ஈசனிடத்தும், விடப்பட்ட கலையையுடைய விந்து தத்துவமென்னும் நீதியாகிய அர்த்தசந்திரிகா பிரகாசத்தினிடத்தும், நிரோ பாதியாகிய நாதத்தின் மேற்பட்ட பரநாதத்தினிடத்தும், பஞ்சசத்திகளில் நான்கு சத்திகளிடத்தும், அச்சத்திகளுடைய நால்வர் பாதங்களினிடத்தும், பரதத்துவ சொரூபத்தைப் பாவித்தறிந்து வாழ்ந்திருப்பவர்கள் பலபேர்கள். (எ-று) அருக்கனீசன்-என்பது அருக்கீசனெனக் கடைக்குறை விகாரமா யிற்று. நிரோபாதியென்பது நிரோதியென வடமொழி விகாரமாயிற்று. விரிக்கிற்பெருகும். [ரு]

அத்த கைப்பெறு மாச்சிர மத்திலோ ரருகி
னித்திலப்புது மணலின்மேற் பெருந்தரு நிழலிற்
பத்தி யிற்பொலி நவமணி வேதிகை பண்ணிச்
சித்தி ரசசிறு புலியதண் மெல்விரி செறித்து.

(இ-ள்) அத்தன்மையைப் பெறுகின்ற நைமிசாரணியத்திலே யொப் பற்றவொரு ஆச்சிரமமுண்டு. அந்த ஆச்சிரமத்தினருகில்முத்தையொத்த புதிய மணலையுடையபெரிய விருக்ஷத்தின் நிழலில் வரிசையாக விளங்காநின்ற நவ மணிகளிழைத்த ஆசனஞ்செய்து அதின் மேல் அழகு பொருந்திய சிறிய புலித்தோலாசனத்தை விரித்து (எ-று) [சு]

வைத்த வாதனத் திருந்தனன் சடை முடி மார்பங்
கைத்த லங்களங் காதினிற் கண்டிகை கமழ
வுத்த ரீயம்வெண் ணிலவெழப் புரிமுந லொளிர
முத்த ரானவர் பணிந்திடக் கோதம முனிவன்.

(இ-ள்) அப்படி விரித்து வைத்த ஆதனத்திலே சடையையுடைய முடியிலும், மார்பிலுங் கைகளிலுங் கழுத்திலுங் காதிலுங் கண்டிகையாகிய உருத்திராக்ஷம் விளங்கும்படியாகவும், உத்திரியமாகிய மேல் வஸ்திரமானது வெண்மையான நிலவைப்போல ஒளிரும்படியாகவும், முப்புரிநூல் மார்பில் விளங்கும்படியாகவும், முத்தரானமுனிவர்கள் வணங்கும்படியாகவும், கௌ தம முனிவரிருந்தார் (எ-று) [எ]

இருந்த கோதம முனியுடன் மதங்கமா விருடி
யருந்த வம்புரி கௌசிகன் பராசர னனந்தன்
பொருந்து காசிப னுரோமசன் புலத்தியன் புலகன்
பரிந்து மற்றுள விருடிக ளனைவரும் பகர்வார்.

(இ-ள்) இவ்வாறாக எழுந்தருளியிருந்த கௌதம முனிவருடனே மதங்கமஹாவிருடி, அரிய தவத்தைச் செய்யாநின்ற கௌசிக முனிவர் பராசர முனிவர் அனந்த இருடி தவத்திற் பொருந்துகின்ற காசிபமுனிவர் உரோமச முனிவர், புலத்திய முனிவர், புலக முனிவர், முதலியமற்றுள்ள விருடிகளனைவரும் அன்புடன் சொல்லுகின்றார்கள். (எ-று) [அ]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேதநறுங்கொடிபடருங்கொழுகொம்பேயாகமத்தின்வேரேஞானப்
பாதவமே பரபோக மதுநிறைந்த வானநதப் பழமே யோக
மாதவரெண் சதானந்த முனிவரெனு மணிபிறந்த வரையே தெய்வக்
கோதமனே கோதமிலா வொருமுதலே நிறைந்தபெருங் குணத்தினனே.

(இ-ள்) வேதமாகிய நல்ல கொடியானது படருகின்ற கொழுகொம்பே சிவாகமத்தினுடைய வேரே ஞானமாகிய விருக்ஷமே பரபோகமாகிய தேன் நிறைந்த ஆனந்தப்பழமே அஷ்டாங்கயோக முதலிய சிவயோகத்தையுடைய மாதவர்களாலே யெண்ணத்தக்க சதானந்த முனிவரென்னும் பெயரையுடைய மாணிக்கமணியைப்பெற்ற மலையே தெய்வததன்மை பொருந்திய கௌதம முனிவரே குற்றமில்லாத வொப்பற்ற முதலே, நிறைநதிராநின்ற பெருமை பொருந்திய குணத்தையுடையவரே யென்று முனிவர்கள் துதித்தார்கள். (எ-று.) [௯]

கலிநிலைத்துறை.

தொல்லை நூலுள கதையெலாம் விரித்துமுன் சொன்னீர்
வல்லி பாகனார் தெக்கண கயிலையின் வரவைச
சொல்ல வேண்டுமென் றுரைத்திரு மருங்கினுந் துதித்தார்
நல்ல வாசக மிதுவென வவருட னவில்வான்.

(இ-ள்) அப்படித் துதித்தபின்பு பழமையாகிய நூல்களிலுள்ள கதைகளையெல்லாம் விரித்து முன்னேயெங்களுக்கு அருளிச்செய்தீர். வல்லியாகிய உமாதேவியைப் பாகத்தில் வைத்தருளிய சிவபெருமானுருடைய தெட்சண கயிலையின் வரவை யிப்போது சொல்லியருள வேண்டுமென்று கூறி யிருபக்கத்திலு நின்று முனிவர்கள் துதித்தார்கள், அதைககேட்ட கௌதம முனிவர் நல்ல வாசகமிதுவென்று அந்த முனிவர்களுடனே சொல்லுகின்றார். (எ-று) [௰]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தெக்கண கயிலை யென்னுஞ் சிராமலைப் பெருமை யெல்லா
நக்கனார் குமார ரந்தச் சனற்குமா ரர்க்கு நல்க
வக்கணஞ் சனற்கு மார ரறைந்தன ரெமக்கு மக்கு
முக்கண ரருளினாலே மொழிகுவாம் விரும்பிக் கேண்மின்.

(இ-ள்) தெட்சணக்கயிலை யென்கின்ற சிராமலையின் பெருமைகளை யெல்லாஞ் சிவபெருமானுடைய புத்திரரான சுப்பிரமணியக்கடவுள் சனற்குமார முனிவருக்கருளிச்செய்ய அந்தப் பொருளை யக்கணமே யந்தச்சனற்குமார முனிவர் எமக்குச் சொன்னார். நாமும் உங்களுக்குச் சிவபெருமானுடைய வருளினாலே சொல்லுகிறோம். நீங்கள் விருப்பத்துடனே கேளுங்கள் (எ-று) [யக]

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சூதமுனி முனிவரர்க்குப் பரிவாற் சொன்ன
தோற்றமிகு சிவபுரா ணத்திற் கண்டு
கோதமனார் பலமுனிவர் விரும்பிக் கேட்பக்
கூறியிடுஞ் சிராமலையின் புராண தன்னை
யேதமற வடநூலைத் தமிழ்நூ லாக்கி
யினியசருக் கங்களொரு பதினொன் றாகப்
போதமிகு திருவிருத்த மைஞ்ஞூற் றைம்பான்
பொருந்திடவிக் கதைவிரித்துப் புகல லுற்றேன்.

(இ-ள்) சூதமகாமுனிவர் மற்ற முனிவோர்களுக்கு அன்பாக வருளிச்செய்த வலி மிகுந்த சிவபுராணங்களிலே அறிந்து கௌதம முனிவர் பலமுனிவோர்கள் விருப்பத்துடனே கேட்க அவர்களுக்குக் கூறும்படியான சிராமலைப் புராணத்தைக் குற்றமற வட மொழியிலிருந்த நூலைத் தமிழ்நூலாகச் செய்து இனிமையானசருக்கங்கள் பதினொன்றாகவும் அறிவு மிகுந்த திரு விருத்தம் ஐஞ்ஞூற்றம்பானகவும் பொருந்தும்படியாக இந்தத் தலபுராண கதையை விரித்துச் சொல்லத் தொடங்கினேன். (எ-று) [யஉ]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சிவவடி வாகு மிந்தத் திருக்கதை யறங்க ளாகு
நவமிகு பொருளு மாகு நயந்தபே ரின்ப மாகுந்
தவமுயர் வீடு மாகுந் தவத்தினற் பயனு மாகு
முவமையின் ஞான மாகு முண்மையி னுணர்ந்த பேர்க்கே.

(இ-ள்) சிவ சொரூபமாகின்ற இந்தப் புராணத்தின் சிறந்த கதையானது சகல தர்மங்களுமாகும். புதுமையாய் மிகுந்த பொருள்களுமாகும். நய

தையுடைய பேரின்பமாகும், தவத்தாலுயர்ந்த வீடுமாகும், அந்தத் தவத்தினுடைய நல்ல பயனுமாகும், உவமையில்லாத ஞானமுமாகும், உண்மையாயுணர்ந்த பேர்க்கு. (எ-று) [௰௩]

வருமலைக் கொழுந்தாங் கங்கை மௌலிதென் கயிலை யென்னுந்
திருமலைக் கொழுந்தாய் நின்ற சிவன்கதை சனனமென்னுங்
கருமலைக் கொழுந்தை வாட்டுங் கதிர்கொடும் பாவப் பஞ்சாம்
பெருமலைக் கொழுந்தீ யென்றா லதனலம் பேச லாமோ.

(இ-ள்) வருகின்ற அலைகளின் கொழுந்தாகிய கங்கையை ஜடாமகுடத்திலணிந்த கடவுளானவரும், தெக்ஷிண கயிலையென்னும் க்ஷேத்திரத்தில் திருமலைக்கொழுந்தா யெழுந்தருளியிரா நின்றவருமான சிவபெருமானுடைய இந்தப்புராண கதையானது ஜனன மென்கின்ற கருமையான அந்தகாரத்தினுடைய நுட்பமான கொழுந்தை வாட்டுகின்ற சூரியனாகவும், கொடுமையான பாவமென்னும் பஞ்சாகிய பெரியமலைக்குச் செந்நிறம் பொருந்திய நெருப்பாகவும் இருக்குமென்றால் அப்பேர்ப்பட்ட கதையின் நலத்தை வாயினாற்பேசி முடியுமோ முடியாது. (எ-று) இதினால் வாசாமகோசர மாயிற்று. [௰௪]

கலி விருத்தம்

துதித்திடுந் திரிசிரா சொல்லுஞ் சொல்லினான்
மதிச்சடை முடியினான் வரங்கொ டுத்தலா
லுதித்திடு மளகையே யொப்ப தாகுமப்
பதிப்பெயர் திரிசிராப் பள்ளி யானதே.

(இ-ள்) அன்பினாலே துதிக்கின்ற பெரிய வரப்பிரசாதத்தையுடைய திரிசிராவென்னும் பக்தனானவன் சொல்லுகின்ற வாக்கியத்தினாலே சந்திரசேகரனான சிவபெருமான் வரத்தைக் கொடுத்ததினால் அழகிலும், செல்வத்திலும், அன்பிலும், தனக்கொன்று நிகரில்லாம லுதித்திடும்படியான அளகாபுரியே யொப்பாகும், அப்பதிப்பெயர் திரிசிராப்பள்ளியானது. (எ-று). இதில் வேண்டிய சொற்கள் வருவிக்கப்பட்டன. [௰௫]

அத்தலந் தனக்கிணை யமரர் நாட்டிலை
யித்தலத் துளதென வியம்ப லாகுமோ
வித்தக விலிங்கமந் தீர்த்த மேன்மையவ்
வுத்தம தலத்தலா லுலகில் வேறுண்டோ.

(இ-ள்) அந்தத் திரிச்சிராப்பள்ளி யென்னும் தலத்துக் கொப்பானது தெய்வலோகத்திலுமில்லையானால் இந்தப் பூலோகத்தில் உண்டென்று சொல்லக்கூடுமோ, கூடாது. ஞான சொரூபமாயிரா நின்ற சிவலிங்கப் பெருமானுடைய மேன்மையும், தீர்த்தங்களின் மேன்மையும், அந்த உத்தமமாகிய தலத்திலே யல்லாமலுலகிலுள்ள வேறு தலங்களிலுண்டோ இல்லை. (எ-று) [௰௬]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அப்பதி நினைந்த பேருக் கமரர்தம் பதவி யுண்டா
மப்பதி கண்ட பேருக் கயன்பதத் தடைய லாகு
மப்பதி தனிலிருந்தா லரியமால் பதவி யுண்டா
மப்பதி தனிற் பிறந்தா லரனென விருக்கலாமே.

(இ-ள்) அந்தத் திரிசிராப்பள்ளி யென்னுந் திவ்யதலத்தை மனதினாலே நினைந்தபேருக்குத் தெய்வலோகபதவியுண்டாம். அந்தத்தலத்தைத் தரிசித்த பேர்களுக்குப்பிரமதேவருடைய பதத்தையடையலாகும் அந்தத் தலத்தில் எப்பொழுதும் வசித்திருந்தால் அரிதாயுள்ள மஹாவிஷ்ணுவின் பதவியுண்டாகும், அந்தப்பதியிலே பிறந்தால் உருத்திரமூர்த்தியைப்போ லிருக்கலாகும். (எ-று) [௰௭]

ஷை வேறு

அன்ன தான மொருவர்தமக் கந்தப் பதியி னளிப்பவர்கள்
கன்ன தானக் கரிமகவா னெனவே ழுலகுங் காத்தருள்வார்
சொன்ன தான முதலாகச் சொன்னதானங் கொடுப்பரென்று
லென்ன தானங் கரிய தவர்க்கெல்லாப்பொருளுமெளிதாமே.

(இ-ள்) அன்னதானத்தையொரு சிவனடியாருக்கு அந்தப்பதியிலே கொடுப்பவர்கள் கன்னமதம்பொருந்திய வெள்ளையானையையுடைய இந்திரனைப் போல ஏழு லகங்களையுங்காத்தருளும்படியான மேன்மையையடைவார்கள். சொன்னதானமுதலாகச் சொல்லப்பட்ட தானங்களையந்தத்தலத்திலே கொடுப்பார்களென்றால் அவர்களுக்கரிதாயுள்ளனயாவை? எல்லாப் பொருள்களு மெளிதாகும் (எ-று) [௰௮]

ஷை வேறு.

ஒருவருக் கிருக்கை யீந்தோ ரும்பராய் வாழ்வ ரன்றி
யிருவருக் களித்தா லந்த விந்திர னுவ ரங்கே
மருவுறப் பூசை பண்ண வந்திளைப் பாற வன்பாய்த்
திருமடங் கண்டோ ரந்தச் சிவனவ ராவர் தாமே.

(இ-ள்) அந்தப்பதியிலே யொரு சிவனடியாரிருக்கும்படி யிடத்தைக் கொடுத்தோர் தேவர்களாகி சொர்க்கலோகத்திலே வாழ்வார்கள். அஃதன்றி இரண்டு பேர்களுக்குக் கொடுத்தால் தேவேந்திரனாக வாழ்ந்திருப்பார்கள். அடியார்கள் வசிக்கவும், சிவபூஜை பண்ணவும், அவர்கள் வந்து இளைப்பாறவும், அன்பாய்த் திருமடஞ் செய்வித்தோர்கள் அந்தச் சிவசொரூபமாவார்கள் (எ-று) [௰௯]

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேதமுங்கண் டிறைஞ்சுகிரா மலைப்புராணம் விளம்பிய
சொற் பொருளுடனே விரிப்போர் கேட்போர்
போதகஞ்சேர் புரந்தரன்போ லுலக மெல்லாம்
புரந்திடுவர் வினைதவிர்வர் புகழுண்டாவ
ரேதமுறு பிணிதீர்வர் பகையை வெல்வ
ரெண்ணின்மைந்த ருண்டாவ ரிகத்தின் மேலு
மாதவன்சந் திரன்முகுந்தன் பிரமன் றேவர்க்
கரிதான பதத்தினையு மடைவர் தாமே.

(இ-ள்) வேதங்களாலுந்தரிசித்து வணங்குகின்ற திரிசிராமலைப்புராணத்தில் விளம்பப்பட்ட செய்யுள்களின் சொற்களைப்பொருள்களுடனே விரித்துச் சொல்வோர்களும், அதைக் கேட்போர்களும் ஐராவதமென்னும் யானையை வாகனமாகவுடைய தேவேந்திரனைப்போல எல்லாவுலகங்களையு மரசாகஷி புரிவர். வினைகளையும் நீங்குவர் புகழுண்டாகும்படி சகல கீர்த்திகளையுமடைவர் துன்பம் பொருந்திய பிணிகளும் தீர்வர். பகையையும் வெல்லுவர், எண்ணிக்கையில்லாத நல்ல புத்திரர்களையும் பெறுவர். இகத்திற்கு மேலாகிய பரத்திலும் சூரியன், சந்திரன் விஷ்ணு பிரமன் முதலிய தேவர்களுக்கரிதான பதவியையும் அடைவர். (எ-று) [உ0]

கலிநிலைத்துறை.

பருவ மேகலை யிரதிநா யகன்கிளிப் பரியு
மருநி றைந்ததார் முறுகவே ணடாத்திடு மயிலுந்
திரும ணந்தவன் கலுழனும் பதுமனே றிமமு
மிரும ருங்கினுஞ் செறிந்தது கயிலையோ திமமே.

(இ-ள்) எப்பொழுதும் மங்கைப்பருவம் நீங்காமல் மேகலாபரணத்தை யணிந்திராநின்ற இரதியுடைய நாயகனான மன்மதனது வாகனமாகிய குதிரையான கிளியும் வாசனை நிறைந்த கடப்பமாலை யணிந்திராநின்ற சுப்பிரமணியக் கடவுளின் வாகனமாகிய மயிலும் இலக்குமி நாயகனான விஷ்ணுவினுடைய வாகனமாகிய கருடனும் பிரமனுடைய வாகனமாகிய அன்னமும் ஆகிய இவைகள் கயிலைமலையென்னுமோதிமமாகிய அன்னத்தினிருபக்கத்திலு நெருங்கி வணங்கியிருந்தன. (எ-று) கயிலை வெண்மையாதலால் அன்னத்தைப்போலுருவகஞ்செய்தார் [உக]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அளியார் கடுக்கை நறுமலரு மணியார் சுடிகை யரவும்
பிளவார் மதியும் புனைந்தருளும் பெருமா னிருக்கும் வெள்ளிமலை

வளமார் புவன மொருநூறும் விளக்கு மண்ட கடாகமெனு
மிளவோ திமத்தின் பேடைவயிற் றிருக்கு மண்ட,மெனலாமே.

(இ-ள்.) வண்டுகள் நிறைந்திரா நின்ற வாசனை பொருந்திய கொன்றை மலரையும், மணிகள் பொருந்திய உச்சியையுடைய ஆடா நின்ற சர்ப்பங்களையும் பிளவு பொருந்திய அர்த்த சந்திரனையும் அணிந்தருளுகின்ற சிவபெருமான் வீற்றிருக்கும் வெள்ளி மலையானது வளம் பொருந்திய வொப்பற்ற நூறு புவனங்களையும் விளக்கும்படியான அண்டகடாக மென்கின்ற இளமையான பெண் அன்னத்தினுடைய வயிற்றிலிருக்கின்ற முட்டையென்று சொல்லலாம் (எ-று) அண்டகடாகத்தைப்பெண் அன்னமாகவும் வெள்ளி மலையை அதன் வயிற்றிலிருக்கும் முட்டையாகவும் உருவகம் செய்தபடியால் இது ரூபகாலங்காரம். [உஉ]

எண்சீர்க்கழிநெடிலாசிரியச் சந்த விருத்தம்

சோதி மதியின் பாதி யரவஞ் சூடு சடையன் றோடு கமழுங்
காதி லமிர்தம் போல வரசுங் காழி யிறையுங் கூறு தமிழின்
பாத கமலம் பாடு மவர்தம் பாத கமலம் பாறி யகலும்
போது செறியும் போது விரியும் பூவை மருவும் பூவை மருவும்.

(இ-ள்) பிரகாசம் பொருந்திய சந்திரனது பாதியுருவத்தையுஞ் சர்ப்பத்தையுஞ் சூடுகின்ற சடையை உடையவர் தோடு விளங்கா நின்ற காதில் அமிர்தத்தைப் போல அப்பர் சுவாமிகளும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் அருளிச் செய்த செந்தமிழ் வேதமாகிய தேவாரத்தையினிய திருவடித் தாமரையில் அன்பு வைத்துப் பாடுகின்றவர்களுடைய பாதகங்களான மலங்களை நீங்கியோடும்படியருளுகின்றவர். மலருங் காலத்திலே நெருங்குமபடியான புஷ்பங்கள் விரிகின்ற பூங்காவிலுள்ள நாகணவாய்ப் புள்ளின் குரலோசைபோலப் பொருந்துகின்ற இனிய சொற்களையுடைய உமாதேவியாரை மருவுகின்றவர் (எ-று) [உங]

கோடு செறியும் பாணி யவனுங் கோக நகனுந் தேட வரியன்
றேடு மவரன் பாக விழிமுன் பாக வருவன் றேவ ரிறைகொண்
டாடு மயிலன் கான முகில்க்கண் டாடு மயிலன் றூதை சடிலஞ்
சூடு மாவ னூடு மொருவன் சோதி மதியன் பாதி மதியன்.

(இ-ள்) சங்கு நெருங்கிய கையையுடைய நாராயணனும், பிரமனுமடியு முடியுந் தேடிக் காண்பதற்கரியவர். அப்படித் தேடுகின்ற அவ்விருவருமன்பாகத் துதிக்கும்பொழுது அவர்களுடைய கண்களுக்கு முன்பாக வருகின்றவர். தேவேந்திரனாலே கொண்டாடும்படியான வேலாயுதத்தையுடையவரும் கரிய மேகத்தைக்கண்டு நடனஞ்செய்கின்ற மயிலை வாகனமாக

வுடையவரும் ஆகிய சுப்பிரமணியக் கடவுளுக்குப் பிதாவானவர் சடையில் சர்பத்தைச் சூடுகின்றவர். கனகசபையில் நடனஞ்செய்கின்ற ஒப்பற்றவர். ஜோதிர்மயமான இயற்கை யறிவுடையவர். பாதிமதியாகிய அர்த்தசந்திரனை யணிந்தவர் (எ-று) (உச)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வள்ள லணிந்த விளமதியி னிலவா லந்த வரைச்சுனையிற்
கள்ளு நெகிழும பொகுட்டுமலர்க் கமலம் விரியா காலையினும்
புள்ளி யரவஞ் சொரியுமணி விரித்த வொளியாம் பொறிக்கனலின்
வெள்ளி யுருகி விழுவதெனப் பெருகும் வெள்ள வெள்ளருவி.

(இ-ள்.) இத்தன்மையாயிராநின்ற வள்ளல்ஆகிய சிவபெருமானணிந்திருக்கின்ற இளமையாகிய சந்திரப்பிரகாசத்தினால் அந்தக் கயிலைமலையிலுள்ள சுனையிலிருக்கின்ற தேனொழுகும் பொகுட்டையுடைய தாமரை மலர்களானவை காலைப்பொழுதினும் இதழ்விரிந்து மலராவாம். படத்திற் புள்ளிகளையுடைய பாம்புகள் சொரிகின்ற மணிகளால் விரியப்பட்ட வொளியாகிய பொறியையுடைய நெருப்பினாலே மலையின் வெள்ளியானதுருகிவிழுவதைப் போல வெள்ளிய வெள்ளம்போன்ற அருவிகள் பெருகும். (எ-று) [உரு]

கலிநிலைத்துறை.

அந்த மால்வரைக் கொருபுடை யடைந்தன ரயன்மா
லிந்தி ராதியர் மருத்துவர் வசுக்கணு ளிருவர்
சந்தி ராதியர் சித்தர்சா ரணர்கள்விஞ் சையர்க
ணந்தி வாகனக் கடவுள ரிமையவர் நாகர்.

(இ-ள்) அப்பேர்ப்பட்ட பெருமைபொருந்திய கயிலைமலையினுடைய ஒருபக்கத்திலே, பிரமதேவனும், விஷ்ணுவும், இந்திராதிகளான அஷ்டதிக்குப பாலகரும் மருத்துவர்களும, அஷ்டவசுககளும், சந்திர சூரியாதி கிரகங்களும், சித்தருஞ் சாரணர்களும், வித்தியாதரர்களும், ருத்திரர்களும், தேவர்களும், ஆதிசேஷன் முதலான பாதாளலோக வாசிகளும் தரிசனைக்கு அடைந்தார்கள். (எ-று) [உசா]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

துங்கமழு வுழைதரித்துச சரிகைதிரு வரையார்த்துச சோதியான
செங்கையிலே பிரம்பேநதிக் கயிலைமலை காத்தருளுஞ் செய்யமூர்த்தி
மங்கைபங்க ரவதரம்பார்த்தருள்புரிந்துவிடுமளவும்வாயின்முனனே
யங்கொருதிக் கினிலிருந்தா ரவரவர்தா மிருக்குமிட மறிந்துதானே

(இ-ள்) உயர்ச்சிபொருந்திய மழுவையும், மானையுங்கையிலே தரித்து உடைவாளையழகிய யரையிலே கட்டி பிரகாசியாநின்ற சிவந்த கையிலே பிரம்பையேந்திக கயிலைமலையைக் காத்தருளுகின்ற செவ்விதான மூர்த்தி யாகிய நந்திகேஸ்வரரானவர் சிவபெருமானுடைய சமயம் பார்த்து உள்ளே போகும்படி யருள்செய்து விடுகிறவரையிலும் கோபுரவாயிலின் முன்னே யவ்விடத்திலுள்ள ஒரு திசையில் அவரவர்களிருக்கின்ற விடங்களைத் தெரிந்துகொண்டு அந்தத் தேவர்களெல்லோர்களும் இருந்தார்கள். (எ-று) [உஎ]

ஷை வேறு.

ஆரா தனைகண் முடிவிடம்பார்த் திருக்கு மிமையோர்க் கருகாகப்
பாரா மனைத்து மொருமலர்போன் முடிமேற் றரிக்கும் பணிவேந்த
னோரா யிரஞ்செம் முடிமணிகள் கதிரா யிரம்போ லொளி பரப்ப
வீரா யிரநற் பிறைபோற்பல் லிரண்டா யிரமு மிலங்கிடவே

(இ-ள்) அப்படியிருந்து திருவாராதனைகள் முடியுமிடத்தைப் பார்த்திருக்கின்ற தேவர்களுடைய சமீபமாகப் பூலோகமெல்லாவற்றையும் ஒரு புஷ்பத்தைப்போல் சிரசின்மேற்றரிக்கின்ற சர்ப்பவேந்தனான ஆதிசேடனானவன்தனது ஒப்பற்றவாயிரந்தலைகளிலே சிவந்தமணிகள் ஆயிரஞ் சூரியர்கள் போலக் கிரணங்களைப் பரப்பவும் நல்லவிரண்டாயிரம் பிறைகளைப்போல இரண்டாயிரம் பல்லுகள் விளங்கவும், (எ-று) [உஅ]

செய்ய கவர்நா விருபாலுஞ் செக்கர் வானச் செயல்காட்ட
வெய்ய நெடிய வாளெயிற்றி னிருள்போற் சிறிது விடந்தோன்ற
வைய னடிகண் டிறைஞ்சுமதற் கணைந்தா னவனை யமரரெலாங்
கையி னிறைஞ்சியிருக்கையளித் திருந்து மகிழ்வாற் கட்டுரைப்பார்

(இ-ள்) சிவந்த பிளவோடுங்கூடிய நாவுகளிருபக்கங்களிலுஞ் செவ்வானத்தினது செயலைக் காட்டவும் வெவ்விதாய் நீண்டிராநின்ற கூர்மையான பல்லுகளிலேயிருளினைப்போல சிறிதுவிடமானது தோன்றவும் சிவபெருமானுடைய திருவடிகளைத் தரிசித்து வணங்குகிறதற்காக அந்த ஆதிசேடன் வந்தான். அவனைத் தேவர்களெல்லாரும் ஒழுங்காய் வணங்கியிருப்பிடங் கொடுத்து மகிழ்ச்சியினாலே மனவுறுதியாயுறைக்கின்றார்கள் (எ-று) [உகூ]

வாயு வான பஞ்சடைத்துத் திருமா றுயிலு மலரணையே
யாய விடமாம் யாக்கையமைத் தரனா ரணியு மரும்பணியே
தாய ஆதார மெனவுலகைத் தலையிற் சுமையாத் தரிப்போனே
னாய பொருளே யுனக்குநிக ருளரோ வுலகிற் சொல்லாயே

(இ-ள்) வாயுவாகிய பஞ்சையடைத்து மகாவிஷ்ணு நித்திரைசெய்யும் படியான புஷ்பசயனமே, பரவியவிடமான சரீரத்தையமைத்துச் சிவபெருமானணிகின்ற அருமையான ஆபரணமே மாதாவானவள் தன்னுடைய வயிற்றிலிருக்கின்ற சிசுவைத் தாங்குவதுபோல உலகத்தைத் தலையினாலே சுமையாகத் தாங்கப்பட்டவனே, சுத்தமான பொருளே, உலகத்திலுனக்கு நிகருண்டோ இருந்தாற் சொல்வாய். (எ-று) [கூ0]

என்ன வுரைக்க மிகநாணி யொடுங்கு மனந்த னிமையோர்கள்
சொன்ன மொழிக்குத் தாழ்ந்தவுரை பலவு முரைத்துச் சுடிகைமணி
மின்ன நெடிய கயிலைமலை வேரோடியது போலொர் புடை
மன்ன விருந்தான்சதா கதியு முரைத்தான் பொருத வழுவுரையே.

(இ-ள்) இப்படியென்று தேவர்கள் ஆதிசேடனைப் புகழ்ந்து சொல்ல அதற்கு மிகவும் நாணியொடுங்கிய மனத்தினாலே தன்னைப்பற்றித் தேவர்கள் சொன்னமொழிக்குத் தாழ்வான வார்த்தைகள் பலவுஞ் சொல்லித் தலையினுச்சியிலுள்ள மணிகள் விளங்கும்படி நெடிதாகிய கயிலைமலையானது வேரோடியதைப்போலவொருபக்கத்திலே நிலைபெற அந்த ஆதிசேடனிருந்தான். அப்போது வாயுவானவன் பொறாமையோடுங்கூடிக் குற்றம்பொருந்திய வார்த்தைகளைச் சொல்லத் தொடங்கினான். (எ-று) [கூக]

வேறு

கண்ணிலா தானைக் கஞ்சக் கண்ணனென் றுரைப்பார் போல
நண்ணிய செவியிலானைக் காலிலா நடையினானை
யெண்ணிய விருநா வானை விடஞ்செறி யெயிற்றினானை.
புண்ணிய விமையோர் சொன்ன புகழ்ச்சிதான் பொய்மை போலும்

(இ-ள்) இரண்டு கண்களுமில்லாத யொருவனைத் தாமரைமலர்போன்ற கண்களையுடையவனென்று சொல்லுகின்றவர்களைப்போல பொருந்தப்பட்ட காதுகளில்லாதவனை, கால்களில்லாத நடையையுடையவனை, யெண்ணப்பட்ட இரண்டு நாவுகளுடையவனை, விடம்பொருந்திய பற்களையுடையவனை, புண்ணியபலத்தையுடைய தேவர்கள் சொல்லிய புகழ்ச்சியானது பொய்மையைப்போலுமிருந்ததுவென்று வாயுதேவனானவன் சொல்லிப் பின்னையுஞ் சொல்லுகிறான். (எ-று) [கூஉ]

அமைபவே யுலக மேழுந் தரித்திடு மரசே யென்றன்
றிமையவர் முனிவர் கூற விடும்பையா லகந்தை யுற்று
யுமையவ ரேவலாலே யுலகெலாஞ் சுமந்தாய் கூலிச்
சுமையவர் சுமப்பதெல்லாம் புகழ்சியோ சொல்லுவாயே.

(இ-ள்) பொருந்துமபடியாகவே யேழுலகங்களையுஞ் சிரசிலே தரித்தி டுகின்ற வரசேயென்று தேவர்களும் முனிவர்களும் அச்சத்தால் கூற அதி னாலேயகந்தையடைந்தாய். உமாதேவியைப் பாகத்திலேயுடைய சிவபெரு மானாரது ஏவலாலேயுலகங்களையெல்லாஞ் சுமந்தாய், கூலிக்காகச் சுமை யெடுப்பவர்கள் சுமக்கின்றதெல்லாம் புகழ்ச்சியாகுமோ நீயே சொல்லுவாய் (எ-று) இடும்பையென்பது அச்சம். அகந்தையென்பது நான் பெரியவ னென்று அகங்கரித்தல். [௩௩]

படுத்திடும் பாயுந் தாங்கும் பணியுமானதுவோ மேன்மை
விடுத்திடுன் வலியை யெல்லா வுயிரினும் விரைவி னானே
யடுத்திடா திருக்கி லிந்த வுலகெலா மமைவ தெங்கே
கடுத்தனை யிறைக்கு நீயோ காப்பவ னெனவுஞ் சொன்னான்.

(இ-ள்) அப்படிச் சொல்லிய வாயுதேவன் பின்னையுஞ் சொல்லுகிறான். நித்திரை செய்கின்ற பேருக்குப் படுக்கையாகவும், தாங்குகின்ற ஆபரணமாக வுமானதுவோ மேன்மையாகும். ஆதலாலுனது வலிமையை விடுத்திடுவாய் எல்லாவுயிர்களிடத்துங் கலந்து நானே யடுத்திடாமலிருப்பேனாகில் இந்த வுலகங்களெல்லாம் பொருந்தியிருப்பதெங்கே விஷத்தையிறைக்கின்ற நீயோ காக்கப்பட்டவனென்று சொன்னான். (எ-று) [௩௪]

என்றலு மனந்தன் கூறு மிமையவர் முனிவர் முன்னே
வென்றிக ளுரைத்தா யுன்னை விழுங்கினாற் கதிவே றுண்டோ
பொன்றுவை விடுத்தேன் யானீ திருக்கவிப் பொருப்பைச் சுற்றி
நின்றுடன் மறைப்பே னுன்றன் வலியினா னெகிழ்க்க வென்றான்.

(இ-ள்) இப்படியென்று வாயுவானவன் சொல்லுமளவில் ஆதிசேடன் கூறுவான். தேவர்களுக்கு முனிவர்களுக்கு முன்னே உன்னுடைய வெற்றி களைச் சொன்னாய். உன்னை விழுங்கினால் உனக்குப் பிழைக்கும்வழி வேறு ண்டோ இறந்துவிடுவாயென்று உன்னையான் விடுத்தேன் இது இருக்கட் டும் இந்தக் கயிலைமலையைச் சுற்றி நின்று வுடலினால் மறைப்பேன். உன் னுடைய வலிமையினாலே அக்கட்டு நெகிழும்படி செய்வாயென்று ஆதிசே டன் சொன்னான் (எ-று) [௩௫]

### கலிநிலைத்துறை

தேவ ரேபகுத் தறிகவென் சிறப்புமுன் சிறப்பு
மேவு கென்றெழுந் தனந்தனு மறைத்தனன் வெற்பைக்
கோவு மின்பமுங் கொழுநனென் றிறைஞ்சுநற் குலத்துப்
பாவு மங்கையர் மனமெனப் புரையறும் படியே.

[இ-ள்] அப்படி ஆதிசேடன் சொல்லியந்த வாயுதேவனைப் பார்த்து எனது மேன்மையையும் உனது மேன்மையையும் தேவர்களே பகுத்தறியக் கடவதென்று சொல்லி விருப்பத்துடனே எழுந்து ஆதிசேடனுங் கயிலைமலை யை அணுவளவு துவாரமுள்ள வெளியுமில்லாதிருக்கும்படியாயுந் தெய்வ மும் அத்தெய்வத்தாலாகுமின்பமுந் தனது புருஷனேயென்றெண்ணி வணங்குகின்ற நல்லகுலத்தில் பிறந்த அன்புள்ள கற்பினையுடைய மடந்தை யர் மனதைப்போல ஒருமைப்பாடாயும் மறைத்தான். (எ-று) [௩௬]

அரன மர்ந்தநா ளளவிடப் படாதநா ளதனாற்
பரவு வெள்ளியங் கயிலையும் பழகிய படிக்கோ
விருப தங்கையா னெடுத்தநா ணெகிழ்ந்துள தென்றோ
புரையறும்பெரும் புரியினால் வளைத்தது போலும்.

(இ-ள்) சிவபெருமானெழுந்தருளிய காலமானது அளவிடப்படாத காலமாய்விட்டபடியினாலே யாவராலும் வணங்கத்தக்க அழகிய வெள்ளிமய மான கயிலைமலையும், பழமையாகியபடியென்றோ இருபது கைகளையுடைய இராவணனெடுத்த காலத்தில் நெகிழ்ந்தசைந்ததுவென்றோ குற்றமற்ற பெ ரிய கயிறாகிய அரணாலே வளைத்ததுபோலுமிருந்தது ஆதிசேஷடன் அக்கயிலை மலையை மறைத்தது. (எ-று) [௩௭]

பங்கமின்றியே கற்பகத் தருவின்மேற் படர்ந்திட்
டெங்கு மாய்வளைத் தழுத்திய பெருங்கொடி யெனவு
மங்க மெங்கணு முருகவே கொழுநரை யணைக்கு
மங்கை மாரிரு கரங்களா மென்னவும் வளைத்தான்.

(இ-ள்) குற்றமில்லாமற் கற்பகவிருக்ஷத்தின் மேலே படர்ந்து அதி னுருவமெங்கும் வளைத்து அழுத்திய ஒரு பெரிய கொடியைப்போலவும சரீரமெங்கும் உருகும்படித் தமது நாயகரைத் தழுவுகின்ற மஙகையருடைய பெருமைபொருந்திய கைகளைப்போலவும் ஆதிசேடன் அந்தக கயிலைமலையை வளைத்தான். (எ-று) [௩௮]

வந்து கால்புகா விடங்களிற் றலைகளை மடுத்துச்
சிந்தை யானதும் புகாவகை மறைத்தனன் சேட
னந்தவேலையி லமலனை யிமையவ ரடைந்தார்
கந்த மார்தரு சதாகதி யவையெலாங் கண்டான்.

(இ-ள்) காற்றானது வந்து நுழையப்பட்ட விடங்களிலே தலைகளை வைத்து அக்காற்றைப் புசித்து யுண்டு மனமானதும் நுழையாதபடி ஆதிசே டன் அக்கயிலைமலையை மறைத்தான். அந்தக் காலத்திற் சிவபெருமானைத்

தரிசிக்கத் தேவர்களடைந்தார்கள். நிறைந்த வாசனையைக் கொடுக்கின்ற வாயு வானவன் அவைகளெல்லாவற்றையும் பார்த்தான். (எ-று) [ரு௯]

வெற்பெ லாஞ்சிறை யுடைமைபோற் பறந்திட விசும்பிற்
கற்ப கங்கள்போ னிலத்துள தருக்கண்மேற் காணச்
சர்ப்ப ராசனுக் கிறுதியென் றனைவருந் தளர
வற்பு தத்தினு லறைந்தனன் வளைத்தன னடர்த்தான்.

(இ-ள்) மலைகளெல்லாஞ் சிறைகளையுடைய தன்மைபோற் பறந்திடும் படியாகவும், ஆகாயத்திலுள்ள கற்பக விருக்ஷத்தைப்போலப் பூமியிலுள்ள விருக்ஷங்கள் மேலே காணும்படியாகவும், ஆதிசேடனுக்கு முடிவுகாலமென்று யாவருந் தளரும்படியாகவும் ஆச்சரியத்தினாலே மோதியறைந்து வளைத்து வாயுவானவன் சண்டை செய்தான். (எ-று) [௬0]

கலி விருத்தம்.

எட்டர விளைத்தன விளைத்தகளி றெட்டு
மட்டதிசை சுற்றின வமைந்தவரை யெட்டு
மிட்டமுறு தண்கடல்க ளேழுமுகி லேழு
மட்டற வளைந்தபுனல் வற்றியொழி வுற்ற.

(இ-ள்) பூமியைத் தாங்குகின்ற அஷ்டமா நாகங்களும் அஷ்ட திக் கெஜங்களும் வலிகுன்றி யிளைத்தன. அஷ்ட குல பர்வதங்களும் அஷ்ட திக்குகளிலும் பெயர்ந்து போய்ச்சுற்றின. ஆசைபொருந்திய குளிர்ச்சியான சப்த சாகரங்களும் சப்த மேகங்களும் அளவில்லாமல் வளைந்து இராநின்ற பெரும்புறங்கடலினுள்ள நீரானதும் வற்றி யொழிந்துபோயின. (எ-று) [௬௧]

அடுக்கழிவு பட்டபுவ னத்திர ளனைத்து
முடுக்கள்சித றிப்பொரி யிறைத்ததனை யொத்த
கொடுக்குமமிர் தத்தினை யிறைத்துமதி குன்றித்
தடுத்துநெய் வடித்துதறு தட்டினைநி கர்த்தான்.

(இ-ள்) புவனங்களின் கூட்டங்களாகிய அடுக்குகளெல்லாம் அழிவு பட்டுப்போயின. நக்ஷத்திரங்கள் சிதறிப் பொரியிறைத்ததைப் போலாயின. கொடுக்கும்படியான அமிர்தத்தை யிறைத்து உருகின்ற சந்திரனானவன் குறைந்து நெய்யைத்தடுத்து வடித்துக்கொண்டு வுதறுகின்ற வெறுந்தட்டினை யொத்தான், (எ-று) [௬௨]

ஆதவன் வருந்திசை யகன்றுதடு மாறிச்
சோதியு மகன்றது துளங்கவொரு பூதம்

பூதமொரு நாலுநிலை போய்நடு நடுங்கிப்
பேதமுறு கின்றதுயர் பேசவெளி தாமோ.

(இ-ள்) சூரியனானவன் உதயமாகின்ற திசையை நீங்கித் தடுமாறிப் பிரகாசமுமில்லாமற்போயிற்று. இப்படிக்கெல்லாம் அஞ்சத்தக்கதாகவொரு பூதமாகிய காற்றானது செய்ததினாலே மற்ற நான்கு பூதங்களும் நிலைகுலைந்து நடுக்கமுற்றுப் பேதங்களையடைந்திருக்கின்ற துயரத்தைச் சொல்லவெளிதாகுமோ. மகாவரிதாயிருக்கும் (எ-று) இச்செய்யுளில் வேண்டுஞ் சொற்கள் வருவிக்கப்பட்டன. (எ-று) [௩௩]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தக்க பவன னறைந்தீர்த்துச் சுழன்று நடுக்கிச் சலித்திடவு
மிக்க நகமும் பன்னகமு மசையா திருந்த மேதினியி
னக்க னமலன் றிருப்பாத மறவா துரைக்கு நான் மறையீர்
பைக்கு ளடைத்த கனகமொரு காலா லவிழ்க்கப் படுங்கொல்லோ

(இ-ள்) தகுந்த வாயுவானவன் எல்லா மலைகள் முதலிய பொருள்களையும் அறைந்திழுத்து நடுங்கிச் சுழன்று சலிக்கும்படி செய்து தானுஞ் சலித்தடங்கவும் அப்போது மேலாகிய கைலைமலையும் ஆதிசேடனும் அசையாமலிருந்தன. உலகத்தில் மலமில்லாத நக்கனாகிய சிவபெருமானுடைய திருவடியை மறவாமற்றுதிக்கின்ற நான்கு வேதங்களையுமுணர்ந்த முனிவர்களே பையினுள்ளே யடைத்த பொன்னை யொருகாலினாலே யவிழ்க்கப்படுமோ படாது. (எ-று) பையாகிய படங்களால் மறைக்கப்பட்ட பொன்னாகிய மலையை ஒரு காற்றினாலே நீங்கப்படுமோ என்பதாம். [௩௪]

வெற்றியனந்தன் படைத்ததுகண் டயர்ந்து பவனன் மிகநாணிப்
பற்றி யுயிரின் பரப்பையெலாங் கொடுபோய்ப் புகுந்தான் பாதலத்தி
னுற்ற வுலகத் துயிர்களெலா மசையா திருந்த வோவியம்போ
லற்ற மதுகண் டருள்புரிந்தா னடியார்க் கெளிய வற்புதனே.

(இ-ள்) ஆதிசேடன் வெற்றியடைந்ததைப் பார்த்து வாயுவானவன் அயர்ச்சியடைந்து மிகவும் நாணமுற்று உயிர்ப்பரப்புகளையெல்லாம் பிடித்துக் கொண்டுபோய்ப் பாதாளலோகத்திலே புகுந்துகொண்டான். அப்பொழுது உலகத்திற் பொருந்திய உயிர்களெல்லாம் சித்திரத்தைப்போலசையாதிருந்தன. அந்தச் சமயத்தைப் பார்த்து அடியார்க்கெளிய வற்புதனாகிய சிவபெருமான் றிருவருள்புரியத் தொடங்கினார். (எ-று) அயர்ந்து என்பது தளர்ச்சியுடைந்து என்பதாம். [௩௫]

வேறு.

நிரைத்திடு நன்மைகூறி நிமலனும் பணியே நீயா
முரைத்திடும் பணிகே ளென்றான் வினவினு னாக வேந்தன்
வரைத்தடம் படத்தினாலே மறைத்தது சிறிது வாங்கித்
திரைத்திட வேண்டு மென்று னனந்தனத் திறமே செய்தான்:

(இ-ள்) சிவபெருமானும் முறைமைப்படி நன்மைகளைச் சொல்லிப் பாம்பு வடிவமாகிய சேடனே நாம் சொல்லுகின்ற உத்திரவை நீ கேட்பாயென்று ஆதிசேடனோடு வினவிக் கயிலைமலையை விசாலம் பொருந்திய படத்தினாலே மறைத்திருப்பதைச் சிறிது வாங்கி அரைத்திடும்படியாகச் செய்யவேண்டு மென்றார். ஆதிசேடனுமப்படிச் செய்தான் (எ-று) [௬௯]

கலிநிலைத்துறை.

வந்து வாயுவும் வந்துவந் தறைந்தனன் வரையை
முந்தி வேரறப் பறித்தனன் கொடுமுடி மூன்றை
யந்த மூன்றையுங் கொடுநமன் றிசையினி லடைவே
சிந்தி னான்றல மூன்றிலே விழுந்தன சிகரம்.

(இ-ள்) அப்பொழுது வாயுதேவனும் வந்து வந்து மகிழ்ந்து கயிலைமலையையறைந்து முற்பட்டு வேரானது அறும்படி மூன்று கொடுமுடிகளைப் பறித்து அம்மூன்றையுந் தக்கணதிசையிலே கொண்டுபோய் அடைவாகவே சிதறினான். அப்படிச் சிந்திய மூன்று சிகரங்களும் மூன்று தலங்களிலே விழுந்தன (எ-று) அறைதல்-அடித்தல் அல்லது வீசுதலாகும் வந்து வந்து என்பது மகிழ்ச்சி பயக்கு. [௭௰]

முன்னர் வீழ்ந்திடு சிகரிகா ளத்தியா மொழிவர்
பின்னர் வீழ்ந்தது திரிசிரா மலையெனும் பிறங்க
லன்ன தின்பிற கமைந்தது கோணமா வசல
மின்ன மூன்றையுந் தெக்கண கயிலையென் றிசைப்பார்.

(இ-ள்) அந்த மூன்று சிகரங்களிலே முதலில் விழுந்த சிகரத்தைத் திருக்காளத்தி மலையென்று சொல்லுவார்கள் அதன்பின் விழுந்த சிகரத்தைத் திரிசிராமலையென்று மொழிவார்கள். அதின் பிறகு விழுந்த சிகரத்தைத் திருக்கோணமாமலை யென்று கூறுவர். இப்படிப்பட்ட மூன்றுதலங்களையும் தக்கண கயிலை யென்று மேலோர் சொல்லுவர் (எ-று) [௭௧]

வெள்ளி மால்வரை தனினுமன் றிமையவர் விடைகொண்
டுள்ள மானது மகிழ்ந்துதம் முறையுளிற் புகுந்தா

சென்ளு ருதமெதன் கயிலையா மூவகை யிடத்தும்
வள்ள லார்மலைக் கொழுந்தாாய் வடிவமாய் வளர்ந்தார்

(இ-ள்) பெருமை பொருந்திய வெள்ளிமலையாகிய கயிலையில் நின்றும் அப்பொழுது தேவர்கள் விடை பெற்றுக் கொண்டு மனமானது மகிழ்ச்சி யடைந்து தமதிருப்பிடங்களாகிய உலகங்களுக்குப் போய்விட்டார்கள். துதி பொருந்திய தெக்ஷண கயிலையாகிய மூன்றுவகைப்பட்ட விடங்களிலும் சிவ பெருமானுர் திருமலைக்கொழுந்தராகிய வடிவமாய் வளர்ந்தருளினுர். [சுகூ]

பக்க நாயகம் போன்றன வவையிரு பாலு
மிக்க நாயக மானது திரிசிரா விலங்க
றக்க வானவர் தானவர் மானவர் தமக்கு
நக்க ளுாதி விருந்துநல் வரங்களை நயந்தார்

(இ-ள்) அந்தத் திருக்காளத்தி மலையுந், திருக்கோண மாமலையும் பக்கங் களிலுள்ள நாயகமணிகள் போலிருந்தன. அவைகளுடைய இரண்டு பக்கங் களிலும் அல்லது இரண்டு தலங்களிலும் மேலாகிய நடு நாயகமானது திரி சிராமலையாகும் தகுதியான தேவர்களுக்கும், அசுரர்களுக்கும், மனிதர்களுக் கும் சிவபெருமானுர் அதிலெழுந்தருளியிருந்து நல்லவரங்களைக் கொடுத் தருளினுர (எ-று) [ருய]

மந்த ராசலங் கடலிலே சுழன்றது மறுகி
விந்த மானது புதைந்தது புவியிலே மிகவு
மந்த மேருவும் வளைந்துவில் லுருவமே யான
தெந்த மால்வரை யிதற்கிணை யாவதென் றிசைத்தான்

(இ-ள்) மந்தரகிரியானது பாற்கடலிலே மத்தாகித் துன்பத்தோடு சுழன் றது. விந்தகிரியானது பூமியினுள்ளே (மிகவும்) புதைந்தது உலகத்திலே மேலாகிய அந்த மகம மேருவும் வளைந்து வில்லின் வடிவாயிற்று. ஆதலால் எந்தப் பெருமை பொருந்திய மலைகளிந்தத் திரிசிராமலைக் கொப்பாகுவ தென்று கௌதம முனிவர் சொன்னுர் (எ-று) [ருக]

இம்பர் வாழ்வெனுந் தெக்கண கயிலையா மிடத்தி
லம்பு யாசன னசத்திய விணையகன் றதுவுங்
கும்ப மாமுனி நினைத்தது கொடுத்ததுங் குலிசன்
செம்ப ளுல்வரு தீவினை யகற்றிய திறமும்.

(இ-ள்) இவ்வுலகத்தில் மெய்வாழ்க்கை யென்னுந் தெட்சணகயிலாச மாகிய இந்தத்தலத்திலே பதுமாசனனுகிய பிர்மாவின சத்தியமான தீவினை நீக்கியதும், அகத்தியமாமுனிவருக்கு நினைத்தது கொடுத்தருளியதும்,

தேவேந்திரனுக்குச் செம்பனென்னுமசுரனால் வரப்பட்ட பாவத்தை நீக்கிய தன்மையும் (எ-று) இம்பர் வாழ்வென்பது இந்த வுலகமாகிய இவ்விடத்தில் தேவர்கள் முதலான அன்புடைய எல்லோர்களுக்கும் அரிதாய வாழ்வாகிய வரப்பிரசாதங்களைக் கொடுத்தருளுகின்ற தெக்கண கைலை என்பதாம்.[ருஉ]

அத்த லத்திலே யுமைசிவ தடமமைத் த்துவுஞ்
சத்த மாதரோ டிருடிகள் கழுகுசஞ் சரிக்குஞ்
சித்தர் சாரணர் திரிசிரா தயரதன் சிறுவன்
பத்தி செய்தது மருச்சுனன் வணங்கிய பலவும்.

(இ-ள்) அந்தத் தெட்சிணகயிலையென்னுந் தலத்திலேயுமாதேவியார் சிவகெங்கையுண்டாக்கியதும், சப்த மாதர்கள், சத்தவிருடிகள், கழுகென்னுஞ்சடாயு. எங்குஞ்சஞ்சரிக்கின்ற சித்தர்கள், சாரணர்கள், திரிசிரா, தயரதன் புத்திரனாகிய ஸ்ரீராமன் ஆகிய இவர்களெல்லாம் பத்திசெய்து வரங்களைப் பெற்றதும், அருச்சுனன் வணங்கியதுமான பலவரலாறுகளும் (எ-று) [ருங]

அனும முத்திரை வந்ததுஞ் சூரனு மருக்கன்
பனிம லர்க்கொடு பணிந்ததும் பாதலத் துறையும்
வனிதை மாதர்கள் வணங்கிய மகிழ்ச்சியுஞ் சார
முனிவன் முத்தியுந் தாயராங் கருணையு மொழிவாம்

கலி நிலைத்துறை

(இ-ள்) அனும முத்திரையானது இந்தத்தலத்திலே வந்ததன்மையும், சூரவாதித்த சோழராசன் குளிர்ந்த புஷ்பங்களைக்கொண்டு சுவாமியைப்பணிந்தவரலாறும், பாதாளலோகத்திலிராநின்ற நாககன்னியர்கள் மகிழ்ச்சியாய் வணங்கியதுவும், சாரமாமுனிவர் பூசித்து முத்திபெற்றதுவும் செட்டிப்பெண்ணுக்காகப் பரமசிவம் தாயாராகி வந்த கருணையும் ஆகிய இவைகளெல்லாம் சொல்லுவாம் (எ-று) [ருச]

## திருமலைச் சருக்கம்

### முற்றிற்று.

பாயிரமுள்பட ஆக திருவிருத்தம் (கூரு)

---

உ

## இரண்டாவது

# பிரமதேவன் அசத்தியந் தீர்ந்த சருக்கம்.

கலிநிலைத்துறை

கோதை நாரியைச் சிலைவடி வாக்கிய குரிசில்
பூத ராதிகட் கரசெனப் பொருப்பினைப் புகல
வேத னாதிற் றவஞ்செயுங் கதையினை விரித்திங்
கோது வீரெனக் கோதம முனிவனு முரைப்பான்.

(இ-ள்) பூமாலை யணிந்திரா நின்ற தனது மனைவியாகிய அகலியை யென்னும் பெண்ணைக் கல்லுருவமாக்கிய குரிசிலாகிய கௌதம முனிவர் மகம்மேரு முதலான மலைகளுக்கெல்லாந் திரிசிராமலையானது அரசனைப் போலச்சிறந்ததென்று சொல்லக்கேட்ட முனிவர்கள எல்லோரும் பிரமதேவ ஞர் அந்தத் திரிசிராமலையிலே தவத்தைச் செய்யுங் கதையை விரித்து இவ் விடத்திற் சொல்லவேண்டுமென்று கேட்கக் கௌதம முனிவர் சொல்லு கிறார் (எ-று) குரிசிலென்பது - பெருமையிற் சிறந்தோன். [க]

முன்ன மேயொரு காரணத் தாலரன் முகுந்த
னன்ன வாகனன் மூவரு மொருதலத் தடைந்தார்
மன்னு மேழிசை நாரத னவ்வயின் வந்தான்
கன்னி பாகனை மாயனைப் பதுமனைக் கண்டான்.

(இ-ள்) முன்னாளிலே யொருகாரணத்தினால் ருத்திரமூர்த்தியும், நாரா ணனும், பிரமனும் ஆகிய மூவருமொருதலத்திலே கூடியிருந்தார்கள். அப் பொழுது நிலைபெற்ற வேழிசையையுடைய நாரதமுனிவன் அவ்விடத்திலே வந்து அம்மூவரையும் பார்த்தான் (எ-று) கன்னிபாகனென்பது உமாதே வியைப் பாகத்தில் வைத்தருளிய கடவுள். மாயனென்பது—மயக்கத்தக்க வன். பதுமனென்பது—தாமரையிலுதித்தவன். [உ]

அன்று மூவரைப் பொதுவிலே யிறைஞ்சிநின் றவனு
மின்று நானிறைஞ் சியதிற் பெறியவற் கென்று
சென்றுபோயினன் றெளிவிலா மொழியினாற் றிகைத்தார்
துன்று வானவ ரானவ ரிருடிக டொகையாய்.

(இ-ள்) அப்பொழுது அம்மூவரையும் பொதுவிலே வணங்கி நின்ற நாரதமுனிவனும் இப்பொழுது நான் வணங்கியது இந்த மும்மூர்த்திகளில் பெரியவர்களுக்கே என்று சொல்லியவ்விடம் விட்டு அப்பாற் போயினான். தேவர்களின் கூட்டங்களும், இருடிகளின் கூட்டங்களும் அந்த நாரத முனிவன், சொல்லியதெளிவில்லாத மொழியினாலே திகைத்தார்கள் (எ-று) திகைத்தல்—மயங்கல். [௩]

கலக நாரதன் வழங்கிய மொழியினைக் கமலத்
திலகு வேதியன் றனதென வரிதன தென்றான்
மலைவு கொண்டன ரெழுந்தனர் பொருதனர் வலியா
லுலக மெங்கணு நடுங்கின விமையவ ரொளித்தார்.

(இ-ள்) கலகப்பிரியனாகிய நாரதமுனிவன் சொன்ன சொல்லினைத் தாமரை மலரிலிருந்து விளங்காநின்ற வேதத்தையுடைய பிரமதேவன்றன்னு டையதென்றும், விஷ்ணு தன்னுடையதென்றும் சொல்லி நான் பெரியவ னென்று பிரமனும், தான் பெரியவனென்று விஷ்ணுவும், ஒருவரோடொரு வர் எதிர்த்து [மயக்கங்கொண்டு மாறுபட்டு] வலிமையினாலே யெழுந்து அவ் விருவரும் போர்செய்தார்கள். அதினால் உலகமெங்கும் நடுங்கித் தேவர்களும் ஒளித்தார்கள். (எ-று) [௪]

சோதி யவ்விடத் தேசுட ரிலிங்கமாத் தோன்ற
வேத நாரணர் பயந்திது வேறென வியந்தார்
பாத மீதிதற் களவுதா னிலையெனப் பகர்ந்தா
ராதி யந்தமீ தறிநதவர் பெரியரென் றறைந்தார்.

(இ-ள்) அவ்விருவருடைய மயக்கத்தை நீக்கும்படியாகப் பரஞ்சோதி யாகிய சிவபெருமான் அந்தப் பிரமனும் நாரணனும் வேறுபட்டுப் போர் செய்கின்ற அந்தவிடத்திலே யாவராலும் அடியையும் முடியையும் அறியக்கூடாத ஒரு அக்கினிலிங்கமாகத் தோன்றினதை யவ்விருவரும் பார்த்துப் பயந்து இதுவேறென்று வியந்து இச்சிவலிங்கத்துக்குப் பாதமீதென்று காண்பதற் களவில்லையென்று சொல்லியிதினுடைய அடியையும் முடியையுமறிந்தவர் களே பெரியோரென்று சொன்னார்கள். (எ-று) [௫]

பொருவி லாவரி யேனமாய்ப் பாதலம் புகுந்தான்
விரைவி னாலடி தேடுவா னிசைந்திடும் விருப்பாற்
பரவு மோதிம மேனதிம மாகிமேற் பறந்தான்
கருதி வானினுஞ் செம்பொனாட் டிடத்தினுங் காணான்.

(இ-ள்) சமானமில்லாத போர்செய்தலைவிட்டு விஷ்ணுவானவன் அந்

தச் சிவலிங்கத்தினடியை வேகமாய்த்தேடிக் காணும்படியான விருப்பினாலே பன்றியின் வடிவமாகிப் பாதாளலோகத்துக்குள்ளே புகுந்தான் பரவிய சிறகு பொருந்திய அன்னத்தை வாகனமாகவுடைய பிரமன் அன்னத்தின் வடிவமாகி மேலே பறந்து நினைக்கப்பட்ட ஆகாயத்தினிடத்துஞ் செம்பொன்னைப்போல் விளங்கிய நாடாகிய மேலுலகத்தினிடத்துங் காணாதவனாயினான் [எ-று] [சு]

வீர பத்திர புவனமுந் தேடினான் மிசையிற்
பார வித்தியா கலைக்குள புவனமும் பார்த்தான்
கார ணத்தினா ழற் கொழுந் தெனுமுடி காணா
னார ணத்தினன் சிறையெலா முதிர்ந்திளைத் தயர்ந்தான்

(இ-ள்) அந்த மேலுலகங்களுக்கப்பால் வீரபத்திர புவனத்தையும் பிரமன்தேடி அதற்கு மேலான வித்தியாதத்துவ புவனத்தைச் சேர்ந்த கலையென்னுந் தத்துவத்திலுள்ள புவனத்தையுந்தேடிப் பார்த்தான். பின்பு அப்படித் தேடிப் பார்க்கின்ற காரணத்தையுடைய பிரமன் அக்கினிக் கொழுந்தென்கின்ற சிவலிங்கத்தின் முடியைக்காணாதவனாகி அப்பிரமன் தனது சிறையெல்லா முதிர்ந்திளைத்துத் தளர்ச்சியை யடைந்தான் (எ-று) [எ]

வெய்து யிர்த்தன னிரங்கின னிரங்கிடும் வேலைக்
கைதை யிற்பெரு மடல்வர மகிழ்வினாற் கண்டா
னெய்தி யந்தம டலினைத் தகைந்துகொண் டெதிரே
நொய்தி னீவருஞ் செயலினை நுவலுவா யென்றான்

(இ-ள்) அப்படி யந்த வன்னரூபமாகிய பிரமனுடைய சிறையெல்லா முதிர்ந்து இளைத்துத் தளர்ச்சியை யடைந்தபின்பு பெருமூச்சுவிட்டு அழுதான். அப்படி யழுதுகொண்டிருக்கும்பொழுது தாழையினுடைய பெரிதான மடலானது வர அதை மகிழ்ச்சியினாலே பார்த்து அதனிடத்திலடைந்து அந்தப் பெரிய மடலைத் தடுத்துக் கொண்டதினெதிரே நீ வருகின்ற செயலைச் சொற்பமாக விரைவாக சொல்லுவாயென்று பிரமன் கேட்டான் (எ-று) [அ]

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

அங்கே தகையும் பொழுதயனு மன்னந் தனைப்பார்த்தலர் முகத்துச்
செங்கே தகையுஞ் சிலமொழியுஞ் சிவனார் கனகத் திருமுடிமேற்
கொங்கே தகையும் படியிருந்து விழுந்தே னிஃதென் குறையென்ன
விங்கே தகையு மோதிமமே யெவனீ வரவே தென்றதுவே

(இ-ள்) அவ்விடத்திலே தடுக்கின்றபொழுது பிரமதேவனாகிய வன்னத்தைப் பார்த்து அலர்ந்திருக்கின்ற முகத்தையுடைய சிவந்த தாழை மடலும் சிவபெருமானுடைய பொன்மயமான திருமுடியின்மேலே வாசனை பொருந்தும்படியிருந்து விழுந்தேன். இதுவே யெனது வரவின் குறையென்று சொல்லி யிவ்விடத்திலே யென்னைத் தடுக்கின்ற வன்னமே நீ யார் உன்னுடைய வரவு யாது என்று தாழைமடல் பிரமனைக் கேட்டது (எ-று) சிலமொழியும் என்பது சொல்லின் மிகை வினையெச்சமாய்க்கொண்டிருக்கின்றது. [கூ]

என்பே ரயனென் றுரைத்திடுவா ரெழுபூ தலமு மென்செயலே
முன்போர் தினத்தி னெடியவற்கு மெனக்கும்பகையாய் முளிவாகி
மின்போ லெழுமித் தழலி லிங்க முதலீ றிடையே விதிப்பவரே
வன்போரெனவே யெடுத்துரைத்தோந் திருமால் வராக வடிவானான்

(இ-ள்) எனது பெயரானது பிரமதேவனென்று சொல்லுவார்கள் ஏழுலோகங்களுமென்னுடை செயலாகும். முன்பொருதினத்திலே விஷ்ணுவுக்கு மெனக்கும் பகையாகியதினாலே கோபமுண்டாகி, மின்னைப்போல் விளங்கி யெழாநின்ற இந்த நெருப்புருவமான சிவலிங்கத்தினுடைய முடியும் அடியுமாகிய இடத்தைக்கண்டு வந்து சொல்லுகின்றவர்களே வலிமையுடையோரென்றெடுத்துச் சொன்னோம். திருமாலாகிய விஷ்ணுவானவன் பன்றியின் வடிவமானான் (எ று) இச்செய்யுள் - குளகம் [ய]

மண்ணிற் புகுந்தே யடிதேடப் பாதா ளத்தின் வகையடைந்தான்
விண்ணிற் கிடையே யோதிமமா யெழுந்தேன் மிகவும் விரைவாகிக்
கண்ணிற் குறித்தே னத்திசையுங் காணா துழன்றே னினைக்கண்டே
னெண்ணிற் பெரிய தழற்றாணின் முடிவே தறிய வியம்பாயே.

(இ-ள்) அப்படி விஷ்ணுவானவன் பன்றியாகி மண்ணுலகத்திலே புகுந்து அடியைத்தேடப் பாதாளலோகத்தின் விரிவையடைந்தான். விண்ணுலகங்களுக்கிடையே நான் அன்னத்தின் வடிவாகியெழுந்து மிகுந்த வேகமாய்ப் பறந்து கண்ணினாலே குறித்து எந்தத் திசைகளிலுங் காணமற் சுழன்று வருந்தியுன்னைக் கண்டேன். அளவில்லாத பெரிய நெருப்புத்தூணின் முடிவு எவ்வளவுள்ளது அதையான் அறியும்படி சொல்வாயென்று பிரமன் கேட்டான் (எ-று) [யக]

என்று பதுமன் மொழிந்திடலு மடற்கே தகையு மினிதுரைக்கு
நன்று மொழிந்தா யித்தூர நடந்த வழியோ ரணுவளவாங்
குன்றி னளவுண் டினியேகு நெறிதான் மனத்தாற் குறிக்கரிது
சென்று தலையிற் புவனமெலா மிந்நா ளளவுந் தேடினையே

(இ-ள்) இப்படிப் பிரமன் சொல்லுமளவில் தாழைமடலும், இனிதாகச்சொல்லும், நன்றாகச் சொன்னாய், இவ்வளவுதூரம் நீ நடந்தவழியானது ஒரு அணுவளவாகும் இனிமேற் செல்லும் வழியானது மலையின் அளவாகும். அந்த வழியை மனத்தினாலே குறித்து நினைத்தற்கரிது. தலைமையில்லாத புவனங்களையெல்லாமிவ்வளவு காலமளவுஞ்சென்று நீ தேடினாயென்று தாழைமடல் சொல்லிப் பின்னுஞ்சொல்லுகின்றது. (எ-று) [ய௨]

சுத்த வித்தை யீசுரமேற் றுலங்குஞ் சாதாக் கியமெனவுந்
தத்துவங்க ளினிமூன் றுண் டவைமே லிருப்பர் சதாசிவனு
மொத்த மூர்த்தி சதாசிவத்தின் வடிவாமந்த வொளி யுருவம்
பத்தியுடையோர் பரம்பரனு ரருளா லகத்தே பாவிப்பார்.

(இ-ள்) சுத்தவித்தை எனவு மீசுரமெனவும், அவைகளின்மேல் விளங்காநின்ற சாதாக்கியமெனவும் மூன்று தத்துவங்களினியுண்டு அவைகளுக்கு மேலே சதாசிவனாரிருப்பர். ஒத்திராநின்ற சதாசிவமூர்த்தியின் வடிவமாகுமந்தவொளியுருவமாகிய விலிங்கம், பத்தியையுடையயோர்கள் சிவபெருமானாருளினாலேயுள்ளே தியானிப்பார்கள். (எ-று) [யங]

ஆகையாலே யறியவரி துனக்கு முன்னை யளித்தவற்கு
மாகமீது கிளராதே திரும்பா யென்று மடலுரைக்க
வோகை யாகி யயனுரைப்பா னெனக்கோ ருதவி யுளதரியே
தோகைபாகன் முடியையிவ னறிந்தா னென்று சொல்வாயே

(இ-ள்) ஆகையினாலே யுனக்கு முடியையறியவரிது, உன்னைப்பெற்ற நாரணனுக்கும் அடியையறியவும் அரிதாகும். ஆகாயத்தின்மேலே நீ செல்லாமல் திரும்புவாயென்று தாழைமடல்சொல்ல, மகிழ்ச்சியாகிப் பிரமன் சொல்லுவான் நீ யெனக்குச் செய்யும் நன்றியொன்றுண்டு அதாவது விஷ்ணுவே உமாபாகனை சிவபெருமான் முடியை யிப்பிரமன் அறிந்தானென்று சொல்லுவாயென்றான். (எ-று) [யச]

எனக்கே தகையு மிசைந்திடலா லெழுந்த சோதி யிறைசிவந்த
சினக்கோ பமதா யுரைத்திடுவா னிடும்பா னமது திருமுடியை
யனக்கே தனன்கண் டனனென்ன வுரைத்தாய் நமக்கு மாகாமற்
புனக்கே தகையே யுள்ளுருவாய்ப் போவா யெனவே புகன்றருளி.

(இ-ள்) இப்படியென்று பிரமன் சொல்லியதைத் தாழைமடலுங் கேட்டுவுடன்பட்டதினாலே சோதிமயமாயெழுந்த விறைவனாகிய சிவலிங்கப் பெருமானார் வெளிப்பட்டு சிவந்த கோபக்குறிப்புடனே திருவாய்மலர்ந்தருளு

னென்றார் அச்சத்தால் [இம்மையிலேலே] நமது திருமுடியை, யன்னக் கொடியையுடைய பிரமன் கண்டானென்று சொன்னாய், நெய்தற் புனத்தி லுள்ள தாழையே நீ நமக்கெப்பொழுதுமாகாமல் முன்னுருவமாகப் போவா யென்று சொல்லி (எ-று) இது குளகச்செய்யுள். (யரு)

விடைக்குன் றுகைப்பான் வெகுண்டுரைப்பா னிதழா யிரமும் வெண்மதிய
மடைக்குங் கமலத் திருப்போனே யாராதனையு மிரிதாவாய்
படைக்குந் தொழிலுமுனக்கொழித்தோ மென்றானயனும் பயந்தயர்ந்தான்
சடைகொன் றையினன் றாளிணைமேல் வீழ்ந்தா னெழுந்து சாற்றிடுவான்

(இ-ள்) வெள்ளிமலைபோன்ற இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானார் கோபித்துச் சொல்லுவார் வெண்மையாகிய சந்திரனாலே ஆயிரமிதழ்களையுமடைக்கின்ற தாமரை மலரிலிருக்கின்ற பிரமனே நீ ஆராதனையும் அரிதாக ஆவாய் நீ படைக்கின்ற தொழிலும் உனக்கில்லாமல் நீக்கினோமென்றார் பிரமனும் பயந்து தளர்ந்து கொன்றைப்பூமாலையைச் சடையிலணிந்த சிவபெருமானுடைய விரண்டு பாதங்களின்மேல் விழுந்தெழுந்து சொல்லுவான் (எ-று) [யசா]

ஷை வேறு

ஐயனே போற்றி போற்றி யனகனே போற்றி யெட்டுக்
கையனே போற்றி கால காலனே போற்றி சோதி
மெய்யனே போற்றி போற்றி விமலனே போற்றி பொய்யர்
பொய்யனே போற்றி போற்றி புண்ணியப் பொருளே போற்றி.

(இ-ள்) அந்தப்பிரகாரஞ் சுவாமியினுடைய திருவடிகளிலே பிரமதேவன் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து நின்று எனது பிதாவே நமஸ்காரம், நமஸ்காரம் மாசில்லாதவனே வந்தனம் எட்டுக்கையையுடையவனே வந்தனம் காலகாலனாகிய கர்த்தனே சரணம் சோதிமயமானவனே சரணம் விமலனாகிய பரிசுத்தனே வந்தனம் பொய்யருக்குப் பொய்யனே வந்தனம் வந்தனம் புண்ணியப்பொருளே வந்தனம் என்றான் எ-று இது குளகச் செய்யுள் (யஎ)

ஆறணி சடையாய் போற்றி யடியவர்க் கெளியாய் போற்றி
யேறணி கொடியாய் போற்றி யிருவினை தவிர்ப்பாய் போற்றி
வீறணி யரவா போற்றி வேலவன் குரவா போற்றி
நீறணி யமலா போற்றி நின்மலா போற்றி யென்றான்.

(இ-ள்) கங்கையை யணிந்த சடையையுடையவனே வந்தனம் அடியவருக்கெளியவனே வந்தனம் அழகிய இடபக்கொடியையுடையவனே வந்தனம்

இருவினைகளை யகற்றப்பட்டவனே வந்தனம் பெருமைபொருந்திய ஆபரண மாகச் சர்ப்பங்களைத் தரித்தவனே வந்தனம் வேலாயுதக்கடவுளுக்குப் பிதா வே வந்தனம் திருநீறணிந்திராநின்ற அமலனே வந்தனம் நின்மலனே வந்தன மென்றான்( எ-று) [கஅ]

பாபமே புரித லாலே பத்தியே வுருத்த வேண்டிச்
சாபமேல் வரவே நொந்தேன் றளர்ச்சியுந் துயருந் தீரக்
கோபமே தவிர வேண்டுங் குணப்பெருங் குன்றே ஞானத்
தீபமே யருளே யென்று திருவடி யிறைஞ்சி நின்றான்.

(இ-ள்) பாவத்தை யடியேன் செய்தலினாலே பத்தியானது வரும்படி செய்ய விரும்பிச் சாபமானதுவரவே நொந்து வருந்தினேன். அந்த தளர்ச்சி யுந் துன்பமுந் தீரக்கோபத்தை நீக்கியருளவேண்டும், பெருமைபொருந்திய குணக்குன்றே ஞானப்பிரகாசமே திருவருள் வடிவமே யென்று சுவாமியினு டைய திருவடியைப் பிரமதேவன் வணங்கி நின்றான் (எ-று) [க௯)

கலிவிருத்தம்

முறையென மொழிதலு முனிவு நீங்கியே
பிறைமுடி யண்ணலு மகிழ்ந்து பேசுவான்
மறையவா தெக்கண கயிலை மன்னியே
யிறைநமை வழுத்தினா லேகுஞ் சாபமே.

(இ-ள்) இவ்வாறாக முறையோவென்று பிரமதேவன் சொல்லுதலும் பிறையைத் திருமுடியிலணிந்திராநின்ற அண்ணலாகிய சிவபெருமானார் மகிழ்ச்சியையடைந்து வேதத்தை யுணர்ந்த வந்தணர்கள் வாழ்கின்றதெக் கண கயிலையில் நிலைபெற்ற இறையாகிய நம்மை வணங்கினால் சாபம் நீங்கு மென்று அருளிச்செய்தார் எ-று [உ௰]

தெக்கண கயிலையைச் சேர்ந்த பேர்க்குமுன்
புக்கதீ வினையறும் பொருந்து நற்கதி
யக்கண மாகுமென் றருளிப் போயினான்
முக்கணன் றிரும்பினான் முண்ட கத்தினான்.

(இ-ள்) தெக்கண கயிலையைச் சேர்ந்தபேர்களுக்கு முன்புள்ள தீவினை கள் நீங்கும். நல்லகதியும் பொருந்தும். இவைகள் அக்கணமேயுண்டாகு மென்று மூன்று கண்களையுடைய சிவபெருமானார் அருளிப்போயினார். அந் தப்பிரகாரந் தாமரைமலரிலிராநின்ற பிரமதேவனும் அம்மலையை நோக்கித் திரும்பினான். (எ-று) [உக]

அத்திசை முகத்திரு னசல் மேவிய
மெய்த்திசை விரும்பியே மேவும் போழ்தினி
னத்தின நிறைமழை நாடு தன்னிலே
யத்தர்வாழ் தென்கயி லாயங் கண்டனன்.

(இ-ள்) நான்கு முகங்களையுடையவர்தப் பிரமதேவன் அந்தத்தெக்கண கயிலைமேவியிருக்கின்ற மெய்மையாகிய திசையை விரும்பியேயடையும்போழ்து, சங்குகள் நிறைந்த மழநாட்டிலே சிவபெருமானார் வாழ்கின்ற தக்கண கயிலையைக் கண்டான். (எ-று) (உஉ)

ஷை வேறு.

அக்கிரியி னெல்லையரை யோசனை வளைகரு
மொக்கநில மூழ்கியிடு யோசனைகண் மூன்றாந
தக்கவொரு யோசனை யுயர்ச்சிதவம் வல்லீர்
மிக்ககிரி யின்பெருமை வேதநிலை போலாம்.

(இ-ள்] அந்தத்தெக்கண கயிலைமலையினுடைய நான்கெல்லைகள் அரை யோசனைதூரம் நாற்புறமும் வளைந்திருக்கும். அதற்குவொத்திருக்கும்படியாக மூன்று யோசனைதூரமுள்ள விஸ்தீரணம் பூமியினுள்ளே மூழ்கியிருக்கும் தக்கபடி வொருயோசனைதூரம் உயர்ச்சியுற்றிருக்கும். தவத்தில் வல்லமையுடைய முனிவர்களே மேலான கிரியின் பெருமையானது வேதத்தினிலைமையைப்போலாகும். (எ-று) (உந)

ஷை வேறு.

அந்தமால் வரையினை யங்கம் பூவுற
வந்தனை யாகவே வலஞ்செய் வோர்கடஞ்
சுந்தர மேனியிற் றுகளுக் கெண்ணிறு
ணந்திடாச் சிவபத நண்ணு வார்களே.

(இ-ள்) அந்தப் பெருமைபொருந்திய மலையைச் சரீரமானது பூமியிற் பொருந்தும்படி வந்தனை வழிபாடாகவே பிரதட்சணஞ் செயவோர்கள் தங்களுடைய அழகான மேனியிற் படிந்த தூசிகளுக்கு எண்ணிக்கையில்லாத காலம்அழியாதபடி சிவபதவியிலே பொருந்துவார்கள் (எ-று) (உச)

இட்டமாந் திருவினை யிணங்க வேண்டிடி
லட்டமா சித்தியு மடைய வேண்டிடிற்
றிட்டமாப் பாகதி சேர வேண்டிடின்
மட்டுலாந் திருமலை வலஞ்செய் வார்களே

(இ-ள்.) மனோபீஷ்டமாகிய லட்சுமி கரங்களைப் பொருந்தி வேண்டினாலும் அஷ்டமாசித்திகளையுமடைய விரும்பினாலும், திட்டமாகிய பரகதியைச் சேரவேண்டினாலும், வாசனை கமழாநின்ற அந்தத் திருமலையை வலஞ்செய்வார்கள் (எ-று.) [உரு]

திருமலை தனைவலஞ் செய்த பேரெலாம்
பரகதி யடைவது பகர வேண்டுமோ
வொருபதம் வலஞ்செய வுன்னி யூன்றினா
லரியநா லாம்பத மடைகு் வார்களே.

(இ-ள்) அந்தச் சிறந்ததெக்கண கயிலைமலையை வலமாகப் பிரதட்சணஞ்செய்தபேர்களெல்லாம் மோட்ச கதியை யடைவது சொல்லவேண்டுமோ சொல்லாமற்றானே யுண்டாகும். அந்த மலையை வலஞ்செய்யவேண்டுமென்று மனதிலே நினைத்துப் பூமியிலே யொருகாலை யூன்றினால் அவர்கள் அரிதாயுள்ள சாயுச்சிய பதவியை யடைகுவார்கள் (எ-று) வேண்டுமோ யென்பதிலுள்ள ஓகாரமெதிர்மறை ஒருவர் சொல்லாமலுண்டாகும் [உசு]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சரியையை யறிந்து மற்றச் சரியையின் வழியே வந்து
கிரியையை விளங்கி யந்தக் கிரியையை முடித்த பின்பு
பரவிய யோக மெல்லாம் படிநதுபக் குவமதாகிப்
பெருகிய ஞான நேயம் பிறந்திடுந் தவத்தினோர்கள்.

(இ-ள்) முதலிலே சரியையை யுணர்ந்து அந்தச் சரியையின் வழியாகவே வந்து, பின்பு கிரியையிலே விளங்கியந்தக் கிரியையை முடித்தபிறகு பரவப்பட்ட யோகங்களெல்லாம் பழகிப் பரிபக்குவமாகி யப்பால் பெருகப்பட்ட ஞானத்தில் நேயம் பிறந்திடுகின்ற தவத்தையுடையோர்கள் அந்த மலையில் அனேகருளர் (எ-று) படிந்து என்பது, கலந்து என்று பொருளுரைத்துக் கொள்க. [உஎ]

ஊசியிற் பதத்தை யூன்றி யுணவுடன் விருப்பு நீங்கி
நாசியின் விழியைநாட்டி நன்கன லைந்து மூட்டிப்
பேசிய தொழிந்து ஞானப் பெருக்கினின் மூழ்கி யந்தத்
தேசிகன் றன்னை வைத்த சிந்தைமா தவத்தி னோர்கள்.

(இ-ள்) ஊசியின் மேலே காலை யூன்றிப் புசிப்புடனே விருப்பையும் விட்டு, மூக்கினுடைய நுனியிலே கண்களை நிறுத்தி, நன்றாகிய பஞ்சாக்கினியைந்தையு மூட்டி மௌனமாகி ஞானப்பிரவாகத்தில் மூழ்கியந்தத்தேசிகனைச் சிந்தையில் வைத்திராநின்ற மாதவத்தினோர்கள் அம்மலையில் அநேகருளர் (எ-று) நாசிகாத்திரலோசனனென்று தவத்தோர்க்குப் பெயர் [உஅ]

மாதவம் புரிய முன்னுண் மாதவம் புரிந்து செய்ய
பாதிரி குருந்து கோங்கு பாடல ஞாழல் புன்னை
மாதளை கமுகு தாழை வகுளமா சினிசெந் தாழை
சூதமே முதலா யுள்ள பாதவ நெருங்கித் தோன்றும்

(இ-ள்) அந்தத் தெக்கணகயிலை மலையைச் சுற்றிலுமிருந்து பெருமை பொருந்திய தவத்தைச் செய்ய முற்காலத்தில் மாதவங்களைச் செய்து செவ்விய பாதிரி குருந்து, கோங்கு, செந்நிறம் பொருந்திய குங்கும விருக்ஷம், புன்னை, மாதளை, கமுகு, தென்னமரம், மகிழமரம், பலாமரம், செந்தாழை, மாமரம், ஆகிய இந்த விருட்சங்கள் முதலாயுள்ள மரங்களெல்லாம் நெருங்கித்தோன்றும் [உகூ]

பண்பகர் வண்டு பாடப் பரம்பிய சாதி யெங்குஞ்
செண்பக வனங்க ளெங்குந் திகழ்ந்தல ரிறைக்கத் தேவர்
விண்பொதி கற்ப தாரு மலரினு மிக்கதென்று
நண்புடன் மகிழ்ந்து சூடு நன்மலர் வனங்க ளெங்கும்.

(இ-ள்) இராகத்தைப்போல வொலிபொருந்திய வண்டுகள் பாடப் பட்ட மலர்களையுடைய விசாலமான சாதி விருக்ஷங்களுஞ், செண்பகவிருக்ஷங் களையுடைய வனஙகளும் அந்த மலையைச்சுற்றி யெங்குமிருக்கின்றன. அந்த மரங்கள் விளங்கா நின்ற மலர்களையிறைக்கத் தேவர்கள் விண்ணுலகத்தி லுள்ள கற்பக விருக்ஷத்தின் மலரினு மேலானதென்று விருப்பத்துடனே சூடுகின்ற நல்ல மலர்களையுடைய நந்தவனங்களெஙகு மிருககின்றன (எ-று) []

சிங்கமும் புலியு மெண்குந திருதரு கலையு மாமா
தங்கமு நிறைந்து தம்மிற் பகையற வுரவு கூற
வங்குள கனியுந்தேனு மருந்திவா னரங்க ளெல்லாந்
தங்களிலொன்றோ டொன்று தருக்கிய வியல்பு கூற.

(இ-ள்) சிங்கங்களும், புலிகளும், கரடிகளும், திரியப்பட்ட மான்களும் பெரிய யானைகளும், நிறைந்து தங்களுக்குள்ளே பகையில்லாமலுறவு மிகுந் திருக்கவும் அம்மலையைச் சுற்றிய வனங்களிலுள்ள கனிகளையுந் தேனையும், வானரங்களெல்லாம அருந்தித தஙகளிலே யொன்றினோடொன்று செருக் கிய வியல்பு மிகுந்திருக்கவும் அம்மலையானது விளங்குகின்றதென்றவாறு []

செறிதர விளங்குகின்ற தெக்கண கயிலை நாமத்
துறுவரை தன்னைக் கண்டா னுற்றபே ருவகை கூர்ந்தான்
குறையற மணியின் பொன்னின் குவையுமுன் கண்டுகொண்ட
வறிஞர்க ணிகரா மென்ன மகிழ்ச்சிவெள்ளத்தி லாழ்ந்தான்

(இ-ள்) இவைகளாலே நெருங்கி மிகுதியாக விளங்காநின்ற தெக்கண கயிலையென்னு நாமத்தையுடைய மலையைப்பிரமதேவன் கண்டு பொருந்தப் பட்ட பெரிதாகிய மகிழ்ச்சி யதிகரித்துக் குறைவற்ற நவமணிகளின் குப்பை யையும் பொன்களின் குப்பையையுங் கண்களுக்கு முன்னே பார்த்தறிந்த, தரித்திரர்களைப்போல மகிழ்ச்சியாகிய வெள்ளத்திலேமுழுகினான் (எ-று) ௩௨

## கலிவிருத்தம்

எந்தையார்க் கனுதின மிருப்பு மாமலை
சிந்தைநைந் தமரர்கள் செப்பு மாமலை
சுந்தரன் றாதன்முன் சொன்ன மாமலை
கந்தமா மலருறை கஞ்சன் போற்றினான்

(இ-ள்) எனது பிதாவாகிய சிவபெருமானுக்கு எப்பொழுதுமெழுந் தருளியிருக்கத்தக்க விருப்பாயுள்ளது இந்தப் பெருமைபொருந்திய மலை யென்றும், சித்தத்தை வைத்துத் தேவர்களாலே துதிக்கப்படுகின்ற மகாமகி மையுள்ளது. இந்த மலையென்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின்றாதாகிய சாம்பமூர்த்தியான கடவுள் முன்னே யருளிச்செய்த மாமலையானது இது வென்றுந் துதிசெய்து வாசனைபொருந்திய பெருமையான தாமரைமலரிலி ருக்கின்ற பிரமதேவன் வணங்கினான். (எ-று) [௩௩]

## கலி நிலைத்துறை

அந்த வெற்பினில் லுச்சிமேற் கங்கைவந் தணையச்
சந்த வெண்பிறைக் கொழுந்தெழுந் தருகினிற் றவழச்
சுந்த ரத்திரு மலைக்கொழுந் தாமிறை சூடுங்
கந்தமாநதி மதியென விளங்குதல் கண்டான்

(இ-ள்) அந்த மலையினுடைய நல்ல வுச்சியின்மேலே ஆகாய கங்கை யானது வந்து பொருந்த அதன் சமீபத்தில் அழகிய வெண்மையான விளம் பிறையானதுவெழுந்து தவழ்தல், சுந்தரமான திருமலைகொழுந்தாகிய இறை யவர் சூடுகின்ற, வாசனைபொருந்திய பெருமையுள்ள கஙகாநதியுஞ் சந்திர னும்போல் விளங்கித்தோன்றுதலாயிருத்தலைப் பிரமதேவன்கண்டான். [௩௪]

எந்தை யார்திரு மலைக்கொழுந் தெனமுளைத் தெழுந்து
வந்த வேலையிற் சிரகிரி யுச்சிமேல் வைத்த
தந்தி மாமுகக் கடவுளைக் குகையில்வைத் தருளுங்
கந்த வேளையும் பிரமனெண் கண்களாற் கண்டான்

(இ-ள்) எனது பிதாவாகிய சிவபெருமானார், திருமலைக்கொழுந்தாக வெழுந்தருளி வந்தகாலத்திற் சிரமலையுச்சியின்மேலே வீற்றிருக்கின்ற யானை

முகத்தையுடைய விநாயகக்கடவுளையும், மலைக்குகையிலிலிருந்தருளுகின்ற சுப்பிரமணியக்கடவுளையும் பிரமதேவன் எட்டுக்கண்களாற் பார்த்தான்.(எ-று)

வணங்கு வார்தமக் கெளியரா மட்டுவார் குழலா
மணங்கொர் பாதியார் மலைக்கொழுந் தானநா ளருகே
யிணங்கி யிம்மலைக் காவலா யிருக்கென விசைத்த
கணங்க ளாகிய தேசுமிக் கார்தமைக் கண்டான்

(இ-ள்) மனம், வாக்கு, காயங்களென்னுந் திரிகரணங்களாலும், வணங்கப்பட்ட அடியார்களுக்கு எளியவராகி, மட்டுவார் குழற்பிராட்டியாரை யொருபாதி வடிவத்திலுடைய சிவபெருமானார் மலைக்கொழுந்தாகவெழுந்தருளியநாளில் சமீபத்திற்பொருந்தி யிந்தமலைக்குக் காவலாக இருக்கும்படி கட்டளையிட்ட சிவகணங்களாகிய தேசுமிக்காரென்னும் நாமத்தையுடைய நாயனாரையும் பிரமதேவன் தரிசித்தான் (எ-று) [௩௬]

கலிவிருத்தம்

உத்தர கயிலையி னுமைதன் கேள்வனா
ரத்தனார் வரங்கொடுத் தருடல் கண்டனஞ்
சித்தர்வாழ் தெக்கண கயிலை யாவது
மித்தகை யெனவெடுத் தியம்ப லாகுமோ

(இ-ள்) உத்தரகயிலை மலையிலே உமாபதியாகிய அத்தனார், வரங்கொடுத்தருளுதலைப் பார்த்தோம் ஞானசித்தர்கள் வாழாநின்ற இந்தத்தெக்கண கயிலையாவது இத்தன்மையுடையதென்று அதன்பெருமையை யொன்றாலெடுத்துச் சொல்லக் கூடுமோ கூடாது (எ-று) [௩௭

மனமகிழ்ந் தயனுமவ் வரைக்கு நண்ணியே
தனிவரை மேற்றிசைத் தடத்தின் மூழ்கியே
சினவிடை யூர்தியைச் செய்ய போதினா
லனவர தமுமினி தருச்சித் தானரோ

(இ-ள்) மனமானது மகிழ்ச்சியடைந்து பிரமதேவனும் அந்த மலைக்கு வந்தடைந்து வொப்பற்ற அம்மலையின் மேற்குத் திசையிலுள்ள தீர்த்தத்திலே மூழ்கி பகைவர்மேற் கோபத்தையுடைய இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானைச் சிவந்த புஷ்பங்களினால் அனுதினமும் இனிதாகப் பிரமதேவன் அருச்சனை செய்தான் (எ-று) [௩௮]

மலைதனை யனுதினம் வலமுஞ் செய்தொரு
சிலையிடை யருந்தவஞ் செய்து போற்றினா

ணலையிடைத் துயில்பவற் கரிய வண்ணனும்
விலகரு முமையுடன் விடையிற் றேன்றினன்

(இ-ள்.) அந்தமலையை யனுதினமும் பிரதட்சணஞ்செய்து அம்மலையின் சமீபத்திலுள்ள வொரு கல்லினிடத்திலே பிரமதேவன் அரிதாகிய தவத்தைச்செய்து சுவாமியை வணங்கினன். அப்பொழுது பாற்கடலினிடத்தே நித்திரைசெய்கின்ற விஷ்ணுவுக்கு அரிதாகிய சிவபெருமானும் நீங்குதற்கரிய உமாதேவியுடனே அப்பிரமனெதிரில் ஆகாசத்தில் தோன்றினன் (எ-று) []

நின்பெருஞ் சாபமும் வினையு நீக்கினே
மின்புற வுலகெலா மியற்று கென்றலுந்
தென்கயி லாயவிச் சிலையி னுமமு
மென்பெயராகவே யிசைக்க வேண்டுமால்

(இ-ள்.) அப்படியவன்முன்னே பிரசன்னமாகி நினது பெரிய சாபத்தையும் நீ பொய்சொல்லிய தீவினையையு நீக்கினோம். இன்பம் பொருந்தும்படியுலகங்களையெல்லாம் முன்போலச் சிருஷ்டி செய்வாயாகவென்று சுவாமி திருவாய்மலர்ந்தருளுதலும் தெட்சண கயிலாயவாசனே இந்தச்சில மலையினுடைய நாமமும் எனது பெயராகவே திருவுளம் பற்றவேண்டுமென்று பிரமன் கேட்டுக்கொண்டான் (எ-று) [சய]

பொய்த்துரை பகர்ந்திடும் வினைகள் புண்ணிய
வித்தல நினைத்தவர்க் கேக வேண்டுமே
மெயத்தவந் தமியனேன் புரிய மேவிய
வுத்தம சிலையுமென் பெயரி னேங்கவே

(இ-ள்) பொய்த்துப்போகும்படியான பொய்யுரையைச் சொல்லுகின்ற தீவினைகள் ஆகிய பாவஙகளெல்லாமிந்தப் புண்ணிய தலத்தை நினைப்போருக்கு நிவாரணமாகவேண்டும். மெய்மையாகிய தவத்தை அடியேன் செய்கிறதற்காக அடைந்த உத்தமமாகிய சிலையும் எனது பெயரினாலேயோங்கும்படி வரங்கொடுத்தருளவேண்டுமென்று பிரமன்கேட்டுக்கொண்டான் (எ-று.) []

திங்களி னுரோகணித் தினத்தின் மூழ்குவார்
மங்கரு வினையெலா மாற்ற வேதகும்
பங்குனி மாதமுட் படிகு வாரெனி
னங்கவர்க் கருங்கதி யளிக்க வேண்டுமே

(இ-ள்) சோமவாரத்தில் உரோகினி நக்ஷத்திரங்கூடிய தினத்திலேயந்தச் சிவதடத்திலே முழுகின்றவர்களுக்கு மங்கும்படி வருகின்ற அரிய பாவங்களையெல்லாம் நீக்கவேண்டும். பங்குனி மாதம் முழுதும் அத்தடத்தில் மூழ்கு

வார்களானால் அவர்களுக்கு அரிதான மோட்சகதி கொடுக்கவேண்டுமென்று பிரமதேவன் கேட்டுக்கொண்டான் (எ-று) [சஉ]

அத்தட முழ்கிநல் லறுகு மூவிலைப்
பத்திர மிரண்டுநின் பதத்தி லேற்றினோர்
புத்திர செல்வமும் புகழு மேன்மையுஞ்
சித்தியு முத்தியுஞ் சேர வேண்டுமே

(இ-ள்) அந்தச் சிவநடத்திலே முழுகி நல்ல அறுகும், மூன்று இலைகளை யுடைய வில்வபத்திரங்களிரண்டு நினது திருவடியிலருச்சனை பண்ணினபேர் கள் புத்திரபாக்கியமும், புகழும், மேன்மையும், அஷ்டமா சித்தியும், முத்தி யும் பொருந்த வேண்டுமென்று பிரமன் கேட்டுக் கொண்டான் (எ-று) [சங]

சோமரோ கணியெ னும் பெயருஞ் சூட்டுவி
தாமரைத் தடத்தினுக் கென்று சாற்றினான்
மாமலர்க் கோயிலாய் வரங்கள் யாவையும்
யாமளித் தனமென வியம்பி யேகினான்

(இ-ள்) சோமரோகிணியென்கிற பெயரையுந் தாமரைமலர்களுடைய தடத்துக்குச் சூட்டியருளவேண்டுமென்று பிரமன் கேட்டுகொண்டான். அந் தப்படி பெருமைபொருந்திய தாமரைமலரைக் கோயிலாகவுடையவனே வரங் களையெல்லாம், யாம் கொடுத்தோமென்று திருவாய் மலர்ந்து சிவபெருமான் அந்தரத்தானமானார். (எ-று) [சச]

விதிசிலை நன்மையுந் தடத்தின் மேன்மையு
மதியணி யிறைசிரா மலையைப் போற்றுவார்
கதிபெறு நீர்மையுங் கண்டு கண்களாற்
பதுமனு மகிழ்ந்துதன் பதியி லெய்தினான்

(இ-ள) விதியாகிய பிரமன் தவஞ்செய்த சிலையினுடைய நன்மையை யும் அவன் முழுகிய சிவதடத்தின் மேன்மையையும் சந்திரனையணிந்த சிவ பெருமானெழுந்தருளிய தெக்கண கயிலைமலையை வணங்குவோர்கள் கதி களைப் பெறுகின்ற தன்மை யுங்கண்களாற் கண்டு பிரமனும் மகிழ்ச்சியடைந்து தனது பதியாகிய சத்தியலோகத்தையடைந்தான் (எ-று) [சரு]

## பிரமதேவன் அசத்தியந் தீர்ந்த சருக்கம்

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 2க்கு திருவிருத்தம் (கசO)

உ

## மூன்றாவது

# அகத்தியச் சருக்கம்.

---

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

இந்தமாக் கதையான் மனமகிழ்ந் திறைஞ்சி
யிருந்தவ ரெழுந்துநின் றுரைப்பார்
நந்துவா ரிதியைப் பருகிய முனிவ
னயந்துதெக் கணதிசை யடைந்து
விந்தமால் வரையைப் புதைத்ததுங் கயிலை
விமலனை யமலனை யிறைஞ்சிச்
சந்தன சலத்தி லிருந்தது முறைப்பா
யெனச்சொலப் புகலுவான் றவத்தோன்

(இ-ள்) இந்தப் பெருமைபொருந்திய கதையினாலே மனது மகிழ்ச்சி யடைந்து வணங்கிப் பெரிய தவத்தையுடைய முனிவர்களெழுந்து நின்று சொல்லுவார்கள். சங்குகள் தவழாநின்ற சமுத்திர ஜலத்தைப் பானஞ்செய்த அகஸ்தியமுனிவர் விரும்பித் தெக்குத் திசையையடைந்து விந்தமென்னும் பெரிய மலையைப் பூமியினுள்ளே புதைத்ததையுந் தெக்கண கயிலையிலெழுந்தருளிய சிவபெருமானை யிறைஞ்சிப் பொதியமலையிற் போயிருந்ததையுஞ் சொல்லுவாயென்று கேட்கக் கௌதமமுனிவர் சொல்லத் தொடங்கினார். (எ-று) [1]

முக்கண னொருநா ளிமகிரிச் சிகர முகட்டிமேல முனிவர்க ளுடனே
புக்குறை தருமப் பொழுதினி லுரைப்பான் பொருவிலா நாரத முனிவா
தக்கண திசையி லுயர்ச்சியே தென்றான் றவமுனி யுரைசெய்வான் றலைவா
வக்கணி சடையாய் முன்னம்யான் குமரி யாடுவா னத்திசை யடைந்தேன்

(இ-ள்) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் ஒரு தினத்திலே யிமயமலைச் சிகரத்தின் முகட்டிலே முனிவர்களுடன் போயிருக்கின்ற காலத்தில், லொப்பில்லாத நாரதமுனிவனே தெக்குத்திசையின் உயர்ச்சியாதென்று திருவாய் மளர்ந்தருளினார். அதற்கு அந்த நாரதமுனிவன் சொல்லுகின்றான். தலைவனே சங்குமணி மாலையணிந்த சடையையுடையவனே கன்னியாகுமரியில் நான முழுகும்பொருட்டு முன்னே யந்தத்தெற்குத்திசையிற் சென்றேன். (எ-று) [2]

விந்தமென் றொருமால் வரைநெறி யிடையே விளங்கிய ததுதனை வினவின்
மந்தர கிரியைப் பகைத்துமற் றுள்ள வரைகளை நகைத்துநாற் றிசையி
னந்தர முழுது மடைக்கவு மெழுந்த தரும்பொருள் விரும்புமங் கையார்
சிந்தையை யளவிட் டறியலாஞ் சிறிதுந் தெளிவுறப் படாததன் றிறமே

(இ-ள்) விந்தமென்றும் பெயரையுடையவொரு பெரியமலையானது வழிநடுவிலே விளங்கினிறது. அம்மலையைக் கேட்கில் மந்தரபருவதத்தைத் தனக்கொப்பில்லையென்று பகைத்து மற்றுள்ள மலைகளை யிகழ்ச்சியாய் நகைத்து நாலுதிசைகளிலுள்ள ஆகாசவெளி முழுதும் மூடியடைக்கும்படியாகவும் மேலேயெழுந்தது. அரிதாகிய பொருளை விரும்புகின்ற பெண்களுடைய மனதையளவிட்டறியலாகும் சிறிதேனுந் தெளிவுபொருந்தாது அந்த மலையி னுடைய தன்மை. (எ-று) [3]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

தந்த விலங்கு மடங்கலரா சரபங்கரடி களைமுதலா
வெந்த விலங்கு மதிலுறையு மழியா மையினு லிராவணனூர்
வந்த விலங்கை நிகராகு நமனு டெனலாம் வன்கொலையா
லந்த விலங்க றனைக்காணி லெனக்கும் விலங்க லாய்விடுமே

(இ-ள்) கொம்புகளையுடைய யானைகளுஞ் சிங்கங்களும், பாம்புகளும், சரபமென்று முயர்வானபட்சிகளுங், கரடிகள்; புலிகள் முதலான வெப்பேர்ப் பட்ட மிருகங்களுமந்தவிந்த மலையிலிருக்கும். அவைகளுக்கழிவில்லாமை யினாலே யிராவணன் அரசாட்சி செய்து வந்த இலங்கைக் கொப்பாகும் (நம னுடைய பட்டணமென்றுஞ் சொல்லலாம்) (வலிமையான கொலையினாலே யந்த மலையைக்கண்டா லெனக்குங் கலங்கற் றன்மையாய்விடும் (எ-று) விலங் கலாய் விடுமென்பது - விலகிப்போம்படியாகும் என்று சொல்லலாம் [4]

ஷை வேறு

என்றுமறை நாரதனு முனிவனந்த மலையியல்பை யிறைஞ்சிக் கூற
நன்றுமுனி வானுரைக்கு மலையெழுச்சி யெனநகைத்து நவில்தான் யாமே
சென்றுமிகை தவிர்த்திடுவ தொன்றுதிரு மானடந்து சிதைக்கவேண்டு
மொன்றுதமிழ் முனியாலே யடக்குவதொன் றெனமுனிவர் குரைப்ப தானன்

(இ-ள்) இப்படியென்று வேதங்களை யுணர்ந்த நாரத முனிவன் அந்த விந்த மலையினுடைய தன்மையை வணங்கிச்சொல்ல அதைக்கேட்டு நன்று யிருக்கிறது அந்த நாரதமுனிவனுரைக்கு மலையினுடைய, எழும்புதலென்று நகைத்துச் சிவபெருமான், நவிலுகின்றார். நாமே சென்று அம்மலையினுடைய உயர்வைத்தவிர்ப்பதொன்று அல்லது விஷ்ணுவானவர் போயந்த மலையின்

கருவத்தை நீக்குவதொன்று அல்லது அகத்திய முனிவராலே யடக்குவ தொன்றென்று கூறி அந்த அகத்திய முனிவருக்கருளிச் செய்கின்றார் (எ-று)

முன்னமலை தனையடக்கு முனிவரனே நாரதமா முனிவ னின்று
சொன்னமலை தனையடக்கக் குறிஞ்சிநிலங் கடந்துமலர்ச் சுரிசங் கோடே
யன்னமலை வயற் பழனத் திருநாடு கடந்துதென்பா லடையா யென்றான்
மன்னமலை கேள்வனிவை யருளுதலும் பயந்துரைப்பான் மலயத் தோனே

(இ-ள்) முன்னாலே மலைகளையுடைய சமுத்திரத்தை உள்ளங்கையிலே யடக்கா நின்ற முனிவர்களின் சிரேஷ்டனே நாரதமகாமுனி வனிப்பொழுது சொல்லிய விந்தமலையைப் பூமியினுள்ளே யடக்க மலைகளையுடைய குறிஞ்சி நிலத்தைக் கடந்து, தாமரை மலர்களில் சுரிந்த சங்குகளுடனே யன்னங்கள் சஞ்சரிகின்ற வயல்களையுடைய மருத நிலத்தையுடைய அழகிய நாட்டை யுங்கடந்து தெற்குத் திசையிற் செல்லாயென்று சிவபெருமானருளுதலு மகத்திய முனிவர் பயந்து சொல்லுகின்றார் (எ-று) [6]

கலிநிலைத்துறை.

கான வாரிசப் பொகுட்டுறை கடவுளுங் கனகத்
தான வாரியும் வலாரியுந் தெளிகிலாத் தலைவா
ஞான வாரியி லமுதமே கருணைமா நதியே
வான நாடனே யுனைப்பிரிந் தெங்ஙனம் வாழ்வேன்

(இ-ள்) வாசனை பொருந்திய தாமரைப் பொகுட்டிலிருக்கின்ற பிரம தேவனும் இரணியனை வதைத்த விஷ்ணுவும வலாசுரனைக் கொன்ற இந்திர னுந் தெளியக்கூடாத, தலைவரே ஞானசமுத்திரத்திற்றோன்றிய வமுதமே பெருமை பொருந்திய கிருபாநதியே தெய்வலோகத்தையுடையவரே உம் மைப் பிரிந்து அடியேன் எங்ஙனம் வாழ்ந்திருப்பேனென்றகத்திய முனிவர் துதித்தார் (எ-று) [7]

செப்பு லாமுலை யுமையிட மருவிய தேனே
கைப்பி லாமது ரங்கொளா நந்தமாக் கனியே
தப்பி லாமறைப் பொருளினுக் களவிடாத் தனியே
யொப்பி லாநினைப் பிரிந்தியா னெங்ஙன முய்வேன்

(இ-ள்) பொற்செப்பை யொத்த தனங்களையுடைய உமாதேவியார் இடப்பாகத்திற் பொருந்திய தேனே கசப்பில்லாத மதுரத்தைக்கொண்ட ஆனந்தமாகிய பெருமை பொருந்திய கனியே குற்றமில்லாத வேதப்பொரு ளுக்கு மெட்டாத ஒப்பற்றவரே, யொப்பில்லாத உமமைப்பிரிந்து அடியேன் எங்ஙனம் பிழைப்பேனென்றாரகத்தியர் (எ-று) [8]

எண்பு யத்தினல் லழகுநின் றிருமுகத் தெழிலுங்
கண்க ளிற்பொழி கருணையு மிவரெலாங் காண
மண்கொ ளச்செறி வரையது பொருட்டினுன் மயங்கி
விண்பு லத்திடைச் செல்வதோ வெனச்சொலி வீழ்ந்தான்

(இ-ள்) எட்டுப் புயங்களையுடைய அழகும் உம்முடைய சிறந்த முகத்தி னெழிலுங் கண்களிலே பொழிகின்ற கருணையுந் தரிசியாமல் விட்டு இவர்க ளெல்லோருங்காண மண்ணுலகத்தை யிடமாகக்கொண்ட நெருங்கிய மலை யின்பொருட்டினுலே யடியேன் மயங்கி யாகாசத்தினிடமாகச் செல்வதோ வென்று சொல்லி சுவாமியினுடைய பாதத்திலே அகத்தியமுனிவர் விழுந்து நமஸ்காரஞ் செய்தார். (எ-று) [9]

அண்ண லிப்படி யிரங்கிய முனிவனுக் கருளி
யெண்ண முற்றில மலையினைப் பாதலத் திருத்தி
நண்ணி லப்புறந் திரிசிரா மலையத னடுவே
புண்ணி யத்தினுன் மலைக்கொழுந் தாயதிற் பொலிவோம்

(இ-ள்) அண்ணலாகிய சிவபெருமானிப்படிச் சஞ்சலப்படுகின்ற அகத் தியமுனிவருக்கனுக்கிரகித்து நீர் எண்ணத்தையடையவேண்டியதில்லை விந்த மலையைப் பாதாளத்திலடக்கிச் சென்றுல் புறத்திலே திரிசிராமலை விளங்கும். அதனடுவிலே நீர் செய்த புண்ணியத்தினுல் நாமலைகொழுந்தாகியதிலே பிரகாசிப்போம. (எ-று) [10]

விந்த மால்வரைத் தெக்கண திசையிலே விளங்கு
மந்த மால்வரைக் கொழுந்தரைச சிறிதுநா ளருச்சித்
தெந்த மால்வரைத் திரளினும் தவம்புரிந் திருக்குஞ்
சந்த னுசலத் திருக்கென விடைகொடுத் தனனே

(இ-ள்) பெரிய விந்தமலைக்குத் தெற்குத் திசையிலே விளங்குமந்தப பெருமைபொருந்திய மலைகொழுந்தரைச் சிறிதுநாள் நீர் அருச்சனை செய்து எப்பேர்ப்பட்ட பெரிய மலைக்கூட்டங்களினுமுயர்ந்து தவஞ்செய்திருக்கின்ற சந்தன விருட்சங்களையுடைய பொதியமலையிலேயிருமென்று சுவாமி விடை கொடுத்தருளினுர். (எ-று) [11]

விட்பு லங்களா லணுகியே விந்தமால் வரையைக்
கட்பு லங்களா லகத்திய முனிவனுங் கண்டா
னெட்ப குந்ததி னளவும்வெள் ளிடையிலா தெழுந்து
முட்பொ திந்திடு புதலினுற் செறிந்தது முழுதும்

(இ-ள்) அந்தப்பிரகாரஞ் சுவாமியிடத்தில கத்திய முனிவர் உத்திரவு பெற்றுக்கொண்டு ஆகாசமார்க்கமாகச் சென்று பெரிதாகிய விந்தமலையைக் கண்களினலே கண்டார். எள்ளினுடைய பிளவளவும் வெளியாகிய இடமில் லாமலுயர்ந்து முள்ளுகளாலே மூடப்பட்ட புதல்களினலம்மலை முழுது நெரு ங்கியிருந்தது. (எ-று) [12]

கலிநிலைத்துறை.

சீய மங்கதிற் கண்டு திரும்புவ
வாயி ரங்கதிர்ச் செல்வ னரும்பரி
பாயும் வெம்புலி கண்டிருட் பாலெழூந்
தூய திங்களின் மானுந் துளங்குமே

(இ-ள்) அந்தவிந்தமலையிலுள்ள சிங்கங்களைக்கண்டு ஆயிரங்கிரணங்கள் பொருந்திய சூரியனுடைய தேரிற் பூட்டிய அருமையான குதிரைகளானவை அம்மலையைக் கடந்து செல்லாமற்றிரும்புவன பாயப்பட்ட வெவ்விய புலியைக் கண்டு இருட்காலத்திலெழுகின்ற சுத்தமான சந்திரனிடத்திலுள்ள மானும் மனந்துளங்கும். (துளங்கும் - அஞ்சும்) (எ-று) [13]

குஞ்ச ரத்திற் குதிக்குங் கடாநதி
நஞ்சு கக்கு மரவொடு நண்ணிடும்
வஞ்சர் பெற்ற வளமென வேபிறர்
நெஞ்சி னுக்கும் புகாத நெறியதே

(இ-ள்) அம்மலையிலுள்ள யானைகளிடத்திலிருந்து குதித்துவரும்படி யான மதப்பிரவாகமானது நஞ்சைக் கக்குகின்ற மலைப்பாம்புகளுடனே பொருந்தும் வஞ்சமுடையவர்கள் பெற்ற செல்வத்தைப்போலப் பிறருடைய நெஞ்சுக்கும் நுழையாத வழியையுடையது அந்த விந்தமலை. (எ-று) வஞ்ச ருடைய செல்வம் நல்வழியறியாமலும் பிறர்க்குப் பயன்படாமலும் யிருப்பது போலம்மலையின் வழி பிறர் மனதாலுங் கருதியறியக்கூடாதென்பதாம். [14]

தாக்க ணங்குறை தாழ்வரை யுள்ளது
நோக்க ணங்கு பயிலு நுனியது
மாக்க ணங்கண் மயங்க நெடுங்கழை
தீக்க ணங்களைச் சிந்திடு தீயது

(இ-ள்) இலக்குமியானவ ளிருக்கின்ற தாழவரையுள்ளது பார்த்தால் அச்சத்தைக் கொடுக்கு நுணமையுடையது. விலங்கின் கூட்டஙகள் மயங் கும்படியாக நீண்ட மூங்கில்கள் நெருப்புக் கூட்டங்களைச் சிந்தப்பட்ட தீமை யையுடையது அந்த விந்தமலை. (எ-று.) அணங்கு-துன்பம் நுனி-உச்சி [15]

கற்பி லாதவர் கட்டழ கென்னவு
மற்பி லாவர சாள்பதி யென்னவு
மெற்பெ லாநிறை காடிது வென்னவும்
வெற்பெ யாவருங் காண வெறுப்பரே

(இ-ள்) பதிவிரதா தர்மமில்லாத பெண்களுடைய மிகுந்த சௌந்தரியம்போலவும் அன்பில்லாம லரசாளுகிற இராஜாவைப்போலவும் எலும்புகளாலே நிறையப்பட்ட சுடுகாட்டைப்போலவும் இராநின்ற அந்த விந்தமலையை எவருங் காண்பதற்கு வெறுப்படைந்து பயப்படுவார்கள் (எ-று) [16]

கருவி வான்முகி லார்ப்பன கார்வரை
பொருமி வாய்விட் டிரங்குதல் போன்றது
மருவு மாமுனிக் கஞ்சியம் மால்வரை
யருவி தானு மழுவது போலுமே

(இ-ள்) பூலோகத்திற்குத் துணைக்காரணமாகி யாகாயத்தி லிராநின்ற மேகங்கள் முழங்குவன அந்தக் கரிய விந்த மலையானது அகத்திய முனிவருக்குப் பயந்து வாய்விட்டிரங்குதலை யொத்தது. அந்தப் பெரிய மலையிலிருந்துவருகின்ற அருவியானது பொருந்தும்படி வருகின்ற அந்தப் பெருமை பொருந்திய முனிவருக் கஞ்சியழுவதையொத்தது. (எ-று.) [17]

நெய்கு லைத்தெனத் தேனொழு கின்றன
மெய்கு லைத்த வெயர்த்துளி போன்றன
மைகு லைத்த மரங்க ளசைவன
கைகு லைப்பன போன்றன கார்வரை

(இ-ள்) நெய் விழுது உருகியோடுவதுபோல மலைத்தேனானது ஒழுகுகின்றன. அது அம்மலையின் சரீரம் நடுங்கி வெயர்த்து அவ்வெயர்வையினுடைய நீர்த்துளிகள் சேர்ந்தொழுகுவதுபோலிருந்தன. மேக மண்டலத்தைக் குலைத் துயர்ந்திராநின்ற மரங்களசைவன அந்தக் கரிய மலையானது அகத்தியருக்குப் பயந்து கைகளையசைத்து நெரிப்பதுபோலிருந்தது (எ-று.)

வண்ண வெற்பின் மலர்சொரி யுங்கணி
நண்ணு தேற லொழுக்க நனைந்திட
லெண்ணு மிந்திரன் வச்சிர மெற்றிய
புண்ணி லெண்ணெய் பொழிவன போலுமே

(இ-ள்) அழகிய அந்த விந்தமலையினிடத்தே மலர்களைச் சொரிகின்ற வேங்கைமரத்திலுள்ள தேனும் கனிகளிற்பொருந்திய தேனும் ஒழுக்கெடுத்து

னைந்திடல் எண்ணுகின்ற விந்திரனுடைய வஜ்ஜிராயுதத்தினாலே முன்னா
ளில் மலைகளின் இறகையரிந்த புண்ணிலெண்ணையைப் பொழிவனபோலி
ருந்தது. (எ-று.) [19]

ஷை வேறு.

உருமின நிறைதலி னுரக மாமணி
சொரிதலி னலகைவாய் விளக்குத் தோன்றலின்
மருவிய விரவெரி மரங்க ளிற்செறிந்
திரவெனும் பெயருமவ் விடத்தி னில்லையே

(இ-ள்) மேகத்திற் றோன்றிய மின்னுடனே இடியின் கூட்டங்கள் நிறைதலினாலும் பாம்புகள் பெருமைபொருந்திய மணிகளைச் சொரிதலினா லும் கொள்ளிவாயலகையினுடைய விளக்குத் தோன்றலினாலும் பொருந்திய சோதி விருட்சங்கள் நெருங்கியிருத்தலினாலும் இராத்திரி என்கிற பெயர் அந்த விந்தமலையினிடத்தில்லை. (எ-று.) [20]

மலையது நெடுமுழை மருங்கெ லாஞ்சிறு
புலிகளுஞ் சீயமும் புயங்க ராசியுங்
கலைகளுங் கயங்களுந் துயிலுங் காலையி
னுலகினை யுண்டவ னுதரம் போலுமே

(இ-ள்) அந்த விந்தமலையினுடைய நீண்டிராநின்ற குகைகளின் பக்கங் களெல்லாஞ் சிறிய புலிகளுஞ், சிங்கங்களும், பாம்புகளின் கூட்டங்களும், யானைகளும் நித்திரை செய்யுங்காலத்தி லுலகத்தையுண்ட விஷ்ணுவினுடைய வயிற்றையொத்திருந்தது. (எ-று) [21]

நிறைதரு வேங்கையு நெடிய சந்தமு
மறுவற நிறைந்திரு மருங்குந் தோன்றுதல்
குருமுனி வருமெனக் குவடு முன்புபோற்
சிறைகளை விரித்தெழுஞ் செய்கை மானுமே

(இ-ள்) நிறைந்திராநின்ற வேங்கை விருட்சங்களும் நீண்டிருக்கின்ற சந்தன மரங்களும் குற்றமற நிறைந்து அம்மலையினுடைய இரண்டு பாரிசமுந் தோன்றுதல் அகத்திய முனிவர் வருவாரென்றஞ்சி அந்த விந்த மலையானது முன்புள்ளதுபோலச் சிறைகளை விரித்தெழுகின்ற செய்கையை யொத்திருந் தது. (எ-று.) [22]

புயற்றிகழ் வரைநடு முழையிற் பொங்கிய
வெயிற்றரு வுமிழ்மணி யிருளை நீக்குத

லுயர்ச்சியின் றடங்குமென் றுருகு மோங்கலின்
வயிற்றிடை கொளுத்திய வன்னி போலுமே

(இ-ள்) மேகங்களாலே விளங்காநின்ற அந்த விந்தமலையின் நடுவி லுள்ள குகையிலே மிகுந்த பல்லுகளையுடைய பாம்புகள் உமிழப்பட்ட மணி களானவை யிருளை நீக்கும்படி விளங்குதல் அகத்திய முனிவர் வருகின்றதினு லே யிப்பொழுது நமது உயர்ச்சியடங்கிப் போய்விடுமென்று மனமுருகுகின்ற அந்த மலையினுடைய வயிற்றிலே கொளுத்தப்பட்ட நெருப்பைப் போலி ருந்தது (எ-று) [23]

சித்திரப் பெருங்கழை திறந்து கண்களி
னித்தல மணிகளை நெடிது வீசுதன்
மெய்த்தமி ழகத்தியன் மேவு றுவகை
கைத்தல மெடுத்தெறி கற்கள் போலுமே

(இ-ள்) அழகுபொருந்தி யிருக்கின்ற பெரிதான மூங்கில்கள் வெடித் துக் கணுக்களினுலே முத்துக்களை நெடுந்தூரம் வீசுதல் மெய்மையாகிய தமி ழையுடைய அகத்திய முனிவர் தன்னிடத்தில் வராதபடிக்குக் கைகளாலே கல்லுகளையெடுத்து அம்மலையானது எறிகின்றதைப் போலுமிருந்தது. [24]

விஞ்சிய சிகரியின் முடியின் வெள்ளிய
மஞ்சினந் தவழுதல் குதிக்க மாமுனி
யஞ்சுவ னெனத்திரண் டமர ரானவர்
பஞ்சினை யமைத்திடும் பண்பு போலுமே

(இ-ள்) மேற்பட்டோங்கிய அந்த விந்தமலையானது சிகரத்தில் வெண் மையான மேகங்களின் கூட்டங்கள் தவழுதல் அகத்தியமாமுனிவர் அம்மலை யிற் குதிக்க அஞ்சுவாரென்று தேவர்கள் கூடி யிலவம் பஞ்சைப் பரப்பிவைத் திருக்கின்ற தன்மைபோலுமிருந்தது எ-று [25]

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அந்த மால்வரை யெந்த மால்வரை யான தோவென வையமுற்
றிந்த மால்வரை விந்த மால்வரை யென்று மாமுனி யெண்ணியே
தந்த மால்வரை யன்று ரித்தவர் தாளை நெஞ்சு தரித்துவெண்
சூந்த மால்வரை சூழு மவ்வரை யுச்சி மீது குதித்தனன்

(இ-ள்) அகத்திய மகா முனிவர் அந்தப் பெரிய மலையைப் பார்த்து இது எந்தப் பெரிய மலை இப்படியானதோவென்று சந்தேகமடைந்து பிறகு இந்தப் பெரிய மலையே விந்தமலை யென்று அந்த முனிவர் தெளிவா யெண் ணித் தந்தங்களையுடைய பெரிய மலைபோன்ற யானையையன் றுரித்தருளிய சிவ

பெருமானுடைய திருவடிகளை மனதிலே தியானித்து வெண்மையான குருந்த மரங்களும் பெரிய மூங்கில்களுஞ் சூழும்படியான அந்த விந்தமலையி னுச்சியின்மேலே யகத்தியர் குதித்தார் (எ-று.) [26]

ஆர மான வெயிற்றி னார்தன பார மான தழுந்தியே
மார வேளை நிகர்த்த காதலர் மார்பின் மீது புதைந்தது
மீர மானநி லத்தி லேமுளை யெய்தி யிட்டது மென்னவே
பார மாமரு விப்பெ ருங்கிரி பாத லத்திடை புக்கதே

(இ-ள்) முத்துக்களைப்போலப் பல்லுகள் விளங்காநின்ற பெண்களுடைய ஸ்தன' பாரமானது அழுத்தி மன்மதனுக்குச் சமானமாகிய தங்கள் நாயகர்களின் மார்பின்மேலே யடங்கிப் புதைந்ததுபோலவும் ஈரமுள்ள நிலத்திலே இருப்பு முளை வெகு லேசாயிறங்குவதுபோலவும் பாரமான அருவிகளையுடைய பெரிய மலையானது பூமிக்குள்ளே யழுந்திப் பாதாளத்திற் புகுந்தது. (எ-று.) [27]

அந்த கந்த னிளைப்பி னோடெழு பாத லத்தி னழுந்தியும்
பன்ன கந்த னிளைப்பொ ழிப்பது போல நின்றது பார்சுமந்
தின்ன லுற்றவவ் விந்த மால்வரை யொன்று கூறிடு மெந்தையே
யென்ன குற்றமு னக்கி ழைத்தன னென்ன தீமை யிழைத்தனன்

(இ-ள்) அந்த விந்தமலையானது அகததியமகாமுனிவருடைய பாதத்தினாலே மிதிக்கப்பட்ட இளைப்புடனே யாறுலோகங்களையுங்கடந்து அப்பால் ஏழாவதான பாதாளததிலழுந்தியும் பூமியைத்தாஙகுகின்ற ஆதிசேடனுடைய இளைப்பையொழிததுப் பூமியைச் சுமந்து நிற்பதுபோலுயர்நது நின்று அந்த அகத்தியமுனிவரைப் பார்த்துத் துன்பத்தையடைந்த அந்த விந்தமலையானது எனது பிதாவேயுமக்கு நானென்ன குற்றஞ் செய்தேனென்ன தீமை செய்தேனென்று கூறிற்று. (எ-று) [28]

வினைசெய் வில்வலன் றம்பி யானலன் வேலை வாரியும் யானலன்
முனிவு செய்திடு நகுடன் யானலன் முனிவ தேதெனை முனிவனே
யனக னேயினி யான்வ ளர்ந்திடு காலம் யாதென வருள்செய்வான்
கனக மேருவின் மீள யான்வரு கால நீவளர் காலமே

(இ-ள்) மாசில்லாத மகாமுனிவரே. உமக்குத் தீவினைகளைச் செய்த வில்வலன்றம்பியானல்ல, சமுத்திரமும் யானல்ல, கோபத்தைச் செய்த நகுடனும் யானல்ல, ஆதலால் என்னைக் கோபஞ்செய்த காரணம் யாது, யினி யான் வளர்ந்திருக்குங்காலம் யாதெனறு இம்மலை கேட்கப், பொன்மயமான

மேருவினிடத்து யான் மீளவருங்காலத்திலே நீ வளர்கின்ற காலமாகுமென்று அகத்தியமகாமுனிவர் விந்தகிரிக்கு அருளிச் செய்தார் (எ-று) [29]

என்று மாமுனி சென்ற போதெதிர் திரிசி ராமலை யிணையதாங்
குன்று மேற்றிசை யொன்று நின்றது கண்டு நெஞ்சு கொதித்தெழுந்
தின்று நாமிது வென்று போதுவ மென்று தாளி லடக்கினு
னன்றி ராவணன் பாத லத்தி னடங்கு மாறென லானதே

(இ-ள்) இப்படியென்று அகத்தியமாமுனிவர் விந்தகிரிக்கு அருளிச்செய்து தெற்குத்திசை நோக்கிச் சென்றபோது அவருக்கெதிரே திரிசிராமலைபோப்பாகவொரு மலையானது மேற்குத்திசையிலே நின்றதைக்கண்டு மனதிற் கோபமுண்டாகி யெழுந்து இன்றைக்கு நாமிந்த மலையையும் பூமியிலேயடக்கி வெற்றிகொண்டு போவோமென்று தமது பாதங்களினாலே பூமியிற் புதைந்துபோகும்படி யடக்கினர். அக்காலத்திலே சிவபெருமானுடைய திருவடிப் பெருவிரலினாலே இராவணனானவன் பாதாளத்திலடங்கிய விதத்தைப்போலந்த மலையுமடங்கிற்று. (எ-று) [30]

வட்ட மாகிய நேரி மாமலை பாத லத்தின் மறைந்தபின்
றுட்ட ராமவர் சென்ற பின்பு துலங்கு மேலவ ரெனனவுங்
கொட்ட மார்கலி போன பின்பு கொழிக்கு நல்லற மென்னவு
மட்டு வார்குழல் பாக னார்திரு மலைவி ளங்கி வளர்ந்ததே

(இ-ள்) வட்டமாயிராநின்ற அந்த நேரிமாமலையானது பாதாளத்திலே மறைந்தபின்பு துஷ்டராயுள்ளவர்களிறந்தபிறகு விளங்காநின்ற மேலோர்களைப்போலவும், துன்பத்தைச் செய்கின்ற பாவமானது போனதின்பின்பு செழிக்கும்படியான நல்ல புண்ணியத்தைப்போலவும், மட்டுவார் குழற்பிராட்டியாரை யிடதுபாகத்தில் வைத்தருளிய சிவபெருமானார் எழுந்தருளியிருக்கின்ற அழகிய மலையானது விளங்கி வளர்ந்தது. (எ-று) [31]

கலிவிருத்தம்.

விண்ணவர் பரவுமவ் விலங்கன் மீதிலே
வண்ணமென் கவரிமா மகிழ்ந்து லாவுதல்
புண்ணிய வரையர மகளிர் புஞ்சமா
யெண்ணருந் திருவல கிடுதல் போலுமே

(இ-ள்) தேவர்களாலே வணங்கப்படுகின்ற திரிசிராமலையின்மேலே அழகிய மிருதுவான கவரிமான் மிருகங்களானவை மகிழ்ச்சியுடனே சஞ்சரித்தல் புண்ணியம்பொருந்தியவரை யரமகளிர்கள், திரட்சியாயளவற்ற திருவலகிடுதல் போலுமிருந்தன. (எ-று) புஞ்சம் - திரட்சி. திருவலகிடுதல் - குப்பையில்லாமற் சுத்தஞ் செய்தல். [32]

நீலவட் டச்சிறை விரித்து நீண்மயி
லோலவட் டப்புய லுவந்து லாவுதன்
மாலைவட் டத்தன வரைய ரம்பைய
ராலவட் டங்கள்கொண் டணைதல் போலுமே

(இ-ள்) நீலநிறமுள்ள வட்டமாகிய சிறையை விரித்துப் பெரிய மயில்கள் வோலமென்னு முழக்கத்துடனே வட்டமிட்டு ஆகாயத்திலெழாநின்ற மேகங்களைக்கண்டு மகிழ்ந்து சஞ்சரித்தல், இரத்நமாலையையணிந்தவட்டமான தனங்களையுடைய வரை யரமகளிர், ஆலவட்டங்களைக்கொண்டு பொருந்தியது போலுமிருந்தன அம்மலையில். (எ-று) [33]

தோமறு சுரும்பினங் குடையத் தாளெழுந்
தாமரை யலர்சுனைத் தடத்திற் றோன்றுதன்
மாமைகொ ணீரர மகளிர் பற்றிய
காமரு தூமமென் கலசம் போலுமே

(இ-ள்) குற்றமில்லாத வண்டுகளின் கூட்டங்கள், மலர்களைக் குடைதலினாலுண்டாகுந் தாள்களெழுகின்ற தாமரை மலர்கள் சுனைத் தடத்திலே தோன்றுதல், அழகுபொருந்திய நீரீமகளிரால் பிடிக்கப்பட்ட ஆசையையுடைய மிருதுவான தூம கலசங்கள்போலுமிருந்தன. (எ-று) தூமகலசமென்பது வாசனைப்புகையுள்ள கலயம். [34]

ஷை வேறு

சென்று கானவ ரிட்ட தினைகளுந்
துன்று நீள்கழை தூவிய முத்தமு
முன்றி லைவன ராசிமு கிழ்த்ததுங்
குன்றின் மேலெழு குன்றென வானவே

(இ-ள்) புனத்திற்சென்று வேடர்களாலே விதைக்கப்பட்ட தினைகளும், நெருங்கி நீண்டிராநின்ற மூங்கில்களாலே தூவப்பட்ட முத்துகளும், குறவருடைய முற்றத்தில் மலைநெல்லுகள் கூட்டங்களாயிருங்கிற குவியல்களும் கூடி மலையின்மேலெழுந்த மலையைப்போலாயின அத்திரிசிராமலையில் (எ-று) [35]

வண்டு சூழ மணிச்சிறு பாறையில்
விண்ட கொங்கலர் மென்கனி வீழ்தலிற்
கொண்டன் மின்னனை யார்குழற் கொண்டையின்
மண்டு செம்பொன் மணியணி மானுமே

(இ-ள்) வண்டுகள் சூழும்படியாகச் சிறிய மாணிக்க இரத்நப்பாறையிலே மலர்ந்த கோங்கமப் பூக்களும் மெல்லிய கனிகளும் வீழ்ந்திருத்தல், மேகத்திற்றோன்றிய மின்னைபொத்த மாதர்களுடைய கூந்தலென்றுங்கொண்டையினிடத்திலே நெருங்கிய செம்பொன்னாற் செய்து மணிகள் பதித்த ஆபரணத்தையொத்திருந்தது. (எ-று) [36]

வேறு.

மரகதப் பாறைமேல் வயங்கு மாசுணஞ்
சொரிதரு பலமணி சுடரை வீசுதல்
புரையறு பாசடை பொதிந்த பொய்கையி
லரியுண மலர்ந்தசெவ் வாம்பல் போலுமே

(இ-ள்) மரகதவிரத்நப் பாறையின்மேல் விளங்காநின்ற நாகங்கள் சொரியப்பட்ட பலமணிகள் பிரகாசத்தை வீசுதல், குற்றமில்லாத பசிய இலைகள் நிறைந்த பொய்கையில், வண்டுகள் உண்ணும்படி மலர்ந்த செவ்வாம்பலைப் போலிருந்தன. (எ-று) மரகதப்பாறையைப்போலப் பாசடைப்பொய்கை, அப்பாறைமேல் விளங்கிய நாகரத்நப் பிரகாசத்தைப்போலச் செவ்வாம்பன் மலர். [37[

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வடத்திலே துயிலுமவன் காணாத சிராமலையை வலங்கொண் டேத்திக்
குடத்திலே வந்தமுனி தடத்திலே மூழ்கியிறை கோயின் மேவி
யிடத்திலே யுறையுமுமை யவள்பூசை யிறைபூசை யியற்றி யேத்த
நடத்திலே மகிழ்ந்தபிரான் முனிக்கெதிரே விடையின்மிசை நண்ணி னானே

(இ-ள்) ஆலிலையிலே நித்திரை செய்கின்ற விஷ்ணுவினாலே காணப்படாத, திரிசிராமலையைப் பிரதட்சணம்வந்து துதிசெய்து குடத்திலே தோன்றிய அகத்தியமகாமுனிவர் சிவதடத்திலே முழுகிச் சிவபெருமானெழுந்தருளியிருக்கின்ற ஆலயத்தையடைந்து இடப்பாகத்திலே வசிதநிராநின்ற உமாதேவியாகிய மட்டுவார்குழலம்மையும் பூசித்து இறைவனாகிய சிராமலை நாதரையும் பூசைசெய்து தோத்திரஞ்செய்ய நடனத்திலே மகிழ்ந்த சிவபெருமான் அந்த முனிவருக்கெதிரே யிடபத்தின்மேலெழுந்தருளி வந்தார். (எ-று)

இடபமிசை வந்தவனைக் கும்பமிசை வந்தமுனி யிறைஞ்சி யேத்தி
யடிபரவி நெடுமீனக் கொடியானை யெரித்தவிழி யானே போற்றி
மடலவிழுங் கரியகுழல் கன்னியொரு பாலிருக்கு மணியே போற்றி
பொடியணியுந் திருத்தோளிற் சிங்கவுரி புனைந்தபரம் பொருளே போற்றி.

(இ-ள்) இடபதேவரின்மேலெழுந்தருளிவந்த சிராமலைநாதரைக் குடத்திற் பிறந்துவந்த அகத்திய மகாமுனிவர் வணங்கி யேத்தித் திருவடிகளிலே நமஸ்கரித்து நீண்டிராநின்ற மீனக் கொடியையுடைய மன்மதனையெரித்த

விழியையுடையவனே வந்தனம். இதழ்கள் விரிந்த மலர்களையணிந்த கருமையான கூந்தலையுடைய உமாதேவியார் ஒருபக்கத்திலிருக்கின்ற மாணிக்க மணியே வந்தனம். திருநீறணிகின்ற அழகிய தோளிலே சிங்கத்தோலையணிந்தருளிய பரம்பொருளே வந்தனம். (எ-று.) [39]

கலிநிலைத்துறை

நீல கந்தரா போற்றியென் றிறைஞ்சினு னிமலன்
சால நாம்வரந் தருகுவோ முரையெனத் தவத்தோ
ஞல மர்ந்தநீ தோன்றிய தொன்றுமே யமையும்
பாலி னுண்டபேர் வேறுமோ ருணவினைப் பாரார்.

(இ-ள்) நீல நிறமான கண்டத்தையுடையவரே வந்தனமென்றகத்திய முனிவர் வணங்கினார். அதற்கு நிமலனாகிய சிராமலைநாதர் மகிழ்ந்து மிகுதியாக நாம் வரத்தைத் தருகுவோஞ் சொல்வாயென் றருளிச்செய்ய அம்முனிவர் வடவாலவிருட்சந்தமர்ந்தருளிய நீர் பிரசன்னமாகத் தோன்றியதொன்றுமே போதும். காமதேனுவின் பாலை யுண்டபேர் மற்றொருண்டியைப் பாராரென் றகத்தியர் சொன்னார். (எ-று.) [40]

இத்த லத்தினி லனுதின மிடைவிடா திருந்து
பத்தி யிற்புரி பூசையின் பலத்தினைப் பலிப்பா
யெத்த லத்திலே யிருந்தவ ருனைநினைத் திடினு
முத்த ராம்வர முதவுவா யென்னவு மொழிந்தான்.

(இ-ள்) திரிசிராமலை யென்கிற இந்தத் தலத்திலே யெப்பொழுது மிடைவிடாமலிருந்து பத்தியினாலே செய்கின்ற பூசையினுடைய பலத்தை யனுக்கிரகிப்பீர் எந்தத் தலத்திலேயாவது இருந்தவர்கள் உம்மை நினைத்தாலு மவர்கள் முத்தர்களாகும் வரத்தையு முதவவேண்டுமென்று அகத்திய மகா முனிவர் மொழிந்தார். (எ-று.) [41]

வரமி யாவையு மப்படி யருளியே மறைந்தான்
பிரம ஞரண னறிவுரு தொருதழற் பிழம்பாம்
பரம காரணன் மறைதலு மலைவலம் பண்ணி
யரன தாணையாற் பொதியமால் வரைமிசை யமர்ந்தான்

(இ-ள்) வரங்களெல்லாவற்றையு மந்தப்படி யருளிச்செய்து பிரமதேவனாலும் நாரணனாலும் அறியப்படமாலொபபற்ற அக்கினி மலையாகிய காரணரான சிவபெருமானார் அந்தர்க்கதமாகி மறைந்தார். அப்படி மறைந்தவுடனே திரிசிராமலையைப் பிரதட்சணஞ்செய்து சிவபெருமானுடைய கட்டளைப்பிரகாரம் பெருமைபொருந்திய பொதியமலையின்மே லகத்தியமாமுனிவ ரமர்ந்திருந்தார். (எ-று.) [42]

ஒருமலைத்தலை யிறுங்கிமற் றொருமலை யுடையப்
பொருது மற்றொரு மலைதனை வணங்கிநீள் பொதிய
மருமலைத்தலை யமர்ந்திடுஞ் செயலெலாம் வகுத்தாம்
பொருமலைச்சிற கரிந்தவன் கதையினைப் புகல்வாம்.

(இ-ள்) ஒருமலையாகிய விந்தகிரியினுடைய தலையிலே யிறங்கியதைப் பூமியினுள்ளே யடங்கும்படி புதைத்து மற்றொன்றாகிய மேருமலையினுருவ முடையும்படி வெற்றிகொண்டு மற்றொரு மலையாகிய திரிசிரா மலையை வணங்கி உயர்ந்திராநின்ற சந்தன மரங்களின் வாசனைபொருந்திய பொதிய மலையினிடத்தே யகத்திய மகாமுனிவர் அமர்ந்திருந்திடும் வரலாறுகளையெல்லாம் முனிவர்களே வகுத்துச் சொன்னோம் இனிப் பொருந்திய மலைகளின் சிறகையரிந்த இந்திரனுடைய கதையையுஞ் சொல்லுவோமென்று சௌநக முனிவர் கூறினர். (எ-று) [43]

அகத்தியச் சருக்கம்.

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 3-க்கு திருவிருத்தம் 153.

---

உ

நான்காவது

# இந்திரச் சருக்கம்.

---

கலிநிலைத்துறை

முன்னர் நாளிலே யுளனொரு தானவர் முதல்வ
னன்ன வன்பெயர் நினைக்கினு முலகெலா மழியுஞ்
சின்ன பின்னமாய்ப் பொடிபடு மவன்பெயர் செம்பன்
பொன்ன கந்தனைத் திருப்புவன் கதையினாற் புடைத்து

(இ-ள்) முன்னாளிலே தானவர்களுக்கெல்லாம் அரசனுமொருவனுண் டாயிருந்தான். அப்பேர்ப் பட்டவனுடைய பெயரை நினைத்தாலு முலகங்க ளெல்லாமழிந்து சின்ன பின்னமாகிப் பொடி பட்டுப்போகும். அவன் செம்ப னென்றும் பெயருடையவன். மகாமேருவைக் கதையினாலே யடித்துத் திருப் பும்படியான வலியுள்ளவன் (எ-று) [1]

எழு வாரியும் கடப்பனேழ் தலத்தையு மெடுப்ப
னேழு பாதலங் களினுமுட் புகுதுவ னிரவி
யேழு மாவணி யிரதமேற் றிரிகுவ னெங்கு
மேழு நாகமு மேழுமே கங்களு மெடுப்பன்.

(இ-ள்) சப்த சமுத்திரத்தையுங் கடக்கப்பட்டவன். சப்த லோகங்களையுமெடுக்கப்பட்டவன். பாதாளலோக மேழினுள்ளும் புகுதப்பட்டவன் சூரியனுடைய வேழு குதிரைகள் பூண்ட வழகிய விரதத்தின் மேலேறி யெங்குந்திரியப்பட்டவன். எழு மலைகளையு மேழுமேகங்களையு மெடுக்கப்பட்டவன். அந்தச் செம்பனென்றுந் தானவஅரசன் (எ-று) [2]

வாயு வானவன் விழியிலே வருணனை வகுப்பன்
றேயு வானனந் தன்னிலே பவனனைச் செறிப்ப
னாயி ரங்கணன் மனத்திலே கனலினை யடைப்பன்
பாயு மூவிலைச் சூலமென் மறலியைப் பதிப்பன்

(இ-ள்) வாயுவினுடைய கண்களிலே வருணனை வகுக்கப்பட்டவன் அக்கினியினுடைய முகத்திலே காற்றினை நெருங்கி யிருக்கும்படி செய்வான். தெய்வேந்திரனு டைய மனத்திலே நெருப்பையடைத்து வைப்பான். பாயும்படியான மூன்றிலைபோன்ற சூலத்தின்மேலே கூற்றுவனைப் பதிந்திருக்கும்படிசெய்வான் (எ-று) [3]

ஈம வங்கியி னிணத்தினை நறுநெயா விறைத்துத்
தாம மானிடர் குடர்களைத் தருப்பையாச் சமைத்து
நாம வென்பினை யிந்தனத் தொகையதா நாட்டி
யோம வேள்விமுன் மடந்தையர் தமைவரைந் துவப்பன்

(இ-ள்) சுடுகாட்டிலுள்ள நெருப்பினாலே வேகப்பட்ட பிணங்களினுடைய நிணத்தை நல்ல நெய்யாகவேஅ மாக்கினியிலே ஆகுதியாயிறைத்து மாலைகளணிந்திரா நின்ற மானிடர்களுடைய குடல்களைத் தருப்பையாக அமைத்து அச்சமுள்ள வெலும்பை விறகுகளின் கூட்டங்களாக நாட்டியோம குண்டத்தையுடைய வேள்வியின் முன்னே மாதர்களை விவாகஞ்செய்து மகிழ்வான் (எ-று) [4]

வெருவி லங்கவன் வேட்டையில் வதைத்திடும் விலங்கைப்
பொருவி றேவர்தம் முடிமிசை யெடுப்பது பொருந்தா
னிருடி மார்கண்மேற் சுமத்துவ னேதினு மென்னின்
மருவு மங்கவர் சடிலமே சுமடதாம் வழக்கால்

(இ-ள்) அச்சமில்லாத அந்தச் செம்பனென்றுந் தானவர்களுடைய அரசன் வேட்டையிலே வதைக்கப்படும் விலங்குகளை யொப்பில்லாத தேவர்களுடைய முடிகளின்மேலே யெடுப்பதற்குப் பொருந்தாமல் இருடிகளுடைய தலையின்மேலே சுமையா யெடுக்கும்படி சுமத்துவனே திறலென்றால் பொருந்திய அவர்கள் சடையே சும்மாடாகின்ற வழக்கினால் (எ-று) [5]

செம்ப னென்பவன் கொடுமையை யிமையவர் திரண்டு
கும்ப மால்வரை யிந்திரன் றன்னொடு கூற
வம்ப ருமலர்த் தருநிழற் பொருந்திய மகவா
னம்பு ராசியிற் றுயில்பவற் கவையெலா மறைந்தான்

(இ-ள்) அப்பேர்ப்பட்ட செம்பனென்பவனுடைய கொடுமையான செய்கையைத் தேவர்கள்கூடி மஸ்தகம்பொருந்திய பெரிய மலைபோன்ற ஐராவதமென்னும் வெள்ளை யானையையுடைய இந்திரனோடு சொல்ல வாசனை நீங்காத மலர்களையுடைய கற்பகத் தருவினிழலிற் பொருந்திய அந்த இந்திரனவன் பாற்கடலிலே நித்திரை செய்கின்ற விஷ்ணுவினிடத்திலவைகளெல்லாஞ் சொன்னான் (எ-று) [6]

இந்த வாசகங் கேட்டலு நெடியவ னிசைப்பான்
சிந்தி யாதுசெல் படைத்துணை யாகயாஞ் செல்வா
முந்தி யேகென வுரைத்தனன் புகர்ப்புழை முகத்துத்
தந்தி வாகனத் தேறினான் சதமகன் சமர்க்கு

(இ-ள்) இந்திரன் சொல்லிய இநத வார்த்தையைக் கேட்டளவில் சிந்தியாமற்படிக்கு நீபோ உனக்குப் படைத்துணையாக நாம் வருகிறோம் முன்னே யேகென்று அந்த இந்திரனுக்கு நாரணன் சொன்னான். புள்ளிகளுந் துவாரமும் பொருந்திய முகத்தையுடைய யானையின் (வாகனத்தின்) பேரிலிந்திரனேறினான் சண்டைக்காக எ-று [7]

போத காதிக ளுடனிவ னெழுந்தனன் பொருதற்
கோதி னானவன் வரவெலா மவுணனுக் கொற்றர்
தீது காலமே யிவர்க்கெனக் கனன்றுகண் சிவந்து
யாது தானவர் தானவர் கணத்தொடு மெழுந்தான்

(இ-ள்) யானைகள் முதலிய சேனைகளுடனே யிந்திரன்போர் செய்கிறதற்கு எழுந்தானென்று அவன் வரவையெல்லாம் செம்பனென்கிற அவுணனுக்கு வொற்றர் சொன்னார்கள் அதைக் கேட்டுத் தீதாகிய காலமே யிந்தத் தேவர்களுக்கென்று கோபித்துக் கண் சிவந்து அத்தேவர்கள் நமக்கெவ்வளவென்று லேசாயெண்ணி தானவர் கூட்டங்களோடுஞ் சண்டைக்கெழுந்தான் (எ-று) [8]

குந்த மூவிலைச் சூலம்வா டோமரங் குனிவில்
பந்தி யாகவே நடந்தன தொடர்ந்தன பரித்தேர்
தந்தி யாதிக ணெருங்கின பதாகையின் சால
நந்து காகள முரசுவான் முழவிவை நரன்ற.

(இ-ள்) கைவேலும் மூன்றிலைபோன்ற சூலாயுதமும், வாளாயுதமும் தோமரமும், வளைக்கப்பட்ட வில்லும் ஆகிய இவைகளுடனே சேனைகள் வரிசையாகவே நடந்தன. குதிரைகள் கட்டியதேர்களுந் தொடர்ந்தன. யானைகள் முதலிய படைகளும் நெருங்கின. கொடிகளின் கூட்டங்களுஞ் சங்கங்களும் காகளமும் முரசும், பெரிய பேரிகையுமாகிய இந்த வாத்தியங்களெல்லாம் கோஷித்தன (எ-று) [9]

கடலி ரண்டுபோ லிருவர்தம் படைகளுங் கலந்த
புடவி நீடுயிர்ப் பொழுதுக ளெனத்துகள் பொலிந்த
வடலை யாயின வுலகமற் றமரரு மங்கைப்
படையெ லாமிழந் தேகினு ரிந்திரன் பார்த்தான்.

(இ-ள்) இரண்டு கடலைப்போல் அவ்விருவர்களுடைய சேனைகளுங் கலந்து சண்டை செய்தன. அப்பொழுது பூமியுமதிலுள்ள பெரியவுயிர்களும் புழுதியைப்போலக் குற்றம்பொருந்தி விளங்கின. உலகங்களுஞ் சாம்பலாயின. தேவர்களும் அழுகி, கையிலுள்ள ஆயுதங்களெல்லா மிழந்துபோனார்கள். அதை இந்திரனனவன் பார்த்தான் (எ-று) [10]

வான வர்க்கிறை வச்சிர மாகிய மலையைத்
தான வக்கட லளறுபட் டலைவுறச் சலித்தா
னுன வக்கடல் கொடுத்தது நிணப்பெய ரமிர்தஞ்
சேன மற்றுள வலகையா மிமையவர் தெவிட்ட.

(இ-ள்) தேவர்களுக் கிறைவனாகிய இந்திரனனவன் வச்சிராயுதமாகிய மலையைக் கொண்டு தானவர்களாகிய கடலைச் சேறுபட்டலையும்படியாகக் கடைந்தான். அப்படியான வந்தக்கடலானது நிணமென்னும் பெயரையுடைய வமிர்தத்தைப் பருந்துகளும் மற்றுள்ள பசாசுகளுமாகியதேவர்கள் தெவிட்டியுண்ணும்படியாகக் கொடுத்தது (எ-று) [11]

செம்ப னென்பவ னும்பர்கோன் களிற்றெதிர் திரும்பிக்
கம்ப மால்களிற் றுச்சிமேற் புடைத்தனன் கதையா
லம்பு ராசிநேர் கருநிறத் தவுணன்மே லாக
வும்பர் நாயக னழுத்தினுன் வச்சிரா யுதமே.

(இ-ள்) செம்பனென்பவன் தேவேந்திரனுடைய யானையினெதிரே திரும்பிக் கம்பத்திற்பொருந்திய வந்தப் பெரியயானையினது உச்சியின்மேலே கதாயுதத்தினாலே அடித்தான். கருங்கடலையொத்த கருமையான நிறத்தையுடைய அந்தச்செம்பனென்னுமவுணன் மேலே தேவேந்திரன் வச்சிராயுதத்தினாலழுத்தினான் (எ-று) (12

வச்சி ரத்தினைப் பறித்தெறிந் தெழுந்தெதிர் மலைந்து
முச்சி ரத்துவே லெறிந்தன னிந்திரன் முகத்தின்
மெய்ச்சி ரத்தினிற் கதையினாற் புடைத்தனன் விழுந்தான்
பச்சி ரத்தமேற் பறந்தன சிவந்தன பரவை.

(இ-ள்) அப்படி யழுத்திய வச்சிராயுதத்தை அந்தச் செம்பனென்பவன் பறித்தெறிந்து எழுந்து இந்திரனெதிரே போர்செய்து முத்தலைபொருந்திய வேலாயுதத்தை இந்திரனுடைய முகத்திலெறிந்து சரீரத்திலும் தலையிலுங் கதையினாலே யடித்தானிந்திரனும் விழுந்தான். பசிய இரத்தமும பூமியின்மேலே பரந்தன. அதினாலே கடலுஞ் சிவந்தன (எ-று) [13]

அச்ச மாகிய விந்திரன் றுயரெலா மகற்றிப்
பச்சை மாயனும் படைகளும் வரங்களும் பலித்தான்
வச்சி ராயுதன் செம்பனை வருகென மலைந்திட்
டுச்சி வேறறப் பறித்துவெம் பகையெலா மொழித்தான்.

(இ-ள்) அப்படி யச்சத்தை யடைந்தவனாகிய விந்திரனுடைய துயரங்களை யெல்லாம் பச்சை நிறத்தையுடைய விஷ்ணுவும் வந்து நீக்கி ஆயுதங்களும் வரங்களும் பலிக்கும்படி கொடுத்தார். அவைகளைப் பெற்றுக்கொண்டு வச்சிராயுதத்தையுடைய விந்திரன் செம்பனென்றுந் தானவ வேந்தனை வரும்படியழைத்துப் போர்செய்து அவனுடைய உச்சியின்வேர் அறும்படிபறித்து வெவ்விதாகிய பகைகளெல்லா மொழித்தான் (எ-று) [14]

கலிவிருத்தம்

தானவ ரெனுங்களை தவிர்ந்து போனபின்
வானவ ரெனும்பயிர் வளர்ச்சி யாகிய
வூனமி லிந்திரற் குள்ள மீதிலே
ஞானமங் கதுமுதற் பதிக்கு காணியே.

(இ-ள்) தானவரென்னுங்களை நீங்கிப் போனபின்பு தேவர்களென்றும் பயிர் வளர்ந்தோங்கியது. குற்றமில்லாத இந்திரனுக்கு மனதிலே செம்ப

னைக்கொன்ற முதன்மையான பழிக்குநாணி ஞானமானது வந்து பொருந்தியது (எ-று) [15]

வாசவ னிப்படி வருந்து நாளிலே
தேசிகன் குறுகியோர் தெளிவு கூறுவா
னாசமி றெக்கண கயிலை நாதனைப்
பூசனை புரியிவை பொடிபட் டேகுமே

(இ-ள்) இப்படிச் செம்பனைக் கொன்ற பழிக்கு நாணி ஞானம் வந்து இந்திரன் வருந்துகின்றகாலத்திலே யவனுடைய ஆசாரியன் வந்து நாசமில்லாத தெக்கண கயிலையிலெழுந்தருளிய சிவபெருமானை வந்தித்துப் பூசனையைச் செய் இவைகள் பொடிபட்டுப் போயவிடுமென்று இந்திரனுக்குத் தெளிவு பொருந்தும்படி சொன்னான். (எ-று.) [16]

அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

என்று மொழிந்தா னிந்திர னுமிமையோர் குருவின்மெய்மொழியாற்
சென்று கயிலைச் சிவதடத்திற் படிந்தா னிறையைச் சேவித்தான்
குன்றி னிகராய் வருவினையுங் குன்றி யெனவே குன்றியதா
லன்று தலாத் துயர்களைதல் பொன்போ லிலையென் றறிந்தனமே

(இ-ள்) இப்படியென்று கூறிய தேவர்களின் குருவினது மெய்மையாகிய சொல்லினாலே தேவேந்திரனுஞ் சென்று தெட்சண கயிலைச் சிவதடத்திலே முழுகியந்தத் தெட்சண கயிலைநாதனைச் சேவித்தான் மலையைப் போல வந்த வினையுங் குன்றுமணியைப்போலக் குறைந்தது ஆதலால் அன்று முதலாகத் துன்பத்தை நீக்குதலில் பொன்போன்ற இந்தத்தலமன்றி வேறில்லையென்று யாம் அறிந்தோமென்று தேவர்களு மிந்திரனுங் கூறினர். (என்றவாறு.) [17]

கலிவிருத்தம்

துள்ளிய செம்பனைத் தொலைத்த வான்பழி
தள்ளுவான் பொன்னுரைத் திட்ட தன்மையால்
வள்ளலைத் திரிசிரா மலையிற் போற்றினான்
வெள்ளிவெண் கயிலையான் விடையிற் றோன்றினான்

(இ-ள்) அடங்காமலெழுந்து துள்ளிய செம்பனென்பவனைக் கொன்ற பழியை நீக்கும்பொருட்டுப் பொன்னையுரைத்து அறிந்த தன்மையைப்போல வள்ளலாகிய சிவபெருமானைத் திரிசிராமலையிலே வந்தித்து இந்திரன் வணங்கித் துதிசெய்தான், அப்பொழுது வெண்மையான வெள்ளிமயமுள்ள கயிலையி

லெழுந்தருளிய சிவபெருமான் இடபவாகனத்திலவனெதிரே தோன்றினுர். (என்றவாறு.) [18]

பொரும்பழி நீக்கினேம் வினையும் போக்கினேம்
விரும்பிய தளித்திட விளம்பு கென்றன
னிரங்கியிம் மலைதொழு மெவர்க்கு மக்கணத்
தரந்தையும் பாவமு மகல வேண்டுமே

(இ-ள்) செம்பனென்பவனைப் போரிற் கொன்ற பழியை நீக்கினேம். உன்னுடைய தீவினையையும் போக்கினேம். நீ விரும்பப்பட்டதை நாம் கொடுக்கிறேம் சொல்வாயென்று சிவபெருமானருளிச்செய்தார். அன்புட னிரங்கி யிம்மலையைத் தொழுகின்ற யாவர்க்கும் அந்தட்சணத்திலே துன்பமும் பாவமும் நீங்கவேண்டுமென்றானிந்திரன். (எ-று.) [19]

கன்னியிற் பூரணை கலந்த நாளிலே
மன்னிய சிவதட வனத்தின் மூழ்கியே
துன்னிய துரோணவெண் மலரைச் சூட்டுவா
ரந்நிலை சிவகதி யடைய வேண்டுமே.

(இ-ள்) கன்னியாகிய புரட்டாசி மாதத்தில் பூரணையென்னுந் திதி பொருந்திய நாளிலே நிலைபெற்ற சிவதடத்தின் ஜலத்தில் முழுகி நெருங்கிய வெண்மை நிறமான தும்பை மலரைத் திருமேனியிற் சூட்டுகின்றவர்கள் அப்பொழுதே சிவகதியை அடையவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். (என்றவாறு.) [20

இப்படி யிந்தர னியம்பியேத்தின
னப்படி யாகவென் றரனுங் கூறினன்
மைப்படர் கயிலைமால் வரையி னீங்கியே
கைப்படை யிந்திரன் களிற்றிற் போயினன்

(இ-ள்) இந்தப்படியாக தேவேந்திரன் கூறித் துதிசெய்தான். அப்படியாகக்கடவதென்று சிவபெருமானும் அருளிச்செய்தார். பின்பு மேகங்கள் படரப்பட்ட பெருமைபொருந்திய தெட்சண கயிலை மலையினின்று நீங்கிக் கையிற் படையையுடைய விந்திரன் ஐராவதமென்னும் யானைமேலேறித் தனது கற்பக நாட்டிற்குப் போயினன். (எ-று) [21]

## இந்திரச் சருக்கம்

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 4-க்கு திருவிருத்தம் 174.

உ

# ஐந்தாவது
# தீர்த்தச் சருக்கம்.

கலிவ்ருத்தம்

கோதம னிந்திரன் கதையைக் கூறலு
மாதவ ரனைவரும் வணங்கி வாழ்த்தியே
பூதர குமரியப் பொருப்பி லெய்திய
தியாதுகொ லெனமுனி யியம்பன் மேயினான்

(இ-ள்) கௌதமமுனிவ ரிந்திரனுடைய கதையைச் சொல்லுதலும் பெரிய தவத்தையுடைய முனிவர்களெல்லோரு மவரை வணங்கித் துதி செய்து இமயமலையின் புத்திரியான உமாதேவியார் அந்தத் திரிசிராமலையில் அடைந்தது யாது காரணமோவென்று கேட்கக் கௌதம முனிவர் சொல்லத் தொடங்கினார். (எ-று) [1]

முக்கணன் றனையுமை முன்னொர் நாளிலே
மிக்கதெவ் வரையெனத் தனிவி னாவினா
ணக்கனு மிறைவியே நடுவி னெய்திய
தெக்கண கயிலையே சிறப்பென் றோதினான்.

(இ-ள்) மூன்று கண்களையுடைய சிவபெருமானை யுமாதேவியார் முன னேயொரு நாளிலே மேலானது எந்த மலையென்று தனித்திருக்கும்பொழுது கேட்டார் சிவபெருமானும் உமையே திருக்காளத்தி மலைக்குந் திருக்கோண மாமலைக்கும் நடுநாயகமாயிருக்கின்ற தெக்கண கயிலைமலையே சிறப்பான தென்று சிவபெருமான் அருளிச்செய்தார் (எ-று.) [2]

அன்னவா சகஞ்சொல விரும்பிய யம்பிகை
யென்னகா ரணமதோ விமய நீங்கியே
புன்னைமா மலர்ப்பொடி பொதிந்து பொன்மலை
வன்னமார் திரிசிரா மலையை மேவினாள்.

(இ-ள்) அப்படிப்பட்ட வார்த்தையைச் சிவபெருமான் அருளிச்செய்ய அதில் விருப்பமுண்டாகி யுமாதேவியார் என்ன காரணத்தினாலோ விமய மலையைவிட்டு நீங்கிப் பெரிய புன்னை மலர்களின் பொடியினாலே நிறையப் பட்டுப் பொன்மலையின் வர்ன்னமாகிய திரிசிராமலையை அடைந்தார்(எறு) [3]

விருப்பினு லவ்விடை முழுக வேண்டியே
பொருப்பெலாந் தேடினுள் பொய்கை காண்கிலா
ளருப்புலா முலேயவ ளதனை வேண்டியே
பருப்பதா லயனிரு பாதம் போற்றினுள்

(இ-ள்) அப்படியடைந்த ஆசையினுலே யவ்விடத்தில் மூழ்கவேண்டி அந்தமலே முழுதுந்தேடித் தீர்த்தங்காணுதவராகித் தாமரை யரும்புபோன்ற பெருமைபொருந்திய தனங்களையுடைய வுமாதேவியார் தீர்த்தத்தை விரும்பி யந்த மலேயையாலயமாகவுடைய ஸ்வாமியினிரண்டு பாதங்களையும் வணங்கினுர். (எ-று) [4]

வெங்கரா சலவுரி தரித்து வெண்பொடி
யங்கரா கமெனெ வணிந்து வெண்மதி
பொங்கரா முடிமிசைப் புனைந்த புங்கவா
சங்கரா விதனிடைத் தருக தீர்த்தமே

(இ-ள்) வெவ்விதான யானையின்தோலைத் தரித்து வெண்மையான திருநீற்றைச் சரீரத்திலாசையுடனே யணிந்து வெள்ளைநிறமுள்ள சந்திரனைப் பொங்கிய விஷம்பொருந்திய சர்ப்பத்தைத தரித்த முடியின்மேலணிந்தருளிய புங்கவனே சங்கரனே யிவ்விடத்தில் தீர்த்தத்தை தருகவேண்டுமென்று உமா தேவியார் வந்தித்தார் (எ-று) [5]

மச்சமாய்க் கமடமாய் வராக மாகிய
வச்சுதா நந்தனுக் கரிய வண்ணலே
விச்சையாய் நாதமாய் விந்து வாகிய
சச்சிதா நந்தனே தருக தீர்த்தமே

(இ-ள்) மீனும், ஆமையும், பன்றியுமாகிய விஷ்ணுவுக்கு அரிதாகிய மேலோனே வித்தைதத்துவமாகியும் நாததத்துவமாகியும் விந்துதத்துவமாகியு மிராநின்ற சச்சிதானந்த மூர்த்தியே இவ்விடத்திலடியாளுக்குத் தீர்த்தத்தைத் தருகவேண்டுமென்று உமாதேவியார் துதித்தார். (எ-று) [6]

ஆதியா னவனரு வான வாணியா
லோதுவான் கங்கைநீ ருனக்கு வேண்டிய
தேதுகா ரணமென விறைவி மூழ்கி யான்
போதினு லருச்சனை புரிய வென்றனள்

(இ-ள்) ஆதியாகிய சிவபெருமான் அரூபமான ஆகாசவாணியினுல் உமாதேவியே யுனக்குக் கங்காஜலம், வேண்டியது ஏது காரணமென றருளிச்

செய்ய அதற்கு அந்த இறைவியானவள் அந்தக் கங்காசலத்திலே நான் முழு
கிப் புஷ்பங்களால் சுவாமியை அர்ச்சனை செய்கிறதற்காகவென்று கூறினர்.
(எ-று) [7]

தந்தன மெனச்சொலிச் சடையிற் கங்கையை
யந்தர மிசையினும் விடுக்க வந்நதி
யுந்திய கடலெலா மூர்வ தாமென
வந்தது பிரளய வனம தாகவே

(இ-ள்) அப்படியே தந்தோமென்றருளிச் செய்து ஜடையிலிருக்கிற
கங்கையை - ஆகாசமார்க்கமாய் சுவாமி விடுக்க அந்த கங்காநதியானது நதிக
ளையுடைய கடல்களையெல்லாம் - விழுங்கி மேலிட்டு வருவதைப்போலப் பிர
ளயகாலத்தில் வருகிற ஜலமாகவே வந்தது (எ-று) [8]

சங்கென மிதந்தனன் சலத்திற் சந்திரன்
வெங்கதிர் பங்கயம் போல மேவிய
தங்குள வரையெலாங் கமட மாயின
மங்குலுஞ் சைவல வனங்க ளானவே.

(இ-ள்) சந்திரனானவன் அந்தச் சலத்திலே சங்கைப்போல் மிதந்தான்.
வெப்பமான கிரணங்களையுடைய சூரியனானவன் செந்தாமரை மலரைப்போல
மேவினன். பூமியிலுள்ள மலைகளெல்லாம ஆமைகளைப்போலாயின. மேகங்
களும் கொடிப்பாசியின் வனங்களாயின. (எ-று) [9]

உலகெலாந் தெரிவுற வூழி காலமென்
றலகிலா வுயிர்களு நடுங்க வாயிரந்
தலையரா வசைவுறத் தறுகட் டீவிழிக்
குலமதா சலம்விழ வதுகு தித்ததே.

(இ-ள்) உலகங்களெல்லாந் தெரியும்படியா யுகாந்த காலம் வந்துவிட்ட
தென்று அளவில்லாத வுயிர்களும் நடுங்கும்படியாகவும் ஆயிரந்தலைகளுள்ள
வாதிசேடன் அசையும்படியாகவும் அஞ்சாமையுந் தீயையொத்த கண்களையு
முடைய அஷ்டதிக்கிலுமுள்ள மதயானைகள் விழும்படியாகவும் அந்தக் கங்கா
நதி பூமியிற் குதித்தது. (எ-று) [10]

மண்ணிடை யதுவரும் வரவி னுறுதற்
கண்ணினன் மணிவிழிக் கடைசி வந்தது
பெண்ணியல் கங்கையும் பெரிது மஞ்சியே
புண்ணிய தீர்த்தமாய்ப் பொருப்பை யுற்றதே.

(இ-ள்) பூமியினிடத்தேயர்தக் கங்காநதி வருகின்றவரவை நோக்கி நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானது அழகிய கடைக்கண் சிவந்தது. அதை யறிந்து பெண்ணின் றன்மையையுடைய அந்தக் கங்காநதியும் பெரிதாகப் பயந்துபுண்ணியம்பொருந்தியதீர்த்தமாகத்திரிசிராமலையையடைந்தது (எ-று)

அங்கது வடதிசை யருகி லேசிவ
கங்கையென் றொருபெயர் காண நின்றது
பொங்குமத் தடத்திலோர் புறத்தி லேசிவ
சங்கரன் றோன்றினன் சயம்பு வாகவே

(இ-ள்) அந்தக்கங்கையானது அம்மலையினுடைய வடதிசையின் சமீபத்திலே சிவகெங்கையென்று ஒப்பற்ற பெயரை யாவருங் காணும்படியாக நிலை பெற்றது. பொங்குகின்ற அந்தத்தடத்திலொரு புறத்திலே சங்கராகிய சிவபெருமானார் சுயம்புவாகத் தோன்றினார் (எ-று) [12]

நந்துறை தடத்திலே நவ்வி மூழ்கினள்
மந்தர கிரிதொழும் வரையின் மேவினள்
சந்தத மிப்படித் தவஞ்செய் நாளிலோ
ரந்தணன் போலவே யமலன் றோன்றினன்.

(இ-ள்) சங்குகள் தங்குகின்ற அந்தச் சிவகங்கையென்னும் தடத்திலே மானின் கண்ணையொத்த கண்களையுடைய உமாதேவியார் முழுகி மந்திரகிரியாலும் வணங்குகின்ற திரிசிராமலையை யடைந்து சதாகாலமுமிடைவிடாமல் தவத்தைச் செய்கின்ற நாளிலொரு பிராமணனைப்போல அமலனாகிய சிவபெருமானார் தோன்றினார் (எ-று) [13]

வெள்ளிய பஞ்சினும் விளர்த்த குஞ்சியன்
றள்ளிய நடையினன் றளர்ந்து கோலின
னள்ளிய மூப்பின னழகு மேனியன்
றுள்ளிய வெயரின னாகிச் சொல்லுவான்.

(இ-ள்) வெண்மையாகிய பஞ்சைப்பார்க்கிலும் வெள்ளை நிறம் பொருந்திய தலைமயிரினையுந் தள்ளாடிய நடையினையுந் தளர்ந்திராநின்ற கையிற் கோலினையும் அள்ளிக்கொள்ளும்படியான மூப்பினையும் அழகமைந்த மேனியினையும் வெயர்வைத் துளிகளையும் உடையவராகி யுமாதேவியை நோக்கிச் சொல்லுகின்றார் சுவாமி (எ-று) [14]

அணிச்சமுந் திறையிடு மழகு மேனியுங்
கனற்செறி தவத்தினாற் கருக வேண்டுமோ

நினைத்தது தருகுவா னிமல னித்தவந்
தனிச்சிலை நுதலியே தவிர்க வென்றனன்.

(இ-ள்) அனிச்சமலரும் வணங்கித் திறையிடுகின்ற அழகுள்ள திருமேனியும் நெருப்புகள் நெருங்கிய தவத்தினாலே கருகும்படியாக வேண்டுமோ நினைத்ததைச் சிவபெருமானார் கொடுப்பார் ஆதலால் இந்தத் தவத்தை யொப்பற்ற வில்லைப்போல் வளைந்த நெற்றியை யுடையவளே தவிர்ந்து விடு என்று அந்தப் பிராமணனாகிய சுவாமி யருளிச்செய்தார் (எ-று) [15]

ஓதிமந் தவத்தினை யொழிந்து சிந்தையில்
வேதிய னருச்சனை புரிதல் வேண்டினாள்
கோதற மாலினி குறிப்பி னல்கினாள்
சோதியு மறைந்துபின் விடையிற் றோன்றினான்

(இ-ள்) அன்னம்போலும் நடையையுடைய வுமாதேவியார் தவத்தை விட்டு மனதில் பிராமணனாகி வந்த சுவாமியை அருச்சனை செய்யவேண்டிக், குற்றமற்ற ஆசையினாலே (அவ்வருச்சனைக்குள்ள சகலமும்) இனிய குறிப்பினாலே கொடுத்தார். சோதிமயமான சிவபிரானும் மறைந்து பின்பு இடபவாகனத்தின் மேற்றோன்றினார். (எ-று) சோதியுமென்பது-பிராமணனாய் வந்தவர். குறிப்பினல்கினாளென்பது-மனோபாவனையினாலே ஞானபூசை செதலாகும். [16]

ஏற்றினா னெதிர்நடந் திறைவி யெய்தினாள்
போற்றினா ளருநதவம் புரிந்த வெந்துய
ராற்றினான் றிருமுடி யைந்தி னான்மதிக்
கீற்றினா னவளுடன் கிளத்த லாயினான்.

(இ-ள்) இடபத்தை வாகனமாகவுடைய சிவபெருமானெதிரே நடந்து வுமாதேவி அடைந்து வணங்கினாள், அரியதவத்தைச் செய்த வெவ்விய துயரத்தை நீக்கித திருமுடி யைந்தினையும் மூன்றாம் பிறையையுமுடைய அச்சிவபெருமானார் அந்த வுமாதேவியுடனே திருவாய் மலர்ந்தருளுகின்றார்(எ-று)

பொருசிலை நுதலியே புகன்ற யாவையுந்
தருகுவ முறையெனக் கயில நாயகி
யுரைசெயு மித்தலத் துள்ள யாவையு
மருவுமென் பெயரினால் வழங்க வேண்டுமே.

(இ-ள்) போர்செய்கின்ற வில்லைப்போல் வளைந்த நெற்றியையுடைய உமையவளே நீ சொல்லுகின்ற யாவையுந்தருகின்றோஞ் சொல்வாயென்று

சுவாமி திருவாய் மலர்ந்தருள அப்பொழுது மலையரையன் புத்திரியாகிய வுமா தேவி இந்தத் தலததிலேயுள்ள சகலமும் பொருந்துகின்றவெனது பெயரினாலே வழங்கவேண்டுமென்று சொன்னார். [18]

ஆதியே யிறுதியே யாதி பூரமென்
றோதிய நாளிலே நவமி யோங்கினாற்
றீதற வேவலஞ் செய்த பேர்க்கெலாஞ்
சோதியே நல்வரஞ் சொரிதல் வேண்டுமே.

(இ-ள்) ஆதியாயுள்ள சித்திரைமாதததின் கடைசியிலும் முதலிலும் பூரமென்று சொல்லப்பட்ட நட்சத்திரத்திலே நவமியென்னுந் திதியுயர்ந்து வந்தாலப்போது குற்றமறக் கிரிப்பிரதட்சணஞ் செய்தபேர்களுக்கெல்லாஞ் சோதிமயமானவரே நல்ல வரங்களை யருளவேண்டுமென்று உமாதேவியார் கேட்டுக்கொண்டார். (எ-று) [19]

பூமழை யிமையவர் பொழிந்து போற்றினார்
மாமலர் முடிமிசை மணத்தை வீசிய
தேமலி மடந்தையைத் தெய்வ நாயகன்
கோமள மட்டுவார் குழலி யென்றனன்.

(இ-ள்) அப்பொழுது தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து போற்றினார்கள் பெருமைபொருந்திய மலர்களானவை முடியினமேலுள்ள வியற்கை மணத்தை வீசிய காரணத்தால் தெய்வத்தன்மை நிறைந்த வுமாதேவியாரைத் தெய்வங்களுக்கெல்லாம் நாயகனாகிய சிராமலைநாதர் இளமைபொருந்திய மட்டுவார் குழலியென்றருளிச் செய்தார். (எ-று) இதனாலே கூந்தலினிடத்துண்டாகிய வியற்கையான திவ்ய வாசனையாலம்மலர்கள் விளங்குதலால் ஸ்ரீமட்டுவார்குழல் அம்மையென்று காரணப்பெயருண்டாயிற்று. [20]

விடைமிசை யுலவிய விமல னார்தம
திடமிசை யிருந்தன ளிமய நாயகி
சடைமிசைப் பிறங்கிய தாம நாயகி
கடலென வொருசிவ கங்கை யாயினாள்.

(இ-ள்) இடபவாகனத்தின்மேலே யெழுந்தருளிவந்த விமலனாகிய சிராமலைநாதருடைய இடதுபாகத்திலே உமாதேவியார் வீற்றிருந்தார் சுவாமியுடைய சடையின்மேலே விளங்கிய கங்காதேவியார், கடலைப்போலவொரு சிவகங்கையென்னுந் தீர்த்தமாயினாள். (எ-று) [21]

ஒருதுளி பருகினு லுடலி னோயறு
மிருதுளி பருகினூர்க் கின்மை யின்மையா
மருளுடன் றுளிகண்மூன் றருந்தி னுலவர்
கருதிய பொருளெலாங் கரத்திற் கூடுமே.

(இ-ள்) அந்தச் சிவகங்கையிலேயுள்ள ஜலத்தில் ஒருதுளியருந்தினு லுடலிற் பொருந்திய நோய்களெல்லாம் நீங்கிவிடும். இரண்டு துளிகளைப் பருகினபேருக்கு வறுமையென்பது இல்லாமற் போய்விடும். அருளுடனே மூன்று துளிகளருந்தினலவர்கள் நினைக்கப்பட்ட பொருள்களெல்லாங் கை கூடும். [22]

சிவநதி யெனச்சொலிற் றேவ ராகுவர்
சிவநதி சிவநதி யென்று செப்பினுற்
பவமறும் பலபடப் பகர்ந்த பேர்க்கெலா
மவனியிற் பரகதி யடைத லாகுமே.

(இ-ள்) சிவநதியென்று சொன்னுல் தேவர்களாவார்கள். சிவநதி சிவநதி யென்றிருதரஞ் சொன்னுற் பிறவி நீங்கும், பலவாருக அப்படிச் சொன்ன பேர்களுக்கெல்லாம் பூமியிலே தானே முத்தியை அடையலாகும். (எ-று) [ ]

தடத்தினை வலஞ்செய்வார் தம்மை வானுல
கிடத்தினில் வலஞ்செய்வா ரிந்தி ராதிய
ரடுத்ததின் மூழ்கியவ் வமிர்தங் கொண்டபேர்
விடத்தினை யருந்திய விமல னுவரே.

(இ-ள்) அந்தச் சிவகங்கையென்னுந் தடத்தினைப் பிரதட்சணஞ்செய் வோர்களைச் சுவர்க்கலோகத்திலுள்ள இந்திராதிதேவர்கள் பிரதட்சணம் செய் வார்கள். அந்தத் தடத்தையடுத்து அதிலே முழுகியந்த ஜலத்தையுள்ளே கொண்டபேர்கள் விடத்தையுண்டருளிய விமலனுன சிவபெருமானுவார்கள். (எ-று) [24]

அத்தட மூழ்கினூர்க் கலகை நோயற
மெத்திய பகையற வினையின் வேரறப்
புத்திர செல்வமும் புகழும் வீரமுஞ்
சித்தியு முத்தியுஞ் சேர்த றிண்ணமே.

(இ-ள்) அந்தத் தடத்திலேமுழுகின பேர்களுக்குப் பசாசுகளால் வரு கின்ற துன்பங்களும் மேலான பகையும் வினைகளின் வேர்களுமஅற்றுப்புத்திர

பாக்கியத்துடனே கீர்த்தியும், வீரமுஞ்சித்திகளும் முத்தியும் அடைதல் திண்ணமாகும் (எ-று) [25]

நீணிலம் புகழுமந் நீரின் மூழ்கினு
லாணவ மெனுமுயி ரழுக்க நீங்கிடும்
பாணியி னொருதுளி பயங்கொண் டார்தமைக்
காணலும் பயங்கொளுங் கடிய காலனே.

(இ-ள்) நீண்டிராநின்ற பூமியினுள்ளோராற்புகழப்படுகின்ற அந்தச்சிவகங்கையில் முழுகினுலாணவமென்கின்ற வுயிரினழுக்கானது நீங்கிப்போகும். கையினுலே யொருதுளிஜலத்தையுள்ளே கொண்டோர்களைக் கண்டவுடனே கொடிய காலனுனவன் பயத்தைக கொள்ளுவான் (எ-று) [26]

கலி நிலைத்துறை.

சத்த மாதரு மத்தடம் படிந்துமா தவத்தாற்
பத்தி யாலர னருளினுற் பெருநலம் படைத்தார்
சித்தர் சாரண ரிராக்கத ரியக்கர்கந் திருவர்
முத்த ராயின ரத்தடந தன்னிலே மூழ்கி.

(இ-ள்) சத்தமாதர்களும் அந்தச் சிவகஙகைத்தடத்திலே முழுகி மாதவத்தினுல் பத்திசெய்து சிவபெருமானருளினுலே பெருமைபொருந்திய நலத்தை யடைந்தார்கள். சித்தர்களுஞ் சாரணர்களுமிராக்கதர்களும் இயககருநகந்திருவர்களும் அந்தத்தடத்திலே முழுகி முத்தர்களானுர்கள் (எ-று) [27]

அரவ மானது மதுகர மானது மநதத்
திரிசி ராமலைத் தடத்துமுற் றவத்தினுற் செறிந்து
பரவி மாதவம் புரிந்தர னருச்சனை பண்ணிப்
பிரிவி லாதிறை காரணு திபர்பதம் பெற்ற.

(இ-ள்) சர்ப்பமானதும், வண்டானதும், அத் திரிசிராமலையினுடைய அந்தச்சிவகங்கை தடத்திலே முழுகி மாதவத்தினுலேயும் பத்தியினுலேயுஞ் சிவபெருமானருளினுலும் முன்னே செய்த தவத்தினுலே படிந்து சுவாமியை வணங்கி மாதவத்தைச்செய்து சிவார்ச்சனையும்பண்ணிப் பிரிவில்லாமல், சிராமலை யிறைவனுருடைய காரணுதிபர் முதலிய பதவியைப்பெற்றன (எ-று) காரணுதிபர்களின் பதவியாவது—துவாரபாலகர் முதலான சிவகணங்களாய் இருததல். [28]

கழுகு நாயகன் முன்னமத் தடத்திலே கலந்து
முழுகி நாயக னருளினு லருந்தவ முடித்தா
னழகு நாயகி நாயக னினிதெழுந் தருளி
மழைய தாமென வரமெலாம் பொழிந்தனன் மறைந்தான்.

(இ-ள்) கழுகுகளுக்கெல்லாம் நாயகனுகிய சடாயுவானவன் முற்காலத்திலந்தச் சிவகஙகை தடத்திலேசேர்ந்து அதிலே முழுகிச்சிராமலைநாயகருடைய திருவருளினலரிதான தவத்தை முடித்தான். அப்பொழுது அழகுள்ள நாயகி சமேதராய்ச் சிராமலைநாதர் இனிதாயெழுந்தருளிவந்து மழையைப்போலுள்ள கருணையுடனே அந்தச் சடாயுவுக்கு வரங்களெல்லாமருளிச்செய்து மறைந்தார் (எ-று) [29]

எழுவ ராகிய முனிவரத் தடத்திலன் பெய்தி
முழுகி மாதவ முயன்றுநல் லருச்சனை முடித்தார்
விழைவ தேதென வினவினு னரனவர் விரித்தார்
தழுவி மேனியி லடக்கினுன் கலந்தனர் தவத்தோர்.

(இ-ள்) எழுபேர்களாகிய சப்தரிஷிகளுமந்தச் சிவகங்கைத்தடத்திலன்புடனே ஸ்நானஞ் செய்து மாதவங்களையுமுயன்று நன்மை பொருந்தும்படி சிவார்ச்சனையையு முடித்தார்கள், அப்பொழுது அவர்களுக்குப்பிரசன்னமாகி யுங்கள் மனதிலே விரும்பியது யாதென்று சுவாமி திருவாய்மலர்ந்தருளினர். அதற்கு அவர்களெழுவருஞ் சொல்லிய பிரகாரம் தழுவித்திருமேனியிலடக்கினர். அத்தவத்தோர்களுங்கலந்து சாயுச்சியத்தைப்பெற்றூர்கள் (எ-று) [30]

அறுசீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம்.

நன்றுடையா னெனவுலகோ ரெடுத்துரைக்கு மொருதீர்த்த நவமதாக
வொன்றுளதா யிருக்குமது குணதிசையில் விளங்குமதி லுவந்து மூழ்கிக
குன்றுடையா னடிதொழுவார் பிறப்பகலு மிறப்பகலுங கொடுமை தீருந்
தென்றிசையிற் றீயதிலா னெனுந்தீர்த்த மளிக்குநெடுஞ் செல்வந் தானே

(இ-ள்) நன்றுடையானென்று வுலகத்தோரா லெடுத்துச் சொல்லப்படுகின்ற வொரு தீர்த்தமானது அதிசயமாக வொன்றுண்டாயிருக்கும் அது கிழக்குத்திசையிற் பிரகாசிக்கும் அதிலே மகிழ்ந்து முழுகிச் சிராமலைநாதருடைய திருவடியை வணங்குவோரது பிறப்பு மிறப்பு மவரை விட்டு நீங்கும். கொடுமையான பாவங்களு மவர்களுக்குத்தீரும். அம்மலைக்குத் தென்றிசையிலுள்ள தீயதிலானென்னுந் தீர்த்தத்தில் அவ்வாறு முழுகி சுவாமி திருவடிகளையும் வணங்குவோர்க்கு அத்தீர்த்தமானது நெடிதாயுள்ள செல்வத்தைக் கொடுக்கும். (எ-று) [31]

மனத்தின்வரு வினைகளெலாம் விதிதடத்தா லகலுமன வாக்கினாலே
கனத்தவினை யொழியும்வட திசையின்வரு கங்கையினாற் காயம் வாக்கா
னினைத்தமையா லடைந்தவினை குணதிசையிற் றடமூழ்கி னீங்கு மிந்த
வெவினைத்து மகன் றறம்பெருகுந் தீயதிலா னெனுந்தடத்தி னெய்துவோர்க்கே

(இ-ள்) மனத்தினாலே நினைந்து வருந்துகின்ற வினைகளெல்லாம் பிரமாவினுடைய தீர்த்தத்தினாலே நீங்கும். மனத்தினாலும் வாக்கினாலுஞ் செய்த கனத்த வினைகளெல்லாம் வடதிசையில் வருகின்ற சிவகங்கையினாலேயொழிந்துபோகும். காயத்தினாலும், வாக்கினாலும், மனத்தினாலும் அடைந்த வினைகளெல்லாம் கீழ் திசையிலுள்ள நன்றுடையான்றடத்திலே முழுகினால் நீங்கும். இந்த வெல்லாவினைகளும் அகன்று தருமமானது வளருந்தீயதிலானென்னுந்தடத்திலே முழுகுவோர்க்கு (எ-று) [32]

தீர்த்தச் சருக்கம்
முற்றிற்று.
ஆகச் சருக்கம் 5-க்கு திருவிருத்தம் (206)

உ

அருளாது

# திருநகரச் சருக்கம்.

---

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

இக்கதை பலவு முனிவர்தஞ் செவியி லினியவா ரமிர்தென விசைத்த
மெய்க்கவு தமனை வணங்கிமா தவர்கள் வினவுவா ரனகமா தவனே
தெக்கண கயிலை மலைசிரா மலையாந் திருப்பெயர் படைத்திடு சிறப்பை
முக்கண னருளான் மொழிகவென் றுரைத்தார் முனிவனு மவர்க்கிவை
[மொழிவான்.

(இ-ள்) இந்தத் தீர்த்தங்களுடைய மான்மிய முதலான பல கதைகளையும், முனிவர்களுடைய காதிலே யினிதாகிய அருமையான தேவாமிர்தத்தைப் போலச் சொல்லிய மெய்மையான கவுதமமுனிவரை மாதவர்கள் வணங்கிக் களங்கமில்லாத பெருமைபொருந்திய தவத்தையுடையவரே. தெக்கணகயிலை மலையானது சிராமலை யாகத்திருப்பெயர் படைத்திடுஞ் சிறப்பை மூன்று கண்களையுடைய சிவபெருமானருளால் மொழியவேண்டுமென்று வினவினார்கள். அப்படி வினவிய முனிவர்களுக்குக் கவுதமமுனிவரும் இவைகளைச் சொல்லத் தொடங்கினார் (எ-று) [1]

கலி நிலைத்துறை

முன்ப ரக்கருக் கதிபதி யிராவணன் முனிவாய்த்
தென்பு லத்துறை திரிசிரன் றூடணன் கரனே
யென்ப வர்க்கருஞ் சிறப்பளித் திம்மலை யிடத்தின்
வன்பு பற்றிய பகைதடுத் திடும்படி வைத்தான்.

(இ-ள்) முன்னாலே யிராக்கதர்களுக்கு அரசனாகிய இராவணனானவன் பகைவர் பேரில் வெறுப்பாய் ஜம்பு தீபத்துக்குத் தெற்கு திசையிலே வசித்திருந்ததிகாரஞ் செய்யும்படி திரிசிரனையுந் தூடணனென்பவனையுங் கரனென்பவனையும், நியமித்து அந்த மூன்றுபேர்களுக்கும் அரிதாயுள்ள சிறப்பையுங் கொடுத்து இந்த தெக்கண கயிலைமலையிடத்திலே யிருந்து பலம் பொருந்திய பகைவர்களைத் தடுத்திடும்படி காவலாக வைத்தான். (எ-று) [2]

கரனி ருந்துறை கொடுமுடி யவன்பெயர் காட்டும்
பெருகு தூடண னுறையிட மவனது பெயராந்
திரிசி ராவதி னுறைதலாற் றிரிசிரா மலையா
மிருவர் பேரொழித் தொருவன்பே ராகவே யிலங்கும்.

(இ-ள்) கரனானவனிருந்த கொடுமுடியானது அவனுடைய பெயரைக் காட்டும் பெரிய தூடணனிருந்த இடம் அவனது பெயரினாலாகும். திரிசிரனானவன் இந்த மலையிலிருத்தலினாலே திரிசிராமலையாகும். ஆதலால் மற்ற இருவர்களுடைய பெயரையொழித்து ஒருவனான திரிசிரனுடைய பெயராகவே இந்த மலையானது விளங்கும் (எ-று) [3]

தூட ணன்கர னிருவரு மிரும்பகை தொலைத்து
வீட னன்றிருத் தமயனங் கழைப்பவவ் விறலோன்
மாட ணைந்தன ரிராவணன் றனதனு மதியா
லேட ணைந்ததார்த் திரிசிரன் பின்னுமங் கிருந்தான்.

(இ-ள்) தூடணனுங்கரனுமாகிய இருவரும் பெரிதாயுள்ள பகைகளைத் தொலைத்து இராவணனால் அழைக்கப்பட்டு அவனிடத்திற்போய்ச் சேர்ந்திருந்தார்கள். இதழ்கள்பொருந்திய பூமாலை யணிந்த திரிசிரனானவன் அந்த இராவணனுடைய அனுமதியினாலே பின்பும் அந்தத் தெக்கண கயிலைமலையில் வசித்திருந்தான் (எ-று) [4]

துண்ட வெண்பிறை முடியனை யனுதினந் தொழுது
மண்ட பங்களு நவமணி குயிற்றிய மதிலுங்

கொண்ட றங்கிய கோபுரச் சிகரமுங் குழுமி
யண்ட ரின்புற மயன்சமைத் திடும்படி யமைத்தான்.

(இ-ள்) துண்டமாகிய வெண்மை நிறமுள்ள பிறையைத் திருமுடியில் அணிந்திராநின்ற சிவபெருமானை யனுதினமும் வணங்கித்தொழுது மண்டபங்களும், நவமணிகளாலே பதிக்கப்பட்ட மதிலும், மேகங்கள் தங்கிய சிகரங்களுடைய கோபுரங்களும் கூட்டமாயுள்ள தேவர்கள் இன்பம் பொருந்தும்படி மயனாகிய அரக்கர் தச்சனாலே யுண்டாகும்படி யந்தத் திரிசிரனானவன் செய்வித்தான் (எ-று) [5]

தந்தி யீருரி போர்த்தவற் காலயஞ் சமைத்திட்
டந்த மால்வரைக் கீழொரு வளம்பதி யமைத்து
மந்த ராசல மெனும்படி யரமியம் வகுத்துக்
கந்த மாதன வரையென வெயில்களுங் கண்டான்

(இ-ள்) அந்தத்தெக்கண கயிலையிலிருந்த திரிசிரனானவன் சுவாமிக்கு மயனென்கிற தச்சனாலே கோபுரம் முதலானவைகளுடனே ஆலயஞ்செய்வித்ததுமன்றி யானைத்தோலைப் போர்த்தருளிய சிவபெருமான எழுந்தருளியிருக்கின்ற அந்தப் பெருமை பொருந்திய மலையின் கீழே வளம்பொருந்திய வொரு நகரத்தையுஞ் செய்வித்து மந்திரகிரியென்று சொல்லும்படியாக வீட்டின்மேல் உலாவும் வெளியுள்ள அரமியங்களும் உண்டுபண்ணிக் கந்தமாதன பருவதத்தைபபோலுள்ள மதில்களுஞ் செய்வித்தான், (எ-று) [6]

பைய ராமணி கோபுரத் தலந்தொறும் பவளத்
துய்ய நீள்கொடி நிகரென விரித்திடு சுடர்க
ளைய னாலயம் வலஞ்செய விறங்குதற் கமரர்
செய்ய நூலினாற் சமைத்திடு மேணிபோற் றிகழும்.

(இ-ள்) படத்தையுடைய நாகரத்னங்கள் பொருந்திய கோபுரத்தினுடைய தலங்கள்தோறும் பரிசுத்தமான பவளத்தினது நீண்ட கொடியைப் போல் விரித்திடுகின்ற சுடர்களின் காந்திகளானவை சுவாமியினுடைய ஆலயத்தைப் பிரதட்சணஞ் செய்யத் தேவர்கள் இறங்குகிறதற்குச் சிவந்த நூலினாலே செயயப்படுகின்ற நூலேணிபோல விளங்குமென்றவாறு [7]

கலிவிருத்தம்

கொடிச்சியா ரணிமலர்க் குறிஞ்சி சேரளி
யிடைச்சியர் குழற்றள விதழின் மேவுமே

*கடைச்சிய ரெறிதரு கரும்பின் முத்திறற்*
*புடைச்செறி கடற்கரைப் புள்ளு நீங்குமே.*

(இ-ள்) குறிஞ்சிநிலப் பெண்களாகிய கொடிச்சியர்களாகிய வேடப் பெண்களின் கூந்தலிலே யணியப்பட்ட மலர்களிற் பொருந்திய அந்நிலத்துக குரிய வண்டானது முல்லைநிலப் பெண்களாகிய இடைச்சியர்களின் கூந்தலிலுள்ள முல்லைப்பூககளின் இதழ்களிலேபொருந்தும் (இதனாலேயவ்விரண்டு நிலங்களும் ஒன்றுககொனறு மிகுந்த சமீபமென்பது கருத்து,) மருதநிலப் பெண்களாகிய கடைச்சியராலே யெறியப்பட்ட கரும்பினது முத்துக்களால் கடற்கரையில் நெருங்கியிருககின்ற நெய்தநிலப் பறவைகளும் நீங்கும் (எ-று) இதனாலே மருதநிலமும் நெய்தநிலமும் மிகுந்த சமீபமென்பது கருத்து. இந்த நான்கு நிலங்களும் ஒன்றுக்கொன்று மிகுந்த சமீபமென்பதாம். இச் செய்யுள் - திணைமயக்கம் [8]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

*பாவைதான் பொய்கை யாகப் பதுமமே தரணி யாக*
*மரையினு ளிதழ்க ளெல்லா மறறுள தலஙக ளாக*
*விரைகமழ் பொகுட்டு செநநெல் விளைமழ நாட தாகத்*
*திருமக ளாகித் தோன்றுந திரிசிராப் பள்ளி தானே.*

(இ-ள்) இவ்வுலகத்தைச் சூழ்ந்த சமுத்திரமே தடாகமாகவும் அவ்வுலகம் தாமரைப்பூவாகவும் அவ்வுலகத திலுள்ள க்ஷேததிரஙகள் அத்தாமரையினிதழ்களாகவும் திரிசிராமலையினையுடைய செந்நெல் விளைகின்ற மழநாடானது அந்தத் தாமரையினது வாசனைபொருநதிய பொகுட்டாகவும் அப்பொகுட்டில் வசிக்கின்ற லெட்சுமியாகத் திரிசிராமலை நகரம் விளஙகுகின்றது (எ-று) [9]

கலிவிருத்தம்.

*காம ரம்பொற் கழனி மருங்கெலாந்*
*தாம ரைக்கிடை தண்கயல் பாயுமே*
*தேம டுத்த கடைசியர் செவ்விய*
*மாமு கத்தினும் வாள்விழி பாயுமே.*

(இ-ள்) யாவரும் இச்சிக்கும்படி அழகுபொருந்தி விளங்காநின்ற வயல்களுடைய பககஙகளிலெல்லா மிருக்கின்ற தாமரைககுளததின் மலரினிடத்திலே அவ்வயலிலுள்ள குளிர்ந்த மீனானதுபாயும அதைப்போலக் கடைசியரு

டைய அழகிய பெருமை பொருந்திய முகமாகிய வாசனையுள்ள தாமரை மல ரிடத்திலும் அவர்களுடைய கண்ணாகிய காந்திபொருந்திய மீனாதும் பாயு மென்றவாறு இதனாலே பள்ள ஸ்திரீகளுடைய முகமுங் கண்களுந் தாமரை மலரும் மீனும்போலிருக்கின்றதென்பதாம். அம்மலரையும் மீனையும் பின் புஞ்சேர்த்துரைக்கப்பட்டது [10]

ஆனு மேதியு மார்தலி லம்புயம்
பானல் சிந்தும் பரிமளத் தேறலாற்
சோனை போன்முலைப் பாலைச் சொரிதலாற்
றேனும் பாலு மறாததண் செய்களே.

(இ-ள்) பசுக்களும், எருமைகளும், தாமரைகளையும், கருங்குவளையை யும் உணவாகமேய்ந்து உண்ணுதலினாலே அந்த மலர்களிலிருந்து சிந்துகின்ற பரிமளம் பொருந்திய தேனினாலும், விடாமற்பொழிகின்ற சோனை மழை யைப்போல் அந்த மாடுகள் முலைப்பாலைச் சொரிகின்றதினாலுங குளிர்ச்சி பொருந்திய வயல்களிலேயந்தத்தேனும் பாலும் நீஙகாமல் நிறைந்திருக்கும் (என்றவாறு) [11]

கலிநிலைத்துறை.

முத்தி னஞ்செறி தடமொரு நான்கினு முழுகி
யத்த னின்புற வருச்சனை புரிந்தன னதன்பின்
மெய்த்த வம்பல வியற்றின னங்கவன் மெலிந்தும்
பத்தி சோதனை யறிந்திட விருந்தனன் பரமன்.

(இ-ள்) முத்துகளின் கூட்டங்கள் நெருங்கிய வொப்பற்ற நான்கு த்டாக தீர்த்தங்களினு முழுகி யின்பம் பொருந்தும்படி சுவாமியைத் திரி சிரன் அருச்சனை செய்தான். அதன் பின்பு மெய்மையாகிய பலதவஙகளை யுஞ்செய்தான். அதினாலே யவன்மெலிவடைந்தும் அவனுடைய பத்தியைச் சோதனை செய்தறியும்படி சுவாமி யிருந்தார் என்றவாறு [12]

இன்ன மென்னெதிர் முன்னவன் றோன்றிடா திருந்த
தென்ன காரண மெனசசொலித் தன்றலை யிரண்டை
வன்னி மீதரிந் தாகுதி கொடுத்தனன் மற்றைச்
சென்னி தன்னையு மரிந்திடக் காத்துவாள் சேர்த்தான்.

(இ-ள்) இன்னமும் என்னுடைய எதிரே சுவாமி யெழுந்தருளிவாரம லிருந்தது என்ன காரணமென்று சொல்லித் தனது மூன்று தலைகளிலிரண்டு

தலைகளையரிந்து நெருப்பிலே யாகுதியாய்க் கொடுத்து மற்றொரு தலையையும் அரிந்திடுதற்குக் கையிலே வாளாயுதத்தை திரிசிரன் யெடுத்தான் (எ-று) []

அனையன் வாளினால் விரைந்துதன் கழுத்தினை யரிய
நினையு மெல்லையில் விடையின்மேறறோன்றினா னிமலன்
கனக மாமலர் மதுமலர் சொரிந்திரு கரத்தாற்
புனையு மால்விடைக் கெதிர்நடந் திறைஞ்சினான் போற்றி.

(இ-ள்) அப்படிக் கையிலே எடுத்தவாளாயுதத்தினாலே அதிசீக்கிரத்தில் தன்னுடைய கழுத்தையரிய நினையுமளவில ரிஷபவாகனத்தின்மேலே சுவாமி பிரசன்னமாய்த் தோன்றினார். உடனே பெருமைபொருந்திய பொன் மலர்களையுந தேன்பொருந்திய மலர்களையுந் தனதிரண்டு கைகளினாலே சொரிந்து அலங்காரமும் பெருமையும்பொருந்திய ரிஷபவாகனத்தின் எதிரே நடந்துசுவாமியைப் போற்றித துதிசெய்து வணங்கினான் திரிசிரன். (எ-று) [14]

ஐம்மு கத்தனை யறுமுகத் தவனையு மரிய
கைம்மு கத்தவன் றன்னையு மருளிய கனியை
மும்மு கத்தவ னான்முகன் முதலினோர் முன்னே
யெம்மு கத்தினும் பரவினான் பரவியொன் றிசைப்பான்.

(இ-ள்) ஐந்து முகங்களையுடைய கடவுளை ஆறுமுகங்களையுடைய சுப்பிரமணியரையும அரிய யானைமுக விநாயகரையுமீன்றருளிய கனியேயென்று துதித்து திரிசிரனானவன் நான்கு முகங்களையுடைய பிரமன் முதலிய தேவர்கள் முன்னே யெந்ததிசை முகத்தினும் சுவாமியை வணங்கியொன்று சொல்லுகிறான் (எ-று) [15]

நாக நாதனே யுனக்குமிந் நகர்க்குமென் னாம
மாக வேவரந் தருதியென் றிறைஞ்சினா னவனுக்
கேக நாதனு மப்படி யாகவென் றியம்பி
மாக மீதினில் வலிமழ விடையொடு மறைந்தான்.

(இ-ள்) விண்ணிலுள்ள தேவர்களுக்கெல்லாம் நாதனாகிய சுவாமி உமக்கும் இந்த நகரத்திற்கும் என்னுடைய பெயரினாலாகவே விளங்கும்படி வரந்தந்தருளவேண்டுமென்று திரிசிரனானவன் வணங்கினான். அந்தப்படியே யவனுக்கு ஏகநாதனாகிய சுவாமியுந திருவாய் மலர்ந்தருளி ஆகாயத்தின்கண்ணே வலிமையும், இளமையும் பொருந்திய ரிஷபவாகனத்துடனே மறைந்தார். (எ-று) [16]

திரிசி ராவுமத் தலத்தினை யகன்றவை தெரியும்
பரிசி ராவணற் குரைத்தகன் றிலங்கையாம் பதியி
லரசு போனபின் கதியடைந் தனனென வறைந்து
முரசி ராகவ னருச்சனை புரிந்தது மொழிவான்

(இ-ள்) அதின்பின்பு திரிசிரனும் அந்தத் தெக்கணகயிலாயத் தலத்தினை விட்டு நீங்கியவைகள் தெரியும் வண்ணம் இராவணனுக்குச் சொல்லி விசாலமாகிய இலங்காபுரியில் அரசாட்சி போனபின்பு மோட்சகதியடைந்தா னென்று கௌதமமுனிவர் கூறி முரசுவாத்தியத்தையுடைய இராகவனை ஸ்ரீராமன் அருச்சனை செய்ததைச் சொல்லததொடங்கினர் (எ-று) [17]

திருநகரச்சருக்கம் முற்றிற்று.
ஆகச்சருச்கம் 6-ககு திருவிருத்தம் 223

---

உ
ஏழாவது

# நினைத்தது கொடுத்த சருக்கம்.

கலிவிருத்தம்.

தயரதன் மதலையா மிராமன் றாடகை
துயருறப் பொருதுசா னகியைத் தோய்ந்தபி
னயர்வுறும் பரதனுக் கரசு நல்கியே
கயலுகள் சரயுவைக் கடந்து போயினன்.

(இ-ள்) தயரதமகாராஜாவினுடைய புத்திரரான ஸ்ரீராமமூர்த்தியானவர் தாடகையென்னும் அரக்கியைத் துயருறும்படி போரில் வதஞ்செய்து சீதையை விவாகம் பண்ணின பின்பு தளர்ச்சியைப் பொருந்திய பரதனுக்கு அரசாட்சியைக் கொடுத்து கெண்டை மீன்கள் நீரில் பாய்ந்து விளையாடுகின்ற சரயுநதியைக் கடந்து சென்றார். (எ-று) [1]

சானகி மயிலுடன் றம்பி தன்னுடன்
கானக மடைந்தொரு கணையி னூற
மானக மடைந்தழக் கரிந்து மாரிச
மானையு மழித்துவா லியையு மாட்டினான்.

(இ-ள்) மயில்போன்ற சீதையுடனும் தம்பியாகிய இலட்சுமணனுடனுங் கானகத்திலே சென்று பெரிய மலைபோன்ற மடந்தையாகிய சூர்ப்பனகையென்னும் அரக்கியினுடைய மூக்கினையரிந்து ஒரு கணையினாலே பொருந்தும்படி மானாக வந்த மாரிசனையுமழித்து வாலியென்னும் வானர அரசனையும் வதஞ்செய்தான் ஸ்ரீராமன், (எ-று) [2]

விராவுறு கவந்தனைத் தொலைத்து வேலையைத்
தராதர நிரைகளாற் றடுத்துத் தம்பியோ
டிராவண னுயிர்குடித் திலங்கை வாழ்வினைப்
பராவுறு வீடணன் பரிக்க நல்கியே.

(இ-ள்) அந்தக் கானகத்திலே பொருந்திய கவந்த னென்பவனையுந் தொலைத்துக் கடலை மலைகளாலே யொழுங்குபடத் தடுத்துச் சேதுவென்னும் பாலத்தைக் கட்டி அதன்வழியாகத் தம்பி முதலிய வானர சேனைகளுடனே யிலங்கையிற் சென்று இராவணனைச் சங்காரஞ்செய்து அந்த இலங்கை வாழ்வாகிய அரசாட்சியை வணங்கப்பட்ட வீடணன் தாங்கும்படி கொடுத்து (என்றவாறு) [3]

புட்பகத் திவர்ந்துதன் னகர்க்குப் போதுவான்
விட்புலம் படர்தரு பொழுதவ் வெற்பினைக்
கட்புலங் குளிரவே கண்டு போற்றினான்
சட்பதங் குடைந்தெழு தாம மார்பினான்.

(இ-ள்) புட்பக விமானத்தின்மேலேறித் தனது நகரமாகிய அயோத்தியாபுரிக்குச் செல்லும்பொருட்டு அறு கால்களையுடைய வண்டுகள் தேனையுண்ண மூக்கினாலே குடைந்தெழுகின்ற பூமாலையணிந்த மார்பினையுடைய ஸ்ரீராமனானவன் ஆகாச மார்க்கமாய் அந்த விமானத்தை நடத்தும்பொழுது அந்தத் தெக்கண கயிலாய மலையைத் தனது கண்களானவை குளிரும்படியாகத் தரிசித்து வணங்கினான். (எ-று.) [4]

இழிந்தனன் சிவதடத் தினிது மூழ்கினான்
பொழிந்தனன் பலமலர் புயலி னீரென
வழிந்தன விழிமழை வணங்கி னான்மிக
மொழிந்தனன் சிவமெனு மூலமந்திரம்

(இ-ள்) ஸ்ரீராமனானவன் புட்பக விமானத்தினின்று மிறங்கிச் சிவதீர்த்தத்திலே முழுகிப் பல மலர்களாலே சுவாமியை அருச்சனைசெய்து மேகஜலத்தைப்போலக் கண்களின் நீராகிய மழைபொழிந்து வழியும்படி வணங்கிச் சிவமென்னும் மூலமந்திரத்தை மிகவும் மொழிந்தான். (எ-று) [5

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

மின்வாசி கொண்டசடை யிறைவனே போற்றிசதுர் வேத மாக
முன்வாசி கொண்டவனே கனலெரிய நின்றாடு முதல்வா போற்றி
தென்வாசி கொண்டபுரந் திரியநகைத் தருள்பரம சிவனே போற்றி
பொன்வாசி கொண்டவனே வெள்ளிமலை யுடையானே போற்றி போற்றி

(இ-ள்) மின்போலும் பிரகாசம்பொருந்திய சடையையுடைய இறைவனே நமஸ்காரம், நான்கு வேதங்களையும் முன்னே திரிபுர தகனம் செய்யும் போது குதிரைகளாகக் கொண்டவனே நமஸ்காரம், நெருப்பானது எரியும் படி நின்று நடனஞ்செய்கின்ற முதல்வனே நமஸ்காரம், பாவத் தொழிலை மிகுதியாய்க் கொண்ட திரிபுரமானது கெடும்படி நகைத்தருளிய பரமசிவனே நமஸ்காரம், விஷ்ணுவைப் பாணமாகக் கொண்டவனே வெள்ளி மலையை யுடையவனே நமஸ்காரம் நமஸ்காரம் என்று ஸ்ரீராமன் துதிசெய்து வணங்கினான் (எ-று) [6]

கலிவிருத்தம்

பூசனை புரிந்தவன் புகழுங் காலையி
லீசனும் பலவர மீந்து போயினான்
கோசல மெனுந்தலங் குறுகி ராகவன்
வாசவன் மகிழ்வுற மகமி யற்றினான்.

(இ-ள்) இவ்வாறாக ஸ்ரீராமன் பூசனைசெய்து புகழ்ந்து தோத்திரஞ் செய்யும்பொழுது ஈசனும பல வரங்களை யிராமனுக்கு ஈந்தருளிப்போயினான். பின்பு தனது தலமாகிய கோசல தேசத்தையடைந்து இந்திரன் மகிழும்படி யாகத்தையுஞ் செய்து ஸ்ரீராமனின்புற்றிருந்தான். (எ-று.) [7]

ஒருதல மிறந்தவர்க் குறுதி நல்கிடு
மொருதலம் பிறந்தவர்க் குதவு நற்கதி
யிருதலந் தம்மினு மெய்தும் யாவையுந்
தருதல மிதுவலாற் றரையி னில்லையே.

(இ-ள்) ஒரு தலமாகிய காசியானது தன்னிடத்தில் வந்திறந்தவர்களுக்கு முத்தியைக் கொடுக்கும். மற்றொரு தலமாகிய திருவாரூரானது தன்னிடத்திற் பிறந்தவர்களுக்கு முத்தியைக்கொடுக்கும். இந்த இரண்டு தலங்களினும் அடைகின்ற யாவையுந் தருகின்ற தலமானது இந்தத் திரிசிராமலையேயல்லாமல் பூமியில் வேறில்லை. (எ-று.) [8]

நாவலந் தீவிலந் நகரை நண்ணியே
தேவரு முனிவரு நாருஞ் சித்தரு

மாவுடன் பறவையு முரக மாதரும்
யாவரும் பரகதி யெய்தி னார்களே.

(இ-ள்) நாவலந்தீவிலுள்ள அந்தத் திரிசிராமலையையடைந்து தேவர்களும், முனிவர்களும், மனிதர்களும், சித்தர்களும் விலங்குகளுடனே பறவைகளும் நாகலோகத்து மாதர்களும், மற்றுள்ள யாவர்களும் பரகதியாகிய முத்தியைப் பெற்றார்கள் (எ-று) [9]

கலிநிலைத்துறை.

ஐந்து பேர்தமக் கொருத்தியே தேவியா மளவில்
வந்து நாரதன் மொழிகுவா னெவ்வொரு வருட
மிந்த மாதினைப் புணருமிவ் வியல்புகண் டெதிர்நதோர்
நந்து பூமியை வலஞ்செயத் தகுமென நவின்றான்.

(இ-ள்) ஐந்துபேர்களாகிய பாண்டவர்களைவருக்கும் துரோபதி யொருத்தியே தேவியாக வமைந்த வளவில் நாரதமுனிவர் வந்து ஒவ்வொரு வருடம் இந்தப்பெண்ணை யொவ்வொருவர் புணரவேண்டுமென்றும அப்புணருந் தன்மையை யெதிரே கண்டோர் பெரிய பூமியை வலஞ்செய்யத் தக்கவராவார்களென்றுஞ் சொன்னான் (எ-று) [10]

அன்ன நாளினி லருச்சுனன் றருமனோ டவளைக்
கன்னல் வேளுட னிரதிபோ லிருப்பது கண்டா
னின்ன தீவினைக் குலகினை வலஞ்செய வெண்ணி
மன்னு நாவலந் தீவிலத் திசையிலே வந்தான்.

(இ-ள்) அப்படி யேர்ப்பட்ட காலத்தில் அருச்சுனனானவன் தருமருடனே அந்தத் துரோபதியைக் கரும்புவில்லை யுடைய மன்மதனுடனே புணரும் யிரதியைப்போலிருப்பதைக் கண்டான். இப்படிப்பட்ட தீவினையாகிய பாவத்துக்கு உலகத்தை வலஞ் செய்யவேண்டுமென்றெண்ணி நிலைபெற்ற நாவலந் தீவிலிந்தத் தெற்குத் திசையிலே வந்தான் (எ-று) [11]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

ஓங்காரை பூசித்த காளத்தி யிறையவனை யுவந்து போற்றித்
தூங்கானை மாடத்தி லகலாமல் விளங்குபரஞ் சுடரை வாழ்த்தித்
தீங்கானை தனையுரித்த வழுவூர னிருசரணஞ் சிரத்தி னேற்றிப்
பூங்கானைக் காவிலுறை யகிலாண்ட வுமையிறையைப் பணிந்து போனான்.

(இ-ள்) உயர்ந்த யானையானது பூசித்ததிருக்காளத்தி யென்னுந் தலத்தி லெழுந்தருளிய இறைவனை யுவப்புடனே வணங்கித் தூங்கானை மாடமென் னுந்தலத்திலே நீங்காமல் விளங்குகின்ற பரஞ்சுடரையும் வாழ்த்தித் தீங்கை யுடைத்தான யானையை யுரித்தருளிய திருவழுவூரரையுஞ் சிரத்தினலே வணங்கித் துதிசெய்து திருவானைக்காவிலெழுந்தருளிய அகிலாண்டநாயகிக்கு நாயகனாகிய ஜம்புலிங்கேசுரரையும் வணங்கி அருச்சுனராஜன் போனான் (எ-று) (12)

கலிநிலைத்துறை

நரன ருச்சுன னெனும்பெய ருடைய வனன்கா
வரன ருச்சனை புரிந்தன னமலனு மவற்கு
வரம ளித்தனன் மடநகையர் பலரையு மணந்து
பரக திப்பய னடைந்தன னெனமுனி பகர்ந்தான்.

(இ-ள்) அப்பால் நரனாகிய அருச்சுனராஜன் சிராமலையையடைந்து நன்றாக சுவாமியை யருச்சனை செய்தான். அப்பொழுது அமலனான சுவாமி யானவர் அவனுக்கு வரங்களை யருளிச்செய்தார். அதைப் பெற்றுக்கொண்டு அவன் பலவாயுள்ள மாதர்களை மணஞ்செய்து சுகமாயிருந்து பின்பு பரத்துக் கேதுவான பயனையுமடைந்தானென்று கௌதமமுனிவர் மற்றை முனிவர் களுக்கருளிச் செய்தார். (எ-று) [13]

அறிந்த பாவமும் வலிகெடு மறிவிலா மையினாற்
செறிந்த வல்வினைக் கடனுமத் தலத்திலே தீரும்
பிறந்த மானிடப் பிறவியிற் பலன்களும் பெறலா
மிறந்த போதினிற் பிறந்தபேர் முத்திபெற் றிருப்பார்

(இ-ள்) அறிந்து செய்த பாபமும் அதின் வலியும் அந்தத் தலத்திலே தீரும் அறிவில்லாமையினாலே செய்து நெருங்கிவருகின்ற வலிதாகிய தீவி னைக்கடனும் அத்தலத்திலே நீங்கும். மனிதப்பிறவியிற் பிறந்த பலன்களும் அடையலாம். இறந்தபொழுது முத்தியைப் பெறுகின்றதைப்போலவே யந் தத் தலத்திலே பிறந்த பேர்களும் முத்தியைப் பெற்றிருப்பார்கள். (எ-று) [14]

எழுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மனுகு லந்தனி லிரவி புங்கவன் மதலை தந்தரு டயரதன்
றனுச னங்கவ னனுச னென்பவர் தமது வெம்பகை தவிரவே
கனலி லங்கையி லிடும வன்சொரி கருணை யஞ்சனை பாலக
னனும னென்பவன் மலையில் வந்ததி லரிய நன்புன லாடினான்

(இ-ள்) சூரிய வமிசத்திலே பிறந்த மனுகுலத்தரசனாகிய தயாதனு டைய புத்திரனான ஸ்ரீ ராமனும் அவனுடைய தம்பியாகிய இலக்குவனும் என்பவர்களுடைய கொடுமையான பகை நீங்கும்படியாக இலங்கையிலே நெருப்பையிட்டவனும் கருணையானது சொரிகின்ற அஞ்சனாதேவியினுடைய பாலகனுமான அனுமனென்று சொல்லப்பட்ட பெயரினையுடையவனிந்தச் சிராமலையில் வந்து அதிலுள்ள அரிதாகிய நல்ல தீர்த்தங்களில் முழுகினான். [எ-று] (15)

மால யன்றொழு வானை நண்பகன் மாலை கங்குலின் மாலையா
லால யந்தனின் மேவி மஞ்சன மாதி கொண்டடி பேணினான்
வால சந்திர ரேகை தண்புனன் மாசு ணந்திகழ் வேணியான்
வேலை நஞ்சணி நீல கந்தரன் மேவி னன்விடை மீதிலே

(இ-ள்) மகா விஷ்ணுவினாலும், பிரம தேவனாலும், தொழுது வணங் காநின்ற சிராமலைநாதனை யனுமனானவன் ஆசையுடனேமத்தியான காலத் திலும், மாலைகாலத்திலும், இராக்காலத்திலும் ஆலயத்தையடைந்து திரு மஞ்சன முதலியவைகளால் அபிஷேகாதி அருச்சனை செய்து வணங்கினான். மூன்றாம் பிறையும், குளிர்ந்த கங்கையும் சர்ப்பமும், விளங்குகின்ற சடை யையுடையவரும், பாற்கடலிலே தோன்றிய விடத்தையணிந்தநீலகண்டரு மான கடவுள் ரிஷபவாகனத்தின்மேலே யெழுந்தருளி அந்த அனுமாரு க்கு முன்னே பிரசன்னமானார் (எ-று) [16]

குன்றெ னத்தொழு தனும னின்றன னிறையு மன்பொடு கூறுவா
னன்று னக்கினி வரமளித்திட நவிலு வாயென மொழிகுவா
னென்றன் முத்திரை யுன்றலத்தினி லெய்த வேண்டுமெ னச்சொனா
னன்ற ளித்தன னரிய செல்வமு மடைக வென்று மளித்தனன்.

(இ-ள்) அனுமானானவன் மலையைப்போலே சுவாமியைத தொழுது நின்றான். உனக்கு நாம் நன்மையாயுள்ள இனிய வரத்தைக் கொடுத்திட நீ சொல்லுவாயென்று சுவாமி யன்புடனே திருவாய்மலர அதற்கு என்னு டைய முத்திரையாகிய அடையாளமானது உம்முடைய ஸ்தலமாயுள்ள இதில் அடையவேண்டுமென்று அனுமான் கேட்டுககொண்டா னந்தப்பிரகாரங் கொடுத்தருளி யரிதாகிய செல்வமும் உனக்கு எப்பொழுது மடையக்கடவ தென்று சுவாமி யனுக்கிரகஞ் செயதருளினார். (எ-று) [17]

நினைத்தது கொடுத்த சருக்கம்

முற்றிற்று.

ஆகச் சருக்கம் (எ) க்கு திருவிருத்தம் (240)

உ

எட்டாவது

# சாரமாமுனிச் சருக்கம்.

கலிநிலைத்துறை

என்று கூறினன் கோதம னவன்றனை யிறைஞ்சி
நன்று கூறினை யெனசசொலி யிருடியர் நவில்வா
ரன்று சாரனென் றொருமுனி தவஞ்செய வதிலே
சென்ற வாறெலா முரைக்கவென் றனர்முனி செப்பும்.

(இ-ள்) தல மகிமை இப்படியென்று சொல்லிய கௌதம முனிவரை மற்ற முனிவர் வணங்கி நன்று கூறி நீரென்று சொல்லி யந்தக்காலத்தில் சாரனென்றுவொரு பெயர்பெற்ற முனியானவன் அந்தத் திரிசிரா மலையிலே தவங்களைச்செய்து நடத்திய நெறிகளையெல்லாம் உரைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்படிப் பிரகாரம் சாரமாமுனிவருடைய வரலாறுகளை அந்தக் கௌதம முனிவா சொல்லததொடஙகினார். (எ-று.) [1]

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

பரம யோகி யொருவ னுண்டு பகரின் முன்னு கத்திலே
பிரம சன்மன் மறைக னான்கு மங்க மாறு பேதமுங்
கரத லாம லகம தாக வுணர்வில் வைத்த காரணன்
வரையில் வீறு மிமய மீது மாத வந்தொ டங்கினன்.

(இ-ள்) சொல்லப்படுகின்ற கிரேதாயுகத்திலே பிரமசன்மனென்று பெயர்பெற்ற பரமயோகியானவா ஒருவருண்டு அப்பேர்ப்பட்டவர் நான்கு வேதஙகளையும், அந்த வேதஙகளுககு அங்கமான ஆறு பேதஙகளாயுள்ள சாஸ்திரஙகளையும் கையிற் பொருநதிய நெல்லிக் கனியாக அறிவிலே தங்கும் படிவைத்தகாரணர் அதினால் மலைகளிலே வுயர்ந்திராநின்ற இமயமலையினிடத்திலே பெருமை பொருந்திய தவத்தைச் செய்யத்தொடஙகினார் (எ-று.) [2]

அன்ன யோகி யருமை யான தவமி யற்ற வமலனு
மின்னு லாவு குன்ற மன்ன விடையின் மீது மேவினன்.
பொன்னு லாவு போது கொண்டு பரம யோகி போற்றினை
னென்ன வேண்டு மென்ன யோகி முத்தி வேண்டு மென்றனன்.



சாரமா முனிவர் செவ்வந்தி மலரால் சுவாமியை அருச்சனை செய்தல்.

(இ-ள்) அப்பேர்ப்பட்ட யோகியானவர் அருமையான தவத்தைச் செய்யச் சிவபெருமானும் விளங்காநின்ற மலைபோன்ற ரிஷப வாகனத்தின் மீது எழுந்தருளிப் பிரசன்னமானார். உடனே அந்த யோகி பொன்போலும் அருமையான புஷ்பங்களைக்கொண்டு சுவாமியை வணங்கினார் உனக்கென்ன வேண்டுமென்று சுவாமி திருவாய்மலர்ந்தருள யோகியானவர் முத்தியானது வேண்டுமென்று சொன்னார். (எ-று) [3]

இத்த லத்தின் முத்தி யில்லை யிமய வெற்ப கன்றுகா
சித்த லத்து றைந்த சோம சன்ம யோகி தேவிதன்
கைத்த லத்தி லமிர்தெ னப்பி றந்து கண்க ளிக்கவே
பத்தி செய்து நீயு மங்கோர் பால னைப்ப யந்தபின்.

(இ-ள்) இந்தத் தலத்திலே யுனக்கு முத்தியில்லை இமயமலையை நீங்கிக் காசித் தலத்திலிராநின்ற சோமசன்ம யோகி யென்பவனுடைய மனைவியின் கைத்தலத்திலுள்ள அமிர்தத்தைப்போலப் பிள்ளையாகப் பிறந்து கண்கள் களிக்கும்படி பத்தியுஞ் செய்து அவ்விடத்தில் நீயும் இல்லறத்தினின்று ஒரு பாலனைப் பெற்ற பின்பு (எ-று.) [4]

மனைது றந்து தெற்கி னண்ணி மன்னு காவி ரிக்கணே
யினிது வீறு திரிசி ராம கர்க்க ணெய்தி யெம்மையே
நனைகு லாவு பாத லத்து மலர் பறித்து நாடொறும்
புனைதி முத்தியெய்து மென்று சிவனெமா ழிந்து போயினான்.

(இ-ள்.) அப்படி புத்திரனைப் பெற்ற பின்பு இல்வாழ்க்கையை விட்டு துறவறத்தையுற்று தெட்சண திசையைச்சேர்ந்து நிலைபெற்ற காவிரி நதியினிடத்தே யினிதாக வுயர்ந்திராநின்ற திரிசிராமலை யென்னும் நகரத்தின் கண்ணே யடைந்து நம்மையே அருமபுகளாலே கொண்டாடப்பட்ட பாதாளத்திலுள்ள செவ்வந்தி மலரைப் பறித்துத் தினந்தோறும் புனைந்து அருச்சனை செய்திடுவாய அப்போது முத்தியும் பொருந்துமென்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளிச்செய்து போயினார் (எ-று) [5]

அடல மைந்த பிரம சன்ம னரிய யோக முறையினு
லுடலு றந்து சோம சன்மன் மகிழ வந்து தித்தனன்
புடை நெருங்கு கலனி றைந்த புணரி பொங்கு மகரமீ
னிடைநெ ருங்கு பால லைக்குண் மதியெ ழுந்த தென்னவே

(இ-ள்) வலிபொருந்திய பிரமசன்மரானவர் அரிதாயுள்ள யோகமுறைமையினாலே சரீரத்தைவிட்டு சோமசன்மரானவர் மகிழ்ச்சியடையும்படி பிள்ளையாக வந்து அவதாரஞ்செய்தார். அது எப்படியிருந்ததென்றால் கப்பல்களும் மகர மீன்களும் நிறைந்து நெருங்குகின்ற சமுத்திரமானது பொங்கும்

படியாகப் பால் சமுத்திரத்தினுள்ளே சந்திரனுதித்ததுபோலிருந்தது (எ-று) இதனாலே அந்தப் பாற்கடலிலுதயமான சந்திரனைக்கண்டு பொங்குகின்ற சமுத்திரம்போலப் பெற்றோர் முதலிய சுற்றத்தார்களெல்லாம் மகிழ்ச்சி யடைந்தார்கள். [6]

சோம சன்மன் மனம கிழ்ந்து செய்க டன்மு டித்தபி
ன்னும நாமி சைக்க வேண்டு மென்னு மெல்லை நாகமேல்
வாய்மை யொன்றெ ழுந்த திந்த மைந்தன் மாத வத்தினாற்
றூம மார்ப நாமம் வல்ல சார னென்று சாற்றுமே.

(இ-ள்) அப்படிப்பிறந்த பிள்ளைக்குப் பிதாவாகிய சோமசன்மனானவர் மனது மகிழ்ச்சியடைந்து செய்யத்தக்க கடன்முறைகளாகிய சடங்குகளெல் லாஞ் செய்துமுடித்த பின்பு பெயரிடவேண்டுமென்று அந்தச் சோமசன்மன் நினைத்த அளவில் ஆகாயத்தினிடத்தே யொரு உண்மையான வாக்கா னது பூமாலையணிந்த மார்பையுடைய சோமசன்மனே மாதவத்தினாலேபிறந்த வல்லமையுடைய இந்த மைந்தனுக்குச் சாரனென்று யாவரும் சொல்லும்படி யாகப் பெயரிட்டழைக்கத் தக்கதென்று எழுந்தது (எ-று) [7]

என்று ரைக்க மனம கிழ்ந்து தந்தை தாய ிருவரு
நன்றி யுற்ற சார னென்று நாம மன்று நல்கினார்
பொன்ற லற்ற கல்வி கேள்வி புனித நூலு ணர்ந்தபின்
மன்ற லுற்ற கோதை யோடு மனைய றத்தில் வைகினான்.

(இ-ள்) இப்படியென்று ஆகாயவாக்கானது சொல்ல தந்தை தாயிருவ ரும் மனதில் மகிழ்ச்சியடைந்து நன்மைபொருந்திய சாரனென்னும் பெயரை அப்பொழுது கொடுத்தார்கள். அப்படிக்கு அவர்களாலே சாரனென்று பெய ரானது இடப்பட்டழைத்தபின்பு பொன்றுதலில்லாத கல்விகளையும் சிவயோ கியர்களாலே பெறத்தக்க கேள்விகளையும் பரிசுத்தமான மோட்ச நூல்களை யும் அறிந்து பிறகு விவாகஞ்செய்துகொண்டு இல்வாழ்க்கைக்குரிய மனைவியு டனே செய்யத்தக்க தருமமாகிய இல்லறத்திலே தங்கியிருந்தார் (எ-று) [8]

வயந்த புண்ட ரீக யாகம் வாச பேய மாதிய
வியந்த பன்ம கம்பு ரிந்து மெய்க்க டன்க ழித்தபி
னயந்து நன்ம கப்ப யந்து துறவ றத்தை நண்ணினான்
பயந்த பால னினிது தன்கு லத்து நீதி பயிலவே

(இ-ள்) அப்படி இல்லறத்திலிருந்து வயந்தமென்னும் வேதமந்திரங்களை யுடைய புண்டரீகமென்கிற யாகமும், வாசபேயமென்கிற யாகமுமாதியாக வியந்து புகழத்தக்க பலவகை யாகங்களையுஞ் செய்து மெய்மையாகிய தேவர்

கடன், முனிவர்கடன், தென்புலத்தார் கடன் முதலிய கடன்களை முடித்த பின்பு விருப்பமுற்று நன்மையான புதல்வனைப்பெற்று இனிதாகத் தனதுகுலத்து நீதியிற் பயிலும்படி செய்து அந்தச் சாரனென்பவர் துறவறத்தை யடைந்தார் (எ-று) [9]

முற்பி றப்பி னியல்ப றிந்த முனிவில் சார முனிவனுந்
தெற்கி டத்தின் மேவி மிக்க திரிசி ராம லைக்குள்வாழ்
பர்ப்ப தக்கொ ழுந்த ரான பரமர் பாத மலரின்மே
லற்பு தத்தி னரிய போது சொரியும் வண்ண மணுகினான்.

(இ-ள்) முன் ஜனனத்தினுடைய தன்மையையறிந்த கோபமுதலிய குற்றமில்லாத சாரமா முனிவரும் தெற்குத்திசையையடைந்து மேலான திரிசிராமலையினிடத்தே மலைக்கொழுந்தாயெழுந்தருளி யிருக்கின்ற பரமராகிய சிவபெருமானுடைய திருவடித்தாமரை மலரின்மேல் அற்புதத்தை பொருந்தியவராய் அரிதாகிய புஷ்பங்களாலே அருச்சனை செய்யும்படியாக அணுகினார் (எ-று) [10]

கலிநிலைத்துறை

கண்ட மட்டிலே யுருகினா னலயங்கண்டு
கண்ட மட்டிலே விடனுசெறி கடவுளைக் கமுகார்
கண்ட மட்டிலேய் கருங்குழ லிறைவியைக் கண்டான்
கண்ட மட்டிலே யடங்கிடா மகிழ்ச்சியாற் களித்தான்.

(இ-ள்) அப்படி அரிதாகிய புஷ்பங்களைச் சொரிந்து அருச்சனை செய்யும்படி யணுகிச் சுவாமியினுடைய திரிசிராமலையைத் தரிசித்து எல்லையும் அளவுமில்லாமல் உடம்பெல்லாங் கண்களாக அந்தச் சாரமாமுனிவர் உருகினார் அதின்பின்பு ஆலயத்தினுள்ளே சென்று கண்டத்தின் மட்டிலே விடம்பொருந்திய கடவுளாகிய சிவபெருமானையுங் கமுகமரமும், மேகமும் பார்த்தமாத்திரத்தில் ஒப்பாய்ப் பொருந்தியிராநின்ற கழுத்தையும் கருமையான கூந்தலையுமுடைய இறைவியாகிய மட்டுவார்குழற் பிராட்டியையும் அந்தச் சாரமாமுனிவர் தரிசித்து அளவிலடங்காத ஆனந்த மகிழ்ச்சியை அடைந்தார். (எ-று) []

பிரம னாரண னகத்தியன் முதலிய பெரியோர்
பரம யோகிய ரிமையவர் பணிந்திடும் பரனே
கரனு மங்கவற் கிளையவ னிருவருங் காண
விரவி போலவந் தரும்பல முதவிய விறையே

(இ-ள்) பிரமனும், நாரணனும், அகத்தியனும் முதலாயுள்ள பெரியோரும், பரமயோகியரும், 'தேவர்களும் பணிந்து வணங்குகின்ற பரனேகரனும்

அவனுக்கிளையோரான இருவருந் தரிசிக்கும்படி சூரியப்பிரகாசம்போல எழுந் தருளி வந்து அவர்களுக்கு அரிதாயுள்ள பலன்களைக் கொடுத்துதவிய இறைய வனேயென்று அந்தச் சாரமாமுனிவர் துதிசெய்து யின்னுஞ் சொல்லுகிறார். (எ-று) [12]

அனும னென்பவ னருச்சுனன் வணங்கிய வரனே
யினிய மாதர்க ளெழுவரு மிறைஞ்சிய விறையே
வனையும் வார்குழ லுமையவள் வணங்கிய மணியே
தனிய ரானவர்க் கன்னையே யெனச்சொலித் தாழ்ந்தான்

(இ-ள்) அனுமனென்பவனும் அருச்சுனனும் வணங்கிய அரனேயென் றும் இனிமையுள்ள சப்த மாதர்களிறைஞ்சிய இறையவனேயென்றும் அலங் கரிக்கின்ற நீண்ட கூந்தலையுடைய உமையவள் வணங்கிய மணியேயென்றும் தனிமையானவர்களுக்குத் தாயேயென்றுஞ் சொல்லித் துதிசெய்து சாரமா முனிவர் வணங்கினர். (எ-று) [13]

சிவத டத்திலே மூழ்கியம் மலைவலஞ் செய்து
பவம கற்றிடும் பொருட்டினி தருச்சனை பண்ணி
நவமு றச்செயும் பன்னசா லையினக நண்ணித்
தவமி யற்றினன் வேதவா சாரனுஞ் சாரன்.

(இ-ள்) அந்தப்படி வணங்கித் துதிசெய்து சிவதீர்த்தத்திலே முழுகி விபூதியுருத்திராக்கமணிந்து அந்தத் திரிசிராமலையைப் பிரதட்சணமாக வலஞ் செய்து பிறவியை நீக்கும்பொருட்டு இனிதாகச் சுவாமியை அருச்சனை பண் ணிப் புதிதாகச் செய்யப்பட்ட பன்னசாலையினிடத்தே பொருந்தி வேதத் தின் ஆசாரத்தையுடைய சாரமாமுனிவர் தவத்தைச் செய்துகொண்டிருந்தார் (எ-று) [14]

## சாரமாமுனிச் சருக்கம்.

முற்றிற்று.

ஆகச் சருக்கம் 8-க்கு திருவிருத்தம் 254.

௯

ஒன்பதாவது

# சூரவாதித்தச் சருக்கம்.

கலிவிருத்தம்

வாழி யந்த வருந்தவ மாமுனி
தாழ்வ ருங்கதை தன்னை நிறுத்தியே
சோழ னவ்விடைத் தோன்றி யதுமவன்
கோழி மாநகர் கண்டதுங் கூறுவாம்.

(இ-ள்) நீடூழிகாலம்வாழத்தக்க அந்த அரியதவத்தையுடைய பெருமை பொருந்திய சாரமாமுனிவரது உயர்ந்த கதையை நிறுத்திச் சோழராசனானவன் அவ்விடத்தே வந்து தோன்றியதும் பின்பு அவன் கோழிமாநகரமென்கிற உறையூரைக் தனது ராஜதானியாகச் செய்ததுஞ் சொல்லுவாம். (எ-று)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

மண்ணி லழியாப் புகழ்படைத்த மனுவின் குலத்திற் சனநாத
வண்ணன் மகிழ வவதரித்தா னரசர் சூளா மணியென்பா
னெண்ணெண் கலைகண் முழுதுணர்ந்தா னெழுவிற் படைவா ளிவைதெரிந் [தான்
பண்ணும் பரியும் பரித்தேரும் பகடுஞ் செலுத்தல் பயின்றனனே.

(இ-ள்) இந்த மண்ணுலகத்தில் அழியாத புகழைப் படைத்திராநின்ற மனுவினது குலத்திலே முதன்மையான சனநாதனென்னும் பெயரையுடைய சோழராசனானவன் சந்தோஷிக்கும்படியாய்ப் புத்திரனவதரித்தான் அவன் அரசர் சூளாமணி யென்று சொல்லும்படியான அறுபத்துநாலு கலைஞானங்கள் முழுதையு மொருங்குணர்ந்தவன் யுத்தத்துக்கு எழுகின்ற வில்வித்தை வாள்வித்தை முதலிய ஆயுதவித்தைகளெல்லாந் தெரிந்தவன். அலங்காரஞ் செய்யுங் குதிரையும்-குதிரைபூட்டிய தேரையும்-யானையுமாகிய இவைகளை யேறிச் செலுத்தப்பட்ட வித்தைகளையும் பழகினவன். (எ-று) [2]

அந்த மகனைச் சனநாத வளவன் புடவிக் கரசனெனத்
தந்து புலனாந் தையுமடக்கி முயன்றான் யோக சாதனையை
மைந்த னவனி முழுதினையுந் தளரா தளித்து மதிக்கவிகை
சிந்து நிழலா லினைப்பகற்றி நடத்தா நின்றான் செங்கோலே.

(இ-ள்) அப்பேர்ப்பட்டபுத்திரனைச் சனாதசச் சோழமகாராஜனானவன் தனது பூமிக்கு அரசனாகச் செய்து தனது அரசாட்சியையும் அவனிடத்தில் கொடுத்து பின்பு ஐம்புலன்களையு மடக்கி மோட்சததுக்குரிய மார்க்கமான சிவயோக சாதனையிலே முயற்சியுள்ளவனானான். அப்பால் அந்தப் புத்திரனானவன் பூமி முழுதையும் தளர்ச்சியடையாமற் காத்துத் தனது சந்திரவட்டக் குடையிலிருந்து சிந்துகின்ற அமிர்தகிரணத்தினாலும் அக்குடை நிழலாலும் உயிர்களுடைய துன்பமாகிய இளைப்பை நீக்கிச் செங்கோலாகிய நீதியை இராஜசிரோமணி யென்னுஞ் சோழராசன் நடத்தினான் (எ-று) [3]

எட்டா னைகளுஞ் சுமைதவிர வுரகா திபனு மிளைப்பகலக்
கட்டா நின்ற வரியகழல் பகைத்தார் முடியிற் கதிர்பரப்ப
வொட்டா ரளக்கும் பெருந்திறையா லிமையோ ருலக மூடுருவக்
கொட்டா நிற்க மும்முரசும் புரந்தான் மனுவின் குலமணியே.

(இ-ள்) அப்படி அவன் அரசாட்சி செய்யும்போது பூமியைத் தாங்குகின்ற அஷ்ட திக்கஜங்களுடைய சுமை நீங்கவும் ஆதிசேடனுடைய இளைப்புத் தவிரவும் கட்டுகின்ற அரிய வீரகழலானது பகைவருடைய கிரீடத்திற் பிரகாசத்தை விரிக்கவும் ஒட்டாராகிய அப்பகைவர்கள் பெரிய திறைப்பொருளையளக்கவும் தேவலோகமும் ஊடுருவிப்போகும்படி மூன்றுவகை முரசு வாத்தியங்களுங் கொட்டாநிற்கவும் இந்தப் பூபாரத்தைத் தானொருவனே தாங்கிப் பகைமன்னரில்லாமல் அப்புதகிரனாகிய அரசர் சூளாமணி யென்னுஞ் சோழமகாராஜனான மனுவின் குலமணி போன்றவன் உலகைப் பரிபாலித்து ஆண்டுவந்தான். மூன்றுவகை முரசாவன:—மஙகலமுரசு—வெற்றி முரசு; கொடைமுரசு, வீரக்கழலாவன:—சூத்திரம்-வெற்றிகொள் வேந்தர் விருது வீரக்கழல்—வலத்தாளொன்றில் வயஙகுமென்க:—ஆல்—அசை:—அல்லது அந்த—ஆலே மூன்றனுருபாகி— பகைவரளக்குந் திறைப்பொருளாலும்—தேவருலகமூடுருவும்படிகொட்டப்பட்ட மும்முரசினாலும் உலகத்தைக் காத்து வந்தானெனினுமாம்;— பின்கூறிய முரசிலும் ஆலுருபுவிரிக்க. (எ-று)

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பொங்க விப்படி யுயிர்பு ரந்தெழு புடவி தன்னைவ லஞ்செய்வான்
சிங்க ளத்தவர் யவனர் பப்பரர் சீனர் சோனகர் கேரளர்
வங்கர் குச்சரர் கூர்சச ரத்தவர் கோச லத்தர் வணங்கவே
துங்க பத்திரி தண்பு னற்சொரி தூய திண்கரை மேவினான்.

(இ-ள்) இப்படிச் சேனாசமுத்திர முதலிய சமஸ்த செல்வங்களும் பொங்கும்படியாக உயிர்களைக்காத்துவருகின்ற அந்தச்சோழராஜனானவன் எழுவகையாகிய உயிர்களையுடைய பூமியை வலஞ்செய்யும்பொருட்டு சிங்களர், யவனர்,

பப்பரர், சீனர், சோனகர், கோளர், வங்கர், குச்சரர், கூர்ச்சரர், கோசலர், முதலிய எல்லா தேசத்தரசர்கள் வணங்கும்படியாகக் குளிர்ந்தநீரைச் சொரியப் பட்ட துங்கபத்திரியென்னும் நதியினுடைய பரிசுத்தமான பலம்பொருந்திய அந்நதிக்கரையையடைந்தான் (எ-று) (5)

கலிநிலைத்துறை

அம்பை யின்கரை நுதற்கண னடிபணிந் ததற்பின்
கம்பை யின்கரை யுமையிடத் திறைவனைக் கண்டு
பம்மை யின்கரை யழகிய நாதனைப் பணிந்து
செம்பொ னம்பல வாணனை வணங்கினன் சிரத்தால்

(இ-ள்) அந்தச் சோழராஜனானவன் அந்தநதிக்கரையைக்கடந்து அப்பால் அம்பா நதிக்கரையையடைந்து அதிலெழுந்தருளியிருக்கின்ற நெற்றிக் கண்களையுடைய சிவபெருமான்றிருவடியைப் பணிந்து அதன்பின்பு காஞ்சிபுரத்தில் கம்பையாற்றின் கரையில் காமாட்சியான உமாசமேத மூர்த்தியாகிய ஏகாம்பரீசுவரரைத் தரிசித்து அப்பால் பம்பாநதிக்கரையில் வீற்றிருக்கின்ற அழகிய நாதனையும்பணிந்து பிறகு சிதம்பரத்துககுவந்து செம்பொன்மயமான அம்பலத்தில் வாழ்கின்ற நடராஜப் பிரபுவையுந் தலையினாலே வணங்கினன் (எ-று) [6]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கனலுருவ மாயிருந்தான் மலர்க்கையின்மா ன் பயந்தகலுங் கங்கை பாடன்
மனமுருகி வெதும்புமற்றை மலைமானுந் தளருமென்றோ வடிவ மெல்லாம்
புனலுருவ மானவனை யமிர்தகதிர் புனைந்தவனைப் பொருந்துங் கோடி
தினகரனை நிகர்த்தவனைத் திருவானைக் காவானைச் சேவித் தானே.

(இ-ள்) நெருப்பின வடிவமாக நாமிருந்தால் மலர்போன்ற நமது கையிலிருக்கின்ற மானனது பயந்து நீங்கும், கங்காதேவியினுடைய மனமானது உருகி வெதும்பும், மற்றை யுமாதேவியாகிய மலையிற்பிறந்த மானுந்தளரும் என்றல்லவோ வடிவமெல்லாம் நீர் உருவமாக அப்புலிங்கமானவனை யமிர்தகிரணங்களையுடைய சந்திரனையணிந்தவனை பொருந்துகின்ற கோடிசூரியப்பிரகாசமுடையவனை திருவானைக்காவிலெழுந்தருளிய சிவபெருமானைச்சேவித்து அந்தச் சோழராஜனானவன் வணங்கினன் (எ-று) [7]

வெண்ணாவ னிழலானை யகிலாண்ட நாயகியா மேனை யீன்ற
பெண்ணாவ ளுடனானைக் குப் பெருமானை மாணிக்கப் பிறங்கல் போலும்
வண்ணாவல் லசுரர்புர மெரித்தானை பெருங்கருணை வழியா நிற்குங்
கண்ணாவல் லணிந்தமிடற் றானையென் றடிபணிந்து களித்துப் போனான்

(இ-ள்) வெண்ணாவல் விருட்சத்தினீழலையுடையவனே, இமையமலையாசனது மனைவியான மேனையென்பவள் தவத்தினாலே பெற்ற பெண்ணாகிய அகிலாண்டநாயகியை அன்புடனே பொருந்துகின்ற பெருமானே, மாணிக்க மலைபோலும் நிறத்தையுடையவனே, வல்லமையான அசுரர்களுடைய திரிபுரத்தையெரித்தவனே, பெரிதாகிய கருணையானது மிகுந்து வழியாநிற்கின்ற கண்களையுடையவனே, இருள்போன்ற கருமையான விடமணிந்த கண்டத்தையுடைய சிவபெருமானே யென்று துதிசெய்து திருவடியை வணங்கி மகிழ்ச்சியுடனே அந்தச்சோழராஜன் போனான் (எ-று) [8]

ஷை வேறு.

பொன்னி கடந்து சிவகங்கை முதலாந் தடங்கள் புடைசூழ
மன்னி விளங்குஞ் சிராபலையின் சிகரக் கொழுந்தை மணத்தகுழற்
கன்னி மயிலை விழிகுளிரக் கண்டா னுடலங் களிப்புற்றான்
சென்னி வணங்கி யடிபணிந்து நடந்தான் மேலைத் திசைதனிலே

(இ-ள்) அந்தச் சோழராஜனானவன் காவேரிநதியைக் கடந்து சிவகங்கை முதலாகிய தீர்த்தங்கள் பக்கத்திலே சூழும்படியாக நிலைபெற்றுவிளங்குகின்ற சிராமலைக் கொழுந்தாகிய கடவுளையும் மட்டுவார்குழற் பிராட்டியாகிய கன்னித் தன்மையுடைய மயிலையுங் கண்கள் குளிரும்படிக் தரிசித்து வுடலஞ் சிவானந்தக்களிப்பையடைய வணங்கித் திருவடியைப் பணிந்து மேற்றிசையை நோக்கிநடந்தான் சோழன் (எ-று) [9]

ஷை வேறு

காவல னின்பொடு மேற்றிசை யின்புடை கானில் வரும்பொழு தூர்
மாவுகை யுந்திறல் வீரர்மதங்கய மாவுகை யுந்தகையோர்
மேவுதல் கண்டெதிர் சீறியு டன்றழல் வேகமி குந்தலைநேர்
கூவியு கைந்தெதி ராகந டந்தொரு கோழிதொ டர்ந்ததுமே.

(இ-ள்) அந்தச் சோழனானவன் இன்பத்துடனே மேற்றிசையின் பக்கத்திலுள்ள காட்டில் வருகின்றபொழுது நடத்துகின்ற குதிரைகளும் அக்குதிரைகளின் மேலேறிச் செல்லுகின்ற வெற்றிபொருந்திய வீரர்களும் மதயானைகளும் அந்த யானைகளின்மேலேறிச் செல்லுகின்ற தக்கோர்களும் விருப்பத்துடனே ஆயுதபாணிகளாயும் வருதலைக் கண்டு அவர்களுக்கெதிரே ஆக்கிரமித்துச் சீறிக் கோபக்குறிகளைக் காட்டி நெருப்பைப்போலக் கோபத்துடனே வேகமிகுந்து அலைகளையுடைய கடல்முழக்கம்போலக் கூவி சிறகை வீசியடித்துயர்ந்தச் சேனைகளுக்கெதிராக நடந்து ஒரு கோழியானது தொடர்ந்தது. (எ-று.) [10]

மேலெழு மண்கிளை யாவிழு மென்சிறை வீசுமி குந்தெழுகால்
பேலெழு மிந்திர ஞாலமெ னும்படி போய்மறை யுந்தரைமேல்
வாலைய றைந்திடு மோடிவ ருந்திசை மாறிவ ருந்தனையே
கோலுமி ருஞ்சிறை தாழ்மு கங்கொடு கோதிவ கிர்ந்திடுமே.

(இ-ள்) அப்படித் தொடர்ந்த கோழியானது மேலே யெழும்பும். மண்ணைக் கிளைதது விழும். மெல்லிய சிறையினாலே வீசும். மிகுந்தெழுகின்ற காற்றைப்போலே யெழும். இநதிரஞாலமென்று சொல்லும்படி பொய்யாகப்போய் மறையும் பின்பு தெரியும்படி வந்து தரையின்மேலே வாலையறையும் வோடி வருந்திசை மாறுபட்டுவரும். வளைந்து சுழ்லும் பெரிய சிறை தாழத்தக்க தாய் முகத்தைக்கொணடு கோதி வகிர்ந்திடும். (எ று) [11]

வேறு

மரங்களி லொளிக்கு மீள வரையிடைக் குதிக்கும் வீரர்
சிரங்களை நெருக்கும் வாசித் தலையின்மேற் செறியும் யானைக்
கரங்களி லிருக்கும் பாகர் கவசமே லிருநது மேலம்
பரந்தனி லுகையுந தீண்டிற் றடித்தெனப் பறந்து போமே

(இ-ள்) பின்னும் அந்தக் கோழியானது மரங்களிலே யொளித்துக் கொள்ளும். மறுபடி மலையிலே குதிககும் வீரகளுடைய தலைகளிலே யேறி நெறுக்கும் குதிரைகளுடைய தலைகளின்மேலே நெருங்கும்படி யிருக்கும் யானைகளுடைய கைகளிலேயிருக்கும் அந்த யானைப்பாகர்களுகடையசரீரத்தி லணிந்திராநின்ற கவசத்தின்மேலிருந்து மேலே யாகாயத்தில் செல்லும் தீண்டினால் மின்னலைப்போலப் பறந்துபோய்விடும். (எ-று.) [12]

மன்னவன் றானையெல்லா மருண்டதி சயிப்ப வேழச்
சென்னியிற் செறிநது சென்னி கவிகைமேற் செறிந்த போது
பன்னிரு கரத்தோன் கோழிப் பதாகையா னுகையாலே
யிங்கில வரசுங் கோழிக் கவிகையா னென்ன வானான்.

(இ-ள்) அந்தக் கோழியானது பின்பு அரசனுடைய சேனைகளெல்லாம் மருண்டு அதிசயிக்கும்படியாகப் பட்டத்து யானையினுடைய சிரசிலே யேறிச் சோழராஜனுடைய வெற்றிக் குடையின்மேலே யேறியபோது பன்னிரண்டு கைகளையுடைய சுப்பிரமணியக கடவுள் கோழிக்கொடியோ னுகையினாலே யிந்தப் பூமியையாளுகிற அரசனுங கோழிக்குடையோனென்று சொல்லும்படியானான். (எ-று) [13]

வேறு

கொதியாப் பறந்து கவிகையினுங் குதித்துச் சென்னி குஞ்சரத்தை
யுதையாச் சரண முள்ளழுந்த முகமுள் ளழுந்த வுள்ளழுந்தப்
புதையாக் குருதி நதிப்படியா மதவா ரணையினும் பொங்கியது
மதவா ரணத்தைக் கண்டக்கால் விடுமோ மற்ற வாரணமே.

(இ-ள்) பின்னும் அந்தக் கோழியானது கொதித்துப் பறந்து சோழ ராசனுடைய வெண்கொற்றக் குடையிலே குதித்து அவனுடைய பட்டத்து யானையையுதைத்து இரண்டு கால்களிலுள்ள முள்ளுகளாலும் முகத்திலுள்ள முள்ளாலும் அந்தயானையினுடைய உடலத்திலுள்ளேயழுந்தும்படி புதைத்து இரத்தப்பிரவாகமாய் ஓடிவருகிற நதியிலே முழுகி யந்த மதயானையைப் பார்க்கிலும் கோபம் பொங்கியதாயிருந்தது. ஆனதால் மதயானையைக் கண்டால் மற்ற வாரணமாகிய கோழியானது சும்மா விடுமோ விடாது. (எ-று.)

கலிவிருத்தம்

பார்த்தனர் மன்னரும் படக்கை வீரரு
மார்த்தனர் படையெலா மதிச யித்தன
கூர்த்திடு கணையயில் பரிசை விற்கொடு
வேர்த்தன ராசனும் விலக்கி னனரோ.

(இ-ள்) அந்தக் கோழியுடைய வீரத்தன்மையை அரசர்களும் ஆயுதங் களையுடைய வீரர்களும் பார்த்து ஆரவாரித்து அவர்களுடனே சேனைகளி லுள்ள யாவரும் அதிசயித்துக் கூர்மைபொருந்திய அம்புகளையும் வேல்களை யுங் கேடகங்களோடு கத்திகளையும், வில்லுகளையுங் கையிலே யெடுத்துக்கொ ண்டு கோபங்கொண்டார்கள். அதைப்பார்த்து அரசர்க்கரசனான சோழமகா ராசனும் விலக்கினான். (எ-று) [15]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

வலத்தினிற் பறந்து மீள விடப்புறம் வளைந்து போந்து
நிலத்திடை நடந்து வான முகட்டிடை நெடிது பாய்ந்து
சலத்தினிற் குதித்து மேகத் தலத்திடை யடங்கி யைந்து
புலத்தையு மடக்கா யோகி மனமெனப் போயிற் றன்றே

(இ-ள்) அப்படி யரசன் விலக்கியபின்பு அந்தக் கோழியானது அவ னும் அவனுடைய சேனைகளும் இருக்கிற இடத்திற்கு வலத்திலே பறந்து மீளவும் இடப்புறமாய் வளைந்து சென்று பின்பு நிலத்தினிடத்தே நடந்து

ஆகாயத்தின் முகட்டிலே நெடுந்தூரம் பாய்ந்து அப்பால் பூமியிலுள்ள சலத்திலே குதித்து மேகமண்டலத்திலே யடங்கி ஐம்புலன்களையுமடக்காநின்ற யோகியினுடைய மனதைப்போலப் போயிற்று. (எ-று) [16]

இத்தல வாசியாலிப் பறவைபோ ரிழைத்த தாகு
முத்தம தலம்யா மிங்கே யுறைவது கரும மென்று
வத்தலத் தனந்த கோடி யரமிய மரச வீதி
சித்திர மாட கூடங் கோபுரஞ் செய்வித் தானே

(இ-ள்) அந்தக் கோழியானது அவ்விதமாப் போனபின்பு அரசனானவன் இந்தப் பூமியினுடைய வலிமையினாலே யிந்தப் பறவையாகிய கோழி நம்முடன் எதிர்த்ததாகின்றது. இந்தப்பூமி அரசாக்ஷி செய்வதற்குரிய நகரமாக்கவுத்தமமாயிருப்பதால் இதிலே யாம் உறைந்திருப்பது காரியமென்று நினைத்து, அத்தலத்திலே அளவில்லாத அழகுபொருந்திய மாடகூட கோபுரம் அரமியங், கோட்டை கொத்தளம் முதலான அரசவீதிகளையுஞ் செய்வித்தான். (எ-று) அரமியமென்பது வீட்டின்மேலுலாவும் வெளி - மாடமென்பது வீடு - கூடமென்பது - மேல்வீடு, மறைவுள்ள இடம். [17]

கலிவிருத்தம்

மன்னர் வீதி நிறைந்தகை மாவின்மேற்
பொன்னி லாமணித் தோரணம் பொங்குதன்
மின்னு மேக மிவையென விண்ணவர்
வன்ன வில்லு வளைத்தது போலுமே

(இ-ள்) அப்படிச் செய்வித்த அரசர்களுடைய வீதிகளிலே நிறைந்திருக்கின்ற யானைகளின்மேலே பொன்னினாலும் விளங்காநின்ற மணியினாலும் சேர்த்துச் செய்த தோரணங்கள் விளங்குதல் மின்னுகின்ற மேகமிவையென்றெண்ணித் தேவர்கள் பஞ்சவர்ணங்கள் பொருந்திய வில்லாகிய இந்திரதனுசை வளைத்ததுபோலுமிருந்தது (எ-று) [18]

போத கத்தின் மதநதி போதலின்
மாதர் கண்டு மருண்டு வனமுலைச்
சீத சந்தனத் தாற்கரை செய்ததன்
மீது சென்றுதம் வீதி புகுவரே

(இ-ள்) யானைகளினுடைய மதங்களின் பிரவாகமானது நதியாகிப்போதலினாலே அதை மாதர்கள் பார்த்து மயங்கித் தமது அழகிய முலைகளிலுள்ள குளிர்ச்சிபொருந்திய சந்தனத்தினாலே கரையாகச்செய்து அந்தக் கரையின் மேலே நடந்துசென்று தமது வீதிகளிலுள்ள வீடுகளிற் புகுவார்கள். (எ-று)

செம்பொ ருட்குப் பிரிந்திடு செல்வர்க
டம்பு யத்திற் றழுவி மயங்குவா
ரம்பு யத்திரு வன்ன மடந்தையர்
கொம்பு சுற்றுங் கொடிக ணிகர்க்கவே

(இ-ள்) தாமரைமலரில் வசியாநின்ற இலக்குமிக்கொப்பாகிய மங்கையர்கள் செல்விதாகிய கல்விப்பொருள் தேடுதலின்பேரில் பிரிந்துபோகாநின்ற செல்வர்களாகிய தங்கள் நாயகர்களுடைய தோள்களில் மரக்கொம்பைச் சுற்றிக்கொள்ளுங் கொடியைப்போலத் தழுவிக்கொண்டு பிரிவாற்றாமையால் மயங்குவார்கள். (எ-று) [20]

தத்தை மார்விளை யாடிய தண்கழன்
முத்தி ராசி புகுந்து முகிற்கிடை
யுய்த்த மாரித் துளியொ டுதிர்ந்திடு
மெத்து மாரி விழுவன போலுமே

(இ-ள்) கிளிப்பிள்ளைபோலும் சொற்களையுடைய மாதர்கள் விளையாடியபொழுது அவர்களணிந்திருந்த முத்துமாலையிலுள்ள குளிர்ந்த ஒரே ராசியான முத்துக்கள் கழன்று மேகமண்டலத்திற் புகுந்து அம்மேகங்கள் பெய்யப்பட்ட மாரித்துளியுடனே மிருதுவான ஆலங்கட்டியும் விழுவனபோல உதிர்ந்திடும். இதனாலே அம்மாதர்கள் விளையாடிய மேன்மாடங்கள்-மேகமண்டலம் வரையிலுயர்ச்சி யென்பதாம். அம்மாதர்கள் விளையாடிய அம்மானைகழங்குபந்துகளிலுள்ள முத்துக்களொளினுமமையும் (எ-று) [21]

ஆடு மஞ்ஞை யனைய மடந்தையர்
பாடு மங்கல வள்ளையின் பாடலுந்
தோடு தங்கு சுரும்பெழு சும்மையு
மோடு தேரி னுருளையி னோசையும்

(இ-ள்) அப்படி அந்தச் சோழராஜனாலே செய்வித்த கோழிமாநகரமென்னும் பட்டினத்திலே நடனசாலையில் பரதசாஸ்திர விதிப்படி நடனஞ்செய்கின்ற மயில்போலுஞ் சாயையுடைய மடந்தையரது இசைப்பாடலும் மங்கையர்கள் தங்கள் தலைவன் புகழை வியந்து சொல்லாநின்ற வள்ளைப்பாடலும் புஷ்பங்களின் இதழ்களிலே தங்குகின்ற வண்டுகள் எழும்போதுண்டாகிய வோசையும்—வீதிகளிலோடுகின்ற தேர்களினுடைய உருளைகளின் ஓசையுமாகவே யிருக்கும். (எ-று) [22]

வெங்க ளிற்றின் விரிந்த விரக்கமும்
மைங்க திப்பரி யாலு முழக்கமுஞ்
சங்கொ லிப்பதுந் தாளமி சைப்பதும்
பொங்கொ லிக்கட லேழும் பொருவுமே

(இ-ள்) பின்னும் அந்தப்பட்டணத்திலே யானைகள் கட்டுகின்ற கூடத்திலே-வெவ்விதான யானைகளிடத்திருந்து வரப்பட்ட பெரிதான முழக்கங்களும் பஞ்சகதிகளையுடைய குதிரைகள் கட்டப்பட்ட பந்தியில் அக்குதிரைகள் அனுமானிக்கிற முழக்கங்களும் சங்குகளினுடைய வோசைகளுந் தாள முதலிய வாத்திய வோசைகளுமாகிய இவைகளெல்லாஞ் சப்தசமுத்திரங்களும் ஒன்றாய்க்கூடிப் பொங்கியொலிப்பது போலிருக்கும் (எ-று) [23]

மைய லேற்ற வனங்கொ ளனங்கனை
யைய நீக்கி யழைப்பது போலவே
தைய லார்க டமனியத் தாமரைச்
செய்ய பாதச் சிலம்பு புலம்புமே

(இ-ள்) அந்தப் பட்டணத்திலுள்ள பெண்களுடைய தாமரை மலர் போன்ற சிவந்த பாதத்தில் அணிந்திரா நின்ற பொற்சிலம்புகளுடைய வோசையானது ஆடவர்களும் ஸ்திரீகளும் மையல் பொருந்தும்படி பாணப்பிரயோகஞ் செய்வதற்கு மன்மதனைச் சந்தேகமன்னியில் வாலாமென்று அழைப்பது போலிருந்தது. (எ-று) [24]

டி வேறு.

பற்றிய படிகமண் டபத்தின் பாங்கரிற்
சுற்றிய மாரகதச் சிகரந் தோன்றுதல்
கொற்றமென் கனகபங் கயத்தின் கோல்வளை
யுற்றவ னுறங்கிடு முததி போலுமே

(இ-ள்) பற்றியிராநின்ற படிகக் கல்லுகளாற் செய்த மண்டபத்தின் பக்கத்திலே வளைவாய்ச் சுற்றியிருக்கின்ற மரகதமணியாற் செய்த சிகரமானது தோன்றுதல் வெற்றிபொருந்திய மெல்லிய பொன்மயமான தாமரைமலர் போன்ற கையில் சப்த்திக்காநின்ற சங்கத்தையுடைய திருமால் சயனஞ் செய்கின்ற பாற்கடல்போலிருந்தது. செந்தாமரை மலர்போன்ற கையிலே அழகிய சங்கையுடையவனெனினுமாம். (எ-று) [25]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

நக்கசெங் கமலத் தாது குடைந்ததி னறவ மாந்தி
யெக்கர்வெண் மணற்குன் றேறி யிருஞ்சிறை புலர்த்துந் தும்பி
செக்கர்வெண் பிறையை வாட்டுஞ் சிறுநுதன் மடவார் கொங்கை
மைக்கருங் குவளை மாலை மாலையில் வைகு மன்றே

(இ-ள்) தடாகங்களிலே மலர்ந்திராநின்ற செந்தாமரைகளின் பூந் தாதுக்களைக் குடைந்து அவைகளிலுள்ள தேனையுண்டு வெள்ளத்தினாலே சொரியப்பட்ட எக்கராகிய வெண்மையான மணலின் மேடுகளிலேறி பெரிய சிறைகளை உலர்த்தப்பட்ட வண்டுகளானவை சிவப்பையுடைய சாயரட்சையி லுதயமாகின்ற வெள்ளிய பிறையை வாட்டப்பட்ட சிறிய நெற்றியையுடைய மாதாகளின் கொங்கையையுடைய மார்பில் அணியப்பட்ட கருங்குவளைமாலை யில் மாலைக்காலத்திலே தங்கியிருக்கும். (எ-று) [26]

அரவுகொப் புளிக்கு நஞ்சு மமிர்தமு மொழுகப் பார்வை
முருகுகொப் புளிக்கு முல்லை முகையென விளங்க மூரல்
விரவிகொப் புளிக்கும் வெய்யி லிருகுழை யெறிப்பச் செங்கைக்
குருகுகொப் புளிக்கப் பந்து பயிலுவார் கோடி பேரே

(இ-ள்) அமுர்தமும் பாம்பினால் கக்காநின்ற நஞ்சுமுமாகிய இரண்டு மொழுகும்படியான பார்வையையும் வாசனை வீசுகின்ற முல்லையரும்பைப் போல விளங்கப்பட்ட பற்களையும் சூரியனாலுண்டாகும் வெயிலைப்போல எறிக்கும்படி பிரகாசியாநின்ற காதுகளிலணிந்த இரண்டு மகரகுண்டலங்களை யும் உடைய மாதர்கள் வளையல்கள் பொருந்திய தங்கள் சிவந்த இரண்டு கை களும் கொப்புளிக்கும்படி பந்து விளையாடலைக் கோடிபேர்கள் பழகுவார்க ளந்தப் பட்டணத்தில். (எ-று.) [27]

பொற்கலா பார மின்னப் புணர்முலைக் கலன்க ளோங்க
விற்கைமா ரனையும் விற்கும் புருவவில் விழியம் பேவக்
கற்கொணா மழலை யன்னங் கலாபமா மயூரஞ் சூழ
நற்கழங் காடிப் பாடு மாதரந் நகர மெல்லாம்

(இ-ள்) பொன்னாற் செய்து நவமணிகளிழைத்த மேகலாபாரணமான து மின்னவும் இரண்டு முலைகளிலணிந்திராநின்ற ஆபரணங்கள் பிரகாசிக்கவும் கையிலே கரும்பு வில்லையுடைய மன்மதனையும் அடிமைப்படுத்தி விற்கும்படி யான புருவங்களாகிய வில்லிலே கண்களாகிய அம்புகளை யேவவும், கற்கக் கூடாத நடையை விரும்பி யிளமையான அன்னங்களுந் தோகையையுடைய பெரிய மயில்களுஞ் சூழவும் நல்ல கழங்குகளை விளையாடிப் பாடுகின்ற மாதர் களே அந்த நகரத்திலெல்லா மிருக்கின்றார்கள். (எ-று) [28]

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

மூசு வண்டு வாச முண்டு முகிலிடத்து முரலவே
மாசில் கெண்டை மீனிரண்டு வள்ளை மீது துள்ளவே
பூசல் கொண்ட வாளி யைந்து பூங்கரும்பு பொழியவே
யூசலின்க ணாடுகின்ற மாத ரந்த வூரெலாம்

(இ-ள்) வண்டுகள் மொய்த்துப் புஷ்ப வாசனையையுண்டு கார்மேகத்தையொத்த கரிய கூந்தலில் இருந்து வொலிக்கும்படியாகவும் குற்றமில்லாத கெண்டை மீனையொத்த இரண்டு கண்கள், வள்ளைக்கொடிபோன்ற இரண்டு காதுகளின்மீது துள்ளும்படியாகவும் சண்டை செய்கின்ற மன்மதனுடைய பஞ்ச பாணங்களும் அவனுடைய அழகிய கரும்பு வில்லில் இருந்து பொழியும்படியாகவும் ஊஞ்சலினிடத்திருந்து விளையாடுகின்ற மாதர்கள் அந்த நகரத்திலெல்லா மிருக்கின்றார்கள். (எ-று) [29]

மழைத வழ்ந்த சிகர கூட மாந கர்க்குள் வைகினு
னழக மைந்த குங்கு மக்கு ழம்ப ளாவி யறுபதங்
கொழுதி யங்க ராக துங்கி மங்கை மாதர் கொங்கையா
லுழுத சநத னந்தி மிர்ந்த வொளிகு லாவு மார்பினன்.

(இ-ள்) அழகு நிறைந்த குங்குமக் குழம்பில் கலந்து கோதியும், அவ்விடத்திலாசையுடனே அவ்வாசனையை விழுங்கியும் இராநின்ற வண்டுகள் பொருந்திய பூமாலையணிந்த மஙகைப் பருவத்தையுடைய மாதர்களின் ஸ்தனங்களாலே யுழுத சந்தனத்தைப் பூசிய வொளி பொருந்திய மார்பினையுடைய அந்தச் சோழராசனானவன் மேகஙகள் தவிழ்கின்ற சிகரங்களையுடைய மாடகூட கோபுரம் முதலியவை பொருநதிய பெரிதான அந்த நகரத்திலே வைகி யிருந்தான் (எ-று.) [30]

தபன மண்ட லஞ்செ றிநத சயில மன்ன வொளியதா
மிபம டங்க லெழுது செம்பொ னாச னத்தி லெய்தினு
னபிந யங்கள் பெறுகு ரும்பை யனைய கொங்கை மங்கைமா
ருபய செங்கை கவரி வீச வூச லாடு தாரினன்.

(இ-ள்) அபிநயங்களைப்பெற்றத தெங்கின் குரும்பைபோன்ற முலைகளையுடைய பெண்கள் சிவந்த கைகளினாலே யிரண்டு பக்கங்களிலுநின்று உபய சாமரங்கள் வீச அதினாலே ஊசலைப்போல ஆடுகின்ற மாலைகளையுடையவனாகிய அந்தச் சோழராசனானவன் மலைபோலப் பிரகாசம்பொருந்திய யானைகளும் சிஙகஙகளும் விளங்கும்படிககு செம்பொன்னாலாகிய சூரிய மண்டலம் நெருங்கியதற்கொப்பான ஆஸ்தான மண்டபததில வீற்றிருந்தான். (என்றவாறு) [31]

கலிநிலைத்துறை.

தோன்று மிக்கதை நிறுத்திமேற் கதையினைச் சொல்கேன்
கான்று தேன்கமழ் வாரிசங் குவளைசெங் கழுநீ
ரான்ற சண்பகங் குருந்துமல் லிகைதள வனைத்து
மூன்று காலமு மிறையவற் கணிந்தனன் முனிவன்.

(இ-ள்) யாவருக்கும் பிரசித்தமாய்த் தோன்றும்படி சொல்லிய இந்தச் சோழராஜன் கதையை நிறுத்தி இனிமேல் சாரமாமுனிவருடைய கதையைச் சொல்லுகிறேன். வாசனை பொருந்திய தேனைச்சொரிகின்ற செந்தாமரை நீலோத்பலம் செங்கழுநீர் நிறைந்த வாசனை பொருந்திய சண்பகம் குருந்து மல்லிகை முல்லை இருவாட்சியாகிய இவைகளின் மலர்களையெல்லாம் மூன்று காலங்களிலும் சிரமலை நாதருக்கு அருச்சித்துக் கொண்டுவந்தார் சாரமா முனிவர் (எ-று) [32]

எந்த நாணமக் கிறையவ னருள்செயு மென்றே
புந்தி மேவுற நினைந்துமா முனியுறை பொழுதி
லைந்து மாமுக னேவலா லழைக்க வநததுபோன்
மந்த மாருதங் கொணர்ந்தது புதுமலர் மணமே.

(இ-ள்) எநதக்காலத்தில் நமக்குச் சிவபெருமான் திருவருள் செய்வாரோவென்று தனது அறிவிலே பொருந்தும்படி நினைந்துகொண்டு சாரமா முனிவரிருககின்ற பொழுதில் பெருமைபொருந்திய பஞ்சமுகங்களையுடைய சிரமலை நாதரின் ஏவலினாலே அழைக்கவந்ததுபோல் புதுமையாயுள்ள மலரினுடைய வாசனையைத் தென்றற்காற்றானது கொண்டுவந்துவீசியது (எ-று)

இன்ன பூமண மெதுவெனத் தெளிகிலா னிறைவன்
சொன்ன பூமண மிதுவென மனத்தினாற் றுணிந்தா
னன்ன போதினை யரியயற் கரியவற் கணிந்தார்க்
கென்ன பேறரி தென்பெற வருள்செயா னென்றான்.

(இ-ள்) இத்தன்மையான பூவினுடைய வாசனையானது எப்படிப்பட்டதென்று தெளியாமல்சந்தேகப்பட்டு அப்பால் சிவபெருமான் முன்னாலே திருவாய்மலர்ந்தருளிச்செய்த பூவினுடைய வாசனையிதுவென்று மனதினாற்றுணிந்து அப்பேர்ப்பட்ட மலரை மாலுமயனுந்தேடி காணுதற்கரிய கடவுளுடைய முடிமேலணிந்த பேர்களுக்கு அரிதாய்ப்பெறத்தக்க பேறுகள் யாதிருக்கின்றன. முத்தி முதலிய எப்பேர்ப்பட்ட பதவிகளையவர்கள் பெறும்படி கிருபை செய்யாமலிருப்பாராவென்று சாரமாமுனிவர் நினைந்தார் (எ-று) [34]

தாணு வானவற் கிம்மல ரணிந்தவர் தம்மைக்
காண வேண்டுமென் றிருந்தன னவன்றுயில் கனவி
ஞண ருமட மாதர்தம் வரவெலா நாளை
வேண வாவினுற் றெளியலா மறைந்து நீவினவில்

(இ ள்) தாணுவாகிய சிவபெருமானுக்கு இந்தமலரைக் கொணர்ந்தளித்தவர்களைப் பார்க்கவேண்டுமென்று சாரமாமுனிவர் இருந்தார். பின்பு அவர் நித்திரை செய்கின்ற காலத்தில் கனவிலே சுவாமி எழுந்தருளி இந்தப்புஷ்பங்களைக் கொண்டுவாநின்ற நாணமும் இளமையும் பொருந்திய மாதர்களாலே யந்தப்புஷ்பத்தின் வரவெல்லாம் நீ நாளையத்தினைய நமமுடையசன்னதியிலே மறைந்துயிருந்து கேட்பாயாகில வேண்டப்பட்ட ஆசையினுலே தெளிந்து கொள்ளலாமென்ருர் (எ-று) [35]

மனதி னெண்ணமு முடிந்திடு மெனச்சொலி மறைந்தான்
கனவு தீர்நதபி னற்றையின் கடனெலாங் கழித்தா
னினன கன்றவல் லிருளிலோர் புறத்தொளித் திருந்தான்
பனக நாட்டினு மடந்தையர் நடநதனர் பரவ.

(இ-ள்) சாரமாமுனிவருடைய சொர்ப்பனததில் எழுந்தருளி உன் மனதிலே நினைத்த எண்ணமும் அந்தப்பிரகாரம் நீ வினவில் முடிந்திடுமென்று அருளிச்செய்து சுவாமி மறைந்தார். சொாப்பனம் நீங்கி விடிந்தபிறகு சாரமாமுனிவரும் அன்றைக்குச் செய்யவேண்டிய நித்திய கன்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு சூரியன் அஸ்தமித்து வலிய இருளவந்தபின்பு சன்னதியிலோர் புறத்தில் மறைந்திருந்தார். அப்பொழுது சிவபெருமானைப் பூஜிக்க நாகலோகத்திலிருந்து நாககன்னியாகள் வநதார்கள் (எ-று) [36]

மண்ணி னிற்சிவ தடத்தொரு பிலத்து நல்வழியா
னண்ணி யற்புத மடந்தைய ரெழுவரு நடந்து
புண்ணி யச்செழும் போதுடன் புகன்றிடு பொருள்க
ளெண்ணி ரட்டியுங் கொணர்நதுவந் தருச்சனை யியற்றி.

(இ-ள்) இந்தமலையடிவாரம் பூமியிலுள்ள சிவதீர்த்தமாகிய தடாகத்திலிருக்கின்ற பிலததுவாரத்தின் நல்லவழியால் அற்புதமுள்ள நாககன்னியர்கள் எழுவரும் நடந்துவந்து புண்ணியமாகச் செழித்திராநின்ற செவ்வந்திமலருடனே சொல்லப்பட்ட பொருள்களாகிய சோடச உபசாரங்களுங்கொண்டுவந்து சுவாமிக்கு அருச்சனை செய்தார்கள் (எ-று) [37]

மின்னை நேருவார் வலஞ்செய்து வணங்கினர் மீண்டார்
மன்னு மாதவ னெழுந்தனர் முன்புபோய் வளைத்தான்
கன்னி மார்களு மதிசய மிதுவெனக் கருதி
யென்ன காரண மிவனமைத் தடுத்வா றென்றார்.

(இ-ள்) மின்னலைப்போல விளங்காநின்ற அந்த நாககன்னியர்களெழு வரும் வலமாகப் பிரதட்சணஞ்செய்து சுவாமியை வணங்கித் தங்களிருப்பிட மாகிய நாகலோகத்துக்குப் போகும்படி திரும்பினார்கள். அப்பொழுது நிலை பெற்ற பெரிய தவத்தையுடைய சாரமாமுனிவரெழுந்து அந்தப் பெண்களின் முன்னேபோய்த் தடுத்தார். அதைக்கண்டு கன்னியர்களாகிய அந்தப்பெண் கள் இது அதிசயமென்றெண்ணி நம்மை யிவர் தடுத்தது என்ன காரணமென் றாலோசித்தார்கள். (எ-று) [38]

எண்ணில் காலமா விருட்பொழு திடையிவ ணெய்தி
யண்ண லார்பதந் தொழுதுமீண் டெம்முல கடைவோங்
கண்ணி னாலெமை யொருவருங் கண்டதாக் காணேம்
புண்ணி யாபுகல் யாவனீ யெனமுனி புகல்வான்

(இ-ள்) எண்ணிக்கையில்லாத வெகுகாலமாக இராத்திரியிலே யிருட் பொழுதில் இவ்விடம் வந்து அண்ணலாகிய சுவாமியினுடைய திருவடிகளைத் தொழுதுமீண்டு எங்கள் உலகங்களுக்குப் போவோம் இதுவரையில் எங்களை யொருவருங் கண்ணினாலே கண்டதாகக் காணேம் புண்ணியத்தையுடைய வனே நீ யார் சொல்லுவாயென்று அந்தப் பெண்கள் கேட்கச் சாரமாமுனி சொல்லுகின்றார். (எ-று) [39]

என்ற னும்முஞ் சாரனென் றிசைப்பரீ திருக்கச்
சென்று மாதவ ரிருடியர் மானவர் தேவர்
நன்றி யாலர னருச்சனை புரிவதே நன்மை
யன்றி மங்கைய ரருச்சனை புரிந்திட லாமோ,

(இ-ள்) பெண்களே கேளுங்கள் என்னுடைய பெயருஞ் சாரனென்று சொல்லுவார்கள். இந்த வார்த்தை இருக்கட்டும். சிவாலயத்திற் சென்று மாதவர்களும் இருடியர்களுந் தேவர்களும் மனிதர்களும் பக்தியினாலே சிவார்ச் சனை செய்வதே நன்மையல்லாமல் பெண்களாயினோர் அருச்சனை செய்யக் கூடுமோ கூடாதேயென்று சொல்லிப் பின்னுஞ் சாரமாமுனிவர் சொல்லு கிறார். (எ-று) [40]

அஞ்சு சுத்தியும் புரிந்துநல் லாகமத் தடைவே
வஞ்சி மங்கையர் பூசனை முடிப்பது வழக்கன்
றஞ்ச லிப்பதே கருமமஃ தடுக்கழி வென்று
னஞ்ச கற்றிய காருட மியற்றிய நாவான்.

(இ-ள்) பஞ்சசுத்திகளுஞ் செய்து நல்ல சிவாகமத்தின் வழியாலே வஞ்சியராகிய மாதர்கள்-பூசனைசெய்து முடிப்பது நீதியன்று மாதர்கள் அஞ்சலி செய்து வணங்குவதே நீதியாகும் அப்படிப் பூசிப்பது முறைமைப் பிசகென்று நாககன்னியர்களுடைய உக்கிரமான விஷப்பார்வை தம்மேற் செல்லாமல் விஷத்தை நீக்குங் காருடமந்திரமெனனுஞ் பஞ்சாட்சரத்தை யுச்சரித்திரா நின்ற நாவையுடைய சாரமாமுனிவர் சொன்னார். பஞ்சசுத்திகளாவன - பூதசுத்தி - ஆத்மசுத்தி - திரவியசுத்தி - மந்திரசுத்தி - ஸ்தானசுத்தி என்பவைகளாம். (எ-று) [41]

உத்த மத்தவ னிவ்வணஞ் சொலவவ ருரைப்பார்
பத்தி பெற்றவர் யாவரும் பணியலாம் பரனைப்
புத்த னாவ லறிந்தது சிலைகொலோ போதோ
முத்தி பெற்றவ னல்லனோ வேடனு மொழிவீர்.

(இ-ள்) உத்தமமாகிய தவத்தையுடைய சாரமாமுனிவர் இந்தப் பிரகாரஞ்சொல்ல அதற்கு அந்த நாககன்னியர்கள் சொல்லுவார்கள். பத்தியைப் பெற்றவர்கள் யாவராயினுஞ் சிவபெருமானைப் பூசித்துப் பணியலாம். பௌத்தமதத்தில் திருவவதாரஞ்செய்த சாக்கியநாயனார் அருச்சனைக்குப் பதிலாக பத்தியினாலே யெறிந்தது சுவாமிக்குக் கல்லாயிருந்ததோ - மலராயிருந்ததோ - சொல்லுங் அல்லாமலும் வேட்டுவசாதியிலே பிறந்த கண்ணப்பநாயனார் முத்தியைப் பெற்றவர் அல்லரோ மொழியக் கடவீர் என்று அந்தப் பெண்கள் கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார்கள். (எ-று) [42]

யானை யேமுத லெறும்பது கடையதா வனைத்தும்
வான நாடனை வழிபட வில்லையோ மலரான்
ஞான முற்றவ ரல்லரோ கிரியையி னடப்போ
ரேனை யோர்க்கெலாம் பத்தியே மூலமென் றிசைத்தார்.

(இ-ன்) யானைமுதலெறும்பு கடையான உயிர்களனைத்தும்-வானநாடனாகிய சிவபெருமானை மலர்களாலே பூசித்து வழிபாடு செய்யவில்லையோ அன்றியும் கிரியையிலே நடப்போரா ஞானத்தையடைந்தவர்களல்லவோ மற்ற யோக ஞான முதலியவற்றை யுடையவர்களுக்குஞ் சரியைகிரியையுடைய எல்லோர்களுக்கும் மூலமாயிருப்பது பத்தியேயென்று அந்த நாககன்னியர்கள் சொன்னார்கள். (எ-று) [43]

வீர வேல்விழி மடந்தைய ரிவையெலாம் விளம்பச்
சார மாமுனி மொழிவனீ ருரைத்தது தகவே
யீர வன்பினுர்க் கருளுப தேசமு மெய்திற்
சேரு நன்கனி பாலுடன் கலந்திடு செயலாம்.

(இ-ள்) வீரனுடைய கையிலிராநின்ற வெற்றியையுடைய வேலாயுதம் போன்ற கண்களையுடைய பெண்கள் இவைகளெல்லாஞ் சொல்ல அதற்கு நீங்கள் சொல்லியவைகள் தகுதியானதேயென்று சாரமாமுனிவர் கூறி ஆயினும் மிகுந்த அன்பையுடையோர்க்கு ஆசாரியருடைய உபதேசமும் சேரில் பொருந்துகின்ற நல்ல பழமானது பாலுடனே கலந்த செய்கையைப்போலாகுமென்று சொன்னுர். (எ-று) மதுரமான பாலுடனே நல்ல ருசிகரமான பழமுஞ் சேர்ந்தால் எப்படி மகா ருசிகரம் பொருந்தியிருக்குமோ அதுபோல உங்களன்பானது மிகுந்த சிறப்புள்ளதாயிருக்குமானதால் அகத்தியம் அருளுபதேசம் வேண்டுமென்பதாம். [44]

பரவு கூர்விழி விடத்திணுற் கடிதடப் படத்தான்
மருவு நீண்மணிச் சுடிகையா லரவென வரலா
லுரக நாட்டுறை மடந்தையர்க் கொருபுடை யொப்பீர்
தெரிகி லேனுமை யாவர்நீ ரெனவுரை செய்வார்.

(இ-ள்) பரந்து கூர்ந்திராநின்ற கண்களாலும் விடத்திணுலும் பிரகாசமாக விசாலித்திராநின்ற படத்திணுலும் (அந்தப் படத்தில்) பொருந்தியிருக்கின்ற நீண்ட இரத்நச் சுடிகையாலும் நாகத்தைப்போல வருதலிணுலும் அந்த நாகலோகத்திலிருக்கின்ற மாதர்களுக்கு ஒருபட்சம் ஒப்பாகவிருக்கிறீர்கள் உங்களை யின்னுரென்று தெரிந்துகொள்ளககூடாதவனுயிருக்கிறேன் ஆதலால் நீங்கள் யாரென்று சாரமாமுனிவர் கேட்க அதற்கு அந்த நாகலோகத்துப் பெண்கள் சொல்லுகின்றுர்கள். (எ-று) சுடிகையென்பது உச்சி. [45]

நாக நாட்டுறை யிறையவன் புதல்வியர் நாங்க
ளேக மாகவே யித்தலத் தெழுவரு மெய்திச்
சோக நீங்கிடப் பாதலப் புதுமலர் தொடுத்துப்
பாக வான்மதி முடியவற் கணிகுவோம் பரவி.

(இ-ள்) கேளும் முனிவரே நாங்கள் நாகலோகத்திலிருக்கின்ற அரசனுடைய பெண்கள் எழுபேர்களும். இந்தத் தலததிலே ஏகமாகவே மனம் ஒருமித்தடைந்து எங்களுடைய பிறவித துன்பம் நீக்கும்படியாகப் பாதாளலோகத்திலுள்ள புதிதாகிய புஷ்பங்களாலே மாலைதொடுத்துப் பாதியாகிய

உயர்ந்த மதியை முடியிலணிந்திராநின்ற சிராமலோநாதருக்கு அணிந்து வணங்குவோமென்று சொல்லிப் பின்னும் அந்தப் பெண்கள் சொல்லுகிறார்கள். (எ-று) [46]

கலிவிருத்தம்

தத்துவங் கடந்தவர் தாயி னல்லவர்
பத்தருக் கினியவர் பரம யோகியர்
சித்தருக் கெளியவர் திருவி னுபகர்
புத்திரர்க் கரியவ ரென்று போற்றினர்.

(இ-ள்) சகல தத்துவங்களுங் கடந்த அதீதர். தாயைப் பார்க்கினும் கருணையைச் செய்கின்றவர் பத்தராயுள்ள அடியார்களுக்கு இன்பமாயுள்ளவர். சிரேஷ்டமான சிவயோகியர்களாகிய சித்தருக்கெளியவராயிருப்பவர். திருமாலுமவர் புத்திரனை பிரமாவுந் தேடிக்காண்பதற்கரியவர். என்று சாரமாமுனிக்குச் சொல்லிச் சுவாமியை வணங்கித் துதித்தார்கள் அந்த நாகலோகத்துப் பெண்கள் (எ-று) [47]

கலிநிலைத்துறை.

அரிவை மீருமத் தருச்சனை யழகிய ததற்கே
குரவர் பாலுப தேசமு நலமெனக் கூறப்
பரவி நல்லுப தேசநீ ரருள்கெனப் பகர்ந்தார்
தெரிவை மார்களுக் கருளினு னவனுப தேசம்.

(இ-ள்) பெண்களே யுங்களுடைய அருச்சனையானது சிறந்த அழகுள்ளதா யிருக்கின்றது அதற்கு ஆசாரியனிடத்திற் பெற்றுக்கொள்ளும்படியான உபதேசமுங்கூடினால் மிகுந்த நலமாயிருக்குமென்று சாரமாமுனிவர் சொல்ல, அப்பொழுதே யவரை யந்தப்பெண்கள் வணங்கி யந்தநல்லுபதேசத்தை நீரே யருள்செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அக்கணமே யந்த நாகலோகத்துப் பெண்களுக்குச் சாரமாமுனிவர் உபதேசத்தை யருளிச்செய்தார். (எ-று) [48]

அடிக ளேயுமக் கடியவர்க் கடியரேம் பதிக்கு
விடைகொ டேகுவோ மெனச்சொலிப் பதத்தின்மேல் வீழ்ந்தார்
படவ ராவிறை புதல்விய ரெழுவரைப் பார்த்துத்
தொடர்ப தானதன் பிற ரியின்வர வெலாஞ் சொன்னன்.

(இ-ள்) எமக்குச் சுவாமிகளாயுள்ள முனிவரே யுமக்கு அடியராயினோர்க்கு அடியார்களாகிய யாங்கள் எமது பதிக்குச் செல்லும்படி உத்திரவு

கொடும் போகிறோமென்று சொல்லிச் சாரமாமுனிவருடைய பாதத்திலே யந்தப் பெண்களேழுபேர்களும் வீழ்ந்து நமஸ்காரஞ் செய்தார்களப்போது படம்பொருந்திய பாம்புகளின் அரசனுடைய புதல்வியராகிய அப்பெண்க ளெழுவரையும் பார்த்துத் தமக்குத் தொடர்பாயுள்ள பிறவியினுடைய தமது வரவுகளை யெல்லாம் அந்தப் பெண்களுக்குச் சாரமாமுனிவர் சொன்னார். (எ-று) [49]

இற்றை நாளிலென் கனவினி லிறையவ னெய்தி
யுற்ற வுங்களைக் காண்பது முதலெலா முரைத்தான்
கற்றை வார்குழன் மடந்தையி ரவ்வணங் கண்டேன்
சுற்ற மாயினீ ருமக்குநங் கருத்தினைச் சொல்கேன்.

(இ-ள்) இன்றையதினம் என்னுடைய சொற்பனத்திலே சிவபெரு மானெழுந்தருளிவந்து அன்புபொருந்திய உங்களைக் காண்பது முதலாகிய வெல்லாம் அருளிச்செய்தார். திரட்சையாகி நீண்டிராநின்ற கூந்தலையுடைய பெண்களே யந்தப்பிரகாரம் உங்களைக்கண்டேன். நீங்கள் நட்பினராயி னீர்கள். ஆதலால் அப்பேர்ப்பட்ட உங்களுக்கு நமது கருத்தினைச் சொல்லு கிறேன் கேளுங்களென்று சாரமாமுனிவர் சொல்லிப் பின்னுஞ் சொல்லு கிறார். (எ-று) [50]

பாத லத்தினீர் கொணர்ந்தவிப் புதுமலர் பலவும்
பூத லத்திலே கொணர்ந்துநல் லருச்சனை புரியி
னேத மற்றிடு முத்தியா மெனவிறை யிசைத்தா
னாத லிற்புது நாண்மலர் வேண்டினே மதற்கா.

(இ-ள்) கன்னிப்பருவமுள்ள பெண்களே நீங்கள்-நாக லோகத்திலி ருந்து கொண்டுவந்த விந்தப்புதிதாகிய புஷ்பங்கள் பலவும் பூலோகத்திலே கொண்டுவந்து பயிர்பண்ணி யம்மலரை யெடுத்து நன்மையாக அருச்சனை செய்தால் பிறவித்துன்பம் நீங்கி முத்தியின்பமுண்டாகுமென்று சுவாமி யரு ளிச் செய்தார். ஆதலினாலே அந்தப் புதிதாகிய நாண்மலரை நாம் விரும்பி னோம். அதற்காகவென்று சாரமாமுனிவர் கூறிப் பின்னுமந்தப் பெண்களை நோக்கிச் சொல்லுகிறார். (எ-று) [51]

உங்க ணாட்டின்யாம் வருகுவோம் வருந்திற முரையீர்
தங்க நாட்டிய நிறத்தினீ ரெனசசொன்னான் றவத்தோ
னெங்க ணாட்டினீர் வருகுவ தரிதரி தென்றார்
கொங்கை நாட்டமென் றிரண்டினுங் கொலைசெயுங்கொடியார்

(இ-ள்) அந்த மலருக்காக உங்களுடைய நாட்டிற்கு நாம் வருகிறோம். வருகின்ற வழி முதலிய திறத்தை சுவர்னப்பிரகாசம்போலு நிறத்தையுடைய

பெண்களே சொல்லுங்களென்று சாரமாமுனிவர் கேட்டார்; அதற்கு அப் பெண்கள் எங்களுடைய நாட்டிற்கு நீர் வருவது மிகவும் அரிதென்று சொன்னார்கள். அப்படிச்சொன்னவர்க ளெப்படிப்பட்டவர்களென்றால், முலைகளாலும் கண்களாலும் ஆடவரை மயக்கி வருத்தமடையச் செய்கின்ற கொடியோராகிய அந்த நாகலோகத்துப்பெண்கள். (எ-று) [52]

பிலம தாம்வழி யுலகெலாங் கடுவிருட் பிழம்பு
விலகொ ணாநதி யாவது மாசுண விடநீ
ரிலகு மன்னனைக் காணவு மருமையுண் டெவர்க்கு
மலரு மக்குவந் தெய்துமோ வருமையோ வறியோம்

(இ-ள்) ஐயா சாரமாமுனிவரே எங்களுடைய நாட்டிற்குப் போகின்ற வழி பிலத்துவாரமாகும். எங்களுலகங்களெல்லாம் கடுமையான இருட்பிழம்பு நெருங்கி விலகாமலிருக்கும். அவ்விடத்தில் நதியாவது பாம்புகளுடைய விடத்தின் நீராகும். அபபடி விளங்காநின்ற சர்ப்பங்களின் அரசனைக் காணவும் எவர்க்கும் அருமையுண்டாகும் ஆகலால் நீர் விரும்பிய மலருமக்குக் கிடைக்குமோ கிடையாமலரிதாகுமோ நாஙகளறியோமென்று அந்தப்பெண்கள் சொன்னார்கள் (எ-று) [53]

என்று கூறினா ரியாவையு மிறையவ னியற்கை
யன்றி வேறிலை யடியவர் நினைவெலா மளிப்பான்
சென்று போதுமென் றுரைத்தனன் யோகியர் திலக
னன்று நீரெழுந் தருள்கவென் றவருமுன் னடந்தார்.

(இ-ள்) இப்படியென்று அந்த நாககன்னியர்கள் சொன்னார்கள். அதைக் கேட்டு எல்லாஞ் சிவபெருமானுடைய செயலேயன்றி வேறில்லை. அடியவர்களுடைய மனதிலுள்ள நினைவுகளையெல்லாம் அவரே கூட்டிவைப்பார். ஆதலால் சென்றுபோவோமென்று முனிசிரேஷ்டராகிய சாரமாமுனிவர் சொன்னார். நல்லது நீரெழுந்தருளக் கடவதென்றப் பெண்கள் கூறி முன்னே நடந்தார்கள். (எ-று) [54]

சிவத டக்கரைப் பிலவழி முனியுடன் சென்று
தவமு தற்றனை யொருபுடை நிறுத்தியே தந்தைக்
குவகை யுற்றிடத் தவமுனி வரவினை யுரைத்தார்
பவம கற்றினான் றனையழை யெனவவர் பணித்தார்.

(இ-ள்) சிவதீர்த்தத்தினுடைய தடக்கரையிலுள்ள பிலத்துவாரத்தின் வழியாகச் சாரமாமுனியுடனே அந்தப் பெண்கள் சென்று தவத்திலே முதன்மையான அம்முனிவரை யொருபக்கத்தில் நிறுத்தி பிதாவாகிய நாகராஜா

வுக்கு மகிழ்ச்சி பொருந்தும்படி யந்த சாரமாமுனிவர் வரவைச் சொன்னார்கள். அதைக்கேட்டுப் பிறவிநீங்கிய அம்முனிவரை யழைத்துவரும்படி சொல்ல அந்தப் பெண்கள் சாரமாமுனிவரிடத்திலே வந்து சொல்லித் தங்கள் பிதாவின் முன்னே யழைத்து போய்விட்டார்கள். (எ-று) [55]

வந்த மாதவ முனிவனைத் தவிசின் மேல் வைத்திட்
டெந்த மாதவ மியற்றினே னீர்வர வென்று
னந்த மாதவ னுரைசெய்வா னுலகமா மனைத்து
முந்து மல்லிகை யரும்பென முடித்திடு முதலே.

(இ-ள்) அப்படி யந்தப்பெண்களாலே அழைத்துவந்த சாரமாமுனிவரை ஆசனத்தின்மேல் வைத்து நான் முன்னம் எந்தப் பெருமைபொருந்திய தவத்தைச் செய்தேன். நீர் இவ்விடத்தில் வருவதற்கென்று நாகலோகத்தரசன் சொன்னான். அதற்கு அந்தச் சாரமாமுனிவர் சொல்லுகிறார் உலகங்களையெல்லாம் சிரேஷ்டமான மல்லிகையரும்பைப்போலச் சிரசிலே முடித்திருக்கிற முதலேயென்று கூறிப் பின்னுஞ் சாரமாமுனிவர் சொல்லுகிறார் (எ-று)

வைய முண்டவன் றன்னையுந் தாங்கிடு மணியே
யைய னாடலை விழியினா லருந்துநல் லமிர்தே
மெய்ய தாகவே வியாகர ணங்களை விரித்தோ
யுய்யு மாறுனை யடைநதன னெனவவ னுரைப்பான்.

(இ-ள்) உலகத்தையுண்ட நாரணனையும் அணையாகத் தாங்கும்மணியே ஐயனாகிய சிவபெருமான் சிற்சபையில் செய்யும் நடனத்தைப் பதஞ்சலியென்னும் பெயருடைய முனிவராகத் திருவுருக்கொண்டு கண்களினாலே யருந்துகின்ற நல்ல அமிர்தமே உண்மையாகவே வியாகரண நூல்களை விரித்தவனே நான் கடைத்தேறும் வண்ணம் உன்னையடைந்தேனென்று சாரமாமுனிவர் சொல்ல ஆதிசேடனானவன் அதற்குப் பதில் சொல்லுகிறான். (எ-று) [57]

வந்த காரியம் யாதென வுரைசெய்வான் மணச்செவ்
வந்திமாமலர் வேண்டியே யிவ்விடை வந்தே
னெந்தை யாயரு ளென்றன னெழுவரு மிசைத்தார்
தந்தை பான்முனி பிறப்புமற் றவன்செயுந் தவமும்

(இ-ள்) நீர் வந்தகாரியம் யாதென்று சாரமாமுனிவரை நோக்கி ஆதிசேடன் கேட்க வாசனைபொருந்திய செவ்வந்திமாமலரை விரும்பி யிவ்விடத்தில் வந்தேன். அந்த மலரை யெனதையனே கிடைக்கும்படி யருள் செய்ய வேண்டுமென்று சாரமாமுனிவர் சொன்னார். அப்பொழுது நாககன்னியர்க

னெழுவரும் தமது பிதாவிடத்திலந்த முனிவருடைய பிறப்பும் அவர் செய்கின்ற தவமும் செவ்வந்திமலருக்காக அவர் வந்தது முதலியயாவும் விஸ்தாரமாகத் தெரியும்படிச் சொன்னார்கள். (எ-று) [58]

மாத வத்தனே நறுமலர்ப் புதலைமண் ணுடனே
கோத கற்றியே கொண்டு போதுக வெனக்கொடுத்திட்
டாத வற்கிணை யானசெம் மணிகளு மளித்து
மேதி னிக்கணே யருச்சனை புரிகென விடுத்தான்.

(இ-ள்) பெருமை பொருந்திய தவத்தையுடைய சாரமாமுனிவரே வாசனையுள்ள செவ்வந்திமலர்ப்புதலை மண்ணுடனே குற்றததை நீக்கி நீர் கொண்டுபோகக் கடவதென்று கொடுத்ததுமன்றி சூரியப்பிரகாசம் போன்ற இரத்நங்களையுங் கொடுத்துப் பூமியின்கண்ணே சிவபெருமானை யருச்சனை செய்யக் கடவதென்றுசொல்லிச் சாரமாமுனிவரை சாப்பராசன் அனுப்பினான். (எ-று) [59]

தன்க ணங்களிற் சிலர்தமை யழைத்திவர் தமக்குப்
பின்பு சென்றிடு மெனசசொனு னவருடன் பெயர்ந்து
மின்கு லாவமு னடந்துநீள் பிலவழி மீண்டு
வன்பி லாமுனி யவையெலாங் கோயின்முன் வைத்தான்

(இ-ள்) நாகராஜனானவன் தன்னுடைய பரிசனங்களிலே சிலரை யழைதது இந்தச் சாரமாமுனிவருடனே பின்பு செல்லுங்களென்று சொன்னான். அந்தப்படி யவர்களுடனே பிரகாசமபொருந்தும்படி முன்னேநடந்து நீண்ட பிலததுவாரத்தின் வழியாய் வந்து அன்பையுடைய அந்தச் சாரமாமுனிவர் அவைகளை யெலாஞ் சுவாமி யெழுந்தருளியிருக்கிற ஆலயத்திலே சன்னிதானத்தின் முன்னே வைத்தார் (எ று) [60]

கலிவிருத்தம்

வரமுனி கொணர்ந்தசெவ் வந்தி மாமுத
றரணியுந் தரணியிற் றருதல் வேண்டியோ
விரிகதிர்க் கரங்களை யூன்றி மேற்றிசை
யிருளுறு பாதலத் திறங்கி யிட்டதே

(இ-ள்) சிரேஷ்டமுள்ள சாரமாமுனிவர் சிவார்ச்சனைக்காகப் பாதாளலோகத்திலிருந்து கொண்டுவந்த செவ்வந்திமலரின் பெருமை பொருந்திய புதலைத் தரணியாகிய சூரியனும் அந்தப்படி அருச்சனை செய்வதற்காகத் தரணியாகிய பூமியிலே தருதலை விரும்பித் தனது விரிந்த கிரணங்களான கைகளை மேற்குத் திசையிலேயூன்றி யிருளையுடைய பாதாளலோகத்தில் இறங்கியதைப்போலச் சூரியன் அஸ்தமனமானான். (எ-று) [61]

முகிழ்நகை யிளமுலை முளரி வாண்முகப்
புகரயில் விழியினர் புலவி நீங்கினர்
மகிதல மிசைந்துசெவ் வந்தி வந்ததென்
றகிலமு நிறைந்துசெவ் வந்தி யானதே

(இ-ள்) தாமரை யரும்பைப்போலவிளங்காநின்ற விளமையாகிய முலைகளையும் அம் மலரைப்போலப் பிரகாசியாநின்ற முகத்தையும் இரத்தப் பொரிகள் பொருந்திய வேலாயுதத்தை யொத்த விழிகளையுமுடைய மாதர்கள் கலவியிலெண்ணமுடையவர்களாகி தமது நாயகர்களிடத்திலுள்ள புலவியை நீங்கினார்கள். (என்றால் கலவியி லெண்ணமுடையவரானார்கள் அதற்கேது இதனால் மாலைக்காலம் வந்தது என்பது கருத்து) அந்த மாலைக்காலத்திற் றோன்றிய செவ்வானமானது எப்படி யிருந்ததென்றால் அப்போது பாதாளலோகத்திலேயிருந்த செவ்வந்திப் புஷ்பமானது பூலோகத்திலே வந்ததென்று யாவரும் அறியும்படியாய் எல்லாவிடங்களிலுஞ் செவ்வந்திமலரே நிறைந்தது போல ஆகாயத்தில் செவ்வானம் பரவியிருந்தது. (எ-று) [62]

மேனிறை கங்குலின் விரிந்து வெள்ளிய
பானிறை யுடுக்கணம் பலவுந் தோன்றுதன்
மாநிலம் பாதல மலரைக் காட்டுமுன்
வானமுங் காட்டிய வாறு போலுமே

(இ-ள்) எல்லாப் பொருள்களையுங் கீழிட்டு மேலிட்டு நிறைந்திராநின்ற இருள் பொருந்திய காலத்திலே விரிந்து பாலைப்போல வெண்மையாய் நிறைந்த நட்சத்திரங்களின் கூட்டங்கள் யாவும் வானத்தில் தோன்றுதல் பெரிய மண்ணுலகமானது பாதாள லோகத்தின் செவ்வந்திமலரைக் காட்டுதற்கு முன்னே விண்ணுலகமுங் காட்டியவாறுபோலுமிருந்தது. (எ-று) [63]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அட்டமா நாகந் தம்முட் குணதிசை யரவந் தங்க
ளிட்டமா மிறைவ னீந்த புதன்மல ரெடுக்கும் போது
கொட்டியே பழுது பார்த்துக் குயிற்றெனக் கொடுத்த வெள்ளித்
தட்டமா மென்னக் கீழ்பாற் சந்திர னுதயஞ் செய்தான்

(இ-ள்) அஷ்டமாநாகங்களுக்குள்ளே கிழக்குத்திசையிலுள்ள நாகமானது தங்களுக்கு இஷ்டமாகிய நாக அரசனாற் கொடுக்கப்பட்ட செவ்வந்திப் புதலிலே யிருந்து மலரை யெடுக்கும்பொழுது அம்மலர்களைக் கொட்டிப் பழுதுபார்த்துச் சுவாமிக்குப் பணிவிடை செய்யும்படியாய்ச் சாரமாமுனிவருக்குக் கொடுத்த 'வெள்ளித்தட்டைப்போலக் கிழக்குத் திசையிலே சந்திரனுதயஞ் செய்தான்' (எ-று) [64]

கலிநிலைத்துறை

கோத்த நித்தில மணியென மதியுடன் குழுமிப்
பூத்த மீனெலா மகன்றன விடிந்தது பொழுது
வாய்த்த மாமுனிக் குதவியாய் மகபதி வகுத்த
வேற்ற மானதின் பதலைபோற் கதிரவ னெழுந்தான்

(இ-ள்) கோத்த முத்துகளைப்போலச் சந்திரனுடனே கூடி ஆகாயத்தில் விளங்கிய நட்சத்திரங்களெல்லாம நீங்கின, பொழுதும் விடிந்தது செவ்வந்திமலரைப் பெற்றிராநின்ற சாரமாமுனிவருககுத் தண்ணீர் யிறைப்பதற்கு உயர்ந்ததாயும் இனிமையுமுள்ள தாழியை கீழ்த்திககுப் பாலகனாகிய இந்திரனாலே உதவியதுபோலச் சூரியனுதயமானா. சிவபணிவிடைக்கு உதவியாய்ச் செவ்வந்திபுதலுக்கு நீரிறைக்குஞ் சாலைப்போலும் உதயமானானென்பதாம் (எ-று) [65]

அந்த வேளையி னொருமொழி யுரைசெய்வா னமல
னிந்த நற்புதன் முதலையிவ் விடத்திலே யிசைத்தா
லந்த நற்புத லொன்றுநூ றனந்தமாய் வளரும்
புந்தி யுற்றநம் மடியர்கைத் தானமே போல.

(இ-ள்) அந்தச்சமயத்தில் நிர்மல சொரூபியாகிய சுவாமி அசரீரியாகச் சொல்லுவார். இந்தச் செவ்வந்திப்பயிரை யின்னதானத்திலே பதித்தால் அந்த நல்ல பயிரானது ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரம் லட்சம் கோடியனந்தமாய் வளர்ந்து அறிவையுடைய நமது அடியவருடைய கையிற் கொடுதத தானம் அனந்தமாய் விருத்தியாவதுபோலத் தழைத்தோங்கும் (என்றவாறு) [66]

கலிவிருத்தம்

அம்மொழி கேட்டபி னதனை யாங்கவன்
மெய்ம்மலை மேற்றிசை யடைய வித்தினா
னம்முத லனந்தமா யரும்பி யெங்கணுங்
கொய்மலர் விரிந்துதேன் கொப்பு ளித்ததே.

(இ-ள்) சுவாமி யருளிச்செய்த அந்த மொழியைக் கேட்ட பின்பு அந்தச் செவ்வந்தி முதலை அந்தச் சாரமாமுனிவர் மெய்மையாகிய சிராமலையின் மேற்கு திசையில வைதது்ப் பயிர் பண்ணினார், அந்த முதலானது அளவில்லாத அனந்தகோடியாய்த்தழைத்து அரும்புகளுண்டாகி யெவ்விடத்

திலுங் கொய்யும் பக்குவமான மலர்கள் விரிந்து தேனுங் கொப்புளித்தது. (எ-று) அந்த மலர்கள் விரிந்து தேனுங் கொப்புளித்து வடிந்து பெருக் கெடுத்தது என்பதாம். [67]

சிவதடப் புனலினுற் றெளிந்த போதுகொய்
துவகையிற் சங்கநீ ரொருங்கு வீசியே
தவமுனி யனுதின மிறைக்குச் சாத்தினன்.
கவலையும் பாவமுங் கரந்து போயவே.

(இ-ள்) சாரமாமுனிவர் சிவதடத்துத் தீர்த்த ஜலத்தினாலே விருத்தி யாக்கித் தெளிந்திரா நின்ற செவ்வந்தி மலர்களைக்கொய்து சந்தோஷத்தினாலே சங்கத்திலுள்ள நீர்முழுதுந் தெளித்துப் பரிசுத்தஞ்செய்து அனுதினமுஞ் சிராமலைநாதருக்குச் சாத்திவந்தார். அப்பொழுது அவருக்கிருந்த கவலையும் பாவமும் மறைந்து விட்டோடிப்போயிற்று. (எ-று) [68]

பொறைநிறை தவமுனி புனைந்த தாரினு
லறுகணி முடிப்பிறை யழகு பெற்றது
மறுவற வளர்ந்தசெவ் வந்தி மாலையாற்
பிறையொளி விடுவது பேச வேண்டுமோ.

(இ-ள்) பொறுமையு நிறையுமுடைய சாரமாமுனிவர் புனைந்தணிந்த செவ்வந்தி மலர்மாலையினாலே யறுகையணிந்திராநின்ற சுவாமி முடியிலுள்ள பிறையானது அழகைப்பெற்றது. குற்றமற வளர்ந்திருக்கின்ற அந்தச் செவ் வந்தி மலர்மாலையினாலே அந்தப் பிறையானது பிரகாசமாயிருப்பதைப் பேச வேண்டுமோ? வேண்டியதில்லை. (எ-று.) அந்த மாலையினாலே முடியி லுள்ள பிறையும் மிகுந்த அழகுள்ள பிரகாசத்தைப் பெற்றதென்பதாம். [69]

கலி நிலைத்துறை

சார மெய்த்தவன் கதையினை யிடையிலே தடுத்துப்
பார முற்றதோர் கதையினை யுமக்கு நாம் பகர்வோஞ்
சூர வர்க்கனென் றியற்பெயர் படைத்திடு சோழன்
றூர ணிக்கெலா மன்னைபோன் முன்னவ தரித்தான்

(இ-ள்) இவ்வாறாகிய சாரமாமுனிவரின் கதையை யிடையே நிறுத்தி வைத்துக் கனம்பொருந்திய வொரு கதையை யுங்களுக்கு நாஞ் சொல்லுகி றோம் சூரவாதித்தனென்று இயல்பாகிய பெயரைப் படைத்திடுகின்ற சோழ ராசன் பூமியிலுள்ள உயிர்களுக்கெல்லாம் மாதாவைப்போல முதன்மை யாகப் பிறந்தவன். (எ-று.) [70]

ஏழு மாமுழ வாரணத் துச்சிமே லிருந்தோன்
வாழி குக்குட முயர்த்தொரு மயின்மிசை வருவோ
னாழி மாதவ னெனவுயி ரனைத்தையு மளித்துக்
கோழி மீதினி லிருந்தனன் பெரும்புகழ் குயிற்றி

(இ-ள்) ஏழுமுழ வுயரம் பொருந்திய பெரிதாயுள்ள அயிராவத மென்னும் பெயரையுடைய வெள்ளையானையின் உச்சிமேலிருந்திடும்படியான தேவேந்தரனைப்போலச் சம்பத்தையும் போக போக்கியங்களையுமுடையவன் வாழ்ந்திருக்கப்பட்ட சேவற்கொடியோனை யொப்பற்ற மயில்வாகனத்தின் மேலே வருகின்ற சுப்பிரமணியரைப்போலப் பிரதாபமிகுந்த அழகுள்ளவன். சக்கராயுதத்தையுடைய மகாவிஷ்ணுவைப்போல உயிர்களனைத்தையுங் காத்துப் பரிபாலிக்கின்றவன். பெரிதான கீர்த்தி வளரும்படியாகக் கோழிமாநகரமாகிய உறையூரிலிருந்து அரசாட்சி செய்யப்பட்டவன், (எ-று) [71]

அந்த நாளிலோர் தினத்திலே மிருகயாத் திரைக்கு
வந்து கானகத் துலவிநற் றிரிசிரா மலையின்
முந்தி யேகினன் பின்னருஞ் சாரமா முனிவன்
கந்த மார்வனத் தருகினுந் திரிந்தனன் கங்குல்

(இ-ள்) அப்பேர்ப்பட்ட சூராதித்தச்சோழன் உறையூரிலிருந்து இராச்சியாதிகாரஞ் செய்கின்றகாலத்தில் ஒருநாள் மிருகவேட்டைக்கு வந்து கானகத்திலே உலாவி நல்ல திரிசிராமலையிலே முந்திச்சென்று பின்பு சாரமாமுனிவருடைய வாசனை பொருந்திய நந்தனவனத்தின் பக்கத்திலும் இராப்பொழுதிலே சஞ்சரித்துத் திரிந்தான் (எ-று) [72]

ஏக வீரனும் வேட்டைகொண் டுலவுமவ் விரவி
னாக கன்னிய ரெழுவரு மவ்விடை நடந்து
பாக நாரிய னருச்சனை புரியமுற் படியே
சோக நீங்கிடு சிவதடங் குடைந்தனர் தொகையாய்

(இ-ள்) ஏகவீரனை இராஜா வொருவனுமாய் வேட்டையிலே விருப்பங்கொண்டு உலாவுகின்ற அந்த இராக்காலத்தில் நாகக்கன்னிய ரெழுவரும் அந்த இடத்திலே நடந்துவந்து அர்த்த பாகத்தில் உமாதேவியை வைத்திராநின்ற சிவபெருமானை அருச்சனை செய்ய முன் வழக்கப்படியே துன்பங்களை நீக்கப்பட்ட சிவதடாகத்திலே யவ் வேழுபேர்களும் மூழ்கினார்கள். (எ-று)

கலிவிருத்தம்.

யுவதியர் கோதையி லொழுகு தேனினு
லவரவர் கயல்விழி யஞ்ச னத்தினுற்
குவிமுலை யெழுதிய குங்கு மத்தினுற்
சிவதட முழுவதுஞ் சேறு பட்டதே

(இ-ள்) யுவதியர்களாகிய அந்தப்பெண்கள் ஏழுபேர்களுடைய கூந்தலி லணிந்திராநின்ற பூமாலையிலிருந்தொழுகப்பட்ட தேனினாலும் அவரவர்களுடைய கெண்டைமீன்போன்ற கண்களிலே தீட்டியமைகள் கரைந்ததினாலும் குவிந்த முலைகளிற்பூசிய குங்குமச்சேற்றினாலும் அந்தச் சிவதட முழுவதுங் குளம்பிச் சேறுபட்டது (எ-று) [74]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வேட்டைமேல் விருப்ப மாகிக் கரைமிசை யுலவும் வேந்தன்
கோட்டுவார் முலையார் மூழ்கிக் குளித்திடுஞ் செயலை நோக்கி
நாட்டமா யிரங்கள் வேண்டு மெனச்சொலி நைந்தான் பின்னை
காட்டுமான் கவர்வான் மின்னூர் கலையெலாங் கவர்ந்து போனான்

(இ-ள்) வேட்டையின்மேலே யாசையாகிச் சிவதடக்கரையில் உலாவாநின்ற அரசனானவன் யானைக் கொம்புபோன்ற வாரணிந்த முலைகளையுடைய அப்பெண்கள் எழுவரு மந்தச் சிவதீர்த்தத்திலே முழுகிக் குளித்திடுஞ் செய்கையைப் பார்த்து அவர்கள் அழகைப்பார்க்க ஆயிரங்கண்கள் வேண்டுமென்று சொல்லி விருப்பமுற்று வருந்திப் பின்பு காட்டிலுள்ள மான் முதலிய மிருக வேட்டையுஞ் செய்யாமல் மின்னலைப்போலப் பிரகாசியாநின்ற அந்த நாக கன்னியர்கள் எழுவருடைய கலையாகிய வஸ்திரங்களெல்லாவற்றையுங் கவர்ந்து வாரிக்கொண்டு அப்புறம் போனான்- (எ-று) [75]

ஆயமங் கையர்க ளீரெண் ணாயிர ரன்று வைத்த
தூயமென் கலையை வாரி யொளித்தவச் சுதனே போலச்
சேயமென் கலைக ளெல்லாஞ் சிருட னெடுத்துக் கொண்டு
மாயமோ வென்ன மற்றோ ரிடத்திலே மறைந்து நின்றான்

(இ-ள்) ஆயர்பாடியிலேயுள்ளபதினாறாயிரம்இடைப்பெண்கள் அப்பொழுது வைத்த சுத்தமான மெல்லிய கலைகளையெல்லாம் வாரிக்கொண்டு போயொளித்த ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியைப்போலச் செவ்விதாகிய மிருதுவான அந்த நாககன்னியர்களுடைய சேலைகளையெல்லாஞ் சிறப்புட னெடுத்துக

கொண்டு மாயமோ வென்று சொல்லும்படி வேறோரிடத்திலே போய் சூரவாதித்தச்சோழன் மறைந்துநின்றான், (எ-று) [76]

கலி நிலைந்துறை

கன்னி மார்களு மூழ்கிவந் தேறினர் கரையிற்
பொன்னின் மேகலை சொரிந்தன பதத்தின்மேற் புனலை
யன்ன மாதரைச சிவதடப் புனலெனை யகலா
தின்னும் வாருமென் றழைத்தடி பணிந்ததா மெனவே

(இ-ள்) அப்பொழுது நாககன்னியரெழுவரும் முழுகிக் கரையில் வந்தேறினர்கள் அவர்களுடைய பாதத்தின்மேலே பொன்னினாற் செய்த மேகலாபரணமானது நீரைச்சொரிந்தன அதெப்படியிருந்ததென்றால் அந்தப் பெண்களைச்சிவ தடாகத்தின் ஜலமானது நீங்கள் என்னைவிட்டு அகலாமல் இன்னமும் முழுகிக் குளிக்கிறதற்கு வாருங்களென்றழைத்து அவர்களடியிற் பணிந்ததாகுமென்று சொல்லும்படியிருந்தது (எ-று) [77]

வைத்த வெல்லையிற் றேடினர் கலைகளை மாறு
ரித்த டக்கரை யெய்தியார் கவர்ந்தவ ரென்றார்
சத்தியம் மிவை கவர்ந்தபேர் நாம்விடத் தழலுக்
கொத்த விந்தன மாவரே யெனச்சொலி யுளைந்தார்.

(இ-ள்) அந்த நாககன்னியரெழுவரும் வைத்த இடத்திலே புடவையைத் தேடினார்கள். அப்புடவை யில்லாததினாலே யிக்காலத்தில் இந்தத் தடாகக் கரையிலே வந்து இந்த வஸ்திரங்களைக் கவர்ந்தெடுத்தவர்கள் யாவரென்று எண்ணினார்கள் உண்மையாகவே யிக்கலைகளை வாரியெடுத்தபேர் நமது விஷமாகிய நெருப்புக்கு வொத்திருக்கின்ற விறகாய் எரிவாரே யென்று சொல்லி கோபத்துடனே வருந்தினார்கள். (எ-று) [78]

இன்று பூசனை விலக்கிய பாவியிங் கெவனோ
வென்று கூறிநொந் திரங்கின ரவர்களுக் கெதிரே
குன்று போலிறை நடந்தனன் மடந்தையர் கூட
நின்ற மாசுண மிறைத்தன விடங்களா நெருப்பை.

(இ-ள்) இன்றைக்கு நாஞ் செய்கின்ற பூசனையை விலக்கிய பாவியான வனிவ்விடத்தில் யாவனோ வென்றுசொல்லி மனமானது நொந்து அப்பெண்களெழுவரும் அழுதுகொண்டிருக்கும்பொழுது அவர்களுக்கெதிரே மலையைப் போலச் சோழராஜன் நடந்தான். அதைப் பார்த்து அப்பெண்களின்கூட நின்ற சர்ப்பங்கள் விடங்களாகிய நெருப்பை யிறைத்தன (எ-று) [79]

கடுவி றைத்திடு கனலெலாங் கருடமந் திரத்தாற்
பொடிப டுத்திநன் புனலிடைப் புகுந்தவன் போன்றான்
வடவை யொப்பெனும் விடத்தினைக் கருடமந்திரத்தாற்
றடைப டுத்தினு னிவனெவ னெனவதி சயித்தார்.

(இ-ள்) அப்படியிறைக்கப்பட்ட நெருப்பையொத்தவிஷங்களையெல்லாங் கருடமந்திரத்தினுலே பொடிபட்டோடும்படி யவ்வரசன்செய்து நல்ல ஜலத்திலேபுகுந்திருந்தவனைப்போலக் குளிர்ச்சி யடைந்திருந்தான் வடவாமுகாக்கினியையொத்த அப்பேர்ப்பட்ட விடத்தைக் கருடமந்திரத்தினுலே தடைசெய்த இவன் யாவனென்றெண்ணியப் பெண்களதிசயித்தார்கள் (எ-று) [80]

ஓதி மம்பொரு நடையினர் பயந்துநின் றுரைப்பா
ராதி மன்னனீ யென்பதுன் வடிவினு லறிந்தோம்
பேதை வஞ்சியர்க் கிடர்விளைத் திடுவரோ பெரியோர்
நீதி யல்லவு நல்லற மல்லவு நினைந்தாய்.

(இ-ள்) அன்னத்தைப்போலும் நடையையுடைய அந்தப் பெண்கள் அரசனைக் கண்டு பயந்து நின்று சொல்லுவார்கள் ஆதிபரம்பரையாய் உலகத்தை ஆளுகிற அரசன் - நீ - யென்பது உன்னுடைய வடிவத்தினுலே யறிந்தோம் ஆதலால் பேதையாகிய பெண்களுக்குத் துன்பம் விளையும்படியாய்ப் பெரியோர்கள் செய்வார்களோ அப்படிச் செய்வது நீதியுமல்ல நன்மை பொருந்திய தருமமுமல்லவென்று அரசனே நீ நினைவாய் என்று நாககன்னியர்கள் சொன்னார்கள் (எ-று) [81]

அலைவ கற்றுவ வுயிரினுக் கழகினை யளிப்ப
வுலகி னுக்கெலா முதவிய மகிழ்ச்சியை யுடைய
கலையெ னப்படு மறுபத்து நாலையுங் கடந்தோ
யிலகு மெங்கலை பறிப்பது நீதியோ வென்றார்.

(இ-ள்) உயிர்களுக்குத் துன்பங்களை யகற்றுவனவாயும் அழகிய இன்பங்களைக் கொடுப்பனவாயும் எல்லா வுலகினுக்கும் உதவி செய்தலாகிய மகிழ்ச்சியையுடையதாயுமிருக்கின்றவை கலைகளென்று சொல்லப்படும் அப்பேர்ப்பட்ட கலைகளாகிய அறுபத்து நாலு கலை ஞானக்கடலையுங் கடந்த அரசனே இப்பொழுது நீ எங்களுடைய விளங்கா நின்ற கலையைப் பறிப்பது நீதியோ வென்று அந்தப் பெண்கள் சொன்னார்கள் (எ-று) இலகுமெங்கலைபறிப்பது என்பது - வழிப்பறி - பறிக்கின்ற வேடர் முதலிய கள்ளருக்கே கலையைப் பறிப்பது யுரித்தன்றி வேந்தருக்குரித்தல்லவென்பதுள்ளீடான பொருளாம்;-

மேற்காட்டிய உயிர்களுக்குத் துன்ப முதலியவற்றை நீக்குகின்ற நற்குணங்களானவை அரசர் முதலினோர்கசு கலையாகிய நூலறிவாலாகு மென்பது கருத்து. [82]

தூம முண்டிருண் டலைதருங் குழலியர் சொல்ல
வூம னென்னவே யுரைசெயா தேகினா னுரவோன்
றாம வேலினான் வீரவேள் சூரவா தித்த
நாம னுடைது வல்லவோ வென்றுபி னடந்தார்.

(இ-ள்) அகிற்புகையையுண்டு இருண்டு நீண்டலைதருகின்ற கூந்தலையுடைய அந்தப் பெண்களப்படிச் சொல்ல ஊமனைப்போல வொன்றும் சொல்லாமல் அந்தச் சோழராசன் போனான். அப்பொழுது வெற்றிமாலை பொருந்திய வேலாயுதத்தையுடைய வீரனும் மன்மதனைப்போல அழகுள்ளவனுமான சூரவாதித்தனென்னும் நாமத்தையுடைய அரசனாலே யாளப்பட்ட நாடு இதுவல்லவோவென்று சொல்லி யவன் பின்னே யந்தப்பெண்கள் நடந்தார்கள், (எ-று) [83]

சூர வர்க்கனு மொழிகுவான் மடந்தைமீர் சொன்ன
பேரெ மக்குள துமக்குநா னிழைத்தது பிழையோ
வேரெ டுத்தசீ ரெழுவரி லொருவரை யிசையுங்
கார ணத்தினான் மறைந்துநான் வாரினேன் கலையை.

(இ-ள்) அப்படிக்கு பின்னே நடந்துவந்த அப்பெண்களைப் பார்த்து அரசனான சூரவாதித்தச் சோழராசன் சொல்லுகிறான். கன்னியர்களே நீங்கள் சொன்ன பெயர் எமக்குள்ளது. உங்களுக்கு நான் செய்தது குற்றமோ ஏருந்த அழகுஞ் சிறப்பும் பொருந்திய எழுபேர்களில் ஒருவரை மனைவியாக இசையுங் காரணத்தினாலே யுங்களுடைய கலையாகிய வஸ்திரங்களை மறைந்து நான் வாரினேன் என்று அவ்வரசன் சொன்னான். (எ-று) [84]

அன்ன தாகுமென் றவரவர் கலையெலா மளித்துச்
சொன்ன போததற் குடன்படா தவர்களுஞ் சொல்வார்
மன்ன நீயெமைத் தநதைதாய் கொடுத்திட வரையா
தின்ன வாசகம் பகருவ ததுபழு தென்றார்.

• (இ-ள்) அப்படிப்பட்ட காரணத்தினாலே யுங்களுடைய கலைகளை நான் எடுத்ததாகுமென்று சொல்லி அவரவர்களுடைய கலைகளையெல்லாம் அரசன் கொடுத்துத் தன்னுடைய கருத்தைச் சொன்னபோது அதற்கு உடன்படாமல் அந்தப் பெண்களுஞ் சொல்லுகின்றார்கள். அரசனே நீ யெங்களுடைய தாய்

தந்தையர் உனக்குக் கொடுத்திட அதின்பேரில் விவாகஞ் செய்துகொள்ளா மல் இப்பேர்ப்பட்ட வசனத்தைச சொல்லுவது குற்றமென்று அந்தப் பெண் கள் சொன்னார்கள். (எ-று) [85]

அரவ நாட்டவர் கடற்புவி யரசருக் காமோ
விருளை நேர்விட மமிர்துடன் சேருமோ வென்று
ரரச ஞேதுவா னுரகநாட் டவர்மணி யன்றோ
விரவி போலவெம் முடியின்மேலிருக்கும தென்றான்.

(இ-ள்) நாகலோகத்துப் பெண்கள் சமுத்திரஞ் சூழ்ந்த பூலோகத்தை யாளுகிற அரசருக்கு ஆகுமோ இருளையொத்த விடமானது அமிர்தத்து டனே சேருமோவென்று நாககன்னியர்கள் சொன்னார்கள். அதைக்கேட்டு அரசனாகிய சூராதித்தன் நாகலோகத்திருககின்ற நாகங்களீன்ற மாணிக்க மல்லவோ சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டு எங்களுடைய சிரசின் பேரிலிருக்கின்றதென்று சொன்னான் (எ-று) [86]

உங்க ணாட்டிறை யருளினு லுங்களை வரைதற்
கெங்க ணாட்டினின் றும்முடன் வருகுவே னென்றான்
செங்க ணாட்டிய மலரெலாஞ் சிவனடி சேர்த்துத்
தங்க ணாட்டினி லணுகின ரரசனுந் தாமும்.

(இ-ள்) உங்களுடைய நாகலோகத்தரசனை உங்கள் தகப்பனுடைய அருளினாலே யுங்களை விவாகஞ்செய்து கொள்ளுகிறதற்கு எங்களுடைய நாடா கிய இவ்வுலகத்தினின்று உங்களுடனே வருகிறேனென்று சூராதித்தன் சொன்னான். அதைக்கேட்டு அந்தப்பெண்கள் சம்மதித்துத் தாங்கள் கொண்டு வந்த செவ்வந்திமலரையெல்லாம் சிவபெருமான்றிருவடியிலே அருச்சித்துப் பின்பு அரசனுடனே தாங்களும் நாகலோகம் போய்ச்சேர்ந்தார்கள். (எ-று) []

சூத டுத்தபூண் முலையினர் தாதையைத் தொழுது
பாத லத்துநின் பெருமையும் வளமையும் பார்க்கப்
பூத லத்தினே ரரசனீங் கணைந்துபூம் பொழிலின்
மீத டுத்தன னெனச்சொல விறைவனும் வியந்தான்.

(இ-ள்) சூதாடுகின்ற சொக்கட்டானையொத்த முலையிலே யாபரணங் களணிந்திராநின்ற அப்பெண்கள் தமது பிதாவை வணங்கித்தொழுது நம்மு டைய பாதாளலோகத்திலிருக்கிற வளப்பங்களையும் உம்முடைய பெருமை யையும் பார்க்கும்படியாய்ப் பூலோகத்திலுள்ளவோரரசன் இவ்விடத்திற்கு வந்து நமது பூங்காவனத்திலிருககிறானென்று சொல்ல அதைக்கேட்டு நாக லோகத்தரசனும் வியந்து சந்தோஷப்பட்டான். (எ-று) [88]

ஆயி ரம்பண டவியினுன் வருகவென் றருள
வாயி லாளருங் கொணர்ந்தனர் மனுகுல மணியைக்
கோயில் வாயிலேக் கடந்தவ னுறையிடங் குறுகித்
தூய தாண்மிசைப் பணிந்தன னழகுமேற் றுளும்ப.

(இ-ள்) அப்படி வியந்து சந்தோஷப்பட்ட ஆயிரம் படங்களாகிய காட்டையுடைய சர்ப்ப மன்னவனும் அந்தச் சூரவாதித்தனேவரும்படியாகச் சொல்லியருள வுடனே வாயிலாளர்கள் போயழைத்துக் கொண்டுவந்துவிட்டார்கள். மனுகுலத்தில் பிறந்த மணியாகிய அந்தச் சூரவாதித்தனும் கோயிலின் வாயிலைக்கடந்து பாம்புகளுக்கெல்லாம அரசனுனவன் இருக்கின்ற இடத்தையணைந்து அந்த அரசனுடைய பரிசுத்தமான பாதங்களிலே அழகானது மேலே பொங்குமபடியாய் அந்தச் சூரவாதித்தன்வணங்கினுன் (எ-று.) [89]

அகில மன்னனும் வளவனே யணைத்துவந் தருளி
மகர நான்முகத் தவிசின்மே லமைவுற வைத்துப்
புகரி லின்னமிர் தளாவிய பனிமொழி புகன்றுன்
சகல பாரமு மொருவனுத் தலைமிசைத் தரிப்போன்

(இ-ள்) பூலோகத்தரசனுன சோழராசனை நாகராசன் மார்போடணைத்துச் சந்தோஷித்து அருளி சிங்காதனத்தின்மே லிருக்கும்படி வைத்துக் குற்றமில்லாத இனிய அமிர்தமானது பொருந்தினதைப்போல இனிமையான குளிர்ந்த மொழிகளைச் சொன்னுன் அப்படிச் சொன்னவன் யாரென்றல் பூமியையு மதிலுள்ள சகல பாரங்களையும ஒருவனுகவே தலைமேல் தாங்கித் தரிப்போனுகிய ஆதிசேடன். (எ-று.) [90]

அனைய வாசக மவன்சொல வரவநாட் டரசே
புனையு நின்னெழில் காணவும் புகழவும் புகுந்தா
லுனது கண்கள்போ லாயிரத் திரட்டிக ளுளவோ
வினிய நாவுமப் படியெனக் குள்ளவோ விலையே.

(இ-ள்) அப்படிப்பட்ட இனிய வாசகங்களை நாகலோகத் தரசனுன ஆதிசேடன் சொல்ல அதைக் கேட்டுச் சூரவாதித்தன் சொல்லுவான், சர்ப்பங்களெல்லாம் வாழ்கின்ற நாட்டிற்கு அரசனே சருவாபரணங்களையும் புனேந்திருக்கின்ற உன்னுடைய அழகைக் காணவும் உன்னுடைய கீர்த்தியைப் புகழ்ந்து கொண்டாடவும் வேண்டுமென்றல் உனது கண்களைப்போல இரண்டாயிரங் கண்கள் எனக்குளவோ இனிமையான நாவுகளும அந்தப்படி இரண்

டாயிரம் எனக்குளவோ இல்லையே ஆதலால் நாகங்களின் அரசே உன்னை நான் இரண்டு கண்களாலே பார்த்து ஒரு நாயினாலே யெப்படிப் புகழ்ந்து சொல்லுவேனென்று சூரவாதித்தன் சொன்னான், (எ-று.) [91]

ஊர்ப ரிப்பவர் நாட்டினை யளிப்பவ ருலகின்
சீர்ப ரிப்பவர் சிறுபுக ழனந்தமாய்ச் சிறக்குந்
தார்ப ரிப்பது நிகரென மலரினான் சமைத்த
பார்ப ரித்துநின் றளிக்குநின் றகைமையார் பகர்வார்

(இ-ள்) உலகத்திலுள்ள ஓர் ஊரைத் தாங்கிக் காக்கின்றவர்களும் பல வூர்கள் சேர்ந்த ஒரு நாட்டினைத் தாங்கியளிப்பவர்களும் அந்த நாடுகள் சேர்ந்துள்ள இராச்சியத்தைப் சிறப்பாய்த் தாங்கி அரசாளுகிறவர்களுமாகிய இவர்களுடைய சிறிய புகழ்களானவை யனந்தமாய் அவரவர்களுக்குத் தக்கபடி சிறப்புற்றிருக்கின்றவைகளைச் சொல்லக்கூடும். ஒரு பூமாலையைத் தாங்குவதுபோலப் பிரமனாலாகிய பூமியையெல்லாந் தாங்கிநின்று காக்கின்ற நினது பெருமையாகிய புகழை யார் சொல்லுவார் ஒருவராலுஞ் சொல்லி முடிவு செய்யக்கூடாதென்று சூரவாதித்தன் சொன்னான். (எ-று) [92]

அன்ப னேயென மொழிந்தனன் மொழிந்தவற் கனந்த
னின்ப மாகவொன் றுரைசெய்வா னெமதுநா டெங்கு
முன்பு கார்விட நிறைந்ததிப் பொழுதுநின் மொழியாற்
றுன்ப நீங்கியின் னமிர்தமா யினதெனச் சொன்னான்

(இ-ள்) யாவரிடத்திலும் அன்பையுடையவனே யென்று சூரவாதித்தன் சொன்னான். அப்படிச் சொன்னவனுக்கு அநந்தனாகிய நாகலோகத்தரசன் இன்பமாக வொரு வசனஞ் சொல்லுகிறான். எங்களுடைய நாடாகிய பாதாளலோகமெங்கும் முன்பு கருமையான விடமானது நிறைந்திருந்தது இப்பொழுது வுன்னுடைய சொல்லினாலே அந்த விடமாகிய கொடுமை நீங்கி யினிதாயுள்ள அமிர்தமாயினதென்று சர்ப்ப ராசன் சொன்னான் (எ-று.)[93]

விடைகொடுத்தனன் வளவனும் பெயர்ந்தொரு வீதி
யிடைவ குத்ததோர் மாளிகைத் தவிசின்மே லிருந்தான்
படைம ணிக்கல மமிர்தம்வெண் சாமரம் பளிதந்
தொடைம லர்க்குலஞ் சந்தனம் விடுத்தனன் றொகையா

(இ-ள்) சூரவாதித்தச் சோழராசனைச் சர்ப்ப ராசனும் விடைகொடுத்துப் போய்வரும்படி யனுப்பினான். சர்ப்ப ராசன் உத்திரவு கொடுத்தவுடனே அந்தப்படிப் புறப்பட்டு சூரவாதித்தச் சோழராசனும் அந்த நகரத்திலுள்ள

வொரு வீதியில் அலங்காரஞ் செய்திரானின்ற வொரு மாளிகையில் வைத்திருக்கப்பட்ட சிங்காதனத்தின்மேலிருந்தான். பின்பு சர்ப்ப ராசன் அரசர்க்குரிய ஆயுதங்கள் இரத்நாபரணங்கள் அமிர்தம்போலு மினிய சுவையுள்ள போசன பதார்த்தஙகள் வெண்சாமரம் கருப்பூரம் பூமாலைகள் சிரேஷ்டமான சந்தனம் முதலிய இவைகளையெல்லாந் தகுதி தகுதியாகக் கொடுத்து அனுப்பினான். (எ-று) [94]

இந்தி ரன்பெருஞ் செல்வமா மெனுமவை யெல்லா
மைந்து தன்புல ஞரவே மகிழ்ச்சியா லயின்றான்
வந்து கங்குலுங் கழிந்தது மற்றைநா ளனந்தன்
முந்து பேரவைக் கெய்தின னனந்தனு மொழிவான்

(இ-ள்) தேவேந்திரனுடைய பெரிதான செல்வங்களாகு மென்று சொல்லப்பட்ட அவைகளையெல்லாம் சூரவாதித்தச்சோழராசன் தனது வைம்புலன்களும் நிறையும்படியாகவே மகிழ்ச்சியினாலே யனுபவித்தான். அன்றையத்தினம் இராத்திரியானது வந்து நீங்கியது. மற்றையதினம் அனந்தனாகிய நாகலோகத்தரசனுடைய முதன்மையான பெரியசபையின்கண்ணே அந்தச் சோழராசன் சென்றான். அவனை நோக்கி அந்தச் சர்ப்பராசன் சொல்லுகிறான். (எ-று) [95]

அந்த வாரிதி யுலகினு மிறங்கியிங் கருகில்
வநத காரிய மெதுவென வுரைசெய்வான் வளவன்
முந்து நல்வினை கொணர்ந்தது முனிக்குநீ தருஞ்செவ்
வநதி நின்புகழ் போலவே கிளைத்தது மண்ணில்

(இ-ள்) சமுத்திரஞ் சூழ்ந்திராநின்ற அந்தப் பூலோகததிலிருந்திறங்கி இந்தப் பாதாள லோகத்திலே நமது சமீபத்தில் வந்த காரியம் யாதென்று நாகராசன் கேட்கச் சூரவாதித்தச்சோழராசன் சொல்லுகிறான். முதன்மையான எனது நல்வினையானது இவ்விடததிற் கொண்டுவநது விட்டது. சாரமாமுனிவருககு நீர் தநதருளிய செவ்வநதி மலரானது உம்முடைய புகழைப் போலவே மணணுலகத்தில் அனநதமாயக கிளைததது என்றுசொல்லிப் பின்னுமந்தச் சோழராசன் சொல்லுகிறான் (எ-று) [96]

இன்னு மெங்களுட் டில்லன விரண்டுள குளத்துச்
செங்நெல் வெற்றிலை யெனசசொனான் மொழிகுவான் சேடன்
மன்னர் மன்னவெம் மிடத்தினிற் சிறிதுநாள் வைகிப்
பின்ன ரேகுனக் கவையெலாந் தருகுவோம் பெரிதும்

(இ-ள்) இன்னமெங்களுடைய நாட்டில் இல்லாதவைகள் இரண்டுள்ளன. அதாவது குலத்துச் செந்நெல்லும் கர்ப்பூர வெள்ளைவெற்றிலையுமென்று சூராதித்தச்சோழன் சொன்னான் அதைக்கேட்ட நாகராசன் சொல்லுகிறான்; அரசர்க்கரசனே நம்மிடத்திலே நீ சிறிது நாளிருந்து அதன் பின்பு போகும்போது உனக்கு அவைகளெல்லாம் விசேடமாகக் கொடுப்போமென்று அந்த நாகராசன் சொன்னான் (எ-று) [97]

ஈதி ருக்கவென் னுயிர்க்குயிர்த் துணைவனீ யென்றே
யோதி யிப்படி மகிழ்ந்திடு நாளிலே யொருநாள்
பூத லத்திலுன் சேனையெத் தனையுனைப் புணரு
மாத ரெத்தனை பெயரென வுரைசெய்வான் வளவன்

(இ-ள்) இதுவிருக்கட்டும், என்னுடைய வுயிர்க்குயிரா யிருக்கப்பட்ட துணைவன் நீயேயென்று நாகராசன் சொல்லிச் சூராதித்தச்சோழனை நட்புக்கொண்டபிரகாரம் அந்தச் சோழராசன் மகிழ்ச்சியுடனே யிருக்கின்றநாளிலே யொருநாள் பூலோகத்திலே யுன்னுடையசேனைகளெவ்வளவு யுன்னைப்புணருகின்ற மாதராகிய மனைவியர் எத்தனைபேரென்று நாகராசன் கேட்கச் சோழராசன் சொல்லுகிறான் (எ-று) [98]

ஓங்கு நாற்கட லுடுத்தபா ருலகமென் னுலகந்
தீங்கி லாதவை நிறுத்திவெம் பகையெலாந் தீர்த்துத்
தாங்க வேண்டிய தெத்தனை யத்தனை தானை
பூங்கை மாதரு மிருவரென் மனத்தினைப் போல்வார்.

(இ-ள்) நாலுசமுத்திரஞ் சூழ்ந்துயர்ந்திராநின்ற பரவிய பூமியிலுள்ள இராச்சியமென் னுலகமாகும். தீங்கில்லாதபடி அவ்வுலகத்திலுள்ள வுயிர்களை நிலைபெறச்செய்து வெவ்விய பகைகளை யெல்லாம் நீக்கி அவ்வுயிர்களைத் தாங்குகிறதற்கு வேண்டியதெவ்வளவோ அவ்வளவு சேனைகள் உள்ளன. அழகும் பொலிவும் நல்லொழுக்கமும் எனது மனத்தினைப் போல்வாருமாகிய மனைவியர் இருவர் உண்டென்று சூராதித்தன் நாகராசனுக்குச்சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான். (எ-று) [99]

காடு நாடெலாஞ் செந்நெலும் பூகமுங் கரும்புங்
கோடு முத்தமுங் கமலமு நிறைந்திடுங் குளங்கண்
மேடை யெங்கணு மிரதிபோன் மடந்தையர் விநோத
மாடல் பாடலுண் டமரர்தே வாலய மனைத்தும்.

(இ-ள்) காடுகளும் நாடுகளுமாகிய எல்லாவிடங்களிலும் செந்நெல்லும் கமுகும் கரும்புகளுமுண்டாகுக குளங்களில் சங்குகளும் அவைகளுடைய முத்

தங்களும் தாமரை மலர்களும் நிறைந்திருக்கும் மேன்மாடங்களெங்கு மிரதி யைப்போல் அழகுள்ள மாதர்களுடைய விநோதமான விளையாட்டாகவே யிருக்கும். அல்லாமலும் கூட்டங்களாகிய அடியார்கள் பரவசப்பட்டு ஆடுகின் றனவும் வேதாகமங்களின் ஓசையும், சைவத்திருநெறிச் செந்தமிழோசையும் கீதவோசையுமாகக்கூடிய பாடல்களும் நிறைந்த தேவர்களினது தேவலாயங் கள் எங்கும் உண்டாயிருக்கும். (எ-று) [100]

மந்த ராசல மெனப்பல களிற்றினம் வயங்குஞ்
சந்த னுடவித் தலையிலே தடைபடுந் தபனன்
சுந்த ரானன மடைந்தைய ரணிமணித் தொகையா
லந்த கார மு மிலையவர்க் கரியது மிலையால்.

(இ-ள்) மந்தரகிரியைப்போல உயர்ந்திராநின்ற பலவாகிய யானைகளின் கூட்டங்கள் விளங்கும் உன்னிதமான சந்தனவிருட்சங்களுடைய காட்டிலே சூரியன் தடைபட்டு நிற்பன் அழகான முகம்பொருந்திய மாதர்களணிந்திரா நின்ற நவரத்தனங்களாலாகிய ஆபரணங்களின் கூட்டங்களினாலே இருளென் பது அந்தச் சோழநாட்டிலெப்பவுமில்லை அந்நாட்டிலுள்ளோர்க்கு அரிதான வஸ்துக்களுமில்லையென்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.(எ-று)[101]

பன்ன சாலையு மறையவர் வேள்வியும் பயிலு
மன்ன தானமே முதலிய தானமு மகலா
மன்ன ரேமுதற் குடிகளும் பலவுள மகவான்
பொன்னி னுடெனப் பொன்னிநா டொருபுடையின்.

(இ-ள்) என்னுடைய இராச்சியமான சோழபூமியில் முனிவர்களிருக் கின்ற பன்னசாலைகளும் பிராமணர்கள் செய்யப்பட்ட யாகங்களும் அன்ன தான முதலிய தானங்களும் நீங்காமற் செய்கிற சத்திரங்களிலும் சாலைகளி லும அரசர் முதலான பல குடிகளும் உண்டாயிருக்கும் ஆனதால் தேவேந் திரனுடைய பொன்னுலகத்தைப்போல காவேரியென்னும் பொன்னி நதியை யுடைய சோழநாடானது பூமியின் ஒருபக்கத்திலுளதென்று சொல்லிப் பின் னுஞ் சொல்லுகிறான். (எ-று) [102]

அங்க திற்கம லாலயம் வேதவா ரணியங்
கங்கை சுற்றிய வம்பல மம்பர்மா காளம்
புங்க நற்பதி புகலிவெண் காடரன் புகலூர்
மங்க லக்குடி கஞ்சனூர் செங்குனூர் வழுவூர்

(இ-ள்) அப்பேர்ப்பட்ட சோழநாடாகிய எனது இராச்சியத்திலே திரு வாரூர், வேதாரண்யம், சிவகங்கை சூழ்ந்த சிதம்பரம், அம்பர், மாகாளம் உயர்

வுள்ள நல்ல பதியாகிய சீர்காழி, திருப்புகலி, திருவெண்காடு திருப்புகலூர், திருமங்கலக்குடி, கஞ்சனூர், சேய்ஞலூர், வழுவூர் ஆகிய இந்த ஸ்தலங்களிலே சிவபெருமானெழுந்தருளி யிருப்பதுமன்றி யிதைப்போலவே பின்னுமனேக ஸ்தலங்களிலும் வீற்றிருப்பாரென்று பின்னு மவைகளைச் சூரவாதித்தன் நாக ராசனுக்குச் சொல்லுகிறான் (எ-று) [103]

வையை யென்றொரு நதியதன் கரையிலே மதுரை
மைய னீக்கிய தலமிரா மீச்சுரம் வடக்கே
யையன் வைகிய வதிகைதென் கோவலூ ரருணை
துய்ய கம்பையிற் காஞ்சியென் றொருதலந் துலங்கும்

(இ-ள்) வையையென்று பெயருள்ளவொரு நதியானது தெட்சண திசையிலேயுண்டு அதன் கரையிலே அடியார்களின்பொருட்டு சுவாமி அறு பத்துநான்கு திருவிளையாடல்களைச் செய்தருளிய மதுரையென்னும் ஸ்தல மும் ஸ்ரீராமனுக்கு வந்த பிரமகத்தியாகிய மயக்கத்தை நீக்கிய இராமீச்சுர மென்னுந் தலமும் அதன் வடக்கே எமது யையனாகிய சிவபெருமானெழுந் தருளிய திருவதிகையும், திருக்கோவலூரும், அருணாசலமும் பரிசுத்தமான கம்பா நதியையுடைய காஞ்சிபுரமென்றொரு தலமுமாகிய இந்த ஸ்தலங்க ளெல்லாம் பிரகாசித்துக்கொண்டிருக்கும். (எ-று) [104]

கச்சி மாநகர் தனக்குநேர் வடக்கிலே காசி
பச்சி மத்திலுங் குணத்திலு மருங்கிலும் பலவுண்
டச்சு தன்குகன் கோயிலு நதிகளு மனந்தங்
குச்ச ராதியே முதலிய தேசமுங் கோடி

(இ-ள்) காஞ்சிமாநகரத்திற்கு நேர் வடக்கிலே காசியென்கிறவொரு திவ்விய ஸ்தலமும் அதற்கு மேற்கிலுங் கிழக்கிலும் அவ்விரண்டு திசைக்கு நடுவிலும் பலவாயுள்ள அனேகஞ் சிவஸ்தலங்களுமுண்டு. அதுவுமன்றி விஷ்ணுவாலயங்களுஞ் சுப்பிரமணிய ஸ்தலங்களும் நதிகளுமனந்தம் குச்சரா கள் முதலிய தேசங்களும் அனேகமாயிருக்கும் என்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான். (எ-று.) [105]

பர்ப்ப தங்களும் பல்வுள மணிகளும் பலவுண்
டற்பு தங்களும் பலவுள வென்றிவை யறைந்தான்
சர்ப்ப ராசனு மகிழ்ந்துசிங் காதனத் தவிசு
மெற்செ றிந்தசெம் மணிமுத லானவு மீந்தான்

(இ-ள்) என்னுடைய இராச்சியத்திலே மகா வுன்னிதமான மலைகளும் பல வுண்டு. நவமணிகளும் பலவாயுண்டு. அந்த மலைகண் முதலியவற்றி

லுண்டாகிய அற்புதங்களும் ஆச்சரியங்களும் பலவாயுள்ளனவென்று இவைக ளெல்லாஞ் சூரவாதித்தச் சோழ ராசன் சொன்னான். அவைகளைக் கேட்டு சர்ப்பராசனும் மகிழ்ச்சியடைந்து நாகரத்ந சிங்காதனத் தவிசும் சூரியப் பிரகாசம்போலுள்ள மாணிக்கமணி முதலிய சிவந்த நவரத்நங்களும் கொடுத் தான் (எ-று) [106]

மற்று மொன்றவற் குரைசெய்வான் மன்னவா வுன்னைப்
பெற்ற தந்தையேழ் பிறவியிற் பெறும்பயன் பெற்றான்
கொற்ற வேந்தர்கள் பலருள ரெனினுமிக் குணத்தைக்
கற்ற வேந்தனீ யன்றிவே றொருவரைக் காணேன்

(இ-ள்) சர்ப்ப ராசனானவன் சூரவாதித்தச் சோழனை நோக்கிப் பின்னு மொரு வாக்கியங் கூறுகின்றான். அரசனே யுன்னைப் பெற்ற பிதாவானவன் ஏழு பிறவிகளிலும பெறுகின்ற நற்பயன்களை யெல்லாம் உன்னுடைய மேலான நன்மையினாலே இந்த ஒரே பிறவியிற் பெற்றவனானான். ஜயம் பொருந்திய நல்ல அரசர்கள் பலபேர்களுண்டாயிருந்தாலும் இந்த உத்தம குணத்தைக கற்றிராநின்ற வேந்தன் நீயொருவனேயன்றி வேறொருவரையும் நான் கண்டிலேனென்று அந்த நாகராசன் சொன்னான் (எ-று.) [107]

கூறு கின்றநின் மொழியினா லுடலெலாங் குளிர்ந்த
வீறு கொண்டநின் னெழிலினா லெமதுகூர் விழிகள்
பேறு கொண்டநீ வருதலா லுலகெலாம் பெறுநகை
மாறு கண்டிலேன் மருகனீ யாகுதல் வழக்கால்

(இ-ள்) சர்ப்ப ராசன் பின்னுஞ் சொல்லுகிறான் சூரவாதித்தச் சோழ ராசனே நீ பேசுகின்ற உன்னுடைய சொற்களினாலே யெனது உடலெல்லாங் குளிர்ந்தன. பெருமை பொருந்திய உனது அழகினாலே யெமது கூர்மை யான விழிகள் பெறததகக பேற்றைக கொண்டன நீ யிவ்விடங் வருதலி னாலே நமது வுலகெலாம் பெறுகின்ற பிரதியுபகாரத்தை யான் காணேன் ஆனால் நீ யெனக்கு மருமகனாகுதலே முறைமையாகுமென்று நாகலோகத் தரசன் சோழராசனுக்குச் சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.(எ-று.)[108]

இருவ ருண்டுதோள் புணருதற் கெனவுரைத் திட்டாய்
திருவொ ருத்தியே போதுமோ மார்பகஞ் செறிய
விரிவு மிக்கதன் றோளினு மொருதிரு வேண்டும்
பொருவி லென்மகள் காந்திமா மதியையும் புணர்வாய்

(இ-ள்) சூரவாதித்த சோழராசனே நீ இரண்டு மனைவியர்கள் உண்டுண்டென்று சொன்னாய் அவ்விருவருள் திருமகளையொத்த பட்ட ஸ்திரீயே உனதுமார்பினிடத்துப் பொருந்தப் போதுமோ உனது மார்பானது விரிந்து மேலானதாக விருக்கப்பட்டதல்லவா அந்தத் திருமகளைப்போல இன்னுமொரு திருமகள் உனக்கு வேண்டும். ஆதலால் ஒப்பில்லாத என் மகளாகிய காந்திமா மதியையும் விவாகஞ் செய்துகொள்வா யென்று ஆதிசேஷன் சொன்னான்' (என்றவாறு) [109]

மன்னர் மன்னனே யெனச்சொனான் வளவனுண்மகிழ்வுற்
றென்ன நீபணித் திடினும்யா னியைவனே யென்றான்
பன்ன காதிபன் பணிகளுக் குரைத்தனன் பணிகள்
பொன்னி னுடெனத் தமதுநா டனைத்தையும் புனைய

(இ-ள்) அரசர்களெல்லா மரசனே யென்று சர்ப்ப ராசன் சொன்னான். அப்படியவன் சொன்னவையெல்லாஞ் சோழராசன் கேட்டு வுள்ளமகிழ்ந்து எந்தப்படி நீர் சொன்னாலும் அதற்கு நானிசைந்துகொள்ளத்தக்கவனே என்று சொன்னான். அதைக் கேட்ட பன்னகாதிபனாகிய சர்ப்ப ராசன் சர்ப்பங்களுக்குச் சொன்னான். நகரத்தையும் பொன்னுலகத்தைபோல அலங்காரஞ் செய்ய. அந்தப்படி தன் பரிசனங்களாகிய சர்ப்பங்கள் எல்லாம் எத்தனித்தார்கள். (எ-று.) [110]

சேடர் சேணுயர் வாயிலை நெருக்கினார் தேரா
லாட ரங்கெலாந் தமனிய மணிகளா லமைத்தார்
மாட மாளிகை தொறுமணிக் குடநிரை வைத்தார்
கூட கோபுரம் புனைந்தனர் நேத்திரக் கொடியால்.

(இ-ள்) அந்தப்படி ஏவல் செய்வோர் ஆகாயம் வரையில் உயர்ந்திரா நின்ற வாயிலைத் தேர்களாலே வெளியிட மில்லாமல் நெருங்க வைத்தார்கள் ஆடப்பட்ட நடனசாலைகளெல்லாந்தமனியமாகிய தங்கத்தினாலும் நவமணிகளாலும் பொருந்தும்படி செய்தார்கள் மாடங்கள் மாளிகைகள்தோறும் நவமணிகளாற் செய்த குடங்களை வரிசையாய் வைத்தார்கள் மகா சேர்த்தியான நேத்திரம்போன்ற வொளியுள்ள மணிக்கொடிகளாலே கூடகோபுரங்களையெல்லாம் அலங்கரித்தார்கள் (எ-று) [111]

இமச லங்களைத் தெளித்துமான் மதப்புன விறைத்திட்
டமரர் கற்பக வனமெனக் காவள மமைத்துத்
தமனி யத்தனி மண்டபங் கோயிலுட் சமைத்துக்
கமல நாயகி யுறையுளா மெனும்படி கண்டார்.

(இ-ள்) இடமுழுதுங் குளிர்ந்த பனிநீரைத் தெளித்து அதன்மேல் மான்மதமாகிய கஸ்தூரியின் நீரை யிறைத்திட்டுத் தேவர்களுடைய கற்பக வனத்தைப்போலக் காவின் வளமுதலிய பந்தர்களெல்லாம் அமைத்து தங்கத் தினலே யொப்பற்ற மண்டபமுங் கோயிலுள்ளே சமைத்து இலக்குமி யுறைந்திருக்கின்ற ஆலயமாமென்று சொல்லும்படி செய்தார்கள் பரிசனர்கள் (எ-று) [112]

அந்த மண்டபந் தன்னிலோ ராதன மமைத்தார்
வந்து சூரவா தித்தனு மிருந்தனன் மதியு
மிநது மாமதி யெனவொரு புடையமர்ந் திருந்தா
டந்தை யானவன் கொடுத்திட வேற்றனன் றுரை.

(இ-ள்) அப்படி யலங்காரமுள்ள சொர்ணமண்டபத்திலே நவரத்தின சிஙகாதன மொன்றமைத்து வைத்தார்கள் அந்த ஆசனததிலே சூரவாதித்தச் சோழராஜன் வந்திருந்தான் சந்திரப் பிரகாசத்தை யொத்த காந்திமதியும் வந்து அவனுடைய வொருபக்கத்தில்கூட வமர்ந்திருந்தாள். அப்பொழுது தகப்பனுன சர்ப்ப ராஜன் தா[illegible]வார்த்துக்கொடுக்க அதைச் சோழராஜன் ஏற்றுக்கொண்டான் (எ-று) [113]

ஓம வேள்விமுன் வரைந்தனன் வலம்புரி யொலிக்கக்
காம வேளுட னிரதிபோ லிருந்தனன் கலந்து
மாம னங்கவர்க் களித்தனன் றரணியு மணியுந்
தாம வாரமுஞ் சேடியர் பலருமா தனமும்.

(இ-ள்) வேதாகமங்களின் விதிப்படிக்கு யோமம் வளர்த்து அந்தவோ மாக்கினியாகிய வேள்வியின் முன்னே காந்திமதியைச் சூரவாதித்தன் வலம் புரிசஙகம் ஒலிக்கும்படி விவாகஞ் செய்துகொண்டு இரதியுடனேகூடிய மன் மதனைப்போலக் கலந்திருந்தான். பின்பு மாமனுகிய சர்ப்பராஜன் அவர் களுக்குப் பாதாள லோகத்திலுள்ள தரணியாகிய சில ராச்சியங்களையும் நவ மணிகளையும் அந்த மணிகளாலும் நாகரத்தினங்களாலுஞ் செய்த மோகன மாலை முதலிய ஆபரணங்களையும பெருமை பொருந்திய தனங்களையுஞ் சீதனமாய்க் கொடுத்ததுமன்றித தன் மகளுக்கு ஊழியஞ்செய்யச் சேடியர் களாகிய பலதாதிகளையுங் கொடுத்தான் (எ-று) [114]

பணிக ளானவை விடைகொடு போந்தன பணிந்து
மணிகு லாமுடி யனந்தனும் புகுந்தனன் மனையிற்
றணிவி லாமயற் காநதியும் வளவனுந் தழுவி
யணிகொ ளின்பவா ரிதியிலே மூழ்கின ரழுந்தி

(இ-ள்) விவாகத்திற்காக வந்திருந்த நாகங்களானவை தங்களரசனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வணங்கி யிருப்பிடம்போய்ச் சேர்ந்தன. மணிகள் விளங்கிய முடியையுடைய சர்ப்பராஜனும் தனது மனையிடம் போய்ச் சேர்ந்தான் குறைவில்லாத மிகுந்த ஆசையையுடைய காந்திமதியுஞ் சோழராஜனும் புணர்ந்து அழகுபொருந்திய இன்பக்கடலிலே மூழ்கியழுந்தினார்கள் (எ-று) [115]

தாரு மாலையு மயங்கிடக் கருங்குழல் சரிய
வேரு முத்தமுஞ் சொரிந்திட மேகலை மிழற்றக்
கூர வேல்விழி சிவந்திட விளர்த்திடக் குமுதம்
வார முலை நாஞ்சிலா லுழுதனண் மார்பை.

(இ-ள்) இராஜாவுடைய தோளிலணிந்த பூமாலையுங் காந்திமாமதியுடைய மார்பிலணிந்த முத்துமாலையும் பொருந்திக கலந்திட கருமையாகிய கூந்தல் சரியவும், வேர்வைத்துளியாகிய முத்துக்களும், மாலையிலுள்ள முத்துக்களுஞ் சொரியவும், மேகலையிலுள்ள மணிகளொலிக்கவும், கூர்மையான வேலாயுதம்போன்ற கண்கள் சிவந்திடவும், செங்குமுதமலர்ப்போன்ற இதழ்கள் வெளுப்புறவும, கச்சணிந்த ஸ்தனமாகியநிலப்பையினாலேஇராஜாவுடைய மார்பாகிய பூமியை ஆசைப் பயிருண்டாகி வளரும் பொருட்டுக் காந்திமதி யுழுதாள். (எ-று) [116]

கலிவிருத்தம்

முற்றிடை யகன்றன கழன்ற முத்தணி
சிற்றிடை யவளொடுஞ் செறிந்து சூழ்ந்தன
பொற்றொடி யெனுமுழை பிடிக்கப் போர்மதன்
மற்றொரு வலைகொடு வளைத்தல் போலுமே.

(இ-ள்) இருவருங்கூடி யொன்றாய்ப் புணரும்பொழுது அவர்களணிந்திராநின்ற தொழின்முற்றிய ஆபரணங்க ளவர்களைவிட்டு நீங்கின. அப்படி நீங்கியவைகளிற் கழன்ற முத்தணிகளானவை சிறியஇடையையுடைய காந்திமதியோடும் நெருங்கிச் சூழ்ந்து வளைந்துகொண்டன. அதெப்படி யிருந்த தென்றால் பொற்றொடி என்னும் பெண்ணாகிய மானைப் பிடிக்கப் போர் செய்கின்ற மன்மதனானவன வேறொரு வலையைக்கொண்டு வளைத்தலைப் போலுமிருந்தது. (எ-று) [117]

பரிபுர மொருதரஞ் சிலம்பப் பல்கலை
யொருதரம் புலம்புற வுவரி யாகிய
சுரதவிஞ் சையிலவன் றோளிற் றுஞ்சினாள்
வரைமிசைப் படர்ந்திடும் வல்லி போலவே

(இ-ள்) சிலம்புகளொருதாம் ஒலிக்கவும் பல மணிகளையுடைய மேகலையானது வொருதாஞ் சத்திக்கவும் காமக்கடலாகிய சுரதவித்தை செயத ஆயாசத்தினலே அரசனுடைய தோளில் காந்திமதி நித்திரைசெய்தாள். அது மலையின்மேலே படர்ந்திருக்கின்ற கொடியைப்போலிருந்தது, (எ-று) [118]

கலிநிலைத்துறை

அன்ன மேயெழு பிறப்பினு முனைப்பிரிந் தகலே
னென்ன வேபுகழ்ந் துரைத்தன னெழுபிறப் பிகந்த
பின்ன ராயினு மென்னைநீ ரகன்றுளம் பிணிக்குங்
கன்னிமாருடன் புணருவீ ரெனசசொலிக் கலுழ்ந்தாள்.

(இ-ள்) அன்னம் போன்றவளே யுன்னை யெழுவகைப் பிறப்பினு நான் பிரிந்து அகன்றிலேனென்று அரசன புகழ்ந்துரைத்தான் அதைக்கேட்டு அந்த எழுவகைப் பிறப்பு நீங்கியபின்பாலுலும என்னை நீர் பிரிந்து உமது மனதைக் கவர்ந்து கட்டப்பட்ட கன்னிமார்களுடனேபுணர்ந்திருப்பீரென்று சொல்லிக் காந்திமதியானவள் கலஙகினள் (எ-று) [119]

வாடி னுண்மலர்த் திருமுகங் கருகினள் வருநதி
யூடி னளவ னூடலை யுணர்த்தின னுணர்நது
கூடி னூரவ ரிருவருங் கலவியிற் குளித்துத்
தேடி னார்தமை யறிகிலா ரிராப்பகல் சிறிதும்.

(இ-ள்) அப்படி மனஙகலங்கிச் சரீரம்வாடிச் செநதாமரையலர்போன்ற திருமுகங்கருகி வருத்தமடைந்து காந்திமாயதியூடினளப்போது அரசன்அவ்வூடலை நீங்கும்படி யுணர்த்தி யவளை மகிழும்படிசெய்து இருவருங்கூடிக காமக் கடலாகிய கலவியிற் குளித்துத் தம்மைத தேடினவர்களையும் இராப்பகலையுஞ் சிறிதுந் தெரியாதவர்களாயிருந்தார்கள் (எ-று) [120]

உருகி யிப்படி முயங்குநா ளினிலவ னுரைப்பான்
முருக லர்த்திரு மடந்தையே யுனதுபூண் முலையா
மிருமருப்பினு லொசிநதறு பதஞ்சிறை யிழந்து
மருளி சைக்கொடு தவழ்நததுன் குர்மிசை வண்டு.

(இ-ள்) இருவருடைய மனமும் உடலுமுருகி யொன்றுபட்டுக்கூடிக் கலந்து மகிழ்ச்சியுடனே யிருக்கின்றநாளிலே யரசனன்வன் சொல்லுகிறான். வாசனையொருந்திய தாமரைமலரில்ருககின்ற திருமகளை யொத்த மடந்தையே யுனது ஆபரணங்களணிந்த முலையாகிய இரண்டு கொம்புகளினலே ஆறு

கால்களுமொடிந்து இரண்டு சிறைகளுமிழந்து மயங்கிய இசையோடு வொலித்துக்கொண்டு உனது பூமாலையின்மேலே யுள்ளவண்டு தனத்திலே தவழ்ந்திருப்பதை நீபா ரென்றரசன் காந்திமாமதிக்குச் சொன்னான். (எ-று) அல்லது உன்னுடைய தனபாரத்தின் மூலையிலே மாலையின்மேலுள்ள வண்டு வந்து தவழ்ந்துகொண்டிருப்பதை நீ பார்த்தாயோ வெனினுமொக்கும். [121]

இந்த வண்டொரு காலமுன் போலமுன் னிருந்த
நந்த னந்தனி லணையுமோ வுரையென நவின்று
னந்த வாசகம் பிரிவுணர்த் தியதென வயர்ந்தா
டந்தை பாலவன் குறிப்பையு முணர்த்தினா டனித்து

(இ-ள்) அப்பேர்ப்பட்ட இந்த வண்டானது வொருகாலத்திலே முன்பு போலப் பூலோகத்தில் முன்னே நானிருந்த நந்தனவனத்திலுள்ள செவ்வந்தி மலரில் பொருந்துமோ சொல்வாயென்று அரசன் காந்திமாமதியிடத்திற் சொன்னான். அந்த வாசகத்தை யவள்கேட்டு அவனது பிரிவை யறிவித்த தென்று சோர்ந்து பின்பு தெளிந்து தனது தந்தையாகிய சர்ப்பராசனிடத்தில் அரசன் தனது ராச்சியத்துக்குப் போகவேணுமென்றிருக்கிற குறிப்பையுந்தனித்தறிவித்தாள் காந்திமாமதி. (எ-று) [122]

மகளு ரைத்தசொல் விடத்தினான் மயங்கிய மன்ன
னிகலி னானையா னிறுத்துவன் வருந்தனீ யென்று
னிகரி லாதுல களிப்பவ னல்லனோ நிருபன்
பகரில் யானுமங் கவனுடன் செல்வது பரிவால்

(இ-ள்) மகளாகிய காந்திமாமதி சொன்ன கொடுமையான சொல்லாகிய விடத்தினாலே மயங்கிய சர்ப்பராசன் பின்பு தெளிந்து வலிமைபொருந்திய உனது நாயகனான சோழராசனை யான் இவ்விடத்திலிருக்கும்படி நிறுத்தி வைக்கிறேன். நீ வருத்தப்படவேண்டாமென்று சொன்னான். அதைக்கேட்ட காந்திமாமதிஒருவரு நிகரில்லாமல் மண்ணுலகத்தைக் காத்து ஆளப்பட்ட அரசனல்லவா. அப்பேர்ப்பட்டவரை நிறுத்திவைப்பது தகுதியன்று சொல்லுமிடத்து யானுமவருடனே செல்வது அன்புக்குரிமையான காரியமென்று சொன்னாள். (எ-று) [123]

போகி மன்னனும் வளவனை யழைத்துநின் புவிக்கு
நாக வல்லியுஞ் செந்நெலுந் தருகுவோ நாளை
யேகு கென்றுதன் மனையிடைப் புகுந்தன னிப்பால்
மோக வல்லிகு ராதவற கிருளிலே மொழிவாள்

(இ-ள்) சர்ப்பராசனும் தன் மருமகனாகிய சோழராசனையழைத்து உன்னுடைய சீமைக்குக் கொண்டுபோகக் கருப்பூரவல்லி வெற்றிலையும் மறுவில்லாத செந்நெற் சம்பா நெல்லும் நாளையதினங் கொடுக்கிறோம். நீ போகலாமென்று சொல்லித் தனது மாளிகையின்கட் சென்றனன். பின்பு காந்திமதியானவள் தன் புருஷனாகிய சூரவாதித்தச் சோழனுக்கு அன்றிராத்திரியில் ஒரு வசனஞ் சொல்லுகிறாள் (எ-று) [124]

அரிய லிங்கமொன் றெந்தைபா லிருக்குமங் கதனைப்
பரவி யீரெழு பாரையு முடியின்மேற் பரித்தான்
புரவ லன்றனை யிரந்துகொண் டுன்பதி புகுந்தாற்
பெரிய வின்பமுஞ் சித்தியு முத்தியும் பெறலாம்

(இ-ள்) அரிதாகிய சிவலிங்கமொன்று எனது பிதாவினிடத்திலிருக்கின்றது அந்த மகாசிவலிங்கத்தைப் பூசித்துப் பதினான்குலகங்களையும் முடியின்மேலே தாங்கும்படியான சத்தியுஞ் சமஸ்த வித்தியா விலாசமும் அவருக்குச் சித்தித்தன. ஆதலாலந்தச் சிவலிங்கத்தை நீர் பெறவேண்டி யந்தச் சர்ப்பராசனை யாசிந்து வாங்கிக்கொண்டு உம்முடைய நகரத்திற்கு நீர் சென்றால், பெரிதாயுள்ள பேரின்பமும் அஷ்டமாசித்தியும் முத்தியாகிய மோட்சமும் பெறலாமென்று காந்திமாமதி தன் பர்த்தாவான சோழராசனுக்குச் சொன்னாள் (எ-று) [125]

என்று கூறினாண் மற்றைநாள் வளவனங் கெழுந்து
சென்று சேடனுக் கோதினா னொருபெருஞ் சிறப்பை
யன்று செந்நெலும் வல்லியு மருகனுக் களித்துக்
குன்ற மென்னவே மணிகளு நிதிகளுங் கொடுத்தான்

(இ-ள்) இப்படியென்று தனது மனைவியாகிய காந்திமாமதி சொன்னதைச் சோழராசன் கேட்டு மறுநாட் காலையிலவன் எழுந்துபோய் ஒப்பற்ற அவனது பெருஞ்சிறப்பை யோதினான். அப்பொழுது மறுவில்லாத செந்நெல்லும், கருப்பூரவல்லி வெற்றிலையும், மருகனாகிய அந்தச் சோழராசனுக்குக் கொடுத்துப் பருவதம்போலத் திரவியங்களையும், நவமணிகளையுங் கொடுத்தான் நாகராசன். (எ-று) [126]

அண்ண லேயினு மளிப்பதே துனக்கென வறைந்தான்
மண்ணி லேயெனக் கரியன விலையொரு வரமுண்
டெண்ணி லுன்னிடத் திலிங்கமா மிறைவனைப் பூசை
பண்ண வேண்டுமென் றுரைத்தன னனந்தனும் பகர்வான்

(இ-ள்) எனது மருகனுகிய அரசனே யுனக்கு இன்னமும் நான் கொடுக்கவேண்டியது யாதென்று சர்ப்ப ராசன் சொன்னான். அதைக்கேட்ட சோழராசன் மண்ணுலகத்திலே யெனக்கு அரிதாயுள்ளனவில்லை யாதலா லொரு வரமானது உண்டாயிருக்கின்றது. அதாவது எண்ணுமிடத்தில் உன்னிடத்திருக்கின்ற சிவலிங்கமாகிய இறைவனைப் பூசை நான் பண்ணவேண்டுமென்று சொன்னான். அதற்கு அனந்தனுங் கூறுகின்றான். (எ-று.) [127]

எங்கி ளைக்கெலா முறைமுறை வழிபடு மிலிங்க
முங்க ளுக்குநான் றருகுவ தன்றென வுரைத்துச்
சங்கை யுற்றுள மெலிந்துதன் மனையிடைச் சார்ந்தான்
கங்கு லிற்றுயில் கனவிலே யிறைவனைக் கண்டான்

(இ-ள்) அந்தச் சிவலிங்கமானது எங்களுடைய கிளைகளுக்கெல்லாந் தலைமுறை தலைமுறையாக வழிபாடு செய்து பூசை பண்ணிக்கொண்டு வருகிறது அதையுங்களுக்கு நான் கொடுப்பதல்லவென்று சொல்லிச் சங்கையுற்றவனுயுள்ளமெலிந்து தன் மனையிலேபோய்ச்சேர்ந்து இராத்திரி நித்திரை பண்ணினன். அப்பொழுது சொர்ப்பனத்திலே சுவாமியைக் கண்டான் நாகராசன். (எ-று.) [128]

மின்கு லாமுடி யனந்தனுக் குரைசெய்வான் விடையோ
னன்பி னுனைப் போலநின் மருகனு மதிக
னின்ப மேனியொன் றிரண்டுகூ றுகநா மிருப்போம்
பின்பு வேண்டிய தொன்றவற் கருளெனப் பெயர்ந்தான

(இ-ள்) விடையோனுகிய சிவபெருமான் மின்னலைப்போல் விளங்காநின்ற முடியையுடைய அனந்தனை நாகராசனுக்கந்தச் சொர்ப்பனத்தி லருளிச்செய்கிறார். அன்பிலே வுன்னைப்போல வுனது மருகனு மதிகமானவனுதலால் நமது யின்ப மேனியாகிய வடிவமொன்று இரண்டு கூறுகவிருப்போம். பின்புச் சூரவாதித்தன் வேண்டப்பட்டதொன்றை யவனுக்கு நீ கொடுப்பாயென்றுரைத்து மறைந்தார் (எ-று.) [129]

புற்ற ராவர சமலனை மகிழ்ந்திருள் புலர்ந்த
மற்றை நாளெழுந் தருச்சனை மனையிலே வந்தா
னற்றை நாளிரு கூறதா யிருந்தன னமல
னுற்ற பாதியை மருகனுக் கருளியொன் றுரைப்பான்

(இ-ன்) புற்றிலே யிருந்து வாழாநின்ற பாம்புகளுக்கெல்லாம் அரசனுனவன் தனது சொர்ப்பனத்திலே வந்து சிவபெருமான் அருளிச்செய்ததை

யுணர்ந்து மகிழ்ச்சியடைந்து இருளானது நீங்கி விடிந்த மற்றையதினங் காலையிலெழுந்து பூஜா க்ரகமாகிய மனையினிடத்தில் வந்தான். அன்றைய தினம் அமலனாகிய சுவாமி இரண்டு கூறாகவிருந்தார். அதில் ஒரு கூறாகிய பாதியை மருகனாகிய சூரவாதித்தனுக்குக் கொடுத்து வொரு வசனஞ் சொல்லுகின்றான். (எ-று.) [130]

அகித லத்திலே யிருப்பனான் மகிதலத் தவனீ
மகளொ ருத்தியிங் குறைவது முறையல மன்னா
தகைப டைக்கலா மருமபொருள் படைக்கலாந் தருமம்
புகழ்ப டைக்கலா மிவளுடன் புவியைநீ புரந்தால்

(இ-ள்) சூரவாதித்தனை நோக்கி நாகராசன் சொல்லுகின்றான். நான் பாதாள லோகத்திலே யிருக்கின்றவன். நீ பூலோகத்திலே யிருக்கின்றவன். எனது மகளாகிய வொருத்தி இந்த இடத்திலே யுன்னைவிட்டிருப்பது முறைமையன்று அரசனே பெருமையைப்படைக்கலாகும், தருமத்தையும் புகழையும் படைக்கலாம், எனது பெண்ணாகிய இந்தக் காந்திமாமதியுடனே கூடி வாழ்ந்து பூமியை நீ அரசாட்சி செய்தாலென்று சொல்லிப் பின்னுஞ்சொல்லுகிறான் நாகராசன். (எ-று.) [131]

வாழு நாளிலே தனைப்பரித் தவரையும் வருத்தித்
தாழு நாளிலே சரணமென் றவரையே சாரு
மேழை போன்முலை வளருநா ளிடைக்கிட ரிழைத்து
வீழு நாளினுங் காப்பதே கடனென விரித்தான்

(இ-ள்) ஒருவன் செல்வத்துடனே வாழ்கின்ற காலத்திலே தன்னைத் தாங்கிக் காத்தபேரையுந் துன்பமுண்டாகும்படி வருத்திப்பின்பு செல்வம் நீங்கித் தாழுங்காலத்தில் தன்னால் வருத்தியபேரையே யடைக்கலமென்று சாரும்படியான அறிவில்லாத ஏழையாகிய ஒருவனைப்போல முலையானது வளருங்காலத்தில் அந்த வளர்ச்சியாகிய பாரத்தைத் தாங்கிப் பாதுகாத்த இடைக்கு அப்போதுன்பத்தைச் செய்து பின்பு அம்முலை சரிந்து அந்த இடையை நோக்கித் துன்பத்துடனே சரணாகதியென்று விழுங்காலத்தினு மன்புடனே அந்த இடையானது தாங்கியிருப்பதை யுணர்ந்து இன்று இருப்பதைப்போல நீ என்றும் எனது பெண்ணினிடத்தி லன்பாயிருக்கவேண்டுமென்னுமுறைமையை விரித்துச் சொல்லி சோழராஜனைக் கேட்டுக்கொண்டான் (எ-று) இடையானது முலை வளருங்காலத்தில் காப்பதினும் தளருங் காலத்திற் காப்பதே பெருந்தன்மையென்பதுகருத்து. [132]

கூர வாளுமொன் றளித்துமின் னுடன்விடை கொடுத்தான்
சூர வாதவ னனந்தனை யணங்குடன் றொழுது
பார கத்திலே யணைந்தான் கங்கையிற் படிந்து
வார ணத்துரி புனைந்தவன் சிராமலை வணங்கி

(இ-ள்) கூர்மைபொருந்தியவாளாயுதமொன்று மருமகனுக்குக்கொடுத்து மகளுடனே மருமகனும் போகும்படி நாகராஜன் விடைகொடுத்தனுப்பினன் அப்பொழுது சூரவாதித்தனுங் காந்திமாமதியும் அந்த நாகராஜனைத்தொழுது தெண்டம்பண்ணி அவனுடைய அனுமதி பெற்றுக்கொண்டு பூலோகத்திற்கு வந்து சிவகங்கையிலே ஸ்நானம் பண்ணி யானையை யுரித்துப்போர்த்தருளிய சிவபெருமானெழுந்தருளிய திரிசிராமலையை வணங்கினன் சூரவாதித்தன், (எ-று) [133]

மாச கற்றிய கோழிமா நகர்தனின் மன்னி
யீச னைக்கன காலயத் தணிபெற விருத்தி
நாச மற்றதோர் திருவிழா நவங்களா நடத்திப்
பூச னைக்குவேண் டியதெலா முதவினன் புரிந்து.

(இ-ள்) அந்தப்படி சிராமலைநாதரை வணங்கி குற்றமில்லாத கோழிமா நகரத்திலே சூரவாதித்தசோழராசன் நிலைபெறவிருந்து நாகலோகத்திலிருந்து கொண்டுவந்த ஈசனுகிய சிவலிங்கப்பெருமானை ஸ்வர்ணமயமான ஆலயத்தில் அழகுபெற எழுந்தருளப்பண்ணி எந்தநாளுங் குறைவில்லாமல் நடந்துவரும் படியான தேர்திருவிழா, ஆடல், பாடல், பூசை, நைவேத்தியம், மேளதாள முதலியவைகளும் புதிதாய் நடத்திவைத்ததுமன்றி ஆகமவிதிப்படி பூசனைக்கு வேண்டிய பொருள்களெல்லாம் அன்புடனே சூரவாதித்தன் உதவிச் சிறப்புச் செய்து வந்தான். (எ-று) [134]

கலிவிருத்தம்

செங்நெலுடன் வெற்றிலை செறிந்தகொடி யெல்லா
மெங்நிலமு மாகவென வெங்கணும் விளைத்தே
மன்னனுல கத்துயிர் வளர்த்துவரு நாளிற்
பன்னகம லத்திசிவ பத்தியின் மிகுந்தாள்.

(இ-ள்) சூரவாதித்தன் கொண்டுவந்த செங்நெல்லுடனே வெற்றிலை நெருங்கிய கொடிகளை யெல்லாந் தனது இராச்சியத்திலுள்ள எந்த நிலங்களிலுமுண்டாகும்படி யெவ்விடத்திலும் விளைத்து நிலைபெற்ற வுலகத்திலுள்ள வுயிர்களை யெல்லாம் அரசன் விருத்திசெய்து வருகின்றகாலத்தில் நாகலோகத்துப்பெண்ணான காந்திமாமதியானவள் சிவபக்தியில் மிகுந்தவளானள். (எ-று) [135]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

அண்ண லிருதா ளருச்சனையைத் தினமுங் கொழுந னனுமதியாற்
பண்ணி யடிசி லயின்றிடுவ தல்லாற் புனலும் பருகியிடா
ணண்ணு நியதி தவறாது நடத்தி வருமந் நாள்களிலே
வண்ண வயிற்றா லிலையிலிளங் கருப்பம் பிறைபோல் வளர்ந்ததுவே

(இ-ள்) பெருமையுடைய அண்ணலாகிய சிராமலைநாதருடையஇரண்டு பாதாரவிந்தங்களினுஞ் செய்கின்ற அருச்சனையைத் தினந்தோறுந் தனது கணவனாகிய சூரவாதித்தச் சோழராசாவின் அனுமதியினாலே பண்ணி ஆகாரங்கொள்ளுவதேயல்லாமல் இடையில் ஜலபானமுஞ் செய்யாள் இப்படிப் பட்ட நியதி தவறாமல் நடத்திவருகின்ற நாள்களிலே அந்தக் காந்திமாமதியினுடைய அழகிய ஆலிலைபோன்ற வயிற்றிலே யிளமையாகிய கருப்பமுஉத்பத்தியாகி மூன்றாம்பிறைபோல் வளர்ந்துகொண்டு வந்தது. (எ-று) [136]

கருப்ப முதிர்ந்துந் தவறாதே காலா னடந்து கயிலை.யெனும்
பொருப்பின் கொழுந்தி னடிதொழுவா ளொருநா ணடந்து போம்பொழுது
நெருப்பின் குழவி யெனும்பரலா லிளைத்தா ளயர்ந்து நெடிதுயிர்த்தாள்
விருபபம் பெருகுஞ் சேடியர்கண் டணைத்தா ரசைத்தார் விசிறியையே.

(இ-ள்) கருப்பமானது முதிர்ந்துந் தவறாமலிப்படிக் காலினாலே நடந்துபோய் தெட்சண கயிலை யென்கிற சிராமலையிலெழுந்தருளிய திருமலைக் கொழுந்தின் திருவடியைப் பூசித்து வணங்கிவருகின்றவள். அந்தப்படி யொருநாள் நடந்துபோகும்பொழுது நெருப்பினிடத்துள்ள சிறிய சிசுவென்னும்படி வெயிலில் பொருந்திய பருக்கைக் கல்லுகளின் வெப்பத்தினாலே வாடி யிளைத்து அயர்ந்து சோர்ந்து பெருமூச்செறிந்து விழுந்தாள் அப்பொழுது அவள்பேரில் ஆசைமிகுந்த தாதிகளும் பார்த்து அவளை யெடுத்து மார்பிலணைத்து விசிறியை யசைத்து விசிறியுபசாரஞ்செய்தார்கள். (எ-று) [137]

அன்னங் களிக்கப் பிடிகளிக்க நடந்தா ளஞ்சா றடியளவு
மின்னு மயர்ந்து மூச்செறிந்து விழுந்தா ளங்கோர் வெள்ளிடையின்
மன்னன் விடுத்த சிவிகையினு மேறா டிரும்பி மனைபுகுதா
ளின்னுஞ் சிவனை யிறைஞ்சியலா லயிலேன் புனலு மென்றாளே.

(இ-ள்) பின்னையுங் காந்திமாமதியானவள் தள்ளாடி யெழுந்திருந்து நடையை அன்னங்களும் பெண்யானைகளுங்கண்டு மகிழும்படி யஞ்சாறு அடியளவு நடந்தாள். அப்படியவள் நடக்கும்பொழுது சோர்ந்து பெருமூச்செறிந்து அவ்விடத்திலுள்ள வொருவெள்ளிடையில் விழுந்தாள். அது

கேட்டு அரசன் அனுப்பிய சிவிகையின் மேலேறித் திரும்பிச்சென்று அரண்மனையிற் போகாதவளாய் இன்னமுஞ் சிராமலையிற்சென்று செவ்வந்திநாதனை வணங்கித் தரிசனம்பண்ணி யல்லாமல் தாகத்துக்குத் தண்ணீருந் தீண்டுகிற தில்லை யென்றாள். (எ-று) [138]

வீர விரத மவள்பிடித்துத் தனையு மறந்து மெலிவுற்றாள்
சார முனிவன் வனமெனவே தாரா கிரகஞ் சமைத்தார்க
ளீர வளற்றுச் செங்களப மிறைத்தார் சொரிந்தா ரிமசலநல்
லார வடங்க ளணிந்தார்கள் படுத்தார் கழுநீ ரகவிதழே.

(இ-ள்) காந்திமாமதியானவள் வீர வைராக்கியமாக ஒரே நினைவாய்த் தான்கொண்ட விரதத்தைவிடாமல் உறுதியாய்ப் பிடித்துத் தன்னையும் மறந்து மெலிவை யடைந்தாள் அப்பொழுது சாரமாமுனிவருடைய திவ்யமான பூங்காவனத்தைப்போலவே தாராகிரகஞ்செய்து அவளுடைய சரீர மெலிவானது நீங்கும்படி ஈரமான சிவந்த களபச்சேற்றை யிறைத்துக் குளிர்ந்த பனிநீரையுஞ் சொரிந்து நல்ல முத்து வடங்களால் அலங்காரஞ்செய்து செங்கழுநீர்ப் புஷ்பத்தினுடைய அகவிதழினாலே படுக்கை பரப்பி அயர்ச்சி நீங்கும்படி யேவலர்கள் செய்தார்கள் (எ-று) தாராகிரக மென்பது—ராஜோபசாரஞ் செய்யுமிடம். [வடமொழி] [139]

அயர்ந்து மடந்தை வருந்துதல்கண் டடியாரக் கெளிய வருட்கடலுஞ்
சயம்பு வடிவா யவளெதிரே யிருந்தா னந்தச் சங்கரனை
வயந்த மெனவே கற்பகப்பூ மலரைச் சொரிந்தார் வானவர்கள்
வியந்து பணிந்து வலம்புரிந்து மீண்டா ணமனக்கு மென்கொடியே

(இ-ள்) காந்திமாமதியானவள் மிகவும் அயர்ச்சியடைந்து சுவாமியினுடைய பாதாரவிந்தத் தரிசனமின்மைகளில்லாமலிருக்கும்படி நேரிட்டதே யென்று மெத்தவும் வருந்தி துன்பப்படுதலைப் பார்த்து அடியார்க்கெளியவராயிருக்கிற அருட்கடலாகிய சுவாமி சுயம்புவடிவமாகத் தோன்றி அந்தக் காந்திமாமதியின் கண்களுக்கெதிரேயிருந்து தரிசனங்கொடுத்தருளினார். அப்படிக் கொடுத்தருளாநின்ற சிவசங்கரப்பிரபுவின் திருவருளைப் புகழ்ந்து தேவர்கள் வசந்தகாலத்தைப்போல கற்பகப்பூமலரைச் சொரிந்தார்கள். அதைக்கண்டு காந்திமாமதி வியந்து தரிசித்துப் பணிந்து பிரதட்சணஞ் செய்து தனது அரண்மனைபோய்ச் சேர்ந்தாளென்றவாறு. [140]

சூர வருக்க ன்திசயித்துச் சூலிக் கிரங்குஞ் சூலிதனக்
கார மதிலுங் கோபுரமு மணியா லயமு மமைப்பித்துச்

தேருஞ் சிறப்புந் திருநாளு மகபூ சனையுஞ் செய்வித்தான்
வீர விரத முன்போல நடத்தி வந்தாண் மென்கொடியே

(இ-ள்) சூரவாதித்தச் சோழராசன் மிகவும் அதிசயித்துக் கருப்பங் கொண்ட ஸ்திரியாகிய தனது மனைவியினிடத்திற் கிருபை செய்தருளிய சூல பாணியாகிய தான்றோன்றீச்சுவரனுக்கு நாலுபுறமும் நிறைந்து சூழ்ந்திருக் கின்ற மதிலுங் கோபுரமும் அழகிய ஆலயமுந் தேருந்திருநாளுந் தினந்தோறு நடக்கின்ற பூசைமுதலிய சிறப்புகளுஞ் செய்வித்து மனைவியினிடத்தே யிருந்த அன்பாயிருந்தான் அவளுந் தான்கொண்ட கொள்கையான வைராக் கியமான விரதத்தை முன்போலவே நடத்திவந்தாளென்றவாறு [141]

ஈன்றாள் குழவி தனையனுந்தன் குரவன் றனினு மெண்மடங்காய்ச்
சான்றாண் மையினு லறநெறியாற் சிவ நூற்றெளிவாற் றகைபெற்றான்
மூன்றும் பெயரான் முடிவாக நாற்பத் தாறு முடிமன்னர்
பூன்று குதிசேர் மகமுடித்து மகவா னுலகம் புக்கனரே

(இ-ள்) காந்திமாமதியும் புத்திரனைப் பெற்றாள். அந்தப் புத்திரனுந் தனது பிதாவைப் பார்க்கினுமெட்டுமடங்கு அதிகமாயறிவு நிறைந்து சான் றாண்மையினாலும் அறத்தின் வழியாலும் சைவநூலின் தெளிவாலும் மேன் மையடைந்தான். அவ்வரசகுமாரன் முதலாக மூன்றுலகங்களிலும் வியாபிக் கும்படி பெயரையும் புகழையும் படைத்த மூன்று அரசர் முடிவாக நாற்பத் தாறு தலைமுறையளவும் முடியையுடைய மன்னவர்கள் இராச்சியபாரம் பண் ணிப் பெரிய ஆகுதிகள் பொருந்திய அசுவமேதயாகம் ராஜசூயயாக முதலிய மகங்களைச் செய்து இந்திரலோகத்தை யடைந்து தேவபதவியைப் பெற்றி ருந்தார்கள். (எ-று) இச்செயயுளால் (49) தலைமுறையாயின. மூன்றுலக மாவன-சொர்கக மதய பாதளம் [142]

சூரவாதித்தச் சருக்க முற்றிற்று.

ஆகச்சருக்கம் 9-க்கு திருவிருத்தம் (396)

௯

ஒன்பதாவது

# உறையூரழித்த சருக்கம்.

---

கலிவிருத்தம்.

ஐம்பதாந் தலைமுறை யதனி லேயொரு
வன்பராந் தகனெனு மன்னன் றோன்றினான்
மின்குலா மணிமுடி மன்னர் மேனியிற்
புன்புலா னிணமழை பொழியும் வேலினான்

(இ-ள்) கோழிமா நகரமென்கிற உறையூரிலே யிராச்சியபாரஞ்செய்த சோழராஜாக்களின் பட்டம் நாற்பத்தொன்பது தலைமுறை கழிந்து ஐம்பதாந் தலைமுறையிலே வன்பராந்தகச் சோழனென்னும் பெயரையுடைய வொரு மன்னனுமவன் தோன்றி யரசாட்சிசெய்துவந்தான். அவன் பிரகாசம்பொருந்திய நவமணிகளிழைத்த கிரீடமணிந்த அரசர்களுடைய சரீரத்திலே புல்லியதாகிய புலால்நாற்றம் பொருந்திய நிணத்தோடு இரத்தவருஷத்தைப் பொழிகின்ற வேலாயுதத்தையுடைய மகாவீரன். (எ-று) [1]

அவனிரு புயத்தினுக் கமைந்த மான்றிருப்
புவனமா தேவியோ டுலகம் போற்றினா
னிவனிலை யிருக்கமு னியம்புமா முனி
சிவனது பணிவிடை செய்ய லுற்றனன்

(இ-ள்) அந்த அரசனுடைய இரண்டுபுயத்திற்குமிசைந்த மான்போன்ற பார்வையும், இலக்குமியை யொத்த அழகுள்ள புவனமாதேவியோடுங்கூடி யுலகத்தை யிரட்சித்து வந்தான். இவனுடைய நிலைமையிப்படியிருக்க முன்னே சொன்ன சாரமாமுனிவர் நந்தவனம் வைத்து அதிலுண்டாகிய செவ்வந்திமல ரெடுத்துச் சிவபெருமானுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார் (எ-று) [2]

புராந்தகற் கவனல ரெடுக்கும் பொங்கரிற்
பராந்தகற் கணிமலர் பறிக்க வந்தொரு
பிராந்தகன் மலரெலா மெடுத்துப் பெய்துகொண்
டராந்திகழ் வேலினாற் கணிய நல்கினான்

(இ-ள்) திரிபுராந்தகனாகிய சிவபெருமானுக்குச் சாரமாமுனிவர் புஷ்பங்களெடுக்கின்ற நந்தவனத்தினிலே வன்பராந்தக சோழனுக்கு அணிந்துகொள்ளும்படியாய்ப்பறிக்கவந்து பிராந்தகனென்னுமொரு மூடனான பூவாணிகன் மலர்களையெல்லாம் பறித்தெடுத்துக்கொண்டுபோய் அரத்தில்ராவிப் பிரகாசியாநின்ற வேலாயுதத்தையுடைய வன்பராந்தகச் சோழராஜனுக்கு அணிந்துகொள்ளும்படி கொடுத்துவந்தான் (எ-று) [3]

அம்மலர் மன்றனுக் கதிச யித்தனன்
செம்மறன் முடிக்கணி சிறப்பெண் ணமலே
யிம்மலர் தினந்தரு கென்று கூறினன்
மெய்ம்மலர் வணிகனும் விடைகொண் டேகினன்

(இ-ள்) இராஜாவானவன் அந்தப்புஷ்பத்தினுடைய தெய்வீகமான வாசனைக்கு அதிசயித்து இந்தப் பூவானது சிவபெருமானது திருமுடியிலணியப்பட்ட சிறப்புடையதென்றெண்ணமல் இந்தப்பூவை தினந்தோறும் கொண்டுவந்து கொடுக்கும்படி அரசன் சொன்னான். அந்தப்படி கொடுக்கிறதாகப்பூவாணிகனும் உத்திரவு பெற்றுக்கொண்டு போனான் (எ-று) [4]

மாலையிற் றுயின்றனன் வனத்தில் வந்திளங்
காலையிற் புதுமலர் கவர்ந்து போயினா
னாலயத் தினுக்கவை யளிக்கு மாமுனி
சோலையிற் புகுந்தலர்த் தொகையைத் தேடினான்.

(இ-ள்) மாலைப்போதான இராத்திரி காலத்தில் சாரமாமுனிவர் நித்திரைசெய்யும் வேளையில் அந்தப்பூவாணிகனானவன் நந்தவனத்திலே புகுந்து இளங்காலைப்போதில் புதியமலர்களையெல்லாந் திருடிக்கொண்டு போயினான். பொழுது விடிந்தவுடனே சாரமாமுனிவர் எப்போதும்போலே சிவாலயத்திற்குக்கொண்டுபோய்ச் சுவாமியின் பணிவிடைக்குக் கொடுக்கப் பூஞ்சோலையிற் சென்றுபார்க்க செவ்வந்திமலர்கள் எப்போதும்போல மிகுதியாயிராததினாலே எங்குமோடித்தேடினார் சாரமாமுனிவர் (எ-று) [5]

இங்கிவை கண்டிலே னெம்மை யாள்பவர்
சங்கரன் முடிமிசைச் சாத்தி னார்களோ
வங்கதை யறிவதற் காக வவ்விடைக்
கொங்கவிழ் சிலமலர் கொண்டு போயினான்

(இ-ள்) இந்த நந்தவனத்திலே புஷ்பங்கள் போனவிதம் இத்தன்மையென்று யான் கண்டிலேனென்று சாரமாமுனிவர் நினைத்துப்பின்பு நம்மை

யாள்பவரான நம்மிலும் அடியார்கள் இந்த புஷ்பத்தையெடுத்து சங்காருகிய சிராமலைநாதருடைய திருமுடியின்மேலே தரித்தார்களோ அதையறிந்து பார்ப்போமென்றெண்ணி சுவாமிக்காக அந்தநந்தவனத்தில்வாசனைபொருந்தி மலர்ந்திராநின்ற சில புஷ்பங்களை எடுத்துக்கொண்டு சன்னதியிற் போனார் சாரமாமுனிவர் (எ-று) [6]

தானணிந் திடுமல ரன்றிச் சங்கரன்
மேனியிற் கண்டில னழுது விம்மினான்
கானகப் புதுமலர் களையக் காவலன்
றேனகப் புனைந்துதன் றேவிக் கீந்தனன்

(இ-ள்) சாரமாமுனிவர் முதல்நாள் தாந்தரித்த செவ்வந்திபுஷ்பஞ் சிவபெருமான்றிருமுடியிலேயிருந்ததல்லாமல் விசேஷமாக ஒரு புஷ்பமாகிலுங் காணுதபடியினாலே மெத்தவுங்கலங்கிப்புலம்பி அழுது விம்மிக்கொண்டிருந்தார். இராஜாவும் அந்த நந்தவனத்திலுள்ள புதிதாகிய மலர்களைத் தேனெழுகும்படித்தானுமணிந்துகொண்டு தனது தேவிக்குங் கொடுத்தான் (எ-று)

அவ்வலர் பகிர்ந்தவ னளிக்கும் போதினின்
மௌவலுந் திறையிடு முறுவன் மாதரா
ளிவ்வலர் சிவன்றனக் கினிமை யாதலாற்
சைவல வோதியிற் றரிக்க வஞ்சினாள்

(இ-ள்) அந்தப்பூவையிரண்டு கூறாகப்பகிர்ந்து அரசன் கொடுக்கும்பொழுதில்வனமல்லிகையரும்பும் வணங்கித்திறையிடுகின்ற பல்லுகளையுடைய பட்டஸ்திரீயான புவனமாதேவியானவள் இந்தமலர் சிவபெருமானுக்கு இனிமையாதலினாலே கொடிப்பாசிபோன்ற தனது கூந்தலிலே தரித்துக்கொள்ளப் பயந்தாள் (எ-று) [8]

காவலர் காவலன் மகிழக் கைதவப்
பூவலர் வாணிப னுதவும் போதினில்
யாவரிவ் வனமதி லெய்தி னாரெனா
மாவனத் தின்முனி மறைந்து நின்றனன்

(இ-ள்) அரசர்க்கரசனான பராந்தகசோழன் மகிழும்படியாகச் செவ்வந்திப்பூக்களைப் பொய்யும் வஞ்சனையும் பொருந்திய யவ்வரசனுக்குத் துன்பத்தை விளைவிக்கின்றவனுமான பூவாணிபன் கொடுத்துக்கொண்டு வருங்காலத்தில் சாரமாமுனிவர் இந்த நந்தவனத்திலே யாவர் வந்து பூக்களை நமக்குத் தெரியாமலெடுத்துக்கொண்டுபோய் விடுகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றெண்ணிப் பெருமைபொருந்திய வனத்திலே அவர் மறைந்து பார்த்துக்கொண்டு நின்றனர். (எ-று) [9]

புத்திர நூறெனப் படைத்த போதினைக்
குத்திர வாணியன் கொய்யு மெல்லையிற்
கைத்தலம் பிடித்தவன் கழுத்தி லேதன
துத்தரி யந்தனைச் சுருக்கி யுந்தினான்

(இ-ள்) நூறு இதழ்கள் படைத்த செவ்வந்திப்பூக்களைவஞ்சகம்பொருந்திய பூவாணியன் பறிக்கும்பொழுதில் அவன் கையைப்பிடித்து அவனுடைய கழுத்திலே தனது உத்தரீய வஸ்திரத்தைச்சுருக்கி அவனை யிழுத்தார் சாரமாமுனிவர். (எ-று) [10]

முன்பிடித் தீர்த்திடு முனியைத் தள்ளியே
வன்புடைக் கயவனும் வலிதி னெய்தினான்
பின்பிடித் தனனிவன் பின்னு முன்னுமாய்
வன்புடைக் காவலன் மனையி னண்ணினான்

(இ-ள்) அப்படி முன்னே பிடித்திழுத்திடுகின்ற சாரமாமுனியைப் பலத்தையுடைய மூடனான பூவாணியன் பலாத்காரமாய்த் தள்ளிவிட்டுப்போனான். அவனை முனிவர் பின்னேதொடர்ந்து முன்னும் பின்னுமாய் போகையில் அந்தப் பூவாணியன் கொடுமையுடைய அரசன் அரண்மனையிற்போய்ப் புகுந்தான். (எ-று) [11]

ஆயிரந் தரமுறை யரச வென்றனன்
வாயிலைப் புரப்பவர் வார லென்றனர்
தூயனோ ரந்தண னெறியிற் றோன்றியே
கோயிலுண் முனிவனைக் கொண்டு போயினான்

(இ-ள்) சாரமாமுனிவர் ஆயிரந்தரங் கூரல்விட்டு அரசனுககு அபயமென்று முறையிட்டனர். இராசனுடைய அரண்மனைவாயிலைக் காக்கின்றவர்கள் உள்ளே விடாமல் தடுத்தாகள் அப்பொழுது பரிசுத்தம்பொருந்தியவோர் பிராமணன் அவ்விடத்திற்றோன்றிவந்து அரண்மனையினுள்ளே அழைத்துக்கொண்டுபோய்ச் சாரமாமுனியை விட்டான். (எ-று) [12]

கலிநிலைத்துறை.

மன்னர் மன்னனு மெதிர்கொடு முனிவனை வணங்கிப்
பொன்னு லாவுநல் லாசனங் கொடுத்தெதிர் புகல்வா
னென்ன புண்ணியஞ் செய்தன னீவரவென்று
னன்னை போலுவா யெவர்க்குநீ புகலிட மன்றோ

(இ-ள்) அரசர்க்கரசனான பராந்தகச்சோழராசனும் சாரமாமுனிவரை யெதிர்கொண்டு வணங்கி யழைத்துப்போய் ஒரு பொன்னாசனங்கொடுத்து இருக்கும்படிசெய்து அவரைப்பார்த்து நீர் இவ்விடத்திற்குவர நான் என்ன புண்ணியஞ்செய்தேனென்று சொன்னான் அப்போது சாரமாமுனிவர் சகலருக்கும் தாயை யொத்த நீயே புகலிடமானபடியினாலே நான் வந்தேனென்று சொன்னார். (எ-று) [13]

கலிவிருத்தம்

பாதலத் தினும்புதல் கொணர்ந்து பல்பகல்
பூதலத் தினிற்புனல் பொழிந்து பொங்கரிற்
கோதற வளர்த்தலர் கொய்து தார்செய்து
நாதனுக் கணிகுவே னானு நாளுமே

(இ-ள்) இராஜாவைப்பார்த்துச் சாரமாமுனிவர் சொல்லுவார். பாதாள லோகத்திலிருந்தும் வெகு பிரயத்தனத்தின் பேரில் செவ்வந்திப்பயிர் நாங் கொண்டுவந்து பூலோகத்திலே யதைபதித்துத் தண்ணீர்விட்டுப்பயிர்பண்ணி. நந்தனவனத்திலே குற்றமின்றி நன்றாய் வளர்த்துப் புஷ்பங்களைக்கொய்து திருமாலை கட்டிச் செவ்வந்திநாதருக்குக் குறைவில்லாம லெந்தநாளுஞ் சாத்துவேன். (எ-று) [14]

அப்புதல் வனத்திடை யளிகள் செல்லினுந்
தப்புத லரிதுமற் றெவருஞ் சார்கிலார்
மெய்ப்புது மலரிவன் கொய்து மேவினா
னிப்புலை யனைத்தடிந் திடுக வென்றனன்

(இ-ள்) அந்தப் புதலையுடைய நந்தனவனத்திலே வண்டுகள் சென்றாலுந் தப்பிப்பிழைப்பதரிது, மனிதர்களிலெவர்களும் அதில் பிரவேசியார்கள் அப்பேர்ப்பட்ட நந்தனவனத்திலுள்ள மெய்மையாகிய புதிய மலர்களை யிவன் பறித்து இவ்விடத்தில் வந்தான். ஆதலால் இந்த சண்டாளனை யவசியந் தெண்டிக்கவேண்டுமென்று சொல்லிப் பின்னுஞ் சாரமாமுனிவர் அரசனை நோக்கிச் சொல்லுகின்றார் (எ-று) [15]

ஆடர வணிபவற் கலங்கல் பெய்திடுங்
கூடையை யரசுவா பறித்துக் கோடலு
மேடவிழ் தொடையெறி பத்த ரென்பவ
ரோடிவெங் கரிமிசை மழுவை யோச்சினார்

(இ-ள்) ஆடுகின்ற நாகத்தை யாபரணமாகவணிந்த சிவபெருமானுக்குப் பூமாலைக்காக ஒரு சிவனடியார் கொண்டுவந்த திருப்பூங் குடலையிலுள்ள புஷ்

பங்களை யரசனுடைய பட்டத்தானைபறித்துக்கொள்ளுதலும் இதழ்கள்விரிந்த பூமாலையையுடைய எறிபத்த நாயனாரென்பவர் வேகமாயோடி அந்த வெவ்விய யானையின்மேல் கையிலிருந்த மழுவாயுததத்தினாலே துதிக்கையறும்படி வெட்டினார் (எ-று) [16]

வீழ்ந்தது கடகரி களிற்று வேந்தனுஞ்
சூழ்ந்திது கொடுத்திடு துயர்க்கென் றோளையும்
போழ்ந்திடு கெனச்சொலிப் புனையு மாமுடி
தாழ்ந்தன னதுபெருந் தரும மானதே

(இ-ள்) அப்படித் தும்பிக்கையானது அறும்படி வெட்டின மதயானை பூமியிலே வீழ்ந்தது. அதைத்தெரிந்துகொண்ட அந்த யானைக்குரிய புகழ்ச்சோழநாயனாரென்னும் அரசரானவர் இந்தயானையினால் என்னைப் பொருந்தும்படி உண்டான துயரம் நீங்கும்பொருட்டு எனதுதோளையும் வெட்டத்தக்கதுவென்று பெருமைபொருந்திய முடிபுனைந்திராநின்ற சிரசினாலே அந்த எறிபத்த நாயனாரைத தாழ்ந்து வணங்கினார். அவ்வணக்கமானது பெருமை பெற்ற சிவதருமமாகச் சிறந்ததென்று கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார் (எ-று

பழுதெனத் தள்ளிய மலரைப் பண்டொரு
முழுமதி முகத்தின ளெடுத்து மோந்தனள்
செழுமலர் தொடுப்பவர் கண்டு சென்றவள்
குழலினைப் பிடித்துமென் குமிழைக் கொய்தனர்

(இ-ள்) ஒரு சிவாலயத்திலே பூமாலை தொடுக்கிற அடியார் பழுதென்று தள்ளிப்போட்ட வொரு மலரை முன்பு வொப்பற்ற பூரண சந்திரோதயம் போலு முகத்தையுடைய இராஜபததினியானவள் கையினாலே யெடுத்து மூக்கில் வைத்து மோர்ந்து பார்த்தாள். செழுமையான மலர்களைச் சுவாமிக்குத்திருமாலையாகத் தொடுக்கிற அந்தச் சிவனடியாராகிய செருத்துணை நாயனார் அதைப்பார்த்து உடனே சென்று அவளுடைய கூந்தலைப்பற்றி மேன்மையான குமிழ்மலரை யொத்த மூக்கையறுத்தார் (எ-று) [18]

மங்கைதன் கணவனு மரசன் வந்திவ
ளங்கைமுன் பற்றிய தலரை யாதலாற்
செங்கையைத் தடிநதிவள் வினையைத் தீர்க்கென
வெங்கணு மவன்புக ழிசைக்க வில்லையோ

(இ-ள்) அந்த மாதரசியின் கணவனான கழற்சிங்க நாயனார் என்னும் அரசர் அதைக் கேட்டு வோடி வந்து விசாரித்து இவளுடைய கையானது முன்னே புஷ்பத்தைப்பற்றி யெடுத்ததாதலால் அந்தச்சிவந்த கையையும்

வெட்டி யிவள் செய்த தீவினையைத்தீர்த்துவிடுவோமென்று ஆக்கினைசெய்து சிவாக்கினையிலே நின்ற அந்த அரசனுடைய புகழானது எல்லாவிடங்களிலும் பிரகாசித்துக்கொண்டிருக்கவில்லையோவென்று சாரமாமுனிவர் வன்பராந்தகச் சோழனைப் பார்த்துச் சொல்லிப் பின்னும் தத்துவஞானத்தை யெடுத்துப் போதிக்கிறார் (எ-று) [19]

புழுச்சுமை மலக்குவை புலவு நாறிய
வழுக்குட லீரல்சீ வழியுஞ் செய்யக
முழுக்குட லுதிரநீர் மூளை யின்பொதி
யழுக்குட லதைப்பொரு ளாக வெண்ணுமோ

(இ-ள்) சரீரமானது புழுக்கள் பொருந்தியிருக்கின்ற சுமை துர்க்கந்தமான மலங்களின் கூட்டம். புலால் நாற்றத்தையுடைய திணமூந் தங்கியது ஈரலுஞ் சீயும் வழிந்தொழுகப்பட்ட செய்யாகிய இடம். பெருங்குடலுஞ் சிறுகுடலும், உதிரமும், நீரும் பொருந்திய மூளையின் பொதி ஆகுமாதலால் அப்பேர்ப்பட்ட அசுத்தமான உடலையொரு பொருளாக எண்ணப்படுமோ (எ-று)

உழுநரிக் கணங்களுக் குதவு மொண்பொருள்
கழுகினுக் குணவுகட் டியக ளஞ்சியந்
தழலினுக் கிந்தன மான சட்டக
மெழிலுறப் புனையினு மிருப்ப தல்லவே

(இ-ள்) இந்தச் சரீரமானது மண்ணை உழுது பரிக்கின்ற நரிக்கூட்டங்களுக்கு ஆகாரமாயுதவப்பட்ட வொள்ளிய பொருளாகும். கழுகு காக்கைகளுக்கு புசிப்புக்கு இடமாய்க்கட்டிய களஞ்சியமாகும் அக்கினிக்கு விறகாய்ப் பற்றியெரிந்து சாம்பலாய்ப் போகப்பட்டதாகும். அப்பேர்ப்பட்ட சட்டகமானவுடலை அழகுபொருந்தும்படியலங்கரிப்பினு மிருக்கின்றதல்லவே யழிவதே நிச்சயமென்று சாரமாமுனிவர் சொன்னர் (எ-று) [21]

நரம்புட னெலும்புதோ னட்ட புன்குடில்
வரம்பறு பிணியெலா மெடுத்த வான்கலந்
திரங்குத னரையிடர் புதைத்த சிற்றறைக்
குரம்பையென் றறிந்திலை கொற்ற வேந்தனே

(இ-ள்) இந்தச் சரீரம் நரம்புடனே யெலும்புந்தோலுநட்ட அற்பமான குடிசை. அளவில்லாத வியாதிகளெல்லாம் அடைத்திருக்கப்பட்ட பெரிய பாத்திரம் திரங்குதலையுடைய நரையுந்திரையுந் துன்பங்களுமாகிய இவைகள் புதைத்த சிறிய அறை. ஆதலால் இப்படியான வுடலமென்றறிந்தாயில்லை அரசனே (எ-று) கொற்றம் ஜயம். [22)

கலிநிலைத்துறை

கடிகொ ணீலநுண் மணியெனக் கரும்புழுக் கலந்து
பொடிகொ ணித்தில மாலைபோற் றவளவீர் பொருந்தி
வடிகொண் மாவென வவைக்குளே வருந்திடு மயிர்க்கோ
முடிகொள் கங்கையான் விரும்பிய மலரைநீ முடிப்பாய்

(இ-ள்) இராஜாவே தம்முடைய தலைமயிரில் நுட்பமாய் விளங்கிய நீல மணியைப்போல் கரும்புழுவாகிய பேன்கள் மிகுதியாய்க் கலந்து, பொடியாயுள்ள முத்துக்களை யெடுத்து நூலிலே கோர்த்த மாலையைபபோல வெள்ளை நிறமான ஈர்களும் பொருந்தி வடிக்கட்டிய அரிசிமாவைப்போலவேறுதலாகப் போய் அந்த ஈர்களும் பேன்களுமாகிய அவைகளுக்குள்ளே வருத்தப்படுகின்ற தலைமயிருக்கோ, சிரசிலே கங்கையைத்தரித்த சிவபெருமான் விரும்பிய செவ்வந்திமலரை நீ முடிப்பாயென்றார் சாரமாமுனிவர். (எ-று) [23]

கோச்சகக்கலிப்பா,

எட்பகவு மன்பில்லா ரிவ்வுடலிவ் வாறிருந்தாற்
பெட்புறுவர் பேதைமுதற் பேரிளம்பெண் ணீறாக
வுட்புறம்பா வைத்தா லுகிர்பபருந்தும் வாயசமு
முட்கழுகுங் கல்யாணம் பண்ண முயன்றிடுமே

(இ-ள்) எள்ளின் பிளவத்தனையாவது அன்பில்லாத மாதர்களுடைய இந்த வுடல் இம்மங்கைப் பருவததிலிருந்தபடியே மற்றைப் பருவங்களினுமிருந்தாலாசைப்படலாம். அப்படிக்கின்றி வேறுபட்டழிகின்ற பேதைப்பருவம் முதல் பேரிளம்பெண் பருவம் வரையில் ஆசைப்படுகின்றார்களறிவில்லார் இதுவுமன்றி யுள்ளேயிருக்கிற, மலம், மாம்சம் முதலியவைகளைப் புறம்பாக வைத்துப்பார்த்தால் கூறிய நகங்களையுடைய பருநதுகளுங காகஙகளும் முள்ளைப்போலக் கூர்மையான மூககையுடைய கழுகுகளுங கல்யாணமாகப் பெரிய விருந்து பண்ணுமபடி பண்ண முயற்சி செய்திடும். ஆனதால் மாதர்களுயை மேனியை நோக்கி யிசசித்துச் செவ்வந்திமலரை யவர்களுக்குக் கொடாது மலமூத்திர மாம்சபிண்டமென்று அம்மாதரை நினைக்கத்தக்கதென்றார் முனிவர். (எ-று) இதனாலே பருவந்தோறும் வேறுபட் டழியு மாதருடலிலே யறிவிலாரிச்சை வைப்பார் என்பதாம. [24]

பௌவநிகர் காலன் பறித்துயிர்கொண் டேகினு
லிவ்வுடல மிநதனப்பூ மெத்தையின்மே லெய்தியெரி
கௌவும் பொழுது சுடுநாறிக் காட்டுமன்றிச்
செவ்வந்தி மாலைமணங் காட்டுமோ தேர்வேநதே

(இ-ள்) கடலைப்போலுங் கரியநிறத்தையுடைய காலனானவன் உயிரைப் பறித்துக்கொண்டுபோய் விட்டாலிந்தவுடம்பு விறகுகளாகிய புஷ்பசயனத்தி லடைந்து நெருப்பானது பொருந்தும்பொழுதும் சுடுகின்ற நாற்றமே காட்டு மன்றிச் செவ்வந்திமாலையின் மணமானது அவ்வுடம்பிலே காட்டுமோ தேரை யுடைய அரசனே சொல்லென்றார் சாரமாமுனிவர் (எ-று) [25]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சண்பகத் தயில நீவி யிமசலந் தழைய வாட்டி
யொண்புகை கொடுத்து நாவி மெழுகித்தா துறுத்து மோதி
வெண்புகை நிறத்து மாய்ந்து வெண்டலை யான போது
நண்புகை விடாம லிந்த நறுமல ரணிகு வாயோ

(இ-ள்) அரசனே கேளும் இந்தத் தலைமயிருக்குச் சண்பகத்தயிலத் தைத் தடவிக் குளிர்ந்த பனிநீரினாலே தழையும்படி அபிஷேகஞ் செய்து யொளிபொருந்திய வாசனைப் புகைகளைக் கொடுத்து கஸ்தூரியினாலே யந்த மயிரைப் பரிசுத்தமாகும்படி மெழுகிப் பூரதாதுக்கள் பொருந்திய சுகந்தமான மலரையுஞ் சூடிய அந்தத் தலைமயிரானது வெண்மையான புகை நிறத்தையு டையதாகி அதுவுங் கழிந்துயிறந்து வெண்டலையானபொழுது அம்மயிருக்கு அப்படிச்சூடிய நட்பினை விடாமல் இந்த வாசனைபொருந்திய நல்ல செவ்வந்தி மலரையுமணிந்து கொள்ளக்கடவையோ சொல்லென்றார் சாரமாமுனிவர். (எ-று) [26]

ஷை வேறு

மின்போ லழியும் வயிற்றுமை வடிவா யழியு மெய்யுருவாய்
முன்போ லழியும் பிறந்தழியு மடவா ருடனே முயங்கியதன்
பின்போ யழியு நரைத்தழியும் பேய்போற் றிரிந்து பெயர்ந்தழியும்
பொன்போல் வளர்த்து மிவ்வுடல நிலையாதழிந்து போய்விடுமே

(இ-ள்) மாதாவின் வயிற்றிலேயுண்டான கெற்பம் மின்போல வுடனே யழியும். அப்பால் ஆமையின் வடிவமாய்ப் பருத்துமழியும், பின்பு சரீரம் உரு வாகி முன்போல யழிந்துபோம். அப்பால் பிறந்தவுடனே யழிந்துபோகும். மாதர்களுடனே கூடி சுகிக்குங்கால் அச்சுகமனுபவிக்கும்போதே அழிந்து போம். நரைத்துச் சரீரந்தேயுங்காலத்திலும் அழியும் பேயைப்போலப் புசிப் புக்குத் திரிந்து தள்ளாடி அலைகின்ற விருத்தாப்பிய காலத்திலுமழிந்துபோகு மாதலால் பொன்னைப்போலப் போற்றி வளர்த்தாலுமஇந்தவுடம்பானது நிலை மையாயிராமல் அழிந்துபோய் விடுமென்றரசனுக்குச் சாரமாமுனிவர் சொன் னார். (எ-று) [27]

கலிவிருத்தம்

சிவன்றனை யிகழ்ந்தொரு கதையைச் செய்தபோர்
சவம்படு பொழுதவர் தசையை நாடியே
யுவந்துவந் தருந்திய கழுகு மோரியுங்
கவர்ந்தது கசந்தரு வருத்துக் காணுமே

(இ-ள்) சிவபெருமானையிகழ்ந்து வேறொரு கதையைச் செய்த பேர்கள் இறந்து பிணமானபொழுது அவர்கள் சரீரத்திலுள்ள மாம்சத்தைப்பார்த்துச் சந்தோஷித்து வந்து அருந்திய கழுகும், நரியும் அப்படியுண்ட மாம்சங்கசந்து அருவருத்து அதைப் பாவிகள் மாம்சமென்று கக்கித் தள்ளிவிடும் (எ-று)

சிவனது திரவியஞ் சிறிது கொண்டவர்
நவவிதம் படுமெழு நரகு நண்ணுவா
ரவலவெங் குழிகளிற் கிருமி யாகுவார்
குவலயந் தனிலொரு கோடி சன்மமே

(இ-ள்) சிவபெருமானுடைய திரவியப் பொருள்களிலே சிறிதாவது அணுவளவாவது ஆசைவைத்து எடுத்துக்கொண்ட பேர்கள் ஒன்பது விதங்களாலுண்டாகிய ஏழுகோடி நரகங்களையு நண்ணி மகத்தான துன்பங்களையனுபவித்தும் அந்தப்பாவந் தொலையாமல் பின்பு பூமியில் அவர்களுக்குப்பிறவி கிடைத்து அவலமான கஷ்டங்கள் பொருந்திய வெப்பமான குழிகளிலே புழுக்களாகப் பூமியிலே கோடி சன்மங்களெடுத்துழல்வார்கள் (எ-று) [29]

மெய்க்கடுங் கூற்றுவன் படையில் வெம்புவார்
செக்கிடை யரைகுவா ரழலிற் றீகுவார்
துக்கமும் பிணியுமாய்ச் சுழல்வர் சூகரங்
குக்குட மாகுவர் கோடி சன்மமே

(இ-ள்) பின்னையும் உண்மையாகவே கடுமையுள்ள இயமனுடைய ஆயுதங்களாலே வெம்பித் துன்பமுறும்படி தண்டிக்கப்படுவார்கள். செக்கிலே போட்டு அரைக்கப்படுவார்கள். அக்கினியிலே போட்டுக் கொளுத்தப்படுவார்கள். அதுவன்றி யெந்நேரமுந் துக்கங்களும், பிணிகளுஞ்சூழ்ந்து வருத்தச்சுழல்வார்கள். பின்பு இறந்து அந்தப்பாவ சேஷத்துக்காகப்பிறவி கிடைத்து பன்றியுங் கோழியுமாயக் கோடி சன்மங்களாகுவார்களென்று சாரமாமுனிவாரசனுக்குச் சொன்னார் (எ-று) [30]

மானிய நிலம்பதி மகமை யென்பதுந்
தானியந் தனமணி தான மென்பது

மேனிறை கோயிலுள் விதித்த பண்டமு
மானுயர் கொடியினு னமிர்து செய்ததும்

(இ-ள்) சிவாலயத்திற்கு உரியதாயிருக்கிற மானிய நிலங்களும், கிராமங் களும், மகமைகளுந் தானியமாகிய நெல் முதலான தவசங்களும், தனங்களும், பொன் முதலிய நவமணிகளும், மற்ற தான பதார்த்தங்களும் மேலாக நிறை ந்த கோயிலினுள்ளே விதிதிருக்கின்ற பூஜாத்திரவியங்களும், அரிசிமுதலிய பண்டங்களும், கோவிலுக்கு விட்ட மாடுகளும், ஆடுகளும், ரிஷபக்கொடியை யுடைய சிவபெருமான் அமிர்துசெய்த நெய்வேத்தியங்களும் (எ-று) [31]

தண்டிமுன் கொடுத்திடு தாரு மாரமு
முண்டது முடுத்தது மற்று முள்ளவு
மெண்டரு கோயிலின் புறம்பி லெய்திய
வண்டணி தொடையலுங் கொளார்நன் மாட்சியோர்

(இ-ள்) தண்டிகேசுவரருடையசன்னிதிமுன்னே கொடுத்திடும்படியான மாலையும், ஆரங்களும் உண்ணப்பட்ட அன்னமும் உடுத்தப்பட்ட வஸ்திரமுத லிய ஆடைகளும் மற்றமுள்ள பொருள்களும் எண்ணத்தக்க ஆலயத்தின் புறம்பிற்பொருந்திய வண்டுகளையுடைய அழகான பூமாலைகளும் தமக்குவேண் டுமென்று நன்மையான மாட்சிமையுடையோர் மனதாலும் விருப்பங்கொள் ளாரென்று சாரமாமுனிவர் சோழராசனுக்குச் சொன்னார் (எ-று) [32]

அல்லலை யுடையவ ரழுத கண்ணினீர்
செல்வமன் னவர்கெடத் தேய்க்கும் வாளெனச்
சொல்லிய மொழிசெவித் தொளைக்கு ளேபுக
வில்லையோ வுடற்பய னிழந்த மன்னனே

(இ-ள்) மன்னவராலே துன்பத்தையடைந்த ஏழைகளழுத கண்களினீர் செல்வத்தையுடைய மன்னவர்கள் கெடத் தக்கதாய்த தேய்க்கும்படியான வாளாயுதத்தைப்போலாகுமென்றுசொல்லியமொழி உனது செவிகளின் துவா ரங்களுக்குள்ளே புகவில்லையோ? உடம்பினாலாய பயனையிழந்த அரசனே யென்றார் சாரமாமுனிவர். (இதற்கு மேற்கோள்:-திருக்குறள் வெண்பா— அல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே-செல்வத்தைத்தேய்க்கும்படை) [33]

வாணிபம் பெருநிலக் கிழமை மாண்பொருண்
மேலறி விலாமையி லொன்று மேவினுஞ்
சீலமுங் குடிமையுஞ் சிதையு மாலிவை
நாலுமுள் ளவர்செய னவில வேண்டுமோ

(இ-ள்) உலகத்தில் ஒருவனுக்கு வாலிபமும் இராச்சியாதிகாரமும் மாட்சிமைப்பட்ட பெரிய பொருளும் அதின்மேல் அறிவில்லாமையுமாகிய இவைகளுள் ஒன்றுபொருந்தினாலும் அவனுடைய நல்லொழுக்கமும் அவன் பிறந்த குடிமையுங் கெடுமாதலாலிவை நான்கு முள்ளவர்களுடைய செய்கையைச் சொல்லவேண்டுமோ வேண்டியதில்லை. அரசனே நீயே நினைத்துப்பாரென்றார் சாரமாமுனிவர் (எ-று) [34]

விழிதெரிந் திருக்கவுங் குருடு பேடிவர்
மொழிதெரிந் திருக்கவு மூக ராகுவர்
பொழிமது வன்றியு மயக்கம் பூணுவ
ரழிதரு காலமா மரசர் வண்ணமே

(இ-ள்) இரண்டு கண்களும் நன்றாய் விளங்கித் தெரிந்திருக்கவும், கண்கள் தெரியாத குருடரைப்போலாகுவார்கள். சகல பாஷைகளையுங் கற்று நன்றாய்ப் பேசத்தெரிந்திருக்கவும், பேசத்தெரியாத ஊமைகளைப் போலாவார்கள். நன்றாய் நினைக்கத்தக்க சுபாவகுணமிருக்கையிலே மதுபானஞ் செய்தபேரைப்போல மயக்கந்தைப் பொருந்துவார்கள் அழியப்பட்டகாலத்தையுடைய அரசர் குணமித்தன்மையாயிருக்குமென்று சாரமாமுனிவர் சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறார் (எ-று) [35]

திண்புகழ் படைப்பதும் பகையைத் தேய்ப்பது
மண்புரந் தளிப்பது மன்னர் பேரணி
வெண்கலை மூசுதல் கவரி வீசுதல்
புண்களும் படைத்திடும் புனலு மாடுமே

(இ-ள்) கனமான கீர்த்தியைபபடைப்பதும் பகைவரால் ராச்சியத்துக்கு யிடையூறில்லாமல் செய்வதும், பூமியைககாத்திரட்சித்தலுமாகிய இவைகளே அரசர்களுககுப்பெரிய ஆபரணஙகளாகும். அஃதின்றி வெண்மையான வஸ்திராதிகளாலும், வெள்ளை நிறமுள்ள வயிர முதலிய மணிகளாற்செய்த ஆபரணங்களாலும், சரீரததை அழகுசெய்தலுஞ் சாமரை வீசுதல், நீராடல் முதலிய உபசாரங்களுஞ் சரீரததிலுண்டாகிய புண்களும் அப்புண்களிலுண்டாகும் உதிரப்புனலும்போலிழிவாகுமென்று சாரமாமுனிவர் சொன்னார் (எ-று)

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

அந்தண ரருளைச் சாரா ரரும்பய மருக்குஞ் சேதா
மந்திர மறப்பர் நூலோ ராதலான் மகமுண் டாகா
விந்திரன் முதலா வுள்ள விமையவ ரவியூண் கொள்ளார்
கந்தரஞ் சிறிது நல்கா காவலன் கொடுமை யாலே

(இ-ள்) அழகிய தண்ணளியையுடைய அந்தணரென்பவர்கள் தமக்குரிய ஜீவகாருணியத்தைப் பொருந்தாமல் நீக்கிவிடுவார்கள் பசுக்களும் அரிதாயுள்ள பாலைக்கொடாமல் மறுக்கும். வேதாகமங்களாகிய முதல் நூலையுடைய பிராமணர்கள் மந்திரங்களை மறந்துவிடுவார்கள். ஆதலால் யாகாதி புண்ணிய கர்மங்களுண்டாகாவாம். அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்கள் அவியாகிய உணவைக் கொள்ளாமலிருப்பார்கள் அதினாலே மேகங்கள் மழைகளை யெவ்வளவும் வருஷிக்காவாம்; இவைகளெல்லாம் அரசனுடைய கொடுங்கோன்மையினாலே யிப்படியுண்டாகுமென்றார் முனிவர் (எ-று) [37]

மேற்கோள்— ஆபயன்குன்றுமறுதொழிலோர் நூன்மறப்பர் காவலன் காவானெனின்.

இன்புடை யறங்க ணல்லோ ரிளையவர் குரவ ராகத்
தன்பெருங் கிளைகள் சுற்ற மந்திரத் தலைவ ராக
மன்பதை கனிக ளாகத் தானைகண் மணிவி ழாக
வன்பெலாம் வடிவ மாக வரசுமேல் வளரு மன்றே

(இ-ள்) இன்பத்தையுடைய தருமங்களும், நல்லோர்களும், இளையவர்களும், ஆசாரியர்களாகவுந் தனது பெரிய கிளைகளுஞ் சுற்றமும் மந்திராலோசனைக்குரிய தலைவர்களாகவும், மன்பதையாகிய மக்கட்பரப்பும் மற்ற உயிர்களுங் கனிகளாகவும், சேனைகள் அழகிய விழுதுகளாகவும் உடம்பெல்லாம் அன்பாகவுமுடைய அரசாட்சியல்லவோ மேன்மேலாய் வளர்ந்திருக்குமென்றார் சாரமாமுனிவர் கோபஞ் செல்லாதிருத்தற்கு இளையவரையு முடன் கூறினார். (எ-று) [38]

கலி நிலைத்துறை

தெருண்ட சிந்தனை மன்னவ னீதிநூ றிசையி
னுருண்ட தேரின னென்னுமூ விழிகளுண் டலகின்
மருண்டு மன்னனும் விழியொளி மறைந்திடின் மற்றை
யிரண்டு கண்ணினும் பயனிலை யாகுமே யென்றான்

(இ-ள்) தெளிந்த சிந்தையையுடைய அரசனும், நீதிநூலும், திசைகளிலே செல்லத்தக்க தேரையுடைய சூரியனும் என்றுசொல்லப்படுகின்ற மூன்று கண்கள் உலகத்திற்குண்டு இவைகளில் அரசனாகிய கண்ணானது மயங்கிப் பிரகாசமின்றி மறைந்துவிடின் மற்றையிரண்டு கண்களாலும் பிரயோசனமில்லாமற்போமென்றார் முனிவர் (எ-று) [39]

கற்பு மங்கையர் நிறையெனும் வரம்பினைக் கடந்தால்
வெற்பு துங்கிட வானகம் புவியின்மேல் விழுந்தா

லற்பு மன்னவன் செய்யகோல் வளைந்திடு மாறு
லுற்ப லஞ்செறி மாலையாய் விலக்குவா ருண்டோ

(இ-ள்) கற்பையுடைய மங்கையர்கள் நிறை யென்கின்ற காவலைக் கடந்தாலும், மலைகளை விழுங்கும்படி வானுலகம் பூமியின்மேல் விழுந்தாலும், அன்புள்ள அரசனுடைய செங்கோல் கொடுங்கோலாகுமேயானாலும், நீலோற்பல மலர்களாற் றொடுக்கப்பட்ட மாலையுடைய சோழராசனே விலக்கின்ற பேர்களுண்டோ இல்லை. (எ-று.) இதனாலே அரசன் செங்கோன் முறைமை தப்பாமலிருக்கவேண்டு மென்பதாம். இப்படிக்கெல்லாஞ் சொல்லிப் பின்னுஞ் சாரமாமுனிவர் சொல்லுகிறார். [40]

வேலி யானது பயிரினை நுகர்ந்திட விழைந்தாற்
கால னுருல குயிரெலாங் கவர்ந்திடக் கனன்று
லால மன்னையர் புதல்வருக் கருத்துவ ராகல்
வேலை வேலையைக் கடக்கிலார் விலக்குவார் வேந்தே

(இ-ள்) பயிருக்குக் காவலாயுள்ள வேலியானது அந்தப் பயிரை மேய்ந்திட விரும்பினாலும், இயமதன்ம இராஜாவானவர் உலகத்திலுள்ள உயிர்களையெல்லாம் பிடித்திடக் கோபித்தாலும், பெற்ற தாயர்கள் விஷத்தை முலைப்பாலில் வைத்து ஊட்டுவார்களானாலும், கடலானது கரையாகிய நிலையைக் கடந்தாலும், அவைகளை யரசனே யாவரால் விலக்கப்படுமென்றார் முனிவர். (என்றவாறு) [41]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சிலையின் பிளவு நிலப்பிளவு மணலின் பிளவுஞ் சிறந்தபுனற்
றலையின் பிளவு மெனநான்கு வகையாம் வெகுளி தனையுடையோர்
தொலைவி னுரகம் புள்விலங்கு நரராய்ப் பிறந்து துயருழப்பார்
மலையுந் தகர நிழலுடனே மலையுங் களிற்று மன்னவனே

(இ-ள்) கல்லைப் பிளந்தாற்போலவும், நிலத்தைப் பிளந்தாற்போலவும், மணலைப் பிளந்தாற்போலவும், சிறந்த தண்ணீரைப் பிளந்தாற்போலவும், நான்கு வகையாக அரசர்கள் கோபத்தை யுடையவர்களா யிருப்பார்கள். இவைகளில் கற்பிளவு போன்றவர்கள் தொலைவில்லாத துன்பத்தையுடைய பாம்பாகவும், நிலத்தின் பிளவையுடையோர் பட்சிகளாகவும், மணலின் பிளவையுடையோர் மிருகங்களாகவும், நீரின் பிளவையுடையோர் மனிதர்களாகவும் பிறந்து துன்பத்தை யனுபவிப்பார்கள். மலைகளுந் தகர்ந்துபோகும்படி மதத்தினாலே தனது நிழலைப் பார்த்து சண்டைசெய்கின்ற யானைகளின் சேனையையுடைய அரசனே யென்றார் முனிவர் (எ-று) [42]

கலிநிலைத்துறை.

சொல்லு கின்றவன் றனையிறை தகுதியிற் றொழுது
நல்ல வாசகம் போலவே நகைமொழி நவிற்றி
யல்லில் வேறலர் பறித்தவன் றனையெதி ராக்கி
யில்லை யோவலர் பறித்தியோ கூறுனை யென்றான்

(இ-ள்) இப்படிக்கெல்லாஞ் சொல்லிய சாரமாமுனிவரை அரசன் தகுதியினாலே வணங்கி நல்ல வசனஞ் சொல்லுகிறவன் போல நகையோடுங் கூடிய மொழிகளைச்சொல்லி இராத்திரியிலே நந்தனவனத்திற்சென்று வேறுபட்டுப் புஷ்பங்களைப்பறித்தப் பூவாணிபனை யெதிராக நிறுத்தியந்தப் புஷ்பங்களை நீ பறித்து யெடுத்து வந்ததுண்டோ யில்லையோ உறுதியாகச் சொல்லென்று வஞ்சனையாக அரசன் கேட்டான் (எ-று) [43]

பூவ ளிப்பவ னுரைசெய்வா னிவர்மொழி பொய்யே
காவை யென்னிரு விழியினாற் கனவிலுங் காணேன்
யாவ ரிப்படி செய்துபோ னார்களோ வென்று
நாவ ழற்சுட மொழிந்தன னரசனு நவில்வான்

(இ-ள்) அப்பொழுது அந்தப்பூவாணிபன் அரசனை நோக்கி யிந்த முனிவர் சொல்லியதுபொய்யாயிருக்கின்றது. அவருடையநந்தனவனத்தை எனது விரண்டு கண்களாலும் நான் சொர்ப்பனத்திலாவது கண்டதுமில்லை, எவர்கள் வந்து இப்படிப் புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு போனார்களோ அறியேனென்று நாவினாலே நெருப்பைப் போலச் சுடும்படி யஞ்சாமற் கடினமாக மொழிந்தான. அதைக்கேட்ட அரசனுஞ் சொல்லுவான் (எ-று) [44]

அழிவு காலம தாகையா லலரெடுப் பவனைப்
பொழிலி லேபுகா தகற்றுவோம் போமெனப் புகன்றான்
வழுவி லாமுனி மன்னவே தக்கனார் மகம்போற்
புழுதி யாடுமும் மகமுமென் றுரைசெய்து போனான்

(இ-ள்) அந்த அரசனுக்கு அழிந்துபோகுங்காலம் நெருங்கிவிட்டபடியினாலே புஷ்பங்களெடுக்கப்பட்ட பூவாணிபனை, உம்முடைய பூஞ்சோலையினுள்ளே செல்லாதபடி நீக்குவோம் நீர் போமென்று சாரமாமுனிவருக்குச் சொன்னான். அப்பொழுது குற்றமில்லாத அந்த முனிவரானவர் இராஜாவே தக்கனாகிய தட்சப்பிர்ஜாபதியின் யாகமானது அழிந்து எப்படித் தவிடுபொடியாகிப்போய விட்டதோ அப்படியே உம்முடைய அரண்மனை முதலிய மாளிகைகளும், வாழ்வும், இராஜாங்கமும அழிந்து புழுதிபறந்து போகக்கடவதென்று சொல்லிப்போனார் முனிவர் (எ-று) [45]

செற்ற மாகவே யிப்படி மொழிதலுஞ் சினந்திட்
டிற்ற மன்னவன் வனத்திலே யொருமல ரின்றி
நித்த நித்தநீ கொண்டுவா வென்றன னிருபன்
கொற்ற வேந்தனைப் பணிந்துவா ணிபன்விடை கொண்டான்

(இ-ள்) கோபமாகவே யிப்படிச் சாரமாமுனிவர் சாபமிட்டுச் சொன்ன வளவில் அழிந்துபோகப்பட்ட வந்த அரசனானவன் மிகுந்த கோபங்கொண்டு அந்த நந்தனவனத்திலே யொரு புஷ்பமுமில்லாமல் தினந்தினம் யாவரும் அறியும்படியாகப் பறித்துக்கொண்டு வாவென்று அந்தப் பூவாணிபனுக்குச் சொன்னான். அவனுமந்தபடியே வெற்றியுள்ள அந்த வேந்தனைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு போனான் (எ-று) [46]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முடித்திடு மரசர்க் கோர்நாண் முடியாத பழியுண்டாக
வெடித்தபோ தெல்லா மென்றாழ் வெடியாத போதிற் கொய்தா
னெடுத்தசெவ் வந்திப் போதி னெதிர்படு நிழலா மென்னக்
கடித்திகழ் விசும்பிற் றாரா கணங்களு மறைந்த வன்றே

(இ-ள்) அந்தச் செவ்வந்திப்பூவைச் சிரசிலே முடித்திடுகின்ற அந்தச் சோழராஜாவுக்கு வொருகாலத்தினு நீங்காத பழியுண்டாகும்படியாய் யந்தப் பூவாணிபன் மலர்ந்த புஷ்பங்களையெல்லாஞ் சூரியோதயமாகாத காலத்திற் கொய்தான் அப்படிக்கொய்தெடுத்த செவ்வந்திமலரினெதிர்ப்படுகின்ற நிழலைப்போல ஆகாயத்திற் கூர்மையாய் விளங்காநின்ற நட்சத்திரங்களின் கூட்டங்களுமறைந்தன. அன்று, ஏ-அசை, உடுக்களுமொளிமழுங்கி விடியற்காலமாயிற்று என்பதாம். (எ-று) [47]

குரவனு முனிக்கு நாமுன் கொடுத்தசெவ் வந்தி நாட்போ
தரசனாற் கவரப் பட்ட தெனநினைக் தரவ வேந்தன்
வரவிடு கனகச் செந்தா மரைப்புது மலரைப் போலே
யிரவினை யகற்றிக் கீழ்பா லிரவியு முதயஞ் செய்தான்

(இ-ள்) சிவபெருமானுடைய திருமுடியிலேயணியும்பொருட்டுக்குருவாகிய சாரமாமுனிக்கு முன்னாலே நாங்கொடுத்த புதிதாயுள்ள செவ்வந்தி மலர்களை அரசனாலேயபகரிக்கப்பட்டதென்று நினைந்து அரவவேந்தனான சர்ப்பராசன் இப்பொழுது சுவாமிக்குத் தரிக்கச்சொல்லி வரவிட்ட தங்கமயமான செந்தாமரையின் புதிய மலரைப்போல இராக்காலத்தைநீக்கிக் கிழக்குத்திசையில் சூரியனுமுதயமானான் (எ-று) [48]

கலி நிலைத்துறை.

வண்டு ணுதமு னெடுத்தசெவ் வந்திநாண் மலரைக்
கொண்டு மாமுனி காணவே வணிகனுங் கொடுத்தான்
கண்டு நெஞ்சுநொந் திறைவர்சந் நிதியிலே கலுழ்ந்தான்
பண்டு மாரனை யெரித்தவ ரவனுடன் பகர்வார்

(இ-ள்) வண்டுகள் தேனையுண்கிறதற்கு முன்னமேயெடுத்த புதிய செவ்வந்திமலரைக்கொண்டுபோய்ச் சாரமாமுனி பார்த்திருக்கப்பூவாணிபனும் அரசனிடத்திற்கொடுத்தான் அதைக்கண்டு மனது நொந்து செவ்வந்திநாதருடைய சந்நிதியிலே அந்தச் சாரமாமுனிவர் முறையிட்டழுதார். முற்காலத்தில் மன்மதனை யெரித்த கடவுள் அந்தச் சாரமா முனியுடனே சொல்லுவார் (எ-று) [49]

அஞ்ச லஞ்சனீ முனிவனே யவனைநா மழிப்போ
நஞ்ச மன்னவன் றனதுறை யூரிலே நண்ணி
மஞ்சு லாவிய மாளிகை மறுகெலா மருவி
யிஞ்சி சூழுமிந் நகரெழு தினத்திலே யிறக்கும்

(இ-ள்) நீ பயப்படாதே பயப்படாதே முனிவனே அந்த அரசனை நாமழித்துப்போடுவோம். விஷம்போன்ற அந்த வேந்தனுடைய உறையூரிலே நீ யடைந்து மேகங்கள்தவழ்கின்ற மாடமாளிகைகள் வீதிகளெல்லாஞ்சென்று மதிலாற் சூழப்பட்ட இந்த உறையூர் நகரமானது இன்றுமுதலேழு தினத்திலே அழிந்துபோகுமென்று சொல்லுவாயென்றார் (எ-று) [50]

அரன ருச்சனை புரிகுவோ ரடியரைப் பணிவோர்
குரவர் சொற்படி யொழுகுவோ ரிரநதது கொடுப்போர்
நரைமு திரச்சியோ ரருமறை சிவாகம நவில்வோர்
திருவு டைப்பணி புரிகுவோ ரருமகஞ் செய்வோர்

(இ-ள்) சிவபெருமானை யருச்சனை செய்வோர்களும், சிவனடி வணங்குவோர்களும், குரு வாக்கியப்பிரகாரம் நடப்போர்களும், ஏழைகளுக்கிரங்கியவர்கள் யாசித்ததைக் கொடுப்போர்களும், நரைத்து முதிர்ந்த பருவத்தையுடையவர்களும், அரிய வேதாகமங்களை வாசிப்போர்களும், சிவ பணிவிடை செய்வோர்களும், அருமையான யாகங்களைச் செய்வோர்களுமாகிய இவர்களெல்லாருங் கேட்கும்படியாகச் சொல்லுமென்றார் சுவாமி. (எ-று.) [51]

இன்று கற்பினோர் யாவருங் கேளுமின் சொல்கே
ளின்று தொட்டெழு தினத்திலிப் பதியிறந் தேகு

மன்றி னுற்றவ ராணையாற் சொரியுமண் மாரி
யன்ற டுக்கழி வாகிய வேந்தனு மழிவான்

(இ-ள்) நெருங்கிய கற்புள்ள மங்கையரான புண்ணியவதி முதலான யாவருங் கேளுங்கள் ஒன்று சொல்லுகிறேன். இன்றுமுதல் ஏழு நாளையிலே இந்த உறையூர்ப் பட்டணம் அழிந்துபோம். கனகசபையிலே நடனம்புரிகின்ற சிவபெருமானுடைய ஆக்கினைப்படிக்கு மண்மாரி பொழியும். அந்த மண் மாரியினாலே யிப்படி யடாதகாரியஞ் செய்தவன்பராந்தகச் சோழனும் அழிந்துபோவானென்றும் அறிவிக்கும்படி சுவாமி திருவுள்ளம்பற்றி யருளிச் செய்தார். (எ-று.) [52]

சுற்ற மோடவன் றானையுங் கயவருந் தொலைவா
ரிறையை நாளிது சிவனுப தேசமென் றெவர்க்குஞ்
சொற்று வாவென வுரைசெய்தார் முனிவனுந் தொழுது
மற்றை நாளுறை யூரிலே யுரைத்தனன் மறுகில்

(இ-ள்) இராஜாவைச்சேர்ந்த சுற்றங்களுடனே அவனுடைய சேனைகளுஞ் சேனாதிபதிகள் மந்திரிகள் முதலான துஷ்டர்களு மிறந்துபோவார்கள் யென்றும் இது சிவபெருமானுடைய உபதேசமென்று யாவருக்குஞ் சொல்லி வரும்படி சுவாமி திருவாய்மலர்ந்தருளினார். அதைக்கேட்ட சாரமாமுனிவருஞ் சுவாமியை வணங்கி விடைபெற்றுக்கொண்டு மறுநாள் உறையூரிலே வீதிகள் தோறும் போய் அந்தப்பிரகாரம் எல்லோர்களும் அறியும்படி பிரசித்தமாய்ச் சொன்னார். (எ-று.) [53]

தூய ரானவ ரக்கண மேசெலத் துணிந்தார்
தீய ரானவ ரசங்கதி யாடியிற் செறிந்தார்
தாய ராமென வருள்செயுஞ் சிராமலைத் தலைவர்
வாயு வோடெழு முகிலையும் வரவழைத் துரைப்பார்

(இ-ள்) பரிசுத்தமும் பகுத்தறிவுமுள்ள நல்லோர்கள் அதைக் கேட்ட அந்தட்சணமே அந்த ஊரைவிட்டுப் போய்விடத் துணிந்தார்கள். தீயரான துஷ்டர்கள் சாரமாமுனிவர் சொல்லியதைக் கேட்டு அசங்கதியாகிய பொய் யென்று அலட்சியமாய்ப் பேசியவர்கள் வீடுகளிலேயே யிருந்துவிட்டார்கள். தாயர்களைப்போலே யுயிர்களுக்குக் கிருபைசெய்கின்ற செவ்வந்திநாதர் வாயு தேவனுடனே சப்த மேகங்களையும் வரவழைத்துச் சொல்லுகின்றார் (எ-று) [ ]

சந்த நான்மறை முனிவனை யிகழ்ந்தவன் றருஞ்செவ்
வந்தி நாண்மலர்த் தொடையலும் புனைந்திடு மன்னன்

பந்த மாகிய கிளைகளோ டழிந்திடப் பதியும்
விந்த மாமென மறைத்திடு மெனச்சொலி விடுத்தார்

(இ-ள்) சந்த ரூபமான ஸ்வரங்களையுடைய நான்குவேதங்களையுமுணர்ந்த சாரமாமுனிவனையிகழ்ந்து அவன் நமக்கு அணியச்செய்கின்ற செவ்வந்தி மலர்களைக் கவர்ந்து அத்தால் தொடுக்கப்பட்ட புதிதாகியமாலையையும் அணிந்திடுகின்ற மன்னனாகிய வன்பராந்தகச் சோழனும் அவனுடைய பந்துக்களான கிளைகள் முதலிய சுற்றத்தாரும் அழிந்துபோகும்படியாயும் அவனுடைய பட்டணமான உறையூரும் விந்தமலைப் போலே பூமியில் புதைந்துபோகும்படியாயும் மண்மாரியாக வருஷியுங்களென்று சொல்லிச் செவ்வந்திநாதர் திருவாய் மலர்ந்தருளினர், (எ-று) [55]

தாமு மந்நகர்க் கெதிர்முக மாகிமுற் றலத்துக்
கேம மாகவே புறங்கொடுத் திருந்தன ரிப்பான்
மாமு கிற்கண மிடித்ததிர்ந் தெழுந்துமண் மழையைத்
தீமு கங்களா லிறைத்தன புனலையுஞ் சிதறி

(இ-ள்) அப்படிச் சப்தமேகங்களையும் அனுப்புவித்துத் தாமும் அந்த உறையூர் நகரத்துக்கு எதிர்முகமாகி அந்த நகரத்தைப்பார்க்க மேற்கு முகமாய்த் திரும்பி முன்னே கிழக்கு முகமாயிருந்த தலத்துக்கு இன்பமாகவே பின்கொடுத்திருந்தார். இப்பால் சுவாமியினுடைய உத்தாரப்படி பெரிய மேகங்களின் கூட்டங்களெல்லாம ஆகாயத்திலே மின்னியிடித்து அதிர்ந்து ஆரவாரஞ்செய்து எழுந்து காற்றும் மணணும் மழையும் நெருப்பும் தண்ணீருமெல்லாமொன்றுகூடிச்சொரிந்தன (எ-று). மண்மாரியை நெருப்புககளின் முகங்களாலே நீரையுஞ் சிதறி மேகஙகளிறைத்தனவெனக்கூட்டுக. [56]

சண்ட மாருதஞ் சுழன்றுறை யூரெலாஞ் சலியா
வெண்டி சாமுகந் திரிந்திட வொன்றிலொன் றெடுத்துக்
கொண்டு கீழ்விழ வெறிந்தன பலபல குவையாய்
மண்டி ரண்டன மலைபெறுங் குழவிகண் மான

(இ-ள்) சண்டமாருதமான காற்றானது சுழன்று உறையூரிலேயிருக்கிற சகல சனங்களுஞ் சலிக்க அந்தப் பட்டணமெட்டுத் திசைகளுஞ் சுழல மாடமாளிகை கூடகோபுரஙகளைப் பெயர்த்து வொன்றின்மேலொன்று யெடுத்துக் கொண்டு கீழே விழும்படி யெறிந்தன மலைகளைப்போல வுமது பெறுகின்ற சிறு குன்றுகளைப்போலவும், ஒப்பாக பலபல குவியல்களாக மண்கள் திரண்டு மேடிட்டன. (எ-று) இதனாலனேகம் பெயரிறந்தார்கள். [57]

கூற்ற மன்னவன் றீவினை விளைத்திடுங் கோழி
கீற்ற டைந்துபல் குழிகளா யுயர்ந்தது கிழக்கிற்
காற்று வந்துதன் கரங்களாற் கீழ்நிலங் களைய
வேற்று மண்களைச் சொரிந்தன போன்றன மேகம்

(இ-ள்) உறையூர்ப் பட்டணத்திலிருக்கிற சகல சனங்களுக்கும் இயமனைப்போலானவன் பராந்தக சோழனுடைய தீவினையாலுண்டாகும் விதத்தைக் கோழிமாநகரமானது கோழியின் கால்களாற் கீறப்பட்ட கீற்றையடைந்து காட்டிப் பல குழிகளாயும் மேடுகளாயு முயர்ந்தது. கீழ்காற்றானது வந்து தனது கைகளாலே கீழ் நிலங்களைக் களையவேற்று மண்களை மேகங்கள் சொரிந்தனபோலிருந்தன (எ-று) உறையூர்க்கோட்டைக்கு கிழக்கேயுண்டாகிய மண்ணைக் கீழ்காற்று வந்து குத்திப் பெயர்தெடுத்து அந்த மண்ணைச் சொரிவது மேகங்கள் வேறு மண்களைச் சொரிந்தனபோலிருந்ததென்பதாம். [58]

மாட மாளிகை மறைந்தன மறைந்தன மணித்தே
ராட ரங்கெலாம் புதைந்தன புதைந்தன வகங்கள்
கூட கோபுரங் கரந்தன கரந்தன குளங்கண்
மேடு பட்டன காவுட னுவண வீதி

(இ-ள்) மாடமாளிகைகளெல்லாம் மறைந்துபோயின அழகிய தேர்களும், நடனசபைகளும், வீடுகளும் மறைந்து மண்மேடிட்டுப் புதைந்துபோயின கூடகோபுரங்களுங், குளங்களுமிருந்த விடந்தெரியாமற் மறைந்தொழிந்துபோயின. பூங்காவனங்களுஞ் சோலைகளுங் கடைவீதிகளும் மண்மேடுபட்டன. (எ-று) [59]

அந்த மாமுனி யுரைத்ததை யசங்கதி யாடி
யிந்த வாருயி ரிழந்தன மெனக்கரை திடுவார்
தநதை தாயருக் கிரங்குவார் கலுழுவார் தளர்வார்
மைந்த ரானவர்க் குருகுவா ராயினர் மாக்கள் .

(இ-ள்) அந்தச் சாரமாமுனிவர் சொன்னதைப் பொய்யென்று பரியாசஞ் செய்து இந்த அருமையான உயிரை யிழந்தோமென்று சொல்லிச் சிலர் இறப்பார்கள். தந்தைகளும் தாயார்களுமிறந்துபோனதற்காகச் சிலர் இரங்கியழுவார்கள். மைந்தர்களிறந்துபோனதற்காகச் சிலர்கள் மனமுருகுவார்களிந்தப்படி யுறையூரிலுள்ள மனிதர்களாயினார்கள். (எ-று) [60]

மழைத னக்கிடு குடையெனக் குழவியான் மறைப்பார்
தழைசெ விப்புகர் முகமத மருப்பிணைத் தந்தி

புழைப ரப்பிய வாயிடைச் சிலர்சிலர் புகுவா
ரழலி றைத்திடு புயலினுக் கஞ்சுவா ரானார்

(இ-ள்) மழைக்குக் குடைபிடித்துக்கொள்வதுபோலத் தங்கள் கையிலிருக்கிற குழந்தையாலே தங்களுடலை மறைப்பார்கள். தழைந்த செவியும் புகர்முகமும் இரண்டு கொம்புகளையுமுடைய யானைகள் மண்மாரியினாலே அடிபட்டு இறந்து விழுந்துகிடக்கும்போது அதினுடைய துவாரம்பொருந்தின அகன்ற வாயினிடத்தேபோய்ச் சிலர் சிலர் நுழைவார்கள் அக்கினிச் சுவாலையாய்ப் பெய்கிற மழைக்குப் பயந்து அஞ்சுவார்கள். (எ-று) [61]

ஒருவ ருக்கிடை யொருவர்வந் தொளித்தொளித் தொதுங்கிப்
பரிவ ருத்தனை பண்ணிடு மவரெனப் பயில்வார்
வெருவி யக்கண நிலவறை செயச்சிலர் விரைவார்
புரமெ ரித்திடு பொழுதினி லவுணரைப் போன்றார்

(இ-ள்) பயந்து ஒருவரிருக்குமிடத்தில் மற்றொருவர் மிகவும் பயந்து வந்தொளித்தும், அவர்கள் அப்படியஞ்சியிருக்குமிடத்தில் வேறே சிலர் ஆபத்துடனே பயந்து வந்தொளித்தும் ஒதுங்கிப் பரிவருத்தனைசெய்து இருப்பவர்களைப்போலச் சிலரிருந்து இறந்தார்கள். அப்படிப பெய்கின்ற மண்மாரிக்குப் பயந்து சிலர்கள் அந்தட்சணத்திலே நிலவறைசெய்து அதிலிருக்க அவசரப்படுவார்கள் திரிபுரங்களும் வெந்து எரியும்பொழுது அதற்குள்ளேயகப்பட்டுக் கொண்ட முப்புராதிகளைப் போலானார்கள் உறையூரிலுள்ளவர்கள். (எ-று) []

பாவி மன்னவன் றன்னகர் படுந்துயர் பார்த்துத்
தேவி தன்னுடன் பரியின்மேற் குடதிசைச் சென்றான்
மேவு மவ்விடந் தன்னினு மண்மழை விழுநத
வாவி கொண்டவன் வடதிசைக் காவிரி யடைந்தான்

(இ-ள்) மகாபாவியாகியவன் பராந்தகச் சோழராசன் தன்னுடைய பட்டிணம் படுகின்ற துன்பத்தைப் பார்த்துத் தனது மனைவியுடனே குதிரையின்மேலேறிக்கொண்டு மேற்குத்திசை நோக்கிப்போனான். அப்படி யவன் போகின்ற அந்த இடத்திலும் மண்மாரி யவன்மேல் விழுந்தன. அதன் மேல் உயிரிலாசைகொண்டவனான அவ்வரசன் வடதிசைக் காவிரியையடைந்தான். (எ-று) [63]

சென்னி யவ்விடைத் திரும்பவு மவன்பெருந் தேவி
தன்ன தாகிய கருப்பமெய் முதிர்ந்திடுந் தளர்வாற்
பொன்னி யாற்றிடை விழுநதனள் புலையரிற் புலைய
னென்னு மன்னவன் றிரும்பிவந் தவளையு மெடாமல்

(இ-ள்) சென்னியாகிய அந்தச் சோழராசன் காவிரியை நோக்கித் திரும்பவும் அவனுடைய பெருமையுள்ள தேவியானவள் தன் வயிற்றிலுள்ள கருப்பமானது முதிர்ந்து அதனாலே சரீரந்தளர்ந்து பொன்னியாகிய அந்தக் காவிரிநதியிலே விழுந்தாள். சண்டாளரினுங் கொடிய சண்டாளனான அந்த அரசன் திரும்பி வந்தவளையுமெடாமல் போனான். (எ-று) [64]

உயிர்பி ழைத்திடி லேதுவிற் றேனுமுண் பாமென்
செயிரி ழைத்த சொற் படியவன் விரைவுடன் சென்று
னயிர்கொ ழித்திடு காவிரிக் கரைபுகு மளவிற்
றுயர்பு டைத்துநொந் தவனொடு வீழ்ந்தது துரகம்

(இ-ள்) அப்படி விழுந்த தனது பட்ட ஸ்திரீயையும் பார்த்தெடாமல் தன்னுயிர் பிழைத்திருந்தால் ஏதாவது விற்றாலும் பிழைக்கலாமென்று மூடர்கள் பேசுகிற குற்றத்தை யுண்டுபண்ணப்பட்ட சொல்லின்படி யந்தச் சோழராசன் குதிரையின்மேல் வேகத்துடனே போனான். நுண்ணிதான மணலைக் கொழித்திடுகின்ற காவிரியின் வடகரையிற் போகுமளவிலே மண் மாரியின் துன்பத்தினாலேயுங் காற்றினாலேயும் அடிபட்டு நொந்து அந்தச் சோழராசனுடனே யவனேறிய குதிரையும் மண்ணிலே விழுந்தது. (எ-று) []

மாவு மன்ன னு மறைந்திடப் பொழிந்தமண் மாரி
காவி னின்றகண் மலரெலாம் பறித்துமுன் கவர்ந்த
பாவி யென்றிவன் விருப்பமா னதுகெடும் படிக்குப்
பூவி னுண்மறைத் திடுவது போன்றன புயல்கள்

(இ-ள்) குதிரையும் அரசனும் மறைந்திடும்படியாக அவ்விடத்திலே மண் மாரி பெய்ந்து மூடிப்போட்டது. எப்படி யிருந்ததென்றால் சாரமாமுனிவர் வைத்த நந்தன வனத்திலேயுள்ள தேன்பொருந்திய செவ்வந்திமலர்களையெல்லாம் பறித்து முன்னே கவர்ந்துகொண்ட மகா பாவியென்றும் அவன் அந்தப் பூவில் வைத்திருந்த விருப்பமானது கெடும்படிக்கும் மேகங்கள் பூவாகிய மண்ணின் மழையான துளிமாரியினாலே யவனை மறைத்திடுவதுபோலிருந்தன. (எ-று) [66]

பிறைமு டித்தவர் முனிவினு லயிர்மழை பெய்த
தறையி லித்தனை யாயிரத் தலமென வறியு
முறைக ளிட்டன போன்றிருந் தனவுறை யூரிற்
குறைய றத்திசை திசையெலா நிறைந்தமட் குவைகள்

(இ-ள்) மூன்றாம்பிறையை முடித்த சிவபெருமானுடைய கோபத்தினாலே மண்மாரி பெய்த பூமியில் இவ்வளவு ஆயிரமான இடங்களுண்டாயின

வென்று யாரும் அறியும்படிக்கு அடையாளமான உறைகள் வைத்திட்டன போல உறையூரிற் குறைவின்றி நான்கு திசைகளெல்லா நிறைந்த மண்மேடுகளிருந்தன. (எ-று) [67]

கண்ணி னுலருட் பெருமழை பொழிந்திடுங் கடவுண்
மண்ணி னுன்மழை பொழிந்திடு முகிலினை மாற்றிப்
புண்ணி யஞ்செயா வளவ்னூ ரழித்தது போதும்
விண்ணி லேகுமென் றுரைத்தனன் மறைந்தன மேகம்

(இ-ள்) கிருபாநேத்திரத்தால் அருளாகிய பெரிய மழையை அடியாரிடத்திற் பொழிந்திருக்கின்ற கடவுளாகிய செவ்வந்திநாதர் மண்மாரி பெய்யப்பட்ட மேகங்களை நீக்கி புண்ணியஞ் செய்யாத பாவியான சோழனிருந்த உறையூரை நீங்களழித்தது போதும் இனிமேலாகாயத்திலே போய்ச்சேருங்களென்று கட்டளையிட்டருளினூ அப்படியே மேகங்களுமறைந்தன (எ-று) இதனாலே அறக்கருணையாலடியார்களை ஆளுதற்கும் மறக்கருணையால் துஷ்டர்களுடைய குற்றத்தை நீக்கிக் குணப்படுத்துவதற்கும் இச்செய்யுளே சான்றாகும். [68]

கலிவிருத்தம்

வன்னி வண்ணர் மலரை முடித்திடுஞ்
சென்னி பட்ட திறமுறை செய்தனம்
பொன்னி யாறு புகுந்திடர் மூழ்கிய
கன்னி மாதின் கதையை விளம்புவாம்

(இ-ள்) நெருப்பினது நிறத்தையொத்த திருமேனியையுடைய சிவபெருமானுக்கு அணிகின்ற செவ்வந்திமலரைத் தலையிலே முடித்த வன்பராந்தகச் சோழனுடைய அந்தத்தலை முதலிய அவன்சரீரமுழுதும் மண்ணிலே புதைந்தழிந்த விருத்தாந்தங்களைச் சொன்னோமினிமேல் காவிரியாற்றிலே விழுந்து துன்பத்தின்மூழ்கியழிவில்லாத அந்தமாதரசியின்கதையைச்சொல்வாம்[எ-று]

கலிநிலைத்துறை

மேனி றைந்தெழ வருந்தியும் புனலிடை வீழ்ந்துஞ்
சூனி றைந்துகொண் டிரும்புனற் சுழிகளிற் சுழன்று
மானி றைந்திடு கொடியவர் திருவரு ளாலே
தானி றந்தில ளொழுகின ளணுகின டடத்தை

(இ-ள்) அப்படிக் காவிரியாற்றில் விழுந்த அந்த அரசனுடைய மனைவியானவள் சுவாசமேலே நிறைந்தெழப் பெருமூச்சுவிட்டு வருத்தத்தை யடை

தூர்தண்ணீரிலே மூழ்கி வருத்தப்பட்டும் பூரண கெர்ப்பத்துடனே பெரிய நீர்ச்சுழிகளிலே சுழன்றும், பெருமை நிறைந்த ரிஷபக்கொடியையுடைய கடவுளின்றிருவருளாலே பிராணலயமில்லாமல் வெள்ளத்திலே து நீரொழுங்கிலே மிதந்துபோய் ஆற்றங்கரையோரமாக அடைந்தாள் (எ-று) [70]

கரையி லேயருந் தவம்புரி பவனருட் கண்ணன்
பிரம மாநதி யென்பவன் குலத்தினும் பெரியோ
னரிவை யவ்விடை வருதல்கண் டெடுத்தன னவடன்
றெருமரு ருந்துய ரகற்றினு னடைவிலே தேற்றி

(இ-ள்) அந்த ஆற்றங்கரையிலே யரிதான தவத்தைச் செய்துகொண்டிருப்பவன், கிருபையே கண்ணாகவுடையவன், பிரமமாநதியென்று சொல்லப்பட்டவன், குலத்தினும் பெரியோனான பிராமணன், அரிவையாகிய அந்தச் சோழராசனுடைய தேவியானவள் அந்தக் கரையோரமாக மிதந்து வருதலைப் பார்த்து எடுத்து அ.முடைய சுழன்ற துன்பங்களையெல்லாம் நீக்கினதுமன்றி தண்ணீரிலே அவதிப்பட்ட பேருக்கு என்ன பண்ணுவார்களோ அவைகளையெல்லாம் செய்து தெளிவித்தான் (எ-று) [71]

தந்தை யானுன தச்சமுந் தளர்ச்சியுந் தவிர்வா
யெந்த வூரெவன் றேவியுன் னுமம்யா தென்ற
னந்த ளுளனே யன்னையே யத்தனே யருளே
யெந்தை யேயுனக் கடைக்கல மடைக்கல மென்றாள்

(இ-ள்) அப்படியந்தப் பிராமணன் அவளைத்தேற்றி நான் உன்னுடைய தகப்பன் நீ யென்னுடைய மகளாகையால் உன்னுடைய பயத்தையுந் தளர்ச்சியையும் விடு நீ யெந்தவூர், எவனுடைய மனைவி, உனது பெயர் யாதென்று கேட்டான். அதற்கு இராஜாவின் தேவியாகிய அவள் பிராமணோத்தமனே கேள், நீயே யெனது தாயுந் தகப்பனும் அருள்வடிவமான ஆசாரியனுமானதால் நானுனக்கு அடைக்கல மடைக்கல மென்று சொன்னாள் (எ-று) [72]

திரிசி ராமலை யிறையவர் திருவுளஞ் சிதைத்த
புரவ லன்னுயிர்த் தேவியான் புவனமா தேவி
சொரியு மண்மழைக் கச்சமாய் மனுகுலந் தொலைத்தோன்
குரக தந்தனை யுகைத்தன னென்னையுங் கொண்டு

(இ-ள்) திரிசிராமலை நாதருடைய திருவுளப்பாங்கிற்கு விக்கினஞ்செய்த சோழராஜாவின் பிராணநாயகி, யென் பெயர் புவனமாதேவி, பெய்கின்றமண் மாரிக்குப் பயந்து மனுவின் குலத்தைத் தொலைத்த அந்த அரசன் குதிரையின்பேரில் என்னையும் வைத்துக்கொண்டு வெளிப்பட்டான் (எ-று) [73]

அச்ச மாய்விழுந் தாற்றிலே மிதந்துனை யடைந்தேன்
கச்சு வார்கழ லரசனெவ் விடத்தனோ காணே
னெச்ச மானது வேண்டுமிக் குலத்தினுக் கென்று
பிச்சி யாகியு முயிர்சுமந் திருந்தனன் பிழைத்து

(இ-ள்) மண்மாரி பெய்கிறதற்கு நான் பயப்பட்டு வேகமாய்ப்போகிற குதிரையிலிருந்து நழுவியாற்றிலே விழுந்து மிதந்துன்னையடைந்தேன் கச்சு ஒலைகட்டிக்காலில் விளங்காநின்ற வீரக்கழலையுடைய அரசனான எனது நாயகன் எந்த விடத்தை யடைந்தானோ நான் காணேன் இந்தச் சோழவம்சத்துக்குப் பிள்ளையானது வேண்டுமென்று பிச்சையெடுக்கின்றவள் போலேழையாகியும் ஆற்றிலேயிறந்துபோகாமற் பிழைத்து உயிரைச்சுமந்துகொண்டிருந்தேனென்றாள் (எ-று.) பிச்சி யென்பதை பித்தி யெனப்பொருள்கொண்டு அறிவில்லாத பயித்தியங் கொண்டவளாகியுமெனப்பொருள் கூறினும் அமையும் விச்சு-வித்து என்பதுபோலக் கொள்க [74]

ஐய வென்றழு துரைத்தன ளந்தண னவளைப்
பைய வேகொடு சென்றுபோய்ப் புகுந்துதன் பதியின்
மையில் கற்புடை மனைவியோ டுரைத்தனன் வனத்திற்
றையல் வந்தது மவளது பெருமையுந் தகவும்

(இ-ள்) இராஜாவினுடைய தேவியானவள் பிராமணனைப்பார்த்தென்னுடைய தகப்பனேயென்று அழுது தன்னுடைய பூர்வோத்திரங்களையெல்லாஞ் சொன்னாள் அதைக்கேட்டபிராமணன் அவளை மெள்ள அழைத்துக்கொண்டு போய்த் தனதூரிலே புகுந்து மயக்கமில்லாத கற்பினையுடைய தன் மனைவியுடனே இராஜாவின் தேவியானவள் ஆற்றுநீரிலே அவதிப்பட்டு வந்ததும் அவளுடைய பெருமையுங் குணமுமறியும்படி சொன்னான் (எ-று) [75]

கலிவிருத்தம்

கருப்பமா னதுநிறை கமலச் சீதையை
விருப்பமாய் வளர்த்தவான் மீகர் போலவே
யருப்பமுங் குறைவிலா தமிர்த நன்புன
றருப்பண நிகர்மணித் தாம மாலிகை

(இ-ள்) பூரண கருப்பமாகவந்த தாமரை மலரிலிருக்கின்ற லட்சுமியான சீதாதேவியை ஆசையாக வளர்த்தருளிய வான்மீக ரிஷியைப்போல அற்பமுங் குறைவில்லாமல் நிறைந்த பதார்த்தங்களுடனே அமிர்த மயமான அன்னமும் நல்ல ஜலமும் கண்ணாடியைப்போல் விளங்கிய ரத்னமாலையும் பூமாலையுங்கொடுத்து அந்தப் பிராமணன் சம்ரெட்சணை செய்துவந்தான் (எ-று)

சந்தன மிமசலம் பனிநந் தண்மலர்
கந்துக மம்மனை கழங்கு பைங்கிளி
சுந்தர வோதிமந் தோழி மார்களுந
தந்தன னவளது தளர்ச்சி நீங்கவே

(இ-ள்) பின்னும் இராஜாவின் தேவிககுச் சந்தனமும், பனிநீரும், பச்சைக்கருப்பூரமும், குளிர்ந்த புஷ்பஙகளுந்தந்து விளையாடும்படி பந்து, அம்மானை, கழஙகுகளும், பசுமையான கிளியும் அழகிய அன்னம்போன்ற தோழிமார்களுமாகிய இவைகளையெல்லாம் அந்தப் புவனமாதேவியுடைய தளர்ச்சி நீங்கிச் சந்தோஷமாயிருககுமபடியாயந்தப் பிராமணன் கொடுததான் (எ-று).

இன்புட னிப்படி யிருக்கு நாளிலே
யொன்பது திங்களு நிறைந்த தொள்ளிழை
தன்புடை மருத்துவத் தலைமை மாதரை
யன்புட னமைத்தன னகன்றி டாமலே

(இ-ள்) அநதப்புவனமாதேவியான இராஜபததினியானவ ளிந்தப்பிரகாரஞ்சந்தோஷததுடனே மகிழ்ந்திருககின்ற நாளிலே யொன்பது மாதங்களு நிறைந்து பததாவது மாதம் பிரவேசித்தவுடனே தலைமையான மருத்துவப் பெண்களை வரவழைத்துப் பிரசபமாகிறவரையில் அந்த இராஜபத்தினியிடத்தில் எப்பொழுது நீஙகாமலிருக்கும்படியன்புடனேயந்தப்பிராமணன் செய்து வைத்தான் (எ-று) [78]

பூரண கருப்பமாய்ப் பொறையு யிர்த்திடுஞ்
சீரிய தினத்திலோர் முனிவன் சேர்நதன
னோரையுங் காணமும் யோக முஞ்செறி
வாரமு நன்மையாய் வருதல் கண்டனன்

(இ-ள்) பததுமாதஙகளுநிறைந்து பூரணகர்ப்பமாகிப்பேறுகாலமாகின்ற சிறந்த தினத்திலே ஒப்பற்றவோர்முனிவருடனே பிராமணனும் சேர்ந்து இராசியுங கரணமும, யோகமும். நெருஙகிய வாரமும், லககினமும், நட்சத்திரமுமாகிய இவைகளெல்லாம் நன்மையாக வருதலைக்கண்டான் (எ-று) [79]

திரிபுவ னப்பெருந் தேவி யேயின
மொருகடி கையிற்பொறை யுயிர்த்தி டாதுகொள்
பெருநல மெனச்சொலிப் பெயர்ந்து போயினு
னரிவையுஞ் சரணமே லாக நின்றனள்

(இ-ள்) திரிலோகங்களுக்கும் பெருமையைக் கொடுக்கின்ற புவனமகாதேவியை யின்னம் ஒருநாழிகை வரையிற் பிள்ளைப்பேறுண்டாகாமற் செய்து

கொண்டால் பெரிதாகிய நன்மையுண்டாகுமென்று சொல்லி யந்தப் பெரிய முனிவர் அவ்விடம் விட்டுப்போயினர் அதைக்கேட்ட அந்த இராஜஸ்திரீயும் இரண்டு கால்களு மேலாக நின்றாள் (எ-று) [80]

முற்றிழை முனிசொலு முகூர்த்தந் தன்னிலே
பெற்றனள் குழவியைப் பிறையை நேரென
நித்தமும் வளர்ந்தது நிதியுஞ் சாதக
முற்றிடு தினத்தினி லோலை தீட்டினர்

(இ-ள்) தொழின்முற்றிய ஆபரணங்களையுடைய அந்தப் புவனமாதேவியானவள் முனிவர் சொல்லிய நல்ல முகூர்த்த தினத்திலே குழந்தையைப் பெற்றாள், அக்குழந்தையும் மூன்றாம் பிறையைப்போல நித்தமும் வளர்ந்து கொண்டிருந்தது. பிராமணனும் நிறைவுள்ள ஜாதகமானது பொருந்தத்தக்க தினத்திலே யோலையிலெழுதிவைத்தார். (எ-று) [81]

ஈண்டுதன் றாயுட னிருந்த கோமக
ஞண்டொரு நான்குசென் றழகின் வீறினன்
றூண்டிய பெரும்புகழ்ச் சோழ மண்டலங்
காண்டக வெங்கணுங் கான மானதே

(இ-ள்) இவ்விடத்திலே தனது தாயாருடனே யிருந்த இராஜாவின் புத்திரன் நான்கு வருடஞ்சென்று அழகிலே பெருமையுடையவனானான். தூண்டப்பட்ட விளக்கைப்போலப் பெரிய பிரகாசமும் புகழ்ச்சியும் பொருந்திய சோழமண்டலமானது பார்க்கததக்க எவ்விடஙகளிலும் அரசனில்லாதினாலே நாடுகளழிந்து காடுகளாகிவிட்ட தென்றவாறு. [82]

அன்புடைச் சாரமா முனியு மத்தலந
தன்பொருட் டாகவே யிறந்த தன்மையால்
வன்புடைக் காவலா மந்தி ரிக்குழா
மின்பமுற் றுறையுமவ் விடத்தி லெய்தினன்

(இ-ள்) அன்பையுடைய சாரமாமுனிவரும் அந்த உறையூரானது தன் பொருட்டினாலே யழிந்துபோன காரணததால் அன்பில்லாதவன் பராந்தகச் சோழனது மந்திரிகள் முதலிய குழாங்கள் இன்பம் பொருந்தியிருக்கின்ற அவ்விடத்தில் போயினர். (எ-று) [83]

தொல்லையி னமைச்சரே சோழ மண்டலம்
புல்லிதா யிப்படிப் போத னீதியோ
வல்லிய முயர்த்தவன் மரபிற் றோன்றினோ
ரில்லையோ தேருமி னென்று கூறினன்

(இ-ள்) பழமையாயுள்ள மந்திரிகளே யிந்தச் சோழமண்டலமானது அற்பமாயிப்படிக் காடுகள் மூடிப்போயிருக்கின்றது ஞாயமோ, புலிக்கொடியை யுடைய சோழர்களின் வம்சத்திலே தோன்றியபேர்களில்லையோ அதை யாராய்ந்து பாருங்களென்று சாரமாமுனிவர் சொன்னாரென்றவாறு. [84]

அமைச்சருந் திருவுள மாகி லையனே
யுமைக்கிறை யருளினா லுலக மேழையுஞ்
சுமக்குநல் லொருவனைச் சோழன் றோன்றலை
யிமைக்குமுன் கொணருவோ மென்று கூறினார்

(இ-ள்) அப்படிச் சாரமாமுனிவர் சொன்னதை மந்திரிகளுங்கேட்டு ஐயனே யுமக்குத் திருவுளமுண்டாகில் உமையொருபாகனான சிவபெருமானுடைய திருவருளினாலே யேழுலோகங்களையுந் தாங்கத்தக்க புஜபலமுள்ள வொருவனாகிய சோழனுடைய புத்திரனையொரு நிமிஷத்துக்குமுன்னே கொண்டுவருவோமென்று கூறினார்கள். (எ-று) [85]

காவலன் காவிரி கடக்குங் காலையிற்
றேவியும் புனலிடை வீழ்ந்து தீரமுற்
றாவியோ டிருந்தன ளறிமி னென்றனன்
யாவரும் புகழ்முனி யிருக்கை யெய்தினான்

(இ-ள்) அரசனானவன் உறையூர்ப்பட்டிணத்தை விட்டுக் காவிரியாற்றைக் கடக்குங்காலத்தில் அவனுடைய தேவியும் அந்தவாற்று நீரிலேவிழுந்து கரையைச்சேர்ந்து உயிருடனே யிருக்கிறாள் நீங்கள் அறியுங்களென்று சொல்லியாவரும் புகழத்தக்க சாரமாமுனிவர்தான் இருக்கிறவிடத்திற்குப் போய் விட்டார்கள். (எ-று) [86]

சட்பதங் குடைமதத் தறுகண் யானையைக்
கட்படம் புனைந்துதண் கரையி னேகெனக்
கொட்புற விடினது கொணரு மென்றுதம்
முட்கலந் தமைச்சர்க ளொருமித் தேகினார்

(இ-ள்) ஆறு கால்களையுடைய வண்டுகள் குடையப்பட்ட மதமும் அஞ்சாமையுமுடைய யானையினிரண்டு கண்களையுங் கட்டிக் குளிர்ந்த காவிரிக்கரையிலே சுழற்சிபொருந்தச் செல்லும்படி விட்டால் அந்த யானையானது இராஜாவைத் தெரிந்தெடுத்துக்கொண்டு வருமென்று மந்திரிகள் தங்களுள்ளத்திற் கலந்தொருமித்துக் கூடிப்போனார்களென்றவாறு. [87]

முனிவனுக் கிவையெலா மொழிகு வாமெனத்
துணையொடுஞ் சென்றுதங் கருத்தைச் சொல்லினா

ரனைவரு முயலுமென் றருளி னானவர்
கனைகளிற் றிணைவிழி கட்டி யேவினார்

(இ-ள்) சாரமாமுனிவருக்கு இவைகளெல்லாஞ் சொல்லுவோமென்று மந்திரிகளனைவரும் அவரிடததிற்போய் தங்கள் கருத்தைச் சொல்லினார்கள் அதைக்கேட்டு அந்தச் சாரமாமுனிவரும் நீங்களெல்லோருங்கூடி முயற்சி செய்யுங்களென்று அருளிச்செய்தார். அவர்களும் கர்ச்சிக்கின்ற யானையின் கண்ணைக் கட்டியனுப்பினார்களென்றவாறு, [88]

அரசிய நடந்துல கனைத்துந் தேடியே
கரைபொரு காவிரிக் கரையிற் சண்பக
மருமலி திருநில மருங்கிற் சென்றது
திருமகன் சிதைத்தனன் சிற்றி லவ்விடை

(இ-ள்) இராஜாவின் பட்டத்துயானையானது நடந்து உலகமனைத்துந் தேடிக்கரையுடனே பொருதுகின்ற அலைகளையுடைய நீர்நிறைந்த காவிரிக் கரையிற் சண்பகமரங்களின் பூக்களாலே வாசனைபொருந்திராநின்ற அழகான நிலத்தின் சமீபமாய்ச்சென்றது. அப்பொழுது இராஜகுமாரனும் அவ்விடத்தில் சிறுபிள்ளைகளுடனே கூடிச்சிறுவீடு கட்டி விளையாடியந்தச்சிற்றில்களைக் காலாற் சிதைத்துக்கொண்டிருந்தனன் (எ-று) [89]

சிறுமகா ருடனவன் சிதைக்குஞ் சிற்றிலின்
மறுவறு கடகரி வந்து முன்பணிந்
திறைமகன் றனைக்கரத் தெடுக்க லுற்றது
குறுமகா ரனைவரு மிரிந்து கூவினார்

(இ-ள்) சிறுபிள்ளைகளுடனே அந்த இராஜகுமாரன் விளையாடிச்சிதைக்கின்ற சிறு வீட்டினிடமாகக் குற்றமற்ற மதயானையானது வந்து அவன் முன்னே வணங்கியந்தக் குமாரனைத் துதிக்கையினாலே யெடுககிறதற்கணைந்தது. அப்பொழுது அவன் பக்கத்தில்,நின்ற சிறுபிள்ளைகளனைவரும் பயந்து கூவினார்கள் (எ-று) [90]

தாயரை யடைந்துநின் றனையன் றன்னைவந்
தாயிருங் களிறெடுத் தசைத்த தென்றனர்
வாயினி லறைந்துகை வயிற்றில் வைத்தவ
ளேயவந் தணனுடன் றொழுது சொல்லினாள்

(இ-ள்) அப்படிக்கூவிக்கொண்டுவோடின சிறுபிள்ளைகளனைவரும் அவனுடைய தாயாரிடத்தில்வந்து உன்னுடைய குமாரனை யொரு பெரிய யானை

யானது வந்து ஆச்சரியத்துடனே தும்பிக்கையினாலே யெடுத்து அசைத்தது வென்று சொன்னார்கள். அதைக்கேட்டவுடனேயவள் தன்வாயிலேயறைந்து கொண்டு வயிற்றிலே கையையும் வைத்துக்கொண்டு சுத்தமுள்ள பிராமண னிடத்திலே வணங்கிச் சொன்னாள் (எ-று) [91]

அந்தண னவ்விடை யணுகு மெல்லையிற்
றந்தியுந் துதிக்கரஞ் சலித்து நின்றது
சிந்தையி னுணர்ந்திறை தேவி யேகரி
யிந்தன மிவன்பதத் தெழுது கென்றனன்

(இ-ள்) அப்படியிராஜாவின் தேவி சொன்னவுடனே பிராமணன் அவ் விடத்திற் செல்லும்பொழுது யானையும் அந்த இராஜகுமாரனைத் தூக்கக்கூ டாமல் துதிக்கையினை ததுகின்றது அதையந்த பிராமணன் சிந்தித்தறிந்து இராஜாவின் தேவியையழைத்துக் கரியாகிய விறகினாலே யிவனுடைய உள் ளங்காலில் எழுதும்படி சொன்னான் (எ-று) [92]

கீறினள் பதத்தினிற் கிரியி னுச்சியி
னேறிய கதிரென வெடுத்த தொண்கரி
வீறிய மத்தக மிசையிற் றோன்றினான்
றேறினள் சிவன்செய லென்று தேவியே

(இ-ள்) பிராமணன் சொன்ன பிரகாரங்கரியினாலே உள்ளங்காலிற் கீறி னாள். உடனேயுதயகிரியினுச்சியிலேறிய சூரியனைப் போலத் துதிக்கையா லெடுக்கப்பட்ட வொளிபொருந்திய யானையின் பெரிய மத்தகத்திலே யிராஜ குமாரன்தோன்றினான் இதைக்கண்ட இராஜாவின்தேவி சிவன்செயலென்று தேறினாள் (எ-று) [93]

திருநல மறையவர் மலரைச் சிந்தினா
ரருமறை யந்தண னாசி கூறினா
னொருகரிக் கோடுகீ ழிருந்த வுள்ளடி
யிருகரிக் கோடுமே லிருக்க வுற்றதே

(இ-ள்) அழகுள்ள நலம்பொருந்திய பிராமணர்கள் புஷ்பங்களைத் தூவி னார்கள். அரிதாகிய வேதத்தையுணர்ந்த அந்தணனாகிய முனிவனும் ஆசீர் வாதஞ் சொன்னான். ஒரு கரிக்கோட்டின் கீழேயிருந்த இராஜகுமாரனுடைய உள்ளங் காலானது இரண்டு கொம்பினையுடைய யானையின் மேலிருக்கப் பொருந்தியது (எ-று) [94]

உன்னத மதகரி யுவந்து சென்றருண்
மன்னிய திரிசிரா மலைக்கொ ழுந்தனார்

சந்நிதி முன்னரா தரிக்க வைத்தது
சென்னிதன் சென்னியின் முடியைச் சேர்த்தினர்

(இ-ள்) உயர்ச்சியுள்ள மதயானையானது மகிழ்ச்சியுடனே யிராஜகுமாரனை சோழனைச் சுமந்துகொண்டுபோய் கிருபைபொருந்திய திரிசிராமலைக் கொழுந்தர் சன்னிதானத்துக்கு முன்னே யவனை யாதரிகசும்படி வைத்தது. உடனே சென்னியாகிய அந்தச் சோழனுடைய சிரசிலே மகுடத்தையணிந் தார்கள். (எ-று) [95]

மந்திரக் கிழவருங் கிளையின் மாந்தருந்
தந்திரத் தலைவருந் தானை மாக்களுஞ்
சுந்தரத் துணைவரு முறுதிச் சுற்றமும்
வந்துடன் வளைந்தன வாரிபோலவே

(இ-ள்) மந்திராலோசனைக்கு உரிய பூர்வீக மந்திரிகளுஞ் சோழர்களுடைய கிளையிற்றோன்றிய இராஜவம்சத்தார்களுஞ் தந்திரோபாயங்களைச் சொல்லப்பட்ட தலைவர்களுஞ் சேனைவீரர்களும் அழகுபொருந்திய படைத் துணைவரான நட்பினரும் அரசனுக்கு உறுதியான மொழியைச் சொல்லப் பட்ட சுற்றத்தார்களுமாகிய எல்லோர்களும் வந்து சமுத்திரம்போலச் சூழ்ந் துகொண்டார்களென்றவாறு. [96]

கழைச்சிலை யிவன்கரி காலச சோழனென்
றழைத்தனர் கடமையு மாறி லொன்றுகொண்
டொழித்தனன் றுயரெலா முலகம் யாவையும்
பிழைத்தன பகைமையும் பிணியு மற்றவே

(இ-ள்) கரும்பை வில்லாகவுடைய மன்மதனைப்போல அழகுள்ள இவனுக்குப் பெயர் கரிகாலச்சோழனென்று சொல்லிச் சகலருமழைத்தார்கள். அப்பெயருள்ள இவன் குடிகளிடத்திலாறிலொரு கடமையும் வாங்கிக்கொண்டு துன்பங்களையெல்லாம் நீக்கினன். இதனாலே பகையும் பிணியுமற்று உலகம் யாவும் பிழைத்துச் சுகமாயிருந்தன. (எ-று) உலகம் யென்பது அதிலுள்ள உயிர்கள். [97]

கடலெனுங் காவிரிக் கரையுங் கட்டிமுன்
செடிபடு தென்கரைச் சிவால யங்களும்
வடகரை வாய்த்தலை வயலு மாக்கினன்
படவர வின்முடிப் பார நீக்கினன்

(இ-ள்) அந்தக் கரிகாலச்சோழனனவன் கடலென்று சொல்லப்படுங் காவிரியாற்றுக்குக் கரையுங்கட்டி, முன்னே செடிகள் பொருந்திய தென்கரை

யிலே சிவாலயங்களும் வடகரையில் வாய்த்தலை முதலிய கால்வாய்களும் வயல்களுமாக்கிப் படத்தையுடைய ஆதிசேடன் முடியிலுள்ள பூபாரத்தையு நீக்கினான் (எ-று) காவிரிக்குக் கடல்வரையுங் கரைகட்டினானென்றுங் கூறுவர். []

சேரனுஞ் செழியனுந் திறைய ளந்திட
வீரனிப் படிபடி புரக்கும் வேலையிற்
சாரனென் பவன்புரி தவத்தி னான்மகிழ்ந்
தாரணந் தொழுமவ னருளி னெய்தினான்

(இ-ள்) சேரனும் பாண்டியனுந் திறையாகிய அரசிறையைக்கொண்டு வந்தளந்திடும்படிக்கு வீரனான கரிகால்சோழன் இவ்வாறாகப் பூமியைக்காத்து அரசாட்சி செய்யுங்காலத்திலே சாரமாமுனியென்பவர் செய்கின்ற தவத்தினாலே வேதங்கள் தொழுகின்ற சிவபெருமான் மகிழ்ந்து தமது அருளினாலே யம்முனிவர் முன்னே பிரசன்னமானார் (எ-று) அருளினாலம்முனிவர் முன்னெய்தினார். [99]

வரமுனி வணங்கினான் வரங்கள் யாவையுந்
தருகுவ முரையெனச் சாரன் கூறுவா
னருமலர் திருமதி யாறணிந்தவா
பரகதி பெறவருள் பாலி யென்றனன்

(இ-ள்) அப்படித்தம்மிடத்தில் அணைந்த சிராமலைநாதரை மேன்மையுள்ள சாரமாமுனிவர் வணங்கினார் அவரை நோக்கி வரங்கள் யாவையுங் கொடுக்கிறோஞ் சொல்லென்று சுவாமி திருவாய் மலர்ந்தவுடனே யந்தச் சாரமாமுனிவர் அருமையான செவ்வந்திமலரையும் அழகிய சந்திரனையுங் கங்கையையுந் திருமுடியிலணிந்தருளிய கடவுளே அடியேன் பரகதியாகிய திருவடி முத்தியைப் பெறும்படி கிருபை பாலிக்கவேண்டுமென்று சொன்னார். (எ-று) பாலித்தல் - கொடுத்தல் [100]

இக்கதை விரும்பினோ ரெவர்க ளுங்கதி
புக்குறை யவும்வரம் பொழிக வென்றனன்
றக்கதென் றருண்மிகு சார மாமுனிக்
கக்கணஞ் சிவபத மருளிப் போயினான்

(இ-ள்) இந்தக் கதையை விரும்பினோர்கள் எவர்களுஞ் சிவகதியை யடையவும், வரத்தைத் தந்தருளவேண்டுமென்று கேட்டுக்கொண்ட படியே தக்கதென்று அருளிலே மிகுந்த சாரமாமுனிக்கு அந்தக்கணத்திலே சிவபதமாகிய முத்தியையடையும்படி அனுக்கிரகித்து சுவாமி யந்தர்த்தானமாயினார். அனுக்கிரகித்தல்-உபதேசித்தல், அந்தர்த்தானமாதல்-மறைதல் (எ-று) [101]

முனிவனை வழுத்தினர் முனிவர் யாவரும்
புனிதன திணையடி புகழு மெந்தையே
யினியொரு கதையையு மியம்பு கென்றனர்
கனியொடு மமிர்தொடுங் கலந்து கூறுவான்

(இ-ள்) இந்தப் பிரகாரம் உறையூர் அழித்த கதையைச்சொன்ன கௌதமரிஷியை மற்ற இருடிகள் யாவரும் வணங்கிச் சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளையும் புகழும்படியான எம்து பிதாவே எங்களுக்கு இன்னமொரு கதையையுஞ் சொல்லவேண்டுமென்று கேட்டார்கள் அப்படியே சொல்லுகிறோங் கேளுங்களென்று முக்கனியுடனும் அமிர்தத்தோடுங் கலந்து விசேஷமபொருந்திய அநகதையை அந்தக் கௌதம முனிவர் சொல்லத் தொடங்கினர் (எ-று) [102]

முக்கனியானவை யிவ்வுலகத்தாருக்கினிமையும் மரணத்தையொழிக்கும் அமிர்தானது தேவலோகத்தாருக் கினிமையுமாதலாலவ்விருவகை உலகத்தாருக்கும் பயன்படுகின்ற திருவருளின் றன்மையான கதையின் விசேஷத்தை இனிமையின்மேல் வைத்துககுறிப்பாய் நூலாசிரியர் கூறினரென்றுணர்க.

உறையூரழித்தசருக்க முற்றிற்று.

ஆக சருக்கம் 10-க்கு திருவிருத்தம் 498

134-வது பக்கத்தில் 3-வது வரி ஒன்பதாவது என்பதை பந்நாவது என்று வாசிகக.

---

உ

## பதினோராவது
# தாயான சருக்கம்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

தோளை நெருக்கிக் கிளர்ந்திடையாற் சுமக்க வரிதாய்ப் பகிரண்ட
கோள மளவுங் குவிமுலையார் திருமே னியிற்செய் குங்குமமும்
வேளை முனிந்த வருந்தவத்தோர் மனத்தைத் திருகு மெல்லோதிப்
பாளை மணமும் பரிமளிக்கும் பதிகா விரிப்பூம் பட்டினமே

(இ-ள்) இரண்டு தோள்களையுநெருக்கி மார்பிலே நிறைந்து இடையினாலேசுமக்கவரிதாகிப் பகிரண்டகோளமளவுங்குவிந்த முலையையுடைய மாதர்களின் அழகிய உடலிற்பொருந்திய குங்குமஞ்சந்தன முதலிய குளம்புகளின் வாசனைகளும் மன்மதனைவெறுத்த அருந்தவத்தோர்களுடைய மனத்தையுங் கலக்கித் திருகப்பட்ட மெல்லிய கூந்தலிலணிந்த தாழை மடலின் மணமும் பரிமளிக்கின்ற நகரமானது காவிரிப்பூம்பட்டினம் (எ-று) [1]

காவிரிப்பூம்பட்டினமானது கடலோரமாயிருப்பதினாலே யந்தப்பட்டினத்திலுள்ள மாதர்களின் உடலில்அணிந்துகொள்ளப்பட்ட பரிமளத்திரவிய வாசனையினாலேயுங் கூந்தலிலணியப்பட்ட பூம்பாளை முதலிய மலர்களின் வாசனையினாலேயும் அக்கடலானது புலால் நாற்ற நீங்கிப் பரிமளிக்கின்றதென்பது.

(கருத்து) ஆடவர்களுடைய ஆசை பெருகுகின்றதற்கு முலைகளே காரணமாதலால் அம்முலைகளின் பெருமையையப்படிக்கூறினதினாலே காரண காரியங்களைப்பற்றி யவ்விரண்டிற்கும் அளவில்லையென்பது கருதது. இது பற்றியே பகிரண்டகோளமளவுங்குவிமுலையாரென்றார்.

நச்சோ திமமுந் தொழுநடையார் நயனா யுதமு னடைந்தோரைத்
தைச்சோ டையிலே கழுநீருஞ் செந்தா மரையுந் தவம்புரிய
மைச்சோ லையிலே விளையாடிக் குமிழ்மேற் றிரும்பி வள்ளைசெறி
பச்சோ லையிலே மையெழுதும் பதிகா விரிப்பூம் பட்டினமே

(இ-ள்) அன்னங்களும் விரும்பித் தொழுகின்ற நடையையுடைய மாதர்களின் கண்களாகிய ஆயுதங்களானவைத் தமக்கு முன்னே வந்தோர்களைக் குத்தியும் ஓடையிலே செங்கழுநீரும் செந்தாமரையுந் தவஞ்செய்யக் குளிர்ந்த சோலையாகிய இமையினுள்ளேயிருந்து விளையாடியுங் குமிழம் பூவையொத்த நாசியின்மேலே திரும்பியும் வள்ளைக்கொடி போன்ற காதுகளிலே நெருங்கியிருக்கின்ற பசும்பொன்னாற செய்த வோலையிற்போய்த் தம்மிடத்திலணிந்த மையை எழுதியும் உள்ள கண்களையுடைய பெண்கள்வாழ்கின்றபதி காவிரிப்பூம்பட்டினம் (எ-று) [2]

கலிநிலைத்துறை.

மாவிரிக்கும் பொழில்கள்சிலை மதனா ரிகளும் வயப்பரியும்
பூவிரிக்கு நெடுங்கணையு மொழியா தளிக்கும் பொன்னகரங்
காவிரிக்கு வடபாலாய் மகரா லயத்தின் கரையதுவாய்ப்
பாவிரிக்கும் புகழ்படைத்த பதிகா விரிப்பூம் பட்டினமே

(இ-ள்) மாமரங்களால் விரிந்திருக்கின்ற சோலைகளில் மன்மதனுடைய கரும்புவில்லுக்கு நாரியான வண்டுகளும், அந்தமன்மதனுடைய வயப்பரியான கிளிகளும புஷ்பஙகளால் விரிந்திருக்கப்பட்ட அவனுடைய நெடுங்கணையான மாம்பூவும் நீங்காமற் கொடுக்கின்ற பொன்மயமான நகரமும் காவிரியாற்றுக்கு வடபாரிசமாயும் சமுததிரததின் கரையதுவேயாகியும் வித்துவான்களுடைய பாடல்களினாலே விரிந்திருக்கின்ற புகழைப்படைத்திராநின்ற பதியுமாகவுள்ளது காவிரிப்பூம்பட்டினமென்றவாறு. காவிரியாறு சமுத்திர சங்கமமாய்க்கூடுகிறபடியால் அப்பட்டினத்தை மகராலயததின் கரையென்றார் [3]

ஷை வேறு

ஏட விழ்ந்ததார்ப் பேதையர் மணல்களி லிழைத்த
வீட ழிந்திடப் பொருந்திரை நிரைகளை வெகுண்டு
கூடி நின்றுநின் றரியநித் திலமணி கொண்டு
நாடி வேலையைத் தூர்த்திடுஞ் செழும்புகார் நகரம்.

(இ-ள்) இதழ்கள் விரிந்த பூமாலையணிந்திராநின்ற பேதைப்பருவத்தையுடைய பெண்கள் கடலின் மணல்களாற் கட்டிய வீடானது மோதுகின்ற அலைகளினாலே அழிந்துபோய்விட அப்பொழுதந்த அலைகளின் நிரைகளைக் கோபித்து அப்பெண்கள் கூடிநின்று நிலைமையாயும் அருமையாயுமுள்ள முத்துமணிகளைக்கொண்டு சமுத்திரத்தைத் தூர்த்திடும்படி எத்தனிக்கப்பட்ட செழுமை பொருந்திய புகாரென்று பெயர்பெற்ற காவிரிப்பூம்பட்டினமென்றவாறு. நாடப்பட்டதாவது: முத்துகளாலே மேடுள்ளதாய்க் கரைபோட்டு அலைகள் வாராமற்றடுத்து மணலினாலே வீடுகட்டி அப்பெண்கள் விளையாடுவார்களென்பதாம். இதனாலே மணலைப்பார்க்கிலு முத்துக்களின் மிகுதி கூறினார் [4]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காளைய ருடனே காமக் கள்ளுண்டு களித்த மாதர்
தோளினிற் பரித்த முத்தத் தொகைமணி துராலி னோடே
நீளர மியத்தி னின்றும் விரைவுட னெருங்கி வீழ்தன்
மீளவுங் கடலின் மீதே விளைநதிட வித்தல் போலும்.

(இ-ள்) காளைப் பருவத்தையுடைய ஆடவருடனே காமமாகிய கள்ளையுண்டு களித்திருக்கின்ற மாதர்களுடைய தோள்களிலே தாங்கப்பட்ட முத்துக்களின் கூட்டங்கள் செத்தைகளுடனே நீண்ட வீட்டரன்மேலுலாவுகின்ற வெளியினின்றும் வேகத்துடனெருங்கிக்கடலிலே வீழ்தல் பின்னையும் அந்தக் கடலினிடமாக முத்துக்கள் விளையும்படியாக விரைவிதைக்கின்றதைப்போலுமிருந்தது (எ-று). அரமியமென்பது வீட்டின்மேலுலாவும் வெளி [5]

முற்றிழை மடவார் சூடிக் கடித்துவிழ் முல்லை மாலை
சுற்றிய திரையா லாழிச் சுழியிடை யுலவுந் தோற்றங்
கற்றிரள் வரையாற் றேவ ரமுர்தினைக் கடைந்த போதி
னற்றெழுந் தலையிற் றோன்று மரவுரி யென்ன லாமே.

(இ-ள்) சம்மியராற்றொழின் முற்றிய ஆபரணங்களை அணிந்திராநின்ற மாதர்களாற்சூடிக்கழிக்கப்பட்டுக் கடலில் வீழ்ந்த முல்லைமாலையானது சுற்றப்பட்ட அலைகளாற் கடற்சுழியிலே யுலாவுங காட்சி கல்லின்றிரட்சியான மந்தா

கிரியாற் றேவர்கள் வாசுகியென்னும் பாம்பைக்கயிறுகப் பூட்டிப் பாற்கடலில் கடைந்தபொழுது பாம்புரியாகிய தோலானது அற்றுமேலேயெழுந்து அந்தப் பாற்கடலின் அலைகளிற்றோன்றப்பட்ட அப்பாம்புரியென்று சொல்லலாகும் (எ-று) பாம்புரியென்பது பாம்பின்தோல் [6]

கலிநிலைத்துறை.

சிவன ருட்பெறு மியற்பகை நாயனூர் சிறப்பா
லவத ரித்தது மன்றியே பிள்ளைவந் தருளத்
தவமி ழைத்தமா நகரமூன் றுங்குடித் தலைவர்
நவநி திக்கெலாம் பிறப்பிடஞ் செழும்புகார் நகரம்.

(இ-ள்) சிவபெருமானுடைய திருவருளைப் பெற்ற இயற்பகை நாயனுர் இந்த நகரத்தின் சிறப்பினுலே யிதிலவதாரஞ் செய்ததுமன்றி பட்டணத்துப் பிள்ளையும் அவதாரஞ் செய்தருளத தவத்தைச்செய்த பெருமைபொருந்திய நகரமும், மூன்றுகுடியானவைசியத்தலைவர்களெல்லோருங் கப்பல்யாத்திரை செய்து அளவில்லாமல் ஈட்டப்பட்ட சமஸ்தபாக்கியங்களெல்லாம் உண்டா கின்றதற்கு இடமுமாயுள்ளதுமான காவிரிப்பூம்பட்டினமாகும் (எ-று) நவநிதி- நவரததினங்கள் பிள்ளைவந்தருளத தவமிழைத்த மாநகர மென்பதற்குப் பட்டினத்துப்பிள்ளையைக் கூறினும் அமையும் [7]

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

அத்திரு நகரில் வாழு மரதன குத்த னென்னும்
பித்திகை யலங்கன் மார்பன் பெருங்குடி வணிக னென்பான்
றத்தையே யனைய தேவி தன்னுடன் செருக்கு நாளிற்
புத்திர செல்வம் வேண்டிப் புரிந்தன னிறைவர் பூசை.

(இ-ள்) அப்பேர்ப்பட்ட சிறப்பினையுடைய காவிரிப்பூம்பட்டினததில் வாழ்கின்ற அரதநகுத்தனென்னும் பெயரையுடையவன் பித்திகையாகிய இரு வாட்சி மலரால் தொடுக்கப்பட்ட மாலையை யணிந்த மார்பினையுடையவன் பெருமை பொருந்திய குடியிற் பிறந்த வணிகனென்பவன் கிளியைப் போலு மொழியையுடைய மனைவியுடனே களிப்புடன் கூடிவாழ்கின்ற காலத்திற் புத்திரபாக்கியத்தை விரும்பிச் சிவபூசை செய்தான் (எ-று) வணிகன் என்பது செட்டி [8]

மதலையைப் பெறமுன் னுளில் வரமிலா நிலைமை யாலே
புதல்வியைப் பயந்தா னந்தப் புதல்வியுந் தவழ்ந்து நின்று
குதலையுந் தெளிந்து பொன்னங் கொம்புபோல் வளர்ந்தாண் மாற்பிற்
றிதலையங் குரும்பை தோன்றிற தனங்களுந் திறையிட் டானே

(இ-ள்) புத்திரனைப்பெறப் பூர்வத்திலே சுவாமியுடைய வரம் இல்லாத நிலைமையினாலே யவன் புத்திரியைபபெற்றான் அப்புத்திரியுந் தவழ்ந்து நின்று மழலைச்சொற்களுந் தெளிந்து அழகிய பொற் கொம்புபோல வளர்ந்தாள் அப் பருவத்தில் மார்பினிடத்தே தேமலையுடைய முலைகள் தென்னங் குரும்பை யைப் போலத் தோன்றியது அப்பொழுது மன்மதனுந் தனது அரசிறையை யீந்தான் (எ-று) திறையிட்டான் என்பது தவற்றாற்றோன்றிய தெய்வீகமான சௌந்தரியத்தைக்கண்டு வணங்கினனென்பது கருத்து. திறையிடல் வணங் கிக் கப்பங்கட்டல் [9]

அத்தனு மகட்குத் தன்பே ரளித்தன னதன்பின் னாகச்
சித்திர மயிலன் னாளைத் திரிசிரா மலையில் வாழு
மெய்த்தந குத்த னென்னும் பெருங்குடி வணிகன் வேட்டான்
மத்தகக் களிற்றோன் மானே யளகையான் வரைந்த தென்ன

(இ-ள்) தகப்பனான அரதநகுத்தனுந்தன்னுடைய மகளுக்குத் தனது பெயரிட்டழைத்தான், அதன்பின்பு அழகிய மயில்போன்ற அந்தப்பெண் ணைத் திரிசிராமலையிலே வாழ்கின்ற மெய்த்தன குத்தனென்கிறவனும் பெருங்குடியிற் பிறந்த வணிகனுமானவன் மதத்கமபொருந்திய வெள்ளை யானையையுடையோனான இந்திரனுடைய மானாகிய பெண்ணைக் குபேரன் விவாகஞ்செய்ததுபோலக் கலியாணஞ் செய்துகொண்டான் (எ-று) அப் பெண்பெயர் அரதநமதி [10]

கலிவிருத்தம்.

அரதந பாலனன் களித்த வன்னமும்
விரிதந குத்தனு மிரதி வேட்டையிற்
பொருதன ரிளமுலைப் பூத ரங்களு
மிருபுய மலைகளு மெதிர்பு நின்றன

(இ-ள்) அரதநகுத்தனானவன் நன்றாய்ப் பெற்ற அன்னம்போன்ற பெண்ணும் அப்பெண்ணின் கணவனான மெய்த்தனகுத்தனென்னும் பெய ருடையவனும் இரதி வேட்டையில் போர் செய்யத் தொடங்கினார்கள். அப் போது அப்பெண்ணினுடைய இளமுலைகளாகிய மலைகளும் அவனுடைய இரண்டு தோள்களாகிய மலைகளும் சரியாயெதிர்த்து நின்றன (எ-று) இரதி வேட்டையாவது ஆணும் பெண்ணுங்கூடி அனுபவிக்கிற மன்மதனுடைய சண்டையாம் அச்சண்டையிலே மலையோடுமலை யெதிர்த்தது போலப் போக இன்பம் இருவருக்குஞ் சரியாயொத்திருந்த தென்பதாயிற்று [11]

குருகினை நெரிதரக் குவளை சேப்புற
விருவரு முறைமுறை யிலவ வாயிதழ்

பருகினர் மெழுகெனப் பசும்ப தத்திலே
யுருகினர் கரைந்திரண் டுயிரொன் றாயினர்

(இ-ள்) அக்கலவிச் சண்டையில் கைகளிலணிந்திராநின்ற வளைகளின் கூட்டங்கள் நெரிந்திடவும், கருங்குவளைமலர் போன்ற கண்களிரண்டுஞ் சிவந்திடவும் அவ்விரண்டு பேர்களும் முறைமுறையாக இலவம் பஞ்சுபோல மிருதுவாயிருக்கின்ற வாயினிதழ் ஊறலைப் பருகிப் பசுமையாகிய பதத்திலே மெழுகைப்போல வுருகிக் கரைந்து இரண்டுயிருமொன்றாயினார்கள் (எ-று) []

இரதியு மதனனு மியைந்த வாறெனச்
சுரதமும் புலவியுந் துணிவு மெய்துநாண்
மருகனுந் தன்பதி மருவ வேண்டுமென்
றரதன பாலனுக் கறிவித் தானரோ

(இ-ள்) இரதியும் மன்மதனுங்கூடிய வாறு போலச் சுரத லீலைகளும் ஊடலும் அவ்வூடற்றுணிவுமாகிய காமவின்பத்தை யனுபவித்துக்கொண்டிருக்குங்காலத்தில் மருமகனாகிய தனகுத்தனும் தன்னுடைய பதிக்குப் போக வேண்டுமென்று மாமனாராகிய அரதனபாலனுக்கு அறிக்கை பண்ணினான் (எ-று) [13]

மணிமுத லியபல வளித்து மாதுல
னிணைமலர்க் கரமெடுத் தேகு கென்றனன்
றுணைவிதன் வருத்தமுந் துயரு மாற்றியே
வணிகனுந் திரிசிரா மலையி லெய்தினான்

(இ-ள்) அப்படிப் போகவேண்டுமென்று அறிவித்த மருமகனுக்கும் மகளுக்கும் மணிமுதலான பலவாபரணங்களைக் கொடுத்துத் தன்னை நமஸ்காரஞ் செய்த அவ்விருவர்களையும் தனது தாமரைமலர்போன்ற இரண்டு கைகளால் மாமனார் உபசரித்தெடுத்து அவர்களைப் போகும்படி அனுப்பினான். அப்பொழுது மனைவிக்குண்டாகிய வருத்தத்தையுந் துயரத்தையு நீக்கி வணிகனாகிய தனகுத்தனுந் தனது பதியாகிய திரிசிராமலை வந்துசேர்ந்தான் (எ-று) மருமகனுக்கு நவமணி முதலிய ஆடை ஆபரணங்களை கொடுத்தருளிய மாமனாரை யவ்விருவரும் மலர்போன்ற இரண்டு கைகளையெடுத்துக் கும்பிட அவர்களைப் போகும்படி யனுப்பினான் என்று கூறலுமாகும். [14]

எய்தியங் கிருவரு மியைந்து நல்லறஞ்
செய்தன ரிளங்கொடி திரிசி ராமலை
மெய்யரை யன்பினால் வெள்ளி நாடொறுங்
கைதொழப் புகுந்தனள் கணவ னேவலால்

(இ-ள்) அந்தப்பிரகாரம் அவ்விருவருந் திரிசிராமலையை வந்தடைந்து கணவனும் மனைவியும் ஒன்றாய்ப் பொருந்தி யில்லறங்களை நன்றாகச் செய்து கொண்டு வந்தார்கள். அப்படி வருகையில் இளங்கொடிபோன்ற மனைவியாகிய அந்த வணிகப்பெண்ணானவள் திருசிராமலையிலெழுந்தருளிய மெய்யராயுள்ள செவ்வந்திநாதரை யன்பினாலே கணவனுடைய கட்டளைப் பிரகாரம் வெள்ளிக்கிழமைதோறுந் தப்பாமற்போய் வணங்கித் தொழுதுகொண்டு வந்தாள் (எ-று) [15]

இருவரு மிப்படி யியங்கு நாளிலே
யரதந பாலனு மிறுதி யாயினா
னுருகிய கிளைஞரிங் கோலை யேவினர்
மருகனு மங்கையுங் கண்டு மாழ்கினர்

(இ-ள்) அவ்விருவரும் இவ்வாறாக நடந்துவருகின்ற நாளையிலே காவிரிப்பூம்பட்டணத்திலிருந்த மாமனான அரதனகுத்தனும் இறுதியுற்று இறந்துபோனான். அதற்காக மனமுருகிய உறவின்முறையார் இவ்விடத்திற்கு வோலையனுப்பினார்கள். அந்த வோலையைப் பார்த்து மகளும் மருமகனும் வருந்தினார்கள். (எ-று) [16]

தீயுறு மயிலெனத் திரியுந் திண்கணை
பாயிளம் பிணையெனப் பதைக்கும் பைந்தொடித்
தாயரை நினைந்துருந் தனித்தி யோவெனு
மாயிரந் தாரையா வழுது விம்முமே

(இ-ள்) அந்த வணிகப் பெண்ணானவள் தன் தகப்பனிறந்துபோனதை நினைத்து நெருப்பில் விழுந்த மயிலைப்போலத் துடிப்பாள். இளமையான அம்புபட்ட மான்கன்றுபோலப் பதைப்பாள். தாயாரை நினைந்து யென் தகப்பனைவிட்டுப் பிரிந்தியோவென்று சொல்லி அவளுடைய இரண்டு கண்களிலுங் கண்ணீரானது ஆயிரந்தாரையாகப் பெருகியோட அழுதாள்: (எ-று) [ ]

முலைகளும் விழிசொரி புனலின் மூழ்கின
வலைதரு புனலிடை யணங்கு மூழ்கினா
ளுலையுறு மெழுகென வுருகி னாளவள்
கலைகளுஞ் சொரிந்தன கண்ணி னீரையே

(இ-ள்) இரண்டு கண்களிலிருந்து சொரியப்பட்ட நீரினாலே இரண்டு முலைகளும் முழுகிப்போயின அலைகளைத் தரப்பட்ட காவிரிநீரிலே யத்துக்க நீங்கும்படி யணங்காகிய அந்த வணிகப்பெண் முழுகினாள். அப்போதும் நீங்காமல் அதிகப்பட்டு கொல்லனுலையிற் பொருந்திய மெழுகைப்போல அதி

கமாய் உருகினதனாலே அவள் உடுத்திய புடவைகளுங் கண்ணினீரைப்போல ஜலத்தைச்சொரிந்தன. புடைவை நனைந்துவிழுகிற நீர் கண்ணீராகவிருந்தன. அவளுடைய துக்கத்தைச் சகிக்காமல் அவளுடுத்திய புடவைகளுங் கண்ணீரைச் சொரிந்தனவென்றுங் கூறலாம். (எ-று) [18]

மங்கையை மகிழ்நனு மார்பிற் புல்கியும்
பங்கய மலர்க்கரம் பற்றி நல்கியுஞ்
செங்கய லொழுகுநித் திலங்கண் மாற்றினு
னங்கவ ளடைவிலே துயரு மாற்றினள்.

(இ-ள்) மங்கையாகிய அந்தப்பெண்ணை யவள் புருஷனானவனும் மார்பிலே பொருந்தும்படி யணைத்து தாமரைமலர்போன்ற அவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு எந்தவிதத்தினாலே அவள் துயரம் நீங்கவேண்டுமோ அந்த விதத்தினாலே யினிய சொற்களைச் சொல்லிப் பொருண் முதலியவற்றைக் கொடுத்தும் சிவந்த கயல்போன்ற கண்களிலிருந்து முத்துக்களைப்போல வொழுகப்பட்ட நீரை மாற்றினன். அப்போது அவளும் நாளடைவிலே துயரமும் நீங்கினள். (எ-று) [19]

சீரிய விரதமும் விருந்துஞ் செய்கையு
மூரிய லாண்மையு மொழுகு நாளிலே
வாரியிற கவுத்துவ மணியை நேரெனக்
காரிகை வயிற்றிளங் கருப்ப முற்றதே.

(இ-ள்) அந்தப்படியந்தச் செட்டிப்பெண்ணானவள் துயரம் நீங்கித் தானுந் தன்னுடைய கணவனுஞ் சிறப்புள்ள சில விரதங்களை யனுட்டித்தும் விருந்தினரை யுபசரித்தும் நற்செய்கையாலொழுகியும் ஊரார் மதிக்கும்படியான ஆண்தன்மையுடனே இவைகளோடுகூடி நடந்துவருகின்ற நாளையில் பால்சமுத்திரத்திலே கவுத்துவமணி யுதித்ததுபோலக் காரிகையாகிய அப் பெண்ணின் வயிற்றிலே யிளமையாகிய கருப்பம் பொருந்தியது (எ-று) வயிற்றில் கருப்பம் உற்பத்தியாயிற்று [20]

சூனிறைந் தனுவரி தொய்யி லீங்கின
பானிறம் படைத்தது குமுதம் பங்கய
மேனிகழ் சுரும்பென முலைக்கண் விரின
வானிடை வயங்கிய துரோம வல்லியே.

(இ-ள்) அப்படி யந்தப் பெண்ணின் வயிற்றிலே யுற்பத்தியான கருப்பம் நிறைந்தது முலைகளில் சந்தனத்தாலெழுதப்பட்ட கோலமும் நீங்கின தாமரை மலர்போன்ற முகமும் குமுதமலர் போன்ற வாயும் பால் நிறத்தைப்

போல் வெளுத்தன பறக்கின்ற வண்டைப்போல மேலான முலைக்கண்கள் கருத்தன ஆலிலைபோன்ற வயிற்றிலிருக்கின்ற உரோமவல்லியானது வெளிப் பட்டு விளங்கின (எ-று) இதனால் வயிறு பருத்து, வாய்வெழுத்து முலைககண் கருத்துச் சூல் நிறைந்ததென்பதாம். தொய்யிலென்பது முலைகளில் சந்தனத் தாலெழுதப்பட்ட கோலம் [21]

அன்னையு மகள்செயலறிய வேண்டுமென்
றுன்னின ளப்பொழு துவரி நீரயின்
மின்னுயிர் பெருமுகி லுரை வீழ்த்தன
பொன்னியு மிருகரை புரண்டு வந்ததே.

(இ-ள்) இவ்வாறாக அந்தப் பெண்ணானவள் கருப்பம் நிறைந்திருக் கின்ற நாளையில் அவளுடைய தாயாரும் தனது மகள் செயலை யறியவேண்டு மென்று நினைத்தாள் அப்பொழுது பெரிய மேகங்கள் கடலின் நீரை யுண்டு மின்னியார்ப்பரித்து மழையைப் பொழிந்தன அதனாலே காவிரியாற்றின் பிரவாகமானது இரண்டு கரைகளும் புரண்டுவந்தது (எ-று) [22]

ஆறது தடையினா லன்னை யேகுதன்
மாறின ளரதந வதிய நிந்திலள்
பேறொடு பிறந்தகம் பெரிதுஞ் செய்திடக்
கூறரும் பொருளெலாங் கொண்டு செல்லுமே.

(இ-ள்) காவிரி யாற்றினுடைய பிரவாகத்தின் தடையினாலே அந்தப் பெண்ணினுடைய தாயானவள் வருவது தடைபட்டு மாறினாள் அதை மகளாகிய அரதநவதி யறியாதவளாகிப் பெறத்தக்க பேறுடனே பிறந்தகத் திலிருந்து வருகின்ற பெரிதாகிய சீரும் பெரிதாகச் செய்திடச் சொல்லுதற் கருமையான பொருள்களை யெல்லாம் அன்னையானவள் கொண்டுவருவா ளென்று நினைத்துக்கொண்டிருந்தாள் (எ-று) [23]

பூளையின் சுமையெனக் குழல்பொ லிந்திடப்
பாளையங் குழலிதழ்ப் பவளச் சேடியர்
தோளையு மணந்துவெண் டுகிலை மேற்கொடு
நாளைவந் திடுமல தின்று நண்ணுமே.

(இ-ள்) எனது தாயார் பூளைப்பூவின் சுமையைப்போல நரைத்த தலை மயிர் விளங்கத் தெங்கின் பாளைபோல விரிந்துநண்டிராநின்ற கூந்தலையும் பவ ளம்போன்ற வாயையுமுடைய சேடியர்களுடனே அவர்கள் தோள்களையும் சேர்ந்து பிடித்துககொண்டு வெள்ளைப் புடவையையுடுத்தி மேலே போர்வை

யாகப்போட்டுக்கொண்டு நாளையதினம் வந்திடுவாள் அல்லது இன்றையத் தினமாவது சேருவாளென்று அந்த அரதநவதியாகிய வணிகப்பெண் எண்ணிக்கொண்டிருந்தாள் (எ-று) [24]

எதிர்நடந் தன்னையை யிறுகப் புல்லுவோங்
கதிநடந் திளைத்தசெங் கமலம் பற்றுவோ
மதிமுக வெயர்வெலா மாற்று வோமென
வதிசய வுணர்வினு லனைத்து மெண்ணினாள்.

(இ-ள்) என்னுடைய தாயார் இப்பொழுது வந்து சேர்ந்தால் எதிரே நடந்துபோய் அவளையிறுகத்தழுவிக்கொள்வோம். வழிநடந்து இளைத்திருக்கின்ற செந்தாமரை மலர்போன்ற பாதத்தைப்பிடிப்போம. சந்திரனையொத்த முகத்திலிருந்து வருகின்ற வெயர்வையெல்லாம மாற்றுவோமென்று அதிசயங்களாகத் தன்னுடைய அறிவினாலே யெல்லாவற்றையும் எண்ணிக்கொண்டிருந்தாள் (எ-று) [25]

மின்றிகழ் மருங்குலா ளினையும் வேளையிற்
றென்றிசை விளங்கிய தேவர் நாயகன்
குன்றெனு நெடுஞ்சிலை கொண்ட நாயகன்
மன்றலங் கருங்குழன் மடந்தை நாயகன்.

(இ-ள்) மின்னலைப்போல் விளங்கியிராநின்ற இடையையுடைய பெண்ணான அரதநவதியானவள் அந்தப்பிரகாரம நினைத்துக்கொண்டிருக்கிற வேளையில் தென்றிசையிலுள்ள திரிசிராமலையில் விளங்கிய தேவர்களுக்கெல்லாம நாயகனும மகாமேருவை நீண்டவில்லாக வளைத்துக் கையிற்கொண்ட நாயகனும் வாசனைபொருந்திய புஷ்பங்களையணிந்த கரிய கூந்தலையுடைய மட்டுவார்குழலம்மை நாயகனுமான செவ்வந்திநாதர் (எ-று) மின்றிகழ் மருங்குலாள் என்பது மின்னலானது தோன்றி மறைவதும்போல உண்டோ இல்லையோவென்று சொல்லப்பட்ட இடையையுடையவள [26]

கலி நிலைத்துறை

சங்க ரன்சிவன் சதாசிவ னீசனீ சானன்
புங்க வனறிரி புராந்தகன் புராதனன் புராணன்
கங்கை நாயகன் கறைமிடற் றிறைதுதற கண்ணு
னெங்க ளுயக னிராமயன் சிராமலை யிறைவன்.

(இ-ள்) உயிர்களுக்குச் சுகத்தைச் செய்கிற சங்கரனானவர், முத்தியைக் கொடுக்கிற சிவபெருமானாயிருக்கின்றவா, அனுக்கிரகத்தைச் செய்கிற சதாசிவ

ரூபமானவர், சர்வஞ்யத்துவாதி அஷ்டகுணங்களையுடையவர், ஈசனாயிருக்கின்றவர், ஈசானனாகிய ருத்திரமூர்த்தியுமானவர், தேவர் முதலிய யாவருக்கும் உயர்ச்சியானவர், திரிபுரத்தையெரித்தவர், பழமையானபுராதனர், சகலவேதாகம புராணங்களாலுந் துதிசெய்யப் படுகின்றவர், கங்காதேவிக்கு நாயகனாயுள்ளவர், விடந்தங்கிய கண்டத்தையடையவர், நெற்றிக்கண்ணையுடையவர், எங்களையெல்லாமாண்டருளிய நாயகனாயுள்ளவர், அகண்டமானவர், சிராமலையிலெழுந்தருளி இறைவராயிருக்கின்றவர் (எ-று) [27]

பூரணன்பரன் பராசரன் வெள்ளியம் பொருப்பன்
காரணன்மத னந்தகன் காலனைக் கடிந்தோன்
வாரணந்தனை யுரித்தவன் மறைப்பொருள் வகுத்தோ
னாரணன்றனக் கரியவன் சிராமலை நாதன்.

(இ-ள்) எங்கும் நிறைந்த பரிபூரணர், பரதத்துவத்தையுடையவர், பரமும் அபரமுமான பராபரமாயுள்ளவர், வெள்ளியங்கிரியிலிருப்பவர், மூலகாரணராயுள்ளவர், மன்மதனையெரித்து நாசஞ்செய்தவர், இயமனையுதைத்து நிக்கிரகஞ்செய்தவர், யானையை யுரித்து அதன் தோலைப்போர்வையாகத்தரித்தவர், வேதப்பொருளை வகுத்தவர், நாரணனாலுந்தேடிக்காண்பதற்கரியவர், சிராமலையிலெழுந்தருளிய நாதர் (எ-று) [28]

முடித்த வெண்பிறை நிகரென வளைந்திடு முதுகி
லடுத்த வெண்ணிலா வளைந்தபோ னரைக்குழ லசையத்
திடத்தி னலருண டத்துவோ மெனவொரு செங்கோல்
பிடித்த வாறென வேணுதண் டங்கையிற் பிறங்க.

(இ-ள்) அத்தன்மையாகிய சிராமலை நாதர் தமது சடையில் முடித்த வெண்மை நிறமான பிறையைப்போலக் கூனி வளைந்திருக்கின்ற முதுகின் பேரில் பொருந்திய வெள்ளை நிலாவானது வளைந்ததைப்போல நரைத்த மயிரையுடைய கூந்தலசையவுமடியார்கள்பேரில் வைத்த திடமாகிய கிருபையை நடத்துவோமென்று வொப்பற்ற செங்கோல்பிடித்த விதத்தைப்போல மூங்கில்த்தடியானது கையில்விளங்கவும் வருகிறார் (எ-று). [29]

ஏட விழ்ந்தபூங் குழலிதன் விரதநன் றெனக்கொண்
டாடு மாறெனத் திருமுக மண்டல மசையச்
சூடு கங்கையின் றிவலைபோ னுதல்வெயர் துளிக்க
நீடு கொன்றைபோ லொருபணி களத்திடை நிகழ.

(இ-ள்) இதழ்கள் விரிந்த மலரையணிந்த கூந்தலையுடைய வணிகப் பெண்ணானவள் நோற்ற விரதமானது நன்றென்று கொண்டாடுகின்ற விதத

தைப்போல அழகிய முகமண்டலம் அசையவும், சிரசிற்சூடிய கங்காநதியின் துளிகளைப்போல நெற்றியில் வெயர்வை துளிக்கவும் சடையிலணிந்திராநின்ற நீண்ட கொன்றை மாலையைப்போலவொரு ஆபரணமானது கழுத்திலே விளங்கவும் சிராமலைநாதர் வருகிறார். (எ-று) [30]

நின்று நின்றுசென் றிளைப்புற நெடிதுமூச் செறிய
வொன்று செங்கையிற் கழையின்மே லுடலெலா மொடுக்கிக்
கன்று மானையு மழுவையும் விடையையுங் கரந்து
மன்றி லாடலு மொழிந்தவ ளன்னைபோல் வந்தான்.

(இ-ள்) மெதுவாக நின்று நின்றுகொண்டு, இளைப்படையப் பெருமூச் செறிய நடந்து சிவந்தகையிற் பிடித்த மூங்கில்தடியின் மேலுடலமெல்லா மொடுக்கிக் கன்றுதலையுடைய மானையும், மழுவையும், ரிஷபத்தையுமறைத் துத் தில்லையம்பலத்துளாடலையுமொழிந்து அந்த வணிகப்பெண்ணினுடைய தாயாரைப்போலச் சிராமலைநாதர் வந்தார். (எ-று) [31]

காய பண்டமு மெண்ணெயின் கலசமுங் கனகத்
தூய முத்தணி கலன்களும் விலையிலாத் துகிலு
மேய மங்கைய ரிருவர்மேற் சுமைகளா வெடுப்ப
மாய வன்றனக் கரியவ னெளியனாய் வந்தான்.

(இ-ள்) காயங்கடைச்சரக்கு முதலிய பண்டங்களும் எண்ணெய்க் கலயமும், பொன்னாபரணங்களும், பரிசுத்தமான முத்தாபரணங்களும், விலையில்லாத புடவைகளும், தமக்குப் பொருந்திய உமாதேவி, கங்காதேவியென்கின்ற இரண்டு பெண்களின்மேலே சுமைகளாக வெடுப்பித்துக்கொண்டு விஷ்ணு வாலுந் தேடிக்காண்பதற்கரிதான சிராமலைநாதா அந்த வணிகப்பெண்ணின் தாயாரைப்போல எளியவராக வந்தார். (எ-று) [32]

தூர வந்திடு மவளையீன் றவளெனத் துணிந்தாள்
சேர வந்திடும் பொழுதினி லெழுந்தெதிர் சென்று
பார வந்தனை புரிந்திரு பதங்களிற் பணிந்தா
ளார வந்திரு கரங்களாற் றழுவின ளன்னை.

(இ-ள்) கண்களுக்குத் தோன்றும்படியாகத் தூரத்தில் வருகின்ற கடவுளாகிய அன்னையைத் தன்னுடைய தாயாரென்று நிச்சயமாய்த் துணிந்தாள் சமீபமாய் நெருங்கிவரும்பொழுது எழுந்து எதிரே சென்று வயிற்றிலுள்ள கருப்ப முதிர்ச்சியின் பாரத்தினாலே தள்ளாடி வந்தனை செய்து இரண்டு பாதங்களிலும் நமஸ்காரம் பண்ணினாள். அவளை யன்புபொருந்தவந்து அன்னையானவள் தன்னிரண்டு கைகளாலுமெடுத்துத் தழுவிக்கொண்டாள். (எ-று)

மோந்து கொண்டன ளுச்சியை மோந்தனண் முகத்தைக்
காந்த ளுந்தொழுங் கரங்களை யழுத்தினள் கண்ணிற்
பாய்ந்த கண்ணினீர் புலர்ந்திட வருண்மொழி பகர்ந்து
சாய்ந்த கொம்புநேர் மகளுட னிருந்தன டவிசில்.

(இ-ள்) அந்தப்பிரகாரந்தாயானவள் மகளைத்தழுவிக்கொண்டு, உச்சிமோந்து முகத்தையும் மோந்து செங்காந்தள் மலருந் தொழுமபடியான கைகளைக் கண்ணிலழுந்தும்படியாக வைத்து மகளுடைய கண்களினீரைத் துடைத்தாள். அப்படித் துடைத்ததும் அதிகமாயுண்டாகப்பட்ட கண்களினீர் நீங்கும்படி கிருபாவசனங்களைச் சொல்லிப் பாரந்தாங்காமற் சாய்ந்த கொம்பை யொத்த மகளுடனே தாயானவள் ஆசனத்திலிருந்தாள். (எ-று) அந்தப் பெண்ணினுடைய தகப்பனிறந்துபோன துக்க முதலியவைகளும் அந்தவருளாகிய மொழியில் அடங்கின. [34]

எண்ணி லாவருங் காயபண் டங்களா மெவையும்
வண்ண மேகலைப் பேழையுங் கொணர்ந்தமங் கையருக்
குண்ணு நீர்முத லளித்தநல் லடிசிலு முதவிக்
கண்ணை நேரனுக தாயுட னிருந்தனள் களித்து.

(இ-ள்) எண்ணிக்கையில்லாத அருமையான காயங் கடைச்சரக்கு முதலிய பதார்த்தங்களான எவற்றையும் அழகிய மேகலை முலிதய ஆபரணங்களையும் விலையில்லாத புடவைகளடங்கிய பேழைப் பெட்டியுங் கொண்டுவந்த பெண்களுக்கு முதலில் தாகத்துக்குண்ணும்படி ஜலங்கொடுத்துப் பின்பு நல்ல அன்னமும் உதவி யப்பால் கண்களையொத்ததாயான செல்வமாகிய தாயாருடனே மகிழ்ந்து அந்தப் பெண்ணான அரதநவதி யென்பவள் இருந்தாள். (எ-று.) [35]

மற்றை நாளிலே யுதரநொந் தழுங்கின மகளைப்
பெற்ற தாயெடுத் தணைத்துமேற் றயிலமும் பெய்து
முற்று மன்பினுன் மருத்துவத் தொழிலெலா முடித்தாள்
குற்ற மொன்றிலா மடந்தையும் பயந்தனள் குழவி.

(இ-ள்) மற்றைத் தினத்திலே வயிறு நொந்து வருந்துகின்ற மகளைப் பெற்ற தாயாக வந்த தாயான செல்வமாகிய அன்னையானவள் தன் கைகளா லெடுத்து மார்போடணைத்துச் சரீரத்தின் மேலே தயிலத்தையுந் தடவி மூதிர்ந்த அன்பினுலே மருத்துவச்சி செய்கிற தொழில்களையெல்லாஞ்செய்து முடித்தாள், ஒரு குற்றமுமில்லாத அந்தப் பெண்ணும் நல்ல ஆண் குழந்தையைப் பெற்றுள். (எ-று.) [36]

குழவி யீன்றவட் கருமருந் தெண்ணெயுங் கொடுத்தே
யெழுதி னத்தள விழைத்திடுஞ் செயலெலா மியற்றி
யழகு தொட்டிலுட் டுயிற்றியங் கொருமதி யளவா
மழக ளிற்றினை முருகவே ளெனும்படி வளர்த்தாள்.

(இ-ள்) அப்படி ஆண் குழந்தையைப் பெற்ற மகளுக்கு அருமையான மருத்தெண்ணெயுங் கொடுத்து எழுநாள் வரையிற் செய்யவேண்டிய தொழில்களையெல்லாம் பண்ணி யழகான தொட்டிலிலே குழந்தையைத் தாங்க வைத்து ஒரு மாதபரியந்தம் அந்தக் குழந்தையைத் தன்னுடைய குமாரனை சுப்பிரமணியரென்று சொல்லும்படி வளர்த்தாள், (எ-று) மழகளிறு இளமையாகிய யானை. [37]

சிதலை சிற்றெறும் பிளஞ்சினை சிலையினுட் டேரை
பதக மானிட ரிமையவ ரிந்திரன் பதுமன்
முதலி னோர்தமை வளர்த்தரு ளிறையெதிர் முகமாய்
மதலை யொன்றினை வளர்த்தது புதுமையோ மறையீர்.

(இ-ள்) கண்களாலே பார்க்கின்றதற்கு மிகவும் அருமையான சிறு கறையான் முதலிய சிற்றெறும்புகளும் அவைகளின் வயிற்றிலுள்ள கருவாகிய இளஞ் சினைகளும், கல்லினுள்ளே இருக்கின்ற தேரைகளும் மிருக பட்சிகளும் பாவ புண்ணியங்களைச் செய்யப்பட்ட மனிதர்களும் தேவர்களும் இந்திரனும் பிரமனுமாகிய இவர்கள் எல்லோர்களையும் மற்றுமுள்ள தாபரப் பொருண் முதலியவற்றையும் வளர்த்தருளா நின்ற இறையாகிய சிராமலை நாதர் இப்பொழுது பிரசன்னமாய் வந்து ஒரு குழந்தையை வளர்த்தது புதுமையோ, கேளுங்கள் வேதங்களையுணர்ந்த முனிவர்களே யென்று வியந்து கவுதமரிஷி சொன்னார். (எ-று.) இச்செய்யுளிலும் மேலெழுதியிருக்கிற செய்யுள்களிலும் வேண்டுஞ் சொற்கள் வருவித்துரைக்கப்பட்டிருக்கின்றன.[]

மையு லாமழைக் கருமுகிற் படத்தினை மாற்றித்
துய்ய வெண்முகிற் படமெனும் விதானம்வான் றுலக்கிற்
றைய நுண்ணிடை யாதந வதியையங் கறியப்
பைய வந்தன ளவளைமெய் யாகமுன் பயந்தாள்.

(இ-ள்) மையானது பொருந்தியதுபோல ஆகாசத்தில் பரவிப் பெய்கின்ற மழையாகிய கரிய மேகங்களென்னுந் திரைச் சீலையை நீக்கிச் சுத்தமான வெள்ளை மேகங்களென்கிற வஸ்திரமென்னும் மேற் கட்டியினால் ஆகாசமானது விளக்கஞ்செய்தது. அப்பொழுது உண்டோ இல்லையோவென்று சந்தேகப்படுகின்ற நுட்பமான இடையையுடைய ஆதனவதியாகிய பெண்

ணையறியும்படியவளை உண்மையாக முன்னே பெற்ற தாயானவள் மெதுவாக மெள்ள நடந்து மகள் வீட்டிற்கு வந்தாள். (எ-று.) மேக படலம் நீங்கி ஆகாசம் வெளியாயிற்று. [39]

மாது லன்பெருந் தேவிதன் மனையிடை வருதல்
காத லன்பினுற் பெருந்தந குத்தனுங் கண்டா
னேதி லார்களிவ் விருவரில் யாவரோ வென்று
ஞேது முன்னவள் புகுந்தனண் மடநலா ளுறையுள்

(இ-ள்) மாமனுருடைய பெருமை பொருந்திய தேவியானவள் தன்னுடைய மனையில் வருவதை மிகுந்த அன்பினாலே பெரிய தனகுத்தனுங் கண்டான், அயலூரிலிருந்து வரப்பட்ட இந்த இரண்டுபேர்களில் நம்முடைய மாமியார் யாவரோவென்று சந்தேகப்பட்டு நின்றான். அப்பொழுது சொல்லப்பட்ட முன்னவளாகிய பெற்ற தாயார் தன் பெண்ணினுடைய மனையினுள்ளே போனாள்: (எ-று) பெற்ற தாயானவள் தன் பெண்ணினுடைய வீட்டினுள்ளே போய்ப் புகுந்தாளென்பதாம் [40]

முன்னர் வந்திருந் தருளிய தாயெதிர் முகமாய்ப்
பின்னர் வந்ததா யிருந்தன ளதிசயம் பிறந்த
தன்னை யாவளென் றரதந வதிமருண் டணைந்தாண்
மின்னை நேரென விசும்பிலே மறைந்தனன் விமலன்

(இ-ள்) முன்னமே வந்திருந்து அருள் புரிந்ததாயின் எதிர்முகமாகப் பின்பு வந்ததாயுமிருந்தாள். இவ்விரண்டு பேரையும் பார்த்து அதிசயம் பிறந்து இவர்களுள்ளே தாயாகப்பட்டவள் எவளென்று அரதநவதி மயங்கி வெளியில் வந்தாள் அப்பொழுது மின்னைப்போல ஆகாசத்திலே விமலனை சிராமலைநாதர் மறைந்துவிட்டார் (எ-று) [41]

உந்தி யாறணி சடையிளம் பிறைதனக் குறவுத்
தொந்த முண்டென வருமதி போற்குடை துலங்க
விந்த மண்டல மிந்துமண் டலமென விறங்கி
வந்த தாரகைக் கணமெனச் சொரிந்திட மலர்கள்

(இ-ள்) மகாப் பிரவாகமான கங்கையைத்தரித்த சடையிலிருக்கின்ற மூன்றாம் பிறையைதனக்கு உறவாகிய தொந்தமுண்டென்று வருகின்ற பூரண சந்திரனைப்போல சந்திர வட்டக்குடையானது விளங்கவும் இந்தச் சந்திர வட்டச் குடையைச் சந்திரமண்டலமென்று கருதி இறங்கி வந்திரா நின்ற நட்சத்திரங்களின் கூட்டங்களைப்போலத் தேவர்கள் புஷ்பமாரி சொரியவும் (எ-று) [42]

தேடி யோதிமம் பறந்திட விரிந்தவெண் சிறைபோன்
மாடி ரண்டினு மசைந்தன சாமரை வயங்கத்
தோடு சேர்குழை மருவிய தும்புரு விசைகொண்
டாடு பாம்பென வாலவட் டங்களின் றசைய

(இ-ள்) அன்று சிவபெருமான் திருமுடியைத்தேடிக்காண அன்ன ரூபங்கொண்டு பிரமதேவன் பறந்தபோது விரிந்த வெண்மையான சிறகு போல் இரண்டு பக்கங்களிலும் அசையப்பட்ட சாமரைகள் விளங்கவும் தோடணிந்த குழையாகிய விரண்டு காதுகளிற் பொருந்தும்படி தும்புரு நாரதர்களாற் பாடப்பட்ட இசையைகேட்டு வுடலிற் சர்ப்பாபரணமாய்க் கொண்டிராநின்ற பாம்புகள் படமெடுத்தாடுவதுபோல ஆலவட்டங்களிருபுறம் நின்றசையவும் (எ-று) [43]

அந்த ரத்திலோ ரிருபது விற்கிடை யளவின்
மந்த ரப்பெருஞ் சிகரிமேல் வருமணி மலைபோற்
சுந்த ரத்தொளிர் விடையின்மேற் றோன்றினன் றோன்ற
லிந்தி ரப்பெய ருடையவன் முதலினோ ரிறைஞ்ச

(இ-ன்) ஆகாயத்திலே யொரு இருபது விற்கடையளவிலே பெரிய மந்திரகிரியின் மேல் வருகின்ற மாணிக்கமலையைப்போல அழகுடனே விளங்கா நின்ற ரிஷப வாகனத்தின்மேல் இந்திராதி தேவர்களெல்லாம் வணங்கத் தாயான செல்வமாகிய சிராமலை நாதர் எழுந்தருளினர் (எ-று) []

தேவ துந்துபி முழங்கின முழங்கின சின்ன
மாவ லம்புரி யொலித்தன வொலித்தன மதங்க
மூவ ரோடுமுப் பதின்மரு முனிவரு முளரிப்
பூவை நேர்சொலு மிருகரங் குவித்தெதிர் போற்ற

(இ-ள்) தேவதுந்துபி முளங்கவும் எக்காள சின்னங்களும் முழங்கவும் பெரிய வலம்புரி சங்க மொலிக்கவும், சத்திக்கப்பட்ட அயிராவத வாகனனான இந்திரனுடனே முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் தாமரைப்பூவை நேராகச்சொல்லப்பட்ட இரண்டு கைகளையுந் தலைமேற் குவித்து அரகரவென்று முழக்கத்துடன் எதிரே துதித்து வணங்கிக் கொண்டு வரவும் (எ-று) [45]

தொல்லை யாகம நான்மறை யெதிரெதிர் துதிக்க
வல்லி நாண்மலர்க் கடவுளு மம்புய மனையின்
வல்லி நாதனு நடந்திரு புடையினும் வணங்க
மெல்ல மெல்லவே யுவந்துகைத் தருளினன் விடையை

(இ-ள்) பழமையாகிய சிவாகமங்களும் நான்கு வேதங்களும் எதிர் எதிராகத் துதிக்கவும் கமலாசனனான பிரமனும் தாமரை மலரை யில்லமாகவுடைய இலக்குமி நாயகனும் நடந்து இரண்டு பக்கங்களிலும் வணங்கவும் மெள்ள மெள்ளவே சந்தோஷித்து ரிஷபவாகனத்தை நடத்தி யருளினர் சிராமலை நாதர் (எ-று) [46]

வேத வேள்வியந் தணர்கள்பா சுபதர்மா விரத
ராதி சைவர்க ளாதியா வாலய மமைப்போர்
காத லெழுத் துரைப்பவ ரனைவருங் காணப்
பூத நாயக னுடன்றிருக் கோயிலுட் புகுந்தான்

(இ-ள்) வேதங்களையுணர்ந்து வேள்விசெய்யப்பட்ட அந்தணர்களும் பாசுபதர், மகாவிரதர், ஆதிசைவர்கள் முதலான சிவஞானச்செல்வத்தையுடையவர்களும் திருவாலயப்பணிவிடை செய்கின்றோரும் அன்புடனே பஞ்சாட்சரத்தையுரைக்கின்ற அன்பர்களும், யாவருந் தரிசிக்கப் பூதங்களுக்கெல்லாம் நாயகனான செவ்வந்திநாதர் திருக்கோயிலுள்ளே எழுந்தருளினர் (எ-று) உடனென்பது இடைச்சொல் [47]

நாயி னுங்கடை யானவ ராயினு நயந்தாற்
சேயி னும்பரி வாகவந் தருள்செயுந் சிவனை
யாயி ரம்பெய ருடையவண் ணலையுல கனைத்துந்
தாயி னல்லவ னல்லவ னென்றன தழைக்க

(இ-ள்) நாயைப்பார்க்கினுங் கீழ்ப்பட்டவர்களாயிருந்தாலும், பக்திசெய்தாலவர்களுக்குத் தமது பிள்ளையைப்பார்க்கினும் அன்பாக வந்து அருள்செய்கின்ற சிவபெருமானை யாயிரந்திருநாமங்களையுடைய முதற்கடவுளை யெல்லாவுலகங்களுந் தாயைப்பார்க்கினும் நல்லவர் நல்லவரென்று சொல்லித்தழைக்கும்படிப்புகழ்ந்து தாயானசெல்வமென்று துதித்தன (எ-று) [48]

கலிவிருத்தம்

மாதந குத்தனு மனைம டந்தையு
மேதமில் கிளைஞரு மிமய நாயகி
நாதனை யனுதினம் பணிந்து நாரணன்
வேதனு மறிவரும் பதத்தின் மேவினர்

(இ-ள்) பெருமைபொருந்திய தநகுத்தனும் அவனுடைய மனைவியாகிய அரதநவதியும் குற்றமில்லாத அவன் கிளையிலுதித்தோரும் இமோர்ப்பர்வத புத்திரியின் நாயகனான மாதுருபூதேசுவரரை யனுதினமும் பணிந்து நாரணனும் பிரமனும் அறிதற்கு அரிதாயுள்ள சிவபதத்தையடைந்தார்கள் (எ-று)

சத்திய மிதுவெனச் சாற்றி னான்முனி
பத்திகொ டனைவரும் பரவிக் கூறுவா
ரித்தல மினையதே லிதனில் வைகுவார்
முத்தியை யடைவது மொழிய வேண்டுமோ

(இ-ள்) இது சத்தியமான வசனமென்று கௌதம முனிவர் சொன்னார். அப்படியவர் சொன்னதைப் பத்தியுடனே கேட்டமுனிவர்களனைவரும் வணங்கிச்சொல்லுவார்கள். இந்தத்தலம் இத்தன்மையையுடையதேயானால் இதிலே இருக்கின்றவர்கள் மோட்சத்தையடைவது சொல்லவேண்டுமோவென்றார்கள். வேண்டியதில்லை தானே முத்தியுண்டாமென்பதாம் (எ-று) [50]

ஷை வேறு

வைய மின்புற மாதர்கற் போங்குக
செய்ய கோலை யரசன் செலுத்துக
பெய்க வானஞ் சிவாலயம் பீடுற
சைவ மென்னுஞ் சமயந் தழைக்கவே.

(இ-ள்) பூமியானது இன்பத்தையடையக்கடவது. மாதர்களுடைய கற்பானது வோங்கி வளரக்கடவது செங்கோலையரசன் செலுத்தக்கடவது. அதனாலே காலந்தப்பாமல் மழை பெய்யக்கடவது. சிவாலயங்கள் பெருமை பொருந்தக்கடவது. சைவமென்கின்ற சமயமானது தழைத்து விருத்தியாகக்கடவது. (எ-று) [51]

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

இனிய விந்தக் கதையினொன்று படித்தபேரு
மெழுதினரு மிருசெவியி லேற்ற பேரு
மனையிடத்தி லுபசரித்து வைத்தபேரும்
வாசிப்போர்க் குறையுளுண்டி வழங்கினோருந்
தனமிகுதி நெடுவாழ்க்கை யடைவர்நல்ல
தனையரையும் பெறுவர்சிவ பதமுஞ் சார்வ
ரனலனுகா தரவமுறு தலைகைசேரா
தருளுறுமிம் முறையிருந்த வகத்திற் றானே.

(இ-ள்) யாருக்கும் இன்பத்தைத் தராநின்ற இந்தச் செவ்வந்திப் புராணக் கதைகளில் ஒரு கதையாவது படித்தபேர்களும், எழுதினபேர்களும் இரண்டு காதுகளினாலே கேட்டபேர்களும், உபசாரத்துடனே மனையில் வைத்தபேர்களும், வாசிப்போர்களுக்கு இருப்பிடமும் போசிப்புங் கொடுத்த பேர்களும் மிகுந்த தனத்துடனே பெரிய வாழ்வையடைவார்கள் நல்ல

புதல்வர்களையும் பெறுவார்கள் சிவபதத்தையுமடைவார்கள். அருளையுடைய இந்தப் புராண மிருந்த மனையினிடத்தில் ஒருநாளும் அக்கினியணுகாது விஷமணுகாது பேய் சேராது. (எ-று) [52]

தாயானசருக்க முற்றிற்று.
ஆக சருக்கம் 11-க்கு திருவிருத்தம் 550.

---

## செவ்வந்திப்புராணம் மூலமும்-உரையும்.
முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

---

உ
சிவமயம்.
ஸ்தல அடியார்கள்

### சமஸ்கிருத சுலோகத்திலுள்ள பதினெண்பேர்.

| | |
|---|---|
| 1. பிரமா | × 10. நவக்கிரகங்கள் |
| 2 அகத்தியர் | 11. சிவகணங்கள் |
| 3. தேவேந்திரன் | 12. ஸ்ரீராமர் |
| 4. உமாதேவியார் | 13. அர்ச்சுனன் |
| 5 ஜடாயு | 14. அனுமார் |
| 6 சப்தரிஷிகள் | 15. சோழர்கள் |
| 7 தேவர் முதலானவர்கள் | 16. நாககன்னிகள் |
| 8. தர்மசேது × | × 17. வண்டுகள் |
| 9. திரிசிரன் | 18. சாரமாமுனி |

× இவ்வடையாளமுள்ள அடியார்கள் கிடையாது.

### சித்திரைமீ௴ எட்டாந் திருவிழாவில் வாசிக்கிற பட்டயத்திலுள்ள பதினெண்பேர்.

| | |
|---|---|
| 1. பிரமா | 10. அன்னையரேழுபேர் |
| 2. அகத்தியர் | 11. ஸ்ரீராமர் |
| 3. தேவேந்திரன் | 12. அர்ச்சுனன் |
| 4. அம்பிகாதேவி | 13 ராஜசூடாமணி |
| 5. ஜடாயு | 14. அஷ்டதிக்குப்பாலகர் |
| 6 சப்தரிஷிகள் | 15. நாககன்னிகள் |
| 7. திரிசிரா | 16 சாரமாமுனி |
| 8 அனுமார் | 17. அரிசாமுடையோர் |
| 9. தேசோதிகர் | 18. அரிவைதேசிகாமணி |

திருச்சிற்றம்பலம்.